உ

கடவுள்துணை.

# கைவல்ய நவநீதம்

மூலமும் உரையும்.

இம்மூலஞ்செய்தவர்
நாராயணதேசிகர் மாணாக்கராகிய
**தாண்டவராயமூர்த்தி சுவாமிகள்**
இவ்வுரைசெய்தனர்.

இஃது,
திருத்துருத்தி கரபாத்திரசுவாமிகள் பரம்பரைக்குரிய
நாகபட்டணம்,
அருணாசலசுவாமிகள்
மாணாக்கராகிய-பிறையாறு.
**அருணாசலசுவாமிகள்**

எருமூட்டைப்பாளயம்,
மாயாண்டிநாட்டார் குமாரர்
**அருணாசலநாட்டாரவர்களால்**

க-ஆதிநாராயணசெட்டியார்
அவர்களது
ஆதிவித்யாவிலாச முத்திராக்ஷரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

உருத்திரோற்காரி௵—கார்த்திகைமீ

MAHAMAHOPADHYAYA ... LIBRARY

# உரைச்சிறப்புப்பாயிரம்.

சீர்வளர் பிரமசிருஷ்டியின் முனமே- யோர்வளர்சத்தாயிலங் குறுபி
ரமம்- பரமுலகுயிரெனப் பகுபொருளெவற்றினு- முரணுறாவுஞ் சுசாதி
யமுதலியபேத மற்றொளிர்பரமா காசசயம்புவா - யுற்றதன்னிலைமையி
னோரிறைகுறையா- தெறிதிரைக்கரத்தா லிணமணிகொழிக்குஞ் - செம்பு
னற்பொன்னிசூழ் செம்பியனாடிற் - பொன்னிலத்தவரிழிபொற் புறப
டியென- நன்னிலைமாடமா நன்னிலமதனிற் - செந்தணலோம்புந் திறங
கிரியாதுய - வந்தணர்குலத்தினவதரித்தருளிய- நாராயணகுருநான்மல
ர்ப்பதத்தைப்- பேராதவனருள் பெற்றிடுமதனான் - முற்றுணர்தாண்டவ
மூர்த்தியனுபவப- பெற்றியினுலகோர் பேரின்படையக் - கிளரும்வேதா
ந்தக கிரோதத்தையைத்- தளர்வறுசமாதித் தாழினிறைத்திட்- டகமுறுவிசா
ரவணலிருற்காயசசி- மகிழ்குருவாக்கிய மத்தாற்கடைந்து- ஞானகைவல்
ய நவநீதத்தை யானபேரன்பி னளித்தனனதனை- யெளிதினிலையாவருமி
ன்புடன்றுய்க்க- வொளிர்மணக்கிருதமா யுரைசெய்விக்கும்படி- சகலாழ்
வினைத்துஞ் சத்தியமலவெனத்- திகழுறுமலைகான சென்றுபல்தவத்தோ-
ருடனுறைந்துட லொறுத்துணர்வுறப்பட்டினத் தடிகளெனத்துறந் தரநு
… காசியை- நாடியாத்திரைசெய நாடடுக்கோட்டைப்- பீடுறுமருணாசல
ப் பெருந்தவத்தோ- னருளியமொழியினை யன்புடனுட்கொண்- டருளொ
ளிலமகட் கணிகலையான- நிலைக்கடல்வயிற்றி னிரப்பிப்பற்பல - நூலக்க
டறன்னைக் கருத்துளடக்கிய- வகத்தியமுனிவாழ் பொதியமும்பொதிய-
மகத்துறுசந்தன மரமகிலுங்கொடு - நீர்வருபொருநையு நிகழுமன்னீரா-
லோர்பொருசெநநெடு கரும்பெனகன்னல் - கமுகெனக்கமுகுந் தெங்கெ
னத்தெங்குதா- னமுதுகுமெழிலிக் கானகாலென்னத் - திகழ்வுறவளங்க
ளுநஞ சேர்ந்தினிதோங்கும்- புகழ்பெறுபாண்டிப் புத்தேளுட்டிற்- கலைக
ளகடைசியர் கண்ணூடுறமுக- மலைவுறுசாலையை யம்புயமீது - புல்லி
…ழக்குவளை பூத்ததென்றதனை - வல்லில்புற்கையால் வவ்வுறக்கண்டாங்-
குறத்தியர்புனனகை கண்டிடவுயங்கி - யுழவர்களூனுறு மொண்பணைசூ
ழும்- வாதவூரடிகண் மதியுருவாகப்- போதபூரணனோர் பூசுரனாகிக்- குரு
ந்தடியமர்ந்தருள் கோதில்பெருந்துறை- மருங்கிற்பளிக்குமேன்மாடத்து
லவு- மின்னனார்முகமதி தமைவிண்மதிதான் - றன்னாராசுதனைக் கொளுந
மொழிலை-ரென்னக்கலங்கியேங்குறும்மயத் - தன்னார்கூந்தலரவெனக்க
ண்டு-பயமற்றேகுறும்பான்மையுமறையவர்-வயமுறுமரசர்வணிகர்சூத்தி
யர்முறை- மன்னுமாவித்திரா வயலெனுநகரோன்- பொன்னிசூழ்பூம்புகா
ரவணிகர்குலோத்தமன்- நாரியர்மனங்கண் ணயமுறநாடுஞ்-சீரியல்வேளி
ற் சிறந்தநல்லெழிலான்- மாலைவண்டினுநருக் காந்தளுநவமணி - மாலையு
மார்பில வயங்குவெண்கவிகையான் - அறிஞர்நல்குரவெனு மங்கிதணிய
ப்- பொறிவனஞ்சொரியுநற் புயல்கரமுடையான்- சித்திதுசடமீ தென்ற
லைவதேர்ந்து- முத்தியைப்பெறமுயன் மூதறிவுடையோ - னில்லறயதனி

விருந்துமெய்த்துறவே- நல்லறமெனவே காந்தத்தைநண்ணி - சாதுசங்க
த்தொடு சாத்திரார்த்தங்களை- மூதுணர்வுறங்கி மோதிநன்மோன- நிலையி
னின்றைம்புல நெறிச்செலுமனத்தை- யலைவுறாதடக்கு மடைக்கியபதிஞா
ன்- ஈன்றிடுங்கருத்தா னெனுமால்கேட்பச் - சான்றோரநுபவச் சாம்பிர
தாய்ந்தழீஇத்- தகைபெறும்பன்னூற் கருத்தையுந்தனது - சகசானந்தமு
ந் தழுவியவ்வளவா- தருக்குமவ்வுரையிற் குயர்பரானந்த-கிருதமெனப்
பெயர் கண்டுகிளத்தினன்- விண்ணவர்முதலோர் வீடுறுமெய்த்தவ- நண்
ணுரவந்துறுங் காவிரிநாட்டிடைத்-திருத்துருத்தியினோர் தேசிகவரசா-ய
ருமறைமுடிவா மாதனத்திருந்து - சித்தியாங்குறுநில மன்னரைசசெபித்
து- முத்திமாவுலகாண் டிடமுடிசூடு- மிந்திரபீடத் தெழிற்கரபாத்திர- சு
ந்தரனடிமுடி சூடியதெத்தாத்- திரயனடிபெறுஞ் செங்கமலன்றுண் - ம
ருவுறுநாகையின் மன்னுபேரறிஞ- னகோசரசயம்பு வாரியவோர்முதல்-
சுகோதகியுருவாய்த் தோன்றருணசலக் - குரவனடிமுடி கொண்டடியவ
ர்க்குப்- பரவுணர்வாம்பொருள் காட்டுமெய்ப்பானு- வோதருமுவகை வி
ளைக்குமுவாமதி- சாதனமொன்றுமி லாத்தமியேனையு- மோர்பொருளாக
வுவகையிற்கூவிச்- சீர்பதந்தலைமேற் றிகழ்வுறச்சூட்டி-யொருமொழியமு
தை யுள்ளுறவூட்டி- நிருவிகற்பாங்க நிட்டையினிறீஇ- மிகுசொருபானு
பூதியைவிளக்கிச்- சகசானந்தந் தலைமீக்கொண்டு-சும்மாவிருக்கச் சுகமெ
னவருளிய - வெம்மானெழிலுற் றிலங்கும்பிறைசை-அருணசலசுவாமிக
ளெனத்-திருநாமம்பெறுந்தேசிகோத்தமனே.

உரைச்சிறப்புப்பாயிர முற்றிற்று.

இஃது இந்நூ லுரையாசிரியர்மாணாக்கராகிய இராமசாமிக்கவிராயர்
பா - வாத்தியார்முனியப்பமுதலியார் இவர்களாற்செய்யப்பட்டது.

கடவுள் வணக்கம்.

நிருவிகற்பசமாதியி னின்றெழும்
பொருவிலானந்தபோதனைப்பேணு
வா, மொருமைமுத்தி யுதவுகைவல்
லிய, வருண்மநூற்கெனு நின்றுணை
யாற்றவே.................. ......*

அருளிறை வணக்கம்.

ஒளிநிறைந்த வுணர்வின் பொரு
ளையே, களிகொண்மானிடனு யுரு
சுகாட்டியிங், கெளிதினுகைவந் தெ
ன்னையெனக்கரு, ளளிமலர்ப்பதத்
தையனையேறுவாம் ............*

உ

ஓம்

சிவமயம்

# கைவல்ய நவநீதம்

முதலாவது,

## தத்துவ விளக்கப் படலம்,

### பாயிரம்,

( அவதாரிகை. )

வடநூலாராய்ச்சியில் வல்லமையுள்ள விந்நூலாசிரியர் தாமடைந்த சுவானுபூதிப் பிரத்தியக்ஷத்தை யுலகஞ்சுகருவிலடைந் தானந்தாதீதமாகும்படி நாட் டருளிறைச்சொல்லப்புகுந்த விந்நூலினிது முடியவதனங்கரங்கமான பிரஞ்ஞானம்பிரமமென்னு மிருக்குவேத மகாவாக்கியார்த்தமாகவிளங்கு மத்துவிதஸ்வரூபத்தை விலட்சணமாகவுஞ் சலட்சணமாகவுந்துதிப்பான் றொடங்கி இச்செய்யுளிற் சமாதியின்கண்ணுதயமான விலட்சணமாகிய கூடஸ்தபிரமத்தைத் துதிக்கிறார்.

பொன்னிலமாதராசைபொருந்தினர்பொருந்தாருள்ளந் ...*
தன்னிலந்தரத்திற்சீவசாட்சிமாத்திரமாய்நிற்கு...... ......*
மென்னிலங்களினுமிக்கவெழுநிலமவற்றின்மேலா ............*
நன்னிலமருவுமேகநாயகன்பதங்கள்போற்றி........ .........*

( இதனதுபதப்பொருள். )

பொன்- பொன்னினிடத்தும்—நிலம்- மண்ணினிடத்தும்—மாதர் - மடவாரிடத்தும்—ஆசைபொருந்தினர்- ஆசையுள்ளவஞ்ஞானிகளும்—பொருந்தார்- நிராசையுள்ள ஞானிகளுமாகிய விவர்களது— உள்ளந்தன்னில- இதயாம்பரத்தில்—அந்தரத்தின்- நான்குபூதங்களினு நிறைந்திருக்கின்ற வாகாயத்தைப்போல— சீவ்சாட்சிமாத்திரமாய்- கூடஸ்தனைதன்னியுமாத்திரமாக— நிற்கும்- நிறைந்திருக்கின்ற— எந்நிலங்களினும்- எவ்விதமான நிலைகளினும்— மிக்க- மேலாய— எழுநிலமவற்றில்-ஞானபூமிகளேழனுள் — மேலாநன்னிலமருவும் - முடிவாகிய துரியபூமியிற்பொருந்திய— ஏகநாயகன்- .ஒன்றாகிய பிரமசைதன்னியத்தின்— பதங்கள்போற்றி- திருவடிகளைவணங்குவாம்— என்றவாறு.

## தத்துவவிளக்கப்படலம்.

### பதசாரம்.

சகலசமயங்களுக்குமேலான்து ஞானபூமியென்பார்-எந்நிலங்களினுமி க்கவெழுநிலமெனவும், அவைகளின்முடிவானது துரியபூமியென்பார்-நன்னிலமெனவும், அதனிடமாக விளங்குகின்றது துரியாதீதமென்பார்-ஏகநாயகனெனவும், அஃதே துரியஸ்வரூப மாய்ச்சொரூபமுதல் ஸ்தம்ப பரியந்தஞ் சர்வவியாபகமாய் வியாபித்து விளங்குவதென்பார்—(பொன் னிலமாதராசை பொருந்தினர் பொருந்தாருள்ளந்-தன்னி லந்தரத்திற் சி வசாட்சிமாத்திரமாய்நிற்கு) மெனவும், யாவர்க்குஞ்சைதன்னியத்தின் ற ஸ்பிரகாசமான கூடஸ்தபிரமமேவீடமென்பார்—பதங்களெனவும், அவை களினைக்கியமே யத்துவிதமென்பார்-போற்றியெனவும், கூறினார். பொன் னிலமாதரென்பது- இச்சையைவிளைப்பதற்குக்காரணமானவீடணைத்திரி யமெனக்கொள்க. புத்திரோடணையென்பதை யவனுரிமையிற்பெறுவதாகிய வாசின்மேல்வைத்துக்கூறினார்.

(இதன்றாற்பரியம்.)

அகோசரமான நிரதிசயானந்தவஸ்து கோசரிக்குமிடத்துப் பூரணான ந்தமாகப்பிரவேசித்து நித்தியானந்த சாக்ஷாத்காரமாகத் தடித்து அதிலதி தமாகவிளங்குவதைப் பிரமமாகவு மஃதேவிடயசம்பந்தங்களிற் றக்கற்றி ருந்ததைப் பிரத்யேகாத்மஸ்வரூபமாகவுந் துதித்ததாம். (க)

(அ-கை) இச்செய்யுளின் முற்கூறியவத்து விதவஸ்துவைசகச ‍ ‍டையி ற்சலக்ஷணமாகவிளங்கிய சுயஞ்சைதன்னியமாகத் துதிக்கின்றார்.

ஈன்றளித்தழிக்குஞ்செய்கைக்கேதுவாமயனாய்மாலா.......*
யான்றவீசனுமாய்த்தானேயனந்தமூர்த்தியுமாய்நிற்கும்......*
பூன்றமுத்தனுமாயின்பப்புணரியாதவனாய்நாளுந்..........*
தோன்றியவிமலபோதசொரூபத்தைப்பணிகின்றேனே......*

(இ-ள்) ஈன்று-சிருட்டித்து—அளித்து-இரக்ஷித்து—அழிக்கும்-சங்கரி க்கும்—செய்கைக்கேதுவாம்-இம்முத்தொழிற்குமேதுவாகிய—அயனாய்-பிரமனாகியும்—மாலாய்-விஷ்ணுவாகியும்—ஆன்றவீசனுமாய்-மாட்சிமை யுள்ளவுருத்திரனாகியும்—அனந்த மூர்த்தியுமாய்-இன்னுமனேகவடிவங்க ளாயும்—நிற்கும்-இருக்கின்ற—பூன்றமுத்தனுமாய்- பூரணமானமுத்தனா கியும்—இன்பப்புணரியாதவனாய்-ஆனந்தசமுத்திரத்தி லுதிக்குஞானசூரி யனாகியும்—நாளுந்தோன்றிய-சதோதயமாகிய—விமலபோத-சுத்தசைத ன்னியமான—சொரூபத்தைப் பணிகின்றேன்-பிரமஸ்வரூபத்தை வணங் குகின்றேன்——எ-று.

[ப-ம்] தனது ஸ்புராணமெல்லாந் தனதுவடிவமாகவிளங்குமென்பார் (அயனாய்மாலாயான்ற வீசனுமாய்த்தானே யனந்தமூர்த்தியுமாய்) நிற்கு மெனவும், பேரின்பவிளக்கமே சைதன்னியமென்பார்- இன்பப்புணரியா தவனெனவும், உற்பத்திதிலயங்களின்றி விளங்கின சுத்தசைதன்னிய மென்பார்-(நாளுந்தோன்றிய விமலபோத சொரூப) மெனவும் - கூறினார்

(இ-ம்) சர்வம் பிரமமயமென்னு முபதேசவாக்கியப்படிக்கு ஸ்வரூபசாக்ஷாத்காரமான சுத்தசைதன்னியத்தைத் துதிசெய்ததாம்............(உ)

(அ-கை) முற்கூறியவாத்மஸ்வரூபமே படிவமான வருளிறையை நீதமாகவுஞ் சாக்ஷாத்காரமாகவுந் துதிக்கத்தொடங்கி யிக்கவியில் நீதமாகத் துதிக்கின்றார்.

எவருடையருளால்யானேயெங்குமாம்பிரமமென்பாற் ......*
கவருடைப்புவனமெல்லாங்கற்பிதமென்றறிந்து...... ......*
சுவரிடைவெளிபோல்யானேசொரூபசுபாவமானே .........*
னவருடைப்பதுமபாதமனுதினம்பணிகின்றேனே............*

(இ-ள்) எவருடையருளால்- யாருடையகிருபையினால்—யானே- நானே—எங்குமாம்பிரமம்-எவ்விடத்திலு நிறைந்திருக்கின்ற பிரமஸ்வரூபமும்—என்பால்-என்னிடத்தில்—கவருடைப்புவனமெல்லாம்- தோற்றிவிரிந்திருக்கின்றவுலகமுழுவதும்—கற்பிதமென்றறிந்து-பொய்யென்றறிந்து—சுவரிடைவெளிபோல் - சுவரிடத்திருக்குங் ககனம்போல—யானே- நானே—சொரூபசுபாவம்-பிரமசுபாவமும்—ஆனேன்-ஆயினேன்—அவருடை-அவரது—பதுமபாதம்-கமலமலர்போன்ற திருவடிகளை—அனுதினம்-எப்போதும்—பணிகின்றேன்-வணங்குகின்றேன்—எ-று.

ர்வம்பிரமமென்பார்- எங்குமாம்பிரமமெனவும்—சர்வமுமில்லையெனபார்(கவருடைப்புவனமெல்லாங்கற்பித)மெனவும், யாவுந் தன்மயமாகவிளங்குவனவென்பார்- சொரூபசுபாவமானேனெனவும் கூறினார், (இ-ம்) சர்வமாய்ச்சர்வமிலதாயிருக்கின்ற தன்னைத்தன்னிடத்துத்தானயிருந்து விளக்கியகுருதுரியத்தை வணங்கினதாம்........... .........(௩)

(அ-கை) இச்செய்யுளிற் சற்குருமெ்சாரூபத்தைச் சாக்ஷாத்காரமாகத்துதிக்கின்றார்.

எனனுடைமனதுபுந்நியிந்தியசரீரமெல்லா......... ........*
மென்னுடையறிவினலேயிரவிமுன்னிமமேயாக்கி............*
யென்னுடைநீயுநானுமேகமென்றைக்கியஞ்செய்ய... ....*
வென்னுடைகுருவாய்த்தோன்றுமீசனையிறைஞ்சினேனே...*

(இ-ள்.) என்னுடை-என்னுடைய—மனதுபுந்தி-மனம்புத்திகளாகிய வந்தக்கரணமும்—இந்தியம்-ஞானேந்திரியகன்மேந்திரியங்களும்—சரீரம்-தூலதேகமுமாகிய—எல்லாம்- இவைகளனைத்தும்—என்னுடையறிவினல்-எனதாத்மஞானத்தினல்—இரவிமுன்னிமமேயாக்கி- சூரியனைக்கண்டபனியைப்போலச்செய்து—என்னுடை-எனதுசுபாவமான—நீயும்-நீயென்னுங்கூடஸ்தனும்—நானும்-தானென்னும்பிரமமும்—ஏகமென்று-ஒன்றேயென—ஐக்கியஞ்செய்ய- அத்துவிதமாக்க—என்னுடைகுருவாய்- என்னாசாரியராக—தோன்றுமீசனை-உதயமானவருளிறைவனை—இறைஞ்சினேன்-வணங்கினேன்—எ-று.

[ப-ம்] தனதுபிரியத்தடிப்பே குருஸ்வரூபமென்பார்- என்னுடைகுரு வெனவும், தன்னையிரக்ஷிக்குநிமித்த முதயமான தருவிளையென்பார் அ- ன்னெனவும், கூறினார். (இ-ம) மின்முதலிய தத்துவங்களையுமுறையாதிருநா னத்திறைகளைத்தந்தனிலுதயமாகுமானந்தமாகியவஸ்தேவிஸ்திஸ்ந்க வஸ்தென்னு மத்துவிதஸ்வரூபத்தைத் தரிசிப்பிக்குமபொருட்டுப் பூரண மேயோருருவாகவெழுந்தருளிய வாசாரியனைவணங்கினதாம். (௪)

(அ-கை) தனதாசிரியனைவணங்கியவராறிறைகூறப்புகுந்த விஷயானை முகத்திறைப்படும் விடயமுந்தெய்வுணடாகும பயனுமிதுவென்றிந் றகூறப்படுவதாகிய விடயத்திற்குள்ள சம்பந்தமுமிதுவேட்டைநாய வதிகாரிபுமாகிய வனுபந்தசதுட்டயமிந்நூற்கு வருமாறுகைக்கொண்டுமெபா ருட்டுணைக்கவேண்டுதலி னவற்றுளதிகாரியும விடயமு மிசசெயயுளிற கூறுகின்றார்.

அந்தமுநடுவுமின்றியாதியுமின்றிவானபோல் ..... ........ *
சந்ததமொளிருஞானசற்குருபாதமபோற்றிப்............. .. *
பந்தமும்வீடுமகாட்டபரந்தநூலபார்க்கமாட்டா........... *
மைந்தருமுணருமாறுவஸ்துத்துவஞ்சொலவேனே ... ...*

(இ-ள) அந்தமுநடுவுமின்றியாதியுமின்றி- ஆதிமத்தியாந்தரகிதமாய்— வானபோல ஆகாயத்தைப்போல—சந்ததமொளிரும-சதோதயமாய் வி ளங்குகின்ற—ஞானசற்குருபாதமபோற்றி - ஞானாசாரியரது பாதத்தைவ ணங்கி—பந்தமும்வீடுமகாட்ட பெத்தமுமுத்தியுமாகிய இவைகளின் ஸ வரூபத்தைத்தெரிந்துகொள்ளும்படி—பரந்த - விரிந்திருக்கின்ற—நூல- வேதாந்தசாத்திரங்களை—பார்க்கமாட்டாமைந்தரும- ஆராய்ந்தறியச் சக் தியில்லாதவர்களும—உணருமாறு- எளிதிலுணருமபடி—வஸ்துத்தத்துவஞ் சொலவேன பரவஸ்துவினுண்மையைச்சொல்வேன்-எ-று.

மைந்தரென்பதற்குச் சீடரெனவும், வஸ்துத்தத்துவ மெனபது விடய மெனவுங்கொள்க. பரந்த நூல்பார்க்கமாட்டா மைந்தரு மென்னும் உம் மையால் பார்ப்பவர்க்கெளிதென்பதுமாயிற்று. [ப-ம்] சாலமுதலியவைகளுக் குள்ளும் தானேயாகிருத்தலின் அந்தமின்றெனவும், இடையிலாதிருத்தலின் ஞானந்தமாய் விளங்குதலின் நடுவின்றெனவும் எப்போதுந் தானே சுயமா யப்பிரகாசித்தலின் ஆதியுமின்றெனவும், இவ்வாறு சதோதயமாக வி ளங்கிய சச்சிதானந்தமான சுத்தசைதன்னியமே குருசொரூபமாதலால் சந்ததமொளிருஞான சற்குருவெனவும், தானேதன்மயமாயிருத்தலே பா தமபோற்றியெனவும், கல்வியபலவெனக்கண்டதின் சாரமான தன்னே யினைவிற்றெரிந்துகொள்ள விருப்புற்றவாக ளெளிதிலுணருமபடியுள்ள தாததுதலின பரந்தநூல்பார்க்கமாட்டா மைந்தருமுணருமாறு வஸ்துத்த த்துவஞ்சொலவேனெனவுங்கூறினார். (௫)

(அ-கை) இச்செய்யுளிற் சம்பந்தமும் பிரயோசனமுங் கூறுகின்றார்.

படர்ந்தவேதாந்தமென்னும்பாற்கடல்முகந்துமுன்னோர்...*
குடங்களினிறைத்து ... ...*

கடைந்தெடுத்தளித்தேனிந்தக் கைவல்யநவநீதத்தை.........*
அடைந்தவர்விடயமண்டியன்றலைவரோ பசியிலாரே.............*

(இ-ள்) படர்ந்த—விரிந்திருக்கின்ற—வேதாந்தமென்னும்—உபநிடதமென்னும்—பாற்கடல்மொண்டு—க்ஷீரசமுத்திரத்தின்முகந்து—முன்னூற்குடங்களில்—முன்னூறாகியகடங்களில்—குரவர்கள்—ஆசிரியர்கள்—நிறைத்துவைத்தார்—பூரித்துவைத்தார்கள்—எல்லாங்காய்ச்சி—அவைகளைத்தனையுங்காய்ச்சி—கடைந்து—கடைதல்செய்து—இந்தக்கைவல்யநவநீதத்தை—இந்தஞானசாத்திரமாகிய கைவல்யநவநீதத்தை—எடுத்தளித்தேன்—எடுத்துக்கொடுத்தேன்—அடைந்தவர்—இதைப்பெற்றவர்கள்—பசியிலார்—நித்தியதிருத்தியடைந்தவர்களாதலால்—விடயமண்டியன்று—விடயானந்தமென்னுமண்ணைப்புசித்து—அலைவரோ—பலவத்திற்சுழல்வார்களோசுழலார்—(எ-று) கைவல்யநவநீதமென்பதுசம்பந்தமும், அடைந்தவர்பசியிலாரென்பது—பிரயோசனமுமாமெனக்கொள்க.

[ப-ம்] வேதமுடிவான மகாவாக்கியமோர் மொழியாயினுமந்த சிட்டனுக்குப்போதமாகும் பொருட்டின்றான சுந்தவேதாந்தசாத்திரங்களுக்களவின்மையால் படர்ந்தவேதாந்தமென்னும் பாற்கடலெனவும், அவைகளிற்றங்களுக்கனுபவமாகும்பொருட்டாசிரியரெடுத்தறிவித்தவாக்கியங்களையெடுத்துக்கோடலை— மொண்டெனவும், தாம்பெற்ற பேருலகம்பெறும்பொருட்டாவினமாகிய நூல்களிலவ்வாக்கியங்களையமைத்தலை — முன்னூற்குடங்களினிறைத்துவைத்தார் குரவர்களெனவும், அப்பலசாத்திரங்களிலுள்ள வாக்கியங்களைச்சேகரித்தலை — எல்லாமெனவும், அவ்வாக்கியங்களின் பூருவபக்ஷத்தைநீக்கி விசாரத்தாற்சித்தாந்தப்படுத்துதலை— காய்ச்சியெனவும், அச்சித்தாந்தத்தைக் குருவுபதேசத்தாற் சமாதியிலனுபவமாக வாராய்தலைக்கடைந்தெனவும், அந்நிர்த்துவயமான நிருவாணசுகத்தையெடுத்தோர் நூலாகத்தந்ததை— எடுத்தளித்தேனிந்தக்கைவல்யநவநீதத்தையெனவும், இதைப்பெற்றனுபவித்துத் திருத்தியடைதலை— அடைந்தவர்பசியிலாரெனவும். இவ்வாறுடையர் விடயவிச்சையினாற் சனனமரணத்திற்சுழலாரென்பதை— விடயமண்டியன்றலைவரோவெனவும், கூறினார். (இ-ம்) பிரமமென்னுங் காமதேனுவிற் சுரந்தசுருதிகளென்னும் பாலை— விசாரமென்னுமக்கினியாற் பூருவபக்ஷமென்னுநீர்வற்ற சித்தாந்தமென்னும் மதுரமிகக்காய்ச்சி— விருத்திஞானமென்னும்பிரைகுத்தி— உபதேசமென்னுமத்திட்டு— அனுபவவாராய்ச்சியென்னுங் கடைதலைச்செய்ததிலெழாநின்ற கைவல்யமென்னுநவநீதத்தை— அனுபவித்தலையடைந்து நித்தியதிருத்தியான பசியிலா— விடயானந்தமான மண்ணைப்புசியார்களெனக்கூறினதாம்.

(அ-கை) உபாசனைமூர்த்தியைவணங்கி யிந்நூலின்படலவகை கூறுகின்றார்.

முத்தனைவேங்கடேசமுகுந்தனையெனையாட்கொண்ட.........*
சத்தனைவணங்கிச்சொல்லுங்கைவல்யநவநீதத்தைத்.........*
தத்துவவிளக்கமென்றுஞ்சந்தேகந்தெளிதலென்றும்.........*
வைத்திருபடலமாகவகுத்துரைசெய்கின்றேனே.............*

(இ-ள்) முத்தனை - பாசங்களைநீக்கிநிற்பவனை—வேங்கடேசமுகுந்தனை வேங்கடாசலபதியாகியதிருமாலை—எனையாட்கொண்டகத்தனை-என்னையடிமைகொண்டயிறைவனை—வணங்கி- பணிந்து—சொல்லுங்கைவல்யநவநீதத்தை - உரைக்குங்கைவல்யநவநீதமென்னு ஞானசாத்திரத்தை—தத்துவவிளக்கமென்றும்- தத்துவவிளக்கமெனவும்—சந்தேகந்தெளிதலென்றும்-சந்தேகந்தெளிதலெனவும்—வைத்து- நாமந்தரித்து—இருபடலமாகவகுத்து-இரண்டுபடலமாகப்பிரித்து—உரைசெய்கின்றேன்-சொல்லுகின்றேன்—எ-று. (௭)

(இ-ம்) வெளிப்படை (பாயிரமுற்றிற்று.)

(அ-கை) முற்கூறியபடலங்களுள்- தத்துவவிளக்கமென்னும்படலத்திற் றத்துவத்தைவிளக்கும்பொருட்டு முதற்கண் அதுகேட்குமதிகாரிக்குரிய சாதனசதுட்டயவிலக்கணங்கூறுகின்றார்.

நித்தியவனித்தியங்களிணையந்தெரிவிவேக........ ......*
மத்தியவிகபரங்கள்வருபோகங்களில்விராகை......... ......*
சத்தியமுரைக்கவேண்டுஞ்சமாதியென்றறுகூட்ட ........*
முத்தியைவிரும்புமிச்சைமொழிவர்சாதனமிந்நான்கே ......*

(இ-ள்) நித்தியவனித்தியங்கள் - நித்தியாநித்தியவஸ்துக்களின்—இணையந்தெரிவிவேகம்-நிச்சயந்தெரிகின்றவிவேகமும்—மத்திய-இடையிலுள்ள—இகபரங்கள்-இகலோகபரலோகங்களில்—வருபோகங்களின்-உண்டாகின்றசெல்வங்களில்—விராகை-விராகமும்—சத்தியமுரைக்கவேண்டும்-உண்மையாகச்சொல்லத்தக்க—சமாதியென்றறுகூட்டம்-சமாதிசட்கசம்பத்தியும்—முத்தியைவிரும்புமிச்சை-முமூட்சுத்துவமுமாகிய—இந்நான்கும்-இந்நான்கையும்—சாதனம்- சாதனசதுட்டயமென்று—மொழிவர்-சத்துக்கள்சொல்லுவார்கள்—எ-று. (௮)

(அ-கை) [இதுவுமது.]

சமந்தமம்விடல்சகித்தல்சமாதானஞ்சிரத்தையாறுஞ்... ...*
சமந்தக்கரணதண்டந்தமம்புறக்கரணதண்ட...... .........*
மமர்மனைவிபகாரங்களருகலேவிடலென்றாகு......... ......*
மமர்செயுஞ்சுகதுக்காதியனுபவிப்பதுசகித்தல் ...........*

(இ-ள்) சமம்-சமமெனவும்—தமம்-தமமெனவும்—விடல்- உபரதியெனவும்—சகித்தல்-திதிட்சையெனவும்—சமாதானம்-சமாதானமெனவும் சிரத்தை-சிரத்தையெனவும்—ஆறும்-ஆறாகும்—சமம்-சமமாவது—அந்தக்கரணதண்டம்-அந்தக்கரணத்தைத் தண்டிக்கலாம்—தமம்- தமமாவது புறக்கரணதண்டம்-புறத்தின்கண்ணுள்ள தசேந்திரியங்களைத் தண்டிக்கலாம்—விடல்-விடலென்பது—அமர்மனைவிபகாரங்கள் - விரும்பப்பட்ட குடும்பவிபகாரங்களை—அருகலென்றாகும்- சுருங்கச்செய்தலாம்—சகித்தல்-சகித்தலாவது—அமர்செயும் கலகஞ்செய்கின்ற—சுகதுக்காதி-இன்

பதுனாமாகவுள்ளவைகளை—அனுபவிப்பது- பிராரத்தமென்றுசஞ்சிதமாக அனுபவிப்பதாமென்று. (கூ)

(அ-கை) [இ-து.]

சிரவணப்பொருளொத்தானேசிந்தனைசிந்திக்குமாறு ... ...*
சரசமாய்ப்பாருமித்தைச்சமாதானமென்பர்மேலோர்......*
பரமசற்குருநாலன்புபற்றலேசிரத்தையாகும்.............*
வரமிருசமாதியாறுவகையாளுஞ்சொற்பொருளிதாமே... ...*

(இ-ள்) சிரவணப்பொருளை வேதாந்தசிரவணத்தங்களை—சித்தம்-உள்ளமானது—சிந்திக்குமாறு- பிரியமாய்ச்சிந்திக்குமபடி—சரசமாய்வைகதும்-இனியதன்மையாகச்செய்யும் -இந்தை நிதை-மேலோர் மகான்கள்—சமாதானமென்பர் சமாதானமெனவு சொல்லுவார்கள்—பரமசற்குரு மேலானவாசாரியரிடத்தும நால் வேதாந்தசாஸ்திரங்களிடத்தும் அன்புபற்றல்-அன்புவைத்தல்—சிரத்தையாகும்- சிரத்தையாம்—வரமிரு மேன்மையிருந்த சமாதி- சமாதியென்னும— ஆறுவகையாளுஞ்சொற்கு ஆறுபிரிவான பதத்துக்கு—பொருளிதாம்- அருத்தமிதுவாம்—எ-று.

(இ-க-ந-ம) அநித்தியவஸ்துக்களிவையெனக்கண்டுநித்தியவஸ்துவை டைதற்கேதுவானகுணங்களேயேசாதனசதுட்டயமாகக்கூறினதாம். (ம)

(அ-கை) அச்சாதனங்களின்றி யமையாச்சிறப்பினமெனவு மதனுலுண்டாகும் பயனிதெனவுங்கூறுகின்றார்.

சாதனமின்றியொன்றைச்சாதிப்பாருலகிலில்லை...... ......*
யாதலாலிந்தநான்குமடைந்தவர்க்கறிவுண்டாகு ............*
மாதலைவிவேகியுள்ளினுழையாதுநுழையுமாகிற்...... ......*
பூதசென்மங்களகோடிபுனிதனும்புருடனுமே...... ..........*

(இ-ள்) சாதனமின்றி சாதனமில்லாமல—ஒன்றை- ஒருகாரியத்தை—சாதிப்பார்-சாதிப்பவர்கள்—உலகிலில்லை-பூமியின்கணில்லை—ஆதலால்-ஆகையால்—இந்நான்கும- இச்சாதனசதுட்டயங்களை—அடைந்தவர்க்கு- பெற்றவர்களுக்கு—அறிவுண்டாகும்- ஞானேதயமாகும்—நாதனவிவேகியுள்ளில் புதியவிவேகியின்மனதில்—நுழையாது- புகாது—நுழையுமாகில் புகுமானல்—பூத-இறந்தகாலத்துள்ள—சென்மங்கள்கோடி-அனந்தசனனங்களில—புனிதனும்புருடனும- சித்தசுத்தியுள்ளவனுகியபுமானும—எ-று.

(இ-ம) மெய்யுணர்வையுணர்தற்கிச்சாதனங்க ளவசியம்வேண்டுமென்பதாம். (மக)

(அ-கை) அச்சாதனமுள்ள சீடனதுதீவிரதர பக்குவத்தையறிவித்தல்

இவன்றிகாரியானேனிந்திரியங்களாலும் ......................*
புவனதெய்வங்களாலுமபூதபௌதிகங்களாலும்...... ......*

தவனமூன்றடைந்துவெய்யிற்சகித்திடாப்புழுப்போல்வெம்பி
பவமறுஞானதீர்த்தம்படிந்திடப்பதறினேனே...... ......[ப

(இ-ள்) இவன்-இச்சாதனசதுட்டயமுள்ளவனே—அதிகாரியானேன்-இந்நூலுக்கதிகாரியாவன்—இந்திரியங்களாலும்- ஆதியாத்மிகத்தினாலும்-புவனதெய்வங்களாலும்- ஆதிதெய்விகத்தினாலும்— பூதபௌதிகங்களாலும்-ஆதிபௌதிகங்களாலும்—தவனமூன்றடைந்து- தாபத்திரையாக்கினையையடைந்து—வெய்யிற்சகித்திடாப் புழுப்போல் -சூரியனுஷ்ணகிரணத்துக்குச் சகிக்கமாட்டாதகிருமியைப்போல—வெம்பி - வெப்பமுற்று—பவமறும் - பிறவியையொழிக்கின்ற— ஞானதீர்த்தம்படிந்திட-ஞானசாகரத்தின்மூழ்க—பதறினேன்-தீவிரமுற்றேன்—எ-று.

(இ-ம்) தாபத்திரையாக்கினியாகிய சங்காரதுன்பங்களுக் காற்றாதவனே யவைநீங்கிப் பிரமானந்தமடைய விரைவனென்பதாம். (௰௨)

(அ-கை) அத்தீவிரதரபக்குவனுக்காசிரியர்தரிசனமாதல்.

ஆனவிம்மனைவிமக்களர்த்தவீட்டிணைகண்மூன்றிற் ... ......*
கானவர்வலையிற்பட்டுக்கைதப்பியோடுமான்போற் ... ...*
போனவன்வெறுங்கையோடேபோகாதவண்ணஞ்சென்று...*
ஞானசற்குருவைக்கண்டுநன்றாகவணங்கினானே... ... ...*

(இ-ள்.) ஆனவிம்மனைவி- தனக்கானவிவ்வில்லாளும்—மக்கள்- புத்திரரும்—அர்த்தம்-தனமுமாகிய—ஈடணைகண்மூன்றில்-ஈடணாத்திரியங்களினின்றும்—கானவர்வலையிற்பட்டு-வேடர்கள்வீசும்வலைக்குளகப்பட்டு—கைதப்பியோடுமான்போல்- தவறிச்செல்லுமரிணத்தைப்போல—போனவன்-ஓடினவன்—வெறுங்கையோடே-சும்மா—போகாதவண்ணம்- செல்லாதபடி—சென்று - உளத்தினன்பும்புறத்தினாராதனைக்குரிய வஸ்துக்களுங்கொண்டுபோய்—ஞானசற்குருவைக்கண்டு - ஞானாசாரியனைத்தரிசனஞ்செய்து—நன்றாக- திரிகரணசுத்தியாக— வணங்கினன்- பூசித்துப்பணிந்தான்—எ-று.

(இ-ம்)ஈடணாத்திரியமான துன்பங்களினின்றுநீங்கியவிவனுக்கின்பவடிவமான சற்குருதெரிசனமாயிற்றென்பதாம். (௰௩)

(அ-கை) தரிசனஞ்செய்தஅவ்வாசிரியரிடத்திற் செய்யும்விண்ணப்பம்

வணங்கிநின்றழுதுசொல்வான்மாயவாழ்வெனுஞ்சோகத்தா *
லுணங்கினேனையனேயென்னுள்ளமேகுளிரும்வண்ணம்... *
பிணங்கியகோசபாசப்பின்னலைச்சின்னமாக்கி .. ... *
யிணங்கியகுருவேயென்னையிரக்ஷிக்கவேண்டுமென்றான் ... *

(இ-ள்.) வணங்கிநின்று- பணிந்தெழுந்துநின்று— அழுதுசொல்வான்-கண்ணீர்சொரியவழுதுரைப்பான்—மாயவாழ்வெனும்-பொய்யானகுடும்ப வாழ்க்கையென்னும்—சோகத்தால்- துன்பத்தினால்—உணங்கினேன்-

வாடினேன்—ஐயனே- எனதாசிரியரே—என்னுள்ளம்- என்தகம்—குளிரும்வண்ணம்- சீதளமாம்படி—பிணங்கியு- செறிந்திருக்கிற—கோசபாசப்பின்னலை- பஞ்சகோசமாகிய பந்தப்பின்னலை—சின்னமாக்கி- தூளாக்கி—இணங்கியகுருவே - முத்தியையடைவிப்பதற்குடன் பட்டிருக்குமாசிரியரே—என்னை- அடியேனை—இரக்ஷிக்கவேண்டுமென்றான்- முத்தியிற்சேர்க்கவேண்டுமென்றுசொன்னான்—எ-று.

(இ-ம்) அறிவின்மையால் வரும்பவத்துன்பத்தைநீக்கி, அறிவினால்வருமின்பத்தின் மூழ்கும்படிசெய்விக்க, வாசிரியனைவேண்டிக்கோடலாம்(௰௪)

(அ-கை.) அஙஙனம் வினவின சீடனைப்பரிசோதித்தல்.

அன்னைதன்சிசுவையையுறுமைமீன்பறவைபோலத் ... ...*
தன்னகங்கருதிநோக்கித்தடவிசசந்நிதியிருத்தி ... ... ...*
யுன்னதுபிறவிமாற்றுமுபாயமொன்றுண்டுசொல்வேன் ... *
சொன்னதுகேட்பாயாகிற்றொடர்பவந்தொலையுமென்றார் ...*

(இ-ள்.) அன்னை-தாயையொத்த—ஐயன்- குருவானவர்—தன்சிசு- தன்னுடையசிடனை—ஆமை- கூர்மத்தைப்போல- தன்னகங்கருதி- திருவுளத்தினைத்து—மீன்- மச்சத்தைப்போலே- நோக்கி- திருநயனத்தாற்பார்த்து—பறவைபோல- பக்ஷியைப்போல—தடவி- அஸ்தமஸ்தகசையோகஞ்செய்து—சந்நிதியிருத்தி- சந்நிதியில் நிறுத்திவைத்து— உனதுபிறவிமாற்றும்-உனதுபவத்துன்பத்தைநீக்குமுபாயமொன்றுண்டு- தந்திரமொன்றிருக்கின்றது—சொல்வேன்- உபதேசிப்பேன்- சொன்னதுகேட்பாயாயில் போதித்தவண்ணங்கேட்டு நடப்பாயாயில் —தொடர்பவம் நெருங்கிவருகின்ற தொடருஞ் சநநமானது—தொலையும்- நீங்குமென்றருளினார்-எ-று

[ப-ம்] விஷயத்தை நினைக்குமாசாரியத்தைக் கெடுத்தறிவையுணரும்படி சிந்தித்தாரென்பார் - ஆமைபோற்கருதியெனவும், மன்பத்தப்பாடுருகநின்ற சஞ்சிதமாமிருந்தன பசத்தாமாத்திரமாகநிருவிடவநும்படி பார்த்தாரென்பார்- மீன்போனோக்கியெனவும்,பிராரத்தமாயவருமபௌதிகவடிவம், நித்தியானந்தமாக விவகாரத்தனது பூரணானந்தமாக வியாபித்தாரென்பார்-பறவைபோற்றடவியெனவும், கூறினார் (இ-ம்) சமஸ்காரஞ்செய்தவாசிரியா உபதேசிப்பதற்காக வருமமதைக்குறுவோ விலவோவெனவாராய்ந்ததாம். (௰௫)

(அ-கை) ஆசிரியர் வசனத்தின்மகிழ்ந்தனபு கூர்தல்.

தொடர்பவந்தொலையுமென்றுசொன்னதைக்கேட்டநேரந் ...*
தடமடுமூழ்கினேன்போற்சரீரமுங்குளிர்ந்துள்ளாறி ... ...*
யடருமன்பொழுகுமாபோலானந்தபாஸ்பங்காட்டி ... ...*
மடன்மலர்ப்பாதம்மீண்டும்வணங்கிநின்றீதுசொல்வான் ...*

# சந்தேகவிளக்கப்படலம்.

(இ-ள்.) தொடர்பயம் - தொன்றுதொட்டுத் தொடராநின்ற சநநமரண பயமானது—தொலையுமென்று-நீங்குமென்று—சொன்னதை-அருளியதை--கேட்டபோழ்-கேட்டபோதே—தடம்பு - விசாலமானதடாகத்தில- முழுநிலைபோல்-முழுகினவனைப்போல-சரீரமுங்குளிர்ந்து-தேகமுங்குளிர்ச்சியாய உள்ளமும்-மனமுமுங்குளிர்ந்து—அடருமன்பு- நிறைந்தவன்பானது— ஒழுகுமாபோல்-கரையழித்துச்சொல்லுவதுபோல— ஆநந்தபாஷ்பங்காட்டி- இரண்டுகண்களிலுமாநந்தபாஷ்பமபெருக—படன்மலர்ப்பாதம்- இதழ்விரிந்தகமலமலர்போன்ற பாதங்களை-மீண்டும்-இரும்பவும்—வணங்கி-பணிந்து—நின்று-எழுந்துநின்று—சாற்றுவான்-இதனைச்சொல்லத்தொடங்குவான் —எ-று. (௫௮)

(அ-கை) சீடனவிண்ணப்பத்திலக்கமின்றென்பதைக்குறிப்பிக்கிறதல்

சொன்னதுகேட்கமாட்டாக்கொண்டனைதுஞ்சுவாமி... *
யின்னதுதானினையாமலேநீசொன்னையாளலாமே ... ... ... *
யுன்னதுபிறவிமாற்றுமுபாயமொன்றுண்டெனநீரே. . ...*
யின்னதெனவதைநீகாட்டியீடேற்றல்வேண்டுமென்றான ...*

(இ-ள்.) சொன்னது-போதித்ததை - கேட்கமாட்டாத—கொண்டனைதும் அறிவையுமறுதும் - சுவாமி- எம்பெருமானே — இன்னதுதானினையாமல்-நீதவர்ததுபெருமையால்-சொன்னீர் - தேவரீர்சொல்லியே—ஆளலாமே- தந்தருளலாமே -உன்னதுபிறவிமாற்றும உனது பவத்தைக்கெடுக்கும— உபாயமொன்றுண்டெனநீரே- தந்திரமொன்றிருக்கின்றதென்றுநீர்செய்திரோ— இன்னதென்று-இத்தன்மையதென்று -- அதை-அவ்வுபாயத்தை - நீர்காட்டி-தேவரீராண்பித்து—ஈடேற்றல்வேண்டுமென்றான இரட்சிக்கவேண்டுமெனறான—எ-று.

(இ உ-கரம்) சீடனவிவ்வளவுதுலயமாறுமதனைக்கண்ணுதயமாரு வானந்தத்திற்கு விளக்கமாக வப்பைவிளக்குதல்குருதுரியமாதலால் ... வருமோவிளக்கவேண்டுமெனபதாம். (௫௯)

(அ-கை) அநுப்பாவமின்றெனபதையுமாந்தாக்மஸ்வரூபத்தையுமுபதேசிக்கத்தொடங்கல்.

அடங்கியவிருத்தியாமென்றறிந்தபின்செறிந்தமண்ணின் ...*
குட்டம்பையுட்புழுமுன்றூதுங்குளவியின்கொள்கைபோலத்*
தொடங்கியதருவுமான்மசொரூபமேமருவவேண்டி... ...*
யடமிருடீவினைப்பார்த்துபதேசமோதுவாரே .... ...*

(இ-ள்.) அடங்கியவிருத்தியானென்று-விருத்தியடங்கினவனென்று-அறிந்தபின்-தெரிந்தபின்பு—செறிந்த- நெருங்கிய— மண்ணின்குட்டம்பையுள்-மட்கூட்டினுள்ளிருக்கின்ற—புழுமுன் கிருமியின்முன்னே— ஊதுங்குளவியின்- சத்திக்குங்குளவியினது--கொள்கைபோல - தன்மையைப்போல—தொடங்கியதருவும்-உபதேசிக்கத்தொடங்கிய வாசாரியரும —

# தத்துவவிளக்கப்படலம்.

ஆன்மசொரூபம் ஆன்மஸ்வரூபத்தை—மருவவேண்டி - சீடனையும் பொருட்டு—உடம்பிலுள்ள தேசத்துளிருக்கும்—சிவனைப்பார்த்து - சிவனோக்கி—உபதேசமோதுவார் உபதேசஞ்செய்வார்—எ-று.

(இ-ம்) சீடனுய்யத்தாரகத்தவ [illegible] பக்கத்தைப்பார்த்தவனஃதாகவிளங்கும் பொருட்டனுக்கிரகத்தைத் தொடங்கினதாம். (௰அ)

(அ-கை) பவத்தைநீக்கும்பொருட்டஃதுண்டான காரணமு மஃதுநிற்குங்காலமுளவைவிரிக்கின்றது.

வாராயென்மகனேதன்னைமறந்தவன்பிறந்திறந்து ... ...*
தீராதசுழற்சாற்றுந்தெத்தைபோற்சுற்றிச்சுற்றிப். ... *
பேராதகாலமேபிரமைவிட்டிரிவனாதக ... ... ... *
பாராயித்தனைத்தாமென்றறியுமவனன்பதானே.. ... *

(இ-ள்) என்மகனே- என்புத்திரனே - வாராய் - வாராய்— தன்னைமறந்தவன்- தன்காத்மசொரூபத்தைமறந்தவன் - பிறந்து பிறந்து சங்கரித்து— தீராதசுழற்சாற்றும் - ஒயாதசுழற்சாற்றமிலக்கப்பட்ட [illegible] செத்தைபோல — சத்தைபோல —சுற்றிச்சுற்றி அப்பவத்திற்சுழன்றுசுழன்று —பேராககாலமே- நீங்காதகாலமுதல் [illegible] — பிரமைபிடித்து — விவனசுழற்றப்பிறசஞ்சரிப்பன — [illegible] அப்பிறப்பையுடைத்தமானதாலும் [illegible] அறியும் [illegible] பிரமமென்றறிந்து அறியுமவனே தெரியுமட்டுமே-எ-று.

(இ-ம்) அறிவின்மையாலுண்டான பவம் [illegible] பத்தத்தைத்தானென [illegible] நிற்குமென்பதாம். (௰௯)

(அ-கை) [illegible] உபதேசப்பிரகாரம் அறியவேண்டிய பொருளிதுவெனவுரைக்கின்றது.

தன்னையுந்தனக்காதாரத்தலைவனையுங்கண்டானேற் ... ...*
பின்னையப்பத்தலைவனுறைய [illegible] பிரமமாயிருக்கின்றான ... *
[illegible] வாயாதேயகொரு [illegible] மில்லை ... ... ..*
யென்னைப்போலடையாமலேயீதுபதேசித்தேனே ... ... *

(இ-ள்) தன்னையும் [illegible] தனக்காதாரத்தலைவனையும்- தனக்கிடமான பிரமத்தையும் — கண்டானேல் தரிசிப்பானாயின் —பின்னை-பின்பு—அத்தலைவனுறைய- அப்பிரமமேகூடஸ்தனுய பிரமமாய்-அங்கூடஸ்தனைப்பிரமமாய — பிறப்புத்தீரவனைச்சந்நிதானமான —உன்னைநீயறிவாயேல்- உனதத்துவிதஸ்வரூபத்தை நீதெரிந்துகொள்வாயானால்—உனக்கொருகேடுமில்லை-உனக்கொருகெடுதியுமில்லை-என்னை - எம்மை—நீகேட்டையால்- நீகேட்டுநின்றபடியால்—உபதேசித்தேன - எனதனுபவமானவிதைச்சொன்னேன் —எ-று.

[ப-ம்] [illegible] பதானதேகமுதல்பிரகிருதிபரியந்தம்-ஒவ்வொன்றினுக்கீ யாமமுறையைச்சேடித்திருக்கின்ற பிரகிருதியேகாதமான சைதன்னியத்தைத்

தன்னையெனவும் அங்ஙனஞ் சேடித்ததானே அவைக ளனைத்தினும் பூரணமான பிரமசைதன்னியமாய் விளங்குவதைத் தலைவனெனவும், அந்நிரு பிந்நிதந் தேயந்தாய்விளங்குஞ் சுத்த சைதன்னியந்தானுகுவதை - யென னைத்தலைவன்றனுய்ப் பிரமமாயெனவும, அங்ஙனம்விளங்கிய வனுபவத் திற்கு தயாஸ்தமன மின்மையாற்சநநமரணமின்றென்பதை- பிறப்புந்நீர் வனெனவுங்கூறினார். (உ௰)

(அ-கை) தன்னையறிய வேண்டுமென்பதைச் சர்வத்திர சாதாரணமாக க்கொள்ளுந்தேகமெனக்கருதியந்நைதயறிந்தவர்கள் பவ நீங்காமையானந் தினுண்மையையுணரவினுதல்.

என்னைத்தானசடனுகவெண்ணியோசொன்னீரையா ... ...*
தன்னைத்தானறியமாந்தர்தரணியிலொருவருண்டோ ... .. *
பின்னைத்தானவர்களெல்லாம்பிறந்திறந்துழுலுவானேன்... ...*
னின்னைத்தானம்பினேற்குநிண்ணயமருளுவீரே ... ... *

(இ-ள்.) என்னைத்தானசடனுக-என்னையாதறியாதவனுக--எண்ணியோ சொன்னீர்-கருதியாசொன்னீர்—ஐயா-என, சாசிரியரே—தன்னைத்தா னறியாமாந்தர்-தன்னைத்தெரியாதமனிதர்— தரணியிலொருவருண்டோ-பூ மியினிகலொருவருளரோ—பின்னை பின்பு—அவர்களெல்லாம்-அவர்களை னைவரும்— பிறந்திறந்துழுலுவானேன் - சநநமரணத்திற் சுழலுவானேன் நின்னைதேவரீரை—நம்பினேற்கு-நம்பினவடியேனுக்குநிண்ணயமருளுவீ ர்-நிசசயத்தைசசொல்வீர்—எ-று.

(ப ம்) ஆசிரியர் தனதனுபவப்படிதேகத்திற்றனுயிருந்த தன்னையறிய வேண்டுமென்ன வந்தனுபவமாகாத சீடன்றேசமேதானெனக்கருதி யெ ன்னையானறியவில்லையாவென்று னென்பார் என்னைத்தானசடனுகவெண் ணியோசொன்னீரெனவும்- இங்ஙன மறிந்தயாவர்க்குஞ் சநநமரணமே னீங்கவில்லையென்பானென்பார்-பின்னைத்தா னவர்களெல்லாம் பிறந்திற ந்துழலுவானேனெனவும், தானென்பதிந் தெனவுண்மையாகத் தெரிவி க்கவேண்டுமென்பானென்பார் நிண்ணயமருளுவீரொன வுங்கூறினார்,

(இ-ம்) தானென்ப தனுபவமர்கும்பொருட் டதனியல்பை விசாரித்த தாம். (உக)

(அ-கை) தானென்பதிந்தெனக்கூறியுந்தோன்றுததற்காக வாசிரியர் வருத்தமுற்றிரங்குதல்.

இன்னதுதேகந்தேகியிவனெனவுணர்வன்யாவ............*
னன்னவன்றன்னைத்தானென்றறிந்தவனுகுமென்றூர்... ...*
சொன்னபின்றேகியாரித்தூலமல்லாமலென்றன்..........*
பின்னதுகேட்டவைய்யர்பீடைப்ருசையுங்கொண்டார்........*

(இ-ள்) தேகம்-சரீரமானது—இன்னது-இத்தன்மையுள்ளது—தேகி-சரீரி—இவனென்று-இத்தன்மையுள்ளவனென்று—உணர்வன்யாவன்-அறிகின்றவனெவனோ—அன்னவன்-அவன்—தன்னை-கூடஸ்தனை—தானென்று-பிரமமென்று—அறிந்தவனாகுமென்றார்-தெரிந்தவனாவனென்றார்—சொன்னபின்-அங்ஙனம்போதித்தபின்பு—இத்தூலமல்லாமல்-இச்சரீரமன்றி—தேகியாரென்றான்-சரீரியாரென்றுகேட்டான்—பின்-பின்பு—அது-அவனதுவார்த்தை—கேட்டவையர்-கேட்டவாசாரியார்—பீடையும்-துன்பமும்—நகையும்-புன்னகையும்—கொண்டார்-கொண்டனர்—எ-று.

(ப-ம்) இத்தேகந்தானிருப்பவனை யெங்ஙனமறிவிக்கலாமென ஆலோசிக்குமனவருத்தமும், தேகந்தானெனவறிந்தவன் மேன்மையுந் தானென்றறிவனென்னு மபிப்பிராயமுங்கொண்டானென்பார்- பீடையுநகையுங் கொண்டாரெனக்கூறினார் (இ-ம்) ஆசிரியர் தனதனுபவமான சுத்தசைதன்னியத்தைத் தானென்றுகூறச் சீடன் தனதனுபவமான தேகந்தானன்றித் தான்வேறுளதோவென வினவினது. (௨௨)

(அ-கை) தேகந்தானன்றதன்சார்புள்ள தேகியேதானென்பது தனக்குத்தானே தோன்ற அவத்தாத்திரியங்களை யறிகின்றவன்யாரென வாசிரியர்வினாதல்.

தேகமல்லாமல்வேறேதேகியார்காணேனென்றாய்... ......*
மோகமாங்கனவில்வந்துறுபணித்திடுமவனார்சொல்லாய் .. ...*
சோகமாங்கனவுதோன்றச்சுழுத்திகண்டவனார்சொல்லாய் ...*
யாகநீநனவிலெண்ணுமறிவுதானதுசொல்லாய்...... ......*

(இ-ள்) தேகமல்லாமல்-சரீரத்தையன்றி—வேறே-வேறாயுள்ள—தேகியார்-சரீரியார்—காணேனென்றாய்-யான்கண்டிலேனென்றாய்—(அங்ஙனமாயின்) மோகமாம்-மோகமாகிய—கனவில்வந்துறுபணித்திடுமவனார்-சொற்பனத்திலுதித்தவன் யாவன்—சொல்லாய்-இதனைநீசொல்—சோகமாங்கனவுதோன்ற-மயக்கமாகியசொற்பனந்தோன்றாத—சுழுத்திகண்டவனார்-சுழுத்தியிற் சூனியமாகத்தரிசித்தவனார்-சொல்லாய்-சொல்வாய்—ஆக ஆகியவிவ்விரண்டையும்—நீநனவிலெண்ணும்-நீசாக்கிரத்தினினைக்கும்-அறிவுதானதுசொல்லாய்-அறிவுயாதுசொல்—எ-று.

(இ-ம்) தேகத்தைத்தவிர தேகியொருவனுளனென்பது தோன்றவினாவினதாம். (௨௩)

(அ-கை) தேகத்தின்அவத்தைகளை யறிகின்ற தேகியொருவனுள னெனத் தோன்றுகின்றது அதனைவிளக்கவேண்டுமெனல்.

கனவுகண்டதுநான்கண்டநனவுளநினைவுநீங்கிக...... .....*
கனவுகண்டதுமிரண்டுங்காணாத்சுழுத்திகண்டுங் ..........*

தினமனுபவித்தலோகருமெரியவுமில்லைசற்றே ..... ..... *
மனதினிலுதிக்கும்பின்னைமறைக்குமதருளுவீரே ..... .. *

(இ-ள்) நனவுகண்டதும் - சாக்கிராவத்தையிற்பார்த்ததும் — நான்கண்டேன் யான்பார்த்த — நனவுளதின்னவுநீங்கி - சாக்கிரத்திலுள்ளதின்னப்புநீங்கி — கனவுகண்டதும் - சொப்பனத்திற்பார்த்ததும் — இரண்டுமொன்றாக இப்படி ருவத்தைகளின் றெழிலினமிய — சுழுத்திசண்டும சுழுத்தியிற்றனிய தைப்பார்த்ததும் — தினமனுபவித்தல் - நாடோறுமனுபவிப்பதுவலல் ஒக்கும் - தேவரீர்தேகியொன்றிருக்கிறதென்றறியதொவ்வமே — தெரியவுமில்லை அநுபிரத்தியக்ஷமாகவுமில்லை — சற்றேமனதினிற்பிரக்கும் - சற்றுமனதிலேயுதிக்கின்றது — பின்னைமறைக்கும் பின்புமறைக்கின்றது - அது - அந்தநிஸ்வரூபத்தை — அருளுவீர் கிருபைசெய்வீர் - எ-று. கண்டதெனபது-கண்டேனெனவும், மறையுமெனபது-மறைக்குமெனவும் திரிந்துநின்றன.

(இ-ம்) தானென்பதுதேகமன்று தேகியெனவவத்தைகளிற் றன்னிட்டறிக்கவொருவாறுணர்ந்த பீடனைந்துமின்றினிமோலகத் தோற்றமறைதலினதனையநாதத்துவஸ்வரூபமின்றெனவிளங்க வனுக்கிரகிக்கவேண்டிக்கோடலாம்.

(அ-கை) நானேகங்காண்பிருக்கவினைக் கிருபித்து விடைகொண்டப்படி திப்பியனாட்கவிலசாலையான பூணபுசடமான தேகவிலசியாங் கூறியவஸ்துதீக்கிபசிதசித்தானை தேகியிலக்கணங் கூறத்தொடங்கல.

காலமுதிமாயங்களகாட்டித்தனிப்பிறைபோட்டிவார்போல ..... *
லாலத்தினுநிகளாய் டிப்பரத்திரோட்டுவார்போல .... *
ஞாலத்தைப்புனைப்பாட்டிச் சுத்தருமசொருபமான ... .. *
மூலத்தைப்பினப்பாட்டமுனிவராதொடங்கினாரோ ..... .. *

(இ-ள்) காலத்தின் புவிபின்களுள்ள — மாயங்களாட்டி - கருதகளாககாண்பித்து — தனிப்பிறைகாட்டுவார்போலதனியானமூனமறைப்பிறையைத்தெரிப்பிப்பவர்போல — ஆலத்தினுநிகளகாட்டி ஆகாயத்தினசவனுள்ளதாரகைகாட்டி — அருந்ததிகாட்டுவார்போல- அருந்ததியைக்காணப்பவர்களைப்போல தூலத்தைமுனபுகாட்டி-தூலமாயுள்ளதத்துவங்களைமுனனே தெரிப்பித்து — சூக்குமசொரூபமான - அனுவுசசனுவுள — மூலத்தை-காரணத்தை — பின்புகாட்ட பின்புதெரிப்பிக்க முனிவராதொடங்கினார் ஆசிரியராரம்பித்தார் — எ-று. ஆல்மெனபது, ஆகுபெயர்.

(இ-ம்) போதமாகும்படி போதிக்குமரபுகூறினதாம். (௨௰)

(அ-கை) தானேயசித்தைத்தனியே தெரிப்பித்தபின்னர் சகசிவபரமாகத்தோற்றுவித்த மாயாசக்தியையும் அநுபவிதமான படஸ்தபிரமமாகத் தோற்றுவிக்குமசுவர்தபுத்தியையுங் கூறத்தொடங்கல.

அத்தியாரோபமென்றுமபவாதமென்றுஞ்சொல்லு...... ...*
முத்தியாற்பந்தம்வீடென்றுணர்க்கும்வேதாந்தமெல்லா... ..*
மித்தையாமாரோபத்தாற்பந்தமாம்பவாதத்தான... .........*
முத்தியாமிவ்விரண்டின்முந்தியாரோபங்கேளாய்............*

(இ-ள்) அத்தியாரோபமெனறும்-அத்தியாரோபமென்றுசொல்லும்-முத்தியாற்பந்தம் - சொல்லுகின்றவுத்தியினாற்பந்தமெனவும்—அபவாதமென்றுஞ் சொல்லுமுத்தியால்-அபவாதமென்றுசொல்லுகின்ற வுத்தியினால்—வீடென்றும்-வீடெனவும்—வேதாந்தமெல்லாம்-உபநிடதமனைத்தும்—உணர்க்கும்-சொல்லும்—ஆகலால்-மித்தையாமாரோபத்தால்-இல்லாதவாரோபத்தால்—பந்தமாம்-பெந்தமாம்—அபவாதத்தால் அபவாதத்தினால்—முத்தியாம் வீடாம்—இவ்விரண்டில்- இவ்விருவகையில்—முந்தியாரோபங்கேளாய்-முன்பாரோபத்தைக்கேட்பாய்—எ-று.

[இ-ம்] அத்தியாரோபவபவாதவிலக்கணங்கூறினதாம். (உசு)

(அ-கை) அத்தியாரோபவிலக்கணத்தைத் திஷ்டாந்தரூபமாகக்கூறுதல்

ஆரோபமத்தியாசங்கற்பனையாவையெல்லா......... .........*
மோரோர்வஸ்துவினைவேறேயோரோர்வஸ்துவெனவோர்த *
லாநாருடுபணியாத்தோன்றனரனாகத்தறியிற்றோன்ற... ...*
னீர்கானற்றோன்றனிரந்தரம்வெளியிற்றோன்றல்........*

(இ-ள்) ஆரோபம்-ஆரோபமென்றும்—அத்தியாசம்- அத்தியாசமென்றும்—கற்பனை-கற்பனையென்றும்—ஆவையெல்லாம் - ஆவனவனைத்தும்—ஓரோர்வஸ்துவினை- ஒவ்வொருபொருளை—வேறே- வேறாய்—ஓரோர்வஸ்துவென- ஒவ்வொருபொருளென—ஓர்தல்- அறிதலாம்—நாருடு- பழுதையினிடத்து—பணியாத்தோன்றல்-சர்ப்பந்தோற்றுதல்—தறியில்-கட்டையினிடத்து—நரனாகத்தோன்றல் - மகனாகத்தோற்றுதல்—கானலு-கானலினிடத்து—நீர்தோன்றல்-சலந்தோற்றுதல்—வெளியில்- ஆகாயத்தினிடத்தில்—நிரந்தரந்தோன்றல்-தரமின்மைதோற்றுதலும்—எ-று.

(அ-கை) முற்கூறியதிஷ்டாந்தம்போலச் சுத்தசைதன்னியத்திற் சகசிலபாரந்தோற்றுமெனல்.

இப்படிப்போலநாமரூபங்களிரண்டுமின்றி... ......... ....*
யொப்பமாயிரண்டற்றொன்றாயுணர்வொளிநிறைவாய்நிற்கு *
மப்பிரமத்திற்றோன்றுமைம்பூதவிகாரமெல்லாந்..... ......*
செப்பியசுருபிதத்தாற்செனித்தவென்றறிந்துக்கொள்ளே ...*

(இ-ள்) இப்படிப்போல-இவைபோல—நாமரூபங்களிரண்டுமின்றி-நாமரூபமானவிருதன்மைகளின்றி—ஒப்பமாய்-ஒற்றுமையாயும்—இரண்டற்றொன்றாய்-துவிதமின்றியேகமாகியும்—உணர்வொளிநிறைவாய்-ஞானப்பிரகாசநிறைவாயும்—நிற்கும்-இருக்கின்ற—அப்பிரமத்திற்றோன்றும்-

அப்பிரமத்திற்றோற்றுகின்ற—ஐம்பூதவிகாரமெல்லாம்-பஞ்சபூதரூதவி வேறுபாடனைத்தும்—செப்பிய-செல்லாநின்ற—கற்பிதத்தால-ஆரோப தால்—செனித்தவென்று-உண்டானவைகளென்று—அறிந்துகொள்-தெ ரிவாய்—எ-று.

(இ-உ-க-ம்) உள்ளதான சத்திவில்லாததான் சகசிவபரந்தோன்று மு றைமை யிங்ஙனமென்றுகூறினதாம். (உஅ)

(அ-கை) பிரமத்திற்கற்பிதமாகச் சீவேஸ்வரசாத்துண்டானமுறைமை யிருவகையாகக்கூறத்தொடங்கி முன்னமொருவகையைக் கூறுகின்றார்.

அதுதானெப்படியென்றக்காலநாதியாஞ்சீவரெல்லாம் ......*
பொதுவானசுழுத்திபோலப்பொருந்துமவ்வியத்தந்தன்னி *
லிதுகாலதத்துவப்பேரீசனுட்பார்வையாலே...... .........*
முதுமூலசுபாவம்விட்டுமுக்குணம்வியத்தமாமே............*

(இ-ள்) அதுதானெப்படி யென்றக்கால்- அக்கற்பனையெப்படியுண்டா யிற்றெனின்—அநாதியாஞ்சீவரெல்லாம்- நிற்ருபமானசீவர்களனைவரும், பொதுவானசுழுத்திபோல- சாதாரணமானசுழுத்தியைப்போற் சூனிய மாயிருக்கின்ற—அவ்வியத்தந்தன்னில-மூலப்பிரகிருதியில்— பொருந்து ம்-அமையும்— இது-இவ்வவ்வியத்தம்—காலதத்துவப்பேர்-நாமங்காலத த்துவமாம்—ஈசனுட்பார்வையால்- ஈஸ்வரனசமூகத்தினால்—முது மூல சுபாவம்விட்டு-முதன்மையானபிரகிருதியினின்றுநீங்கி— முக்குணம்விய த்தமாம்-மூன்றுகுணங்களும் வெளிப்படும்—எ-று. (உகூ)

(அ-கை) முக்குணவியல்புகூறல்.

உத்தமவெளுப்புநீலமுபயமாஞ்சிவப்புமாகுஞ்...... ......*
சுத்தசத்துவந்தமத்தோடசுத்தசத்துவப்பேர்சொல்லுஞ் ...*
சத்துவமழுக்கிருட்டாச்சாற்றுமுக்குணமு மூன்று ........*
யொத்துளவெனினுந்தம்முளொருகுணமதிகமாமே.........*

(இ-ள்) உத்தமவெளுப்பு- முதலானவெண்ணிறமும்—உபயமாஞ்சிவ ப்பும்-இரண்டாவதாஞ்செம்மைநிறமும்—நீலம்-மூன்றாவதானகருநிறமு ம்—ஆகும்-ஆகாநின்ற—சுத்தசத்துவம்-தூய்தானசத்துவகுணமும்—அ சுத்தசத்துவம்-ரசோகுணமும்—தமத்தோடு தமோகுணமுமென—பே ர்சொல்லும்-நாமங்கூறப்பெறும்—சத்துவம்- சத்துவமானசுத்தமும்— அ ழுக்கு-அழுக்கும்—இருட்டா-இருட்டுமாக—சாற்றும்-சொல்லப்பட்ட— முக்குணமும்- இம்மூன்றுகுணங்களும்— மூன்றுமொத்துளவெனினும்- மூன்றுமொத்திருப்பவைகளாயினும்—தம்முள-அவைகளுள்— ஒருகு ணமதிகமாம்-இரண்டிடங்கியொருகுணம் விசேடித்துநிற்கும—எ-று.

(இ-உ-கம்) வித்தைவடிவமாலு சீவர்கள்பந்தப்பட்டிருக்குந் தங்கண் மறதியானவவ்வியத்தத்திற் காலதத்துவமுமுக்குணங்களும் வியத்தமாயி னவென்பதாம்.

(அ-கை) மற்றொருவகை சிருட்டியின் மரபுகூறத்தொடங்கல்.

ஒருவழியிதுவாமித்தையொருவழிவேறுச்சொல்வார் ......*
மருவுமவ்வியத்தந்தானேமகத்துவமாகுமென்று ............*
மருண்மகதத்துவந்தானகங்காரமாகுமென்றுங்...............*
கருவகங்காரமூன்றாய்க்காட்டியகுணமாமென்றும்...... ...*

(இ-ள்) ஒருவழியிதுவாம்-ஒருமார்க்கமிதுவாம்—இத்தை-இதையே-ஒருவழிவேறுச்சொல்வார்- மற்றொருமார்க்கமாய்ச் சொல்லுவார்கள் அஃதெங்ஙனமெனின்--மருவுமவ்வியத்தந்தானே -பொருந்தியவவ்வியத்தமே மகதத்துவமாகுமென்றும்- மகத்துவமாமெனவும்—அருண்மகத்துவந்தான்-சொல்லியமகதத்துவமே—அகங்காரமாகுமெனவும்- அகங்காரதத்துவமாமெனவும்—கருவகங்காரம்- கருவாகியவகங்காரமே--மூனறாய்க்காட்டியகுணமாமென்றும்-மூனறுத்தெரிவித்த குணங்களாமெனவுஞ் சொல்லப்படும்—எ-று.

சுத்தசைதன்னியமான தனனையெதிரிட்டூறிய விதயமாணவறிவுக்கு முன்புண்டானமறதியே- அவ்வியத்தமான பிரகிருதியெனவும் - அவ்வறிவுபகிர் முகவுன் முகமானவிடமே- மகதத்துவமெனவும்-அஃது தன்னிடத்துப் பிரதிபலனமான ஆரோபத்தைநானென்பதே- அகங்காரதத்துவமெனவும்- அதனிர்ச்சலமே- சத்துவமெனவும்- அதன்சலனமே - ரசமெனவும்- அதன்மக்கினமே- தமமெனவு முண்டானவுகபத்சிருட்டியைத் தனதனுபவத்திற்காண்க. (௬க)

(அ-கை) மேற்கூறியகுணங்களிற் சகசீவபரவுற்பத்தியைக் கூறுவான்றொடங்கி முனனர்பரனுற்பத்தியைக் கூறுகினறார்.

இக்குணங்களிலேவிண்போன்றிருக்குஞ்சிற்சாயைதோன்று *
முக்குணங்களினுந்தூய்தாமுதற்குணமாயையாகு...... ...*
மக்குணம்பிரமச்சாயையந்தரியாமியாயை ........ ..........*
யெக்குணங்களும்பற்றாதோனிமித்தகாரணமாமீசன்.........*

(இ-ள்) இக்குணங்களில்-இம்மூன்றுகுணங்களில்—விண்போன்று- ஆகாயம்போல—இருக்கும்- நிரயவமாயிருக்கின்ற—சிற்சாயைதோன்றும-சிற்சாயைப்பிரதிபலிக்கும்—முக்குணங்களினும்-மூன்றுகுணங்களினும்-தூய்தாமுதற்குணம்-சுத்தமாகியசத்துவகுணம்—மாயையாகும்- மாயையாம்—அக்குணம்- அந்தச்சத்துவத்திற்பிரதிபலித்த—பிரமச்சாயை-பிரமப்பிரதிபலனமே—அந்தரியாமி- அந்தரியாமியாம்—மாயையெக்குணங்களும்-மாயாசம்பந்தமான வெந்தக்குணங்களும்—பற்றாதோன-பற்றாதவனே—நிமித்தகாரணமாமீசன்-பாஞ்சபூதபௌதிகமுதலிய சிருட்டிக்குநிமித்தகாரணமாகிய வீசனும்—எ-று. (௬உ)

(அ-கை) ஈசன்காரணசரீரவுற்பத்தியையுஞ்சீவனுற்பத்தியையுங்கூறல்

ஈசனுக்கிதுசுழுத்தியிதுவேகாரணசரீரங்.................*
கோசமானந்தமாகுங்குணமிராசதமவித்தைத் ...........*
தேசறுமவித்தைதோறுஞ்சிற்சாயைசீவகோடி.................*
நாசமாமுயிர்க்கப்போதுநாமமும்பிராஞ்ஞனுமே ...........*

(இ-ள்) ஈசனுக்கு-இவ்வீஸ்வரனுக்கு—இது-இம்மாயையே—சுழுத்தி சுழுத்தியவத்தையாம்—இதுவே-இஃதே-காரணசரீரம்-காரணசரீரமாம் கோசமானந்தமாகும்- இதுவேயானந்த மயகோசமாம்—குணமிராசதம் ரசோகுணம்—அவித்தை-அவித்தையாம்—தேசறுமவித்தைதோறும்-வி ளக்கமின்றியவ வித்தைகடோறும்பிரதிபலித்த—சிற்சாயை- ஞானப்பிர திபலினமே—சீவகோடி-சீவராசிகளாம்—நாசமாம்- யாவையுமிறந்தசுழு த்தியை யபிமானிக்கும் உயிர்க்கு-சீவர்களுக்கு—அப்போது-அவ்வவசர த்தில்—நாமமும் பிராஞ்ஞனும்-பெயர்பிராஞ்ஞனும்—எ-று. (ரு.ரு)

(அ-கை) சீவனதுகாரண சரீரவுற்பத்தியைக்கூறுகின்றார்.

அழுக்கொடுபற்றுஞ்சீவர்க்கதுவேயானந்தகோசஞ்... ......*
சுழுத்திகாரணசரீரஞ்சொன்னவிம்மட்டுமோக... ........*
முழுக்குணத்திரண்டால்வந்தமூலவாரோபஞ்சொன்ஞேம் *
வழுத்துசூக்குமவாரோபவழியுநீமொழியக்கேளாய்... ......*

(இ-ள்) அழுக்கொடுபற்றும்-அவித்தையைச் சேர்ந்திருக்கின்ற—சீவர்க்கு-சீவர்களுக்கு—அதுவே-அவ்வித்தையே—ஆனந்தகோசம்- ஆநந்தம யகோசமாம்—சுழுத்தி-அஃதேசுழுத்தியவத்தையாம்—காரணசரீரம்- அஃதேகாரணசரீரமாம்—சொன்னவிம்மட்டும் - சொல்லியவிதுபரியந்தம் மோகம்- மயக்கமாகத்தோற்றியபிரகிருதியின—முழுக்குணத்திரண்டால் வந்த-முழுதுமானசத்துவரசோகுணத்திலுண்டான மூலவாரோபம்-கார ணசரீரவத்தியாசத்தை—சொன்ஞேம்- உரைத்தோம்—வழுத்துசூக்கும வாரோபவழியும்-சொல்லப்பட்ட சூக்குமசரீரவத்தியாசமுண்டான மார் க்கத்தையும்—மொழிய—யாஞ்சொல்ல—நீகேளாய்-நீகேட்பாய்—எ-று.

சுத்தசைதன்னியச்சாயை - அதிவிடமாதலின் - அதனைபிரமகூடஸ்த னெனவும்- அஃது, சத்துவரஜோகுணத்திற் றங்குதலின் அக்குணங்களை மாமையயவித்தையெனவும்- அவற்றிற் பிரதிவிம்பித்தசாயை யாரோப மாதலின் அவற்றைச்சீவேஸ்வரனெனவும் - அம்மாயையவித்தைகள் மே ல்வினைவுக்குக்காரணமாதலின்- அவைகளைக்காரணசரீரமெனவும்-அவை களிலவைத்துயடங்கிநிற்றலே - சுழுத்தியவத்தையெனவும் அவைகளிலன் புற்றுநிற்றலே- ஆனந்தமயகோசமெனவும்-அவைகளை யபிமானித்துநிற்ப வரை-அந்தரியாமி பிராஞ்ஞனெனவுங்கொள்க (இ-ரு-க-ம்) சீவேஸ்வர ருற்பத்தியும்- அவர்களுக்குண்டான காரணசரீர வத்தியாசமுங்கூறின ராம். (ரு-௪)

(அ-கை) சீவேஸ்வரர்களுக்குச் சூட்சுமசரீரமுண்டான முறைமையை க்கூறுவான றொடங்கிமுன்புசத்திகளின் றோற்றமுரைத்தல்.

ஏமமாயாவிநோதத்தீசனாருளினாலே......... ......... ......*
புமலியுயிர்கட்கெல்லாம்போகசாதனமுண்டாகத்..........*
தாமதந்தானிரண்டாய்ப்பிரிந்துதோன்றும்..........
விமலாரூடலென்னும்வியத்தமாநதோற்றமென்றும்... ......*

(இ-ள்) ஏமமாயாவிநோத - மோகமாகியமாயையை விளையாட்டாகவுடைய — ஈசனருளினால் — ஈசுவரனுடைய கிருபையினால் — புமலியுயிர்கட்கெல்லாம் — [illegible] — போகசாதனமுண்டாக — அநுபோகசாதனமுண்டாகும்பொருட்டு — தாமதகுணம் — தமோகுணமானது — விமலாரூடலென்னும் அவ்யக்தமானவாவரணமெனவும் — வியத்தமாநதோற்றமென்னும் வியத்தமாகிய விக்ஷேபமெனவும் — இரண்டுசெய்யாப்பிரிந்துதோன்றும் — இருசத்தியாய்ப்பிரிந்துதோன்றும் — எ-று. இப்படியெல்லாம் போகசாதனமுண்டாகவென்பதனால் ஜீவர்களைச்சமஷ்டி [illegible] அபரிமேயவாப்பராருபியோகை.

(இ-ம்) மோகரூபமாயிருப்பதான மாயையின் அவியக்தமயமான ஆவரணமும் அவ்விக்ஷேபமுமென இரண்டுசத்திகளாயினவென்பதாம்.

(அ-கை) விக்ஷேபசத்தியிற் றன்மாத்திரையான சூக்ஷுமபூதவுற்பத்தி கூறல்.

தோற்றமார்சத்திதன்னிற்சொல்லியவிண்ணும்விண்ணிற்...*
காற்றுங்காற்றிற்றீயாங்கனலினீர்நீரின்மண்ணும். .. . ...*
போற்றுமிவ்வைந்துமெய்யாம்தங்களென்றும்பேர்களு ......*
சாற்றுமற்றிவற்றிற்போகசாதனந்தனுவுண்டாகும ........ ...*

(இ-ள்) தோற்றமார்சத்திதன்னில் — விக்ஷேபசத்தியில் — சொல்லியவிண்ணும் — சொல்லப்படுஞ்சத்ததன்மாத்திரையானவாகாயமுண்டாம் — விண்ணில் — அவ்வாகாயத்தில் — காற்றுதாம் பரிசதன்மாத்திரையான வாயுவுண்டாம் — காற்றில் — அவ்வாயுவில் — தீயாம் — ரூபதன்மாத்திரையான வக்கினியுண்டாம் — கனலில் — அவ்வக்கினியில் — நீர் — ரசதன்மாத்திரையானவப்புண்டாம் — நீரில் — அவ்வப்பில் — மண்ணும் — கந்ததன்மாத்திரையானபிருதிவியுண்டாம் — போற்றும் — போற்றப்பட்ட — இவ்வைந்தும், இத்தன்மாத்திரைகளைந்தும் — மெய்யாந்தங்களென்றும்பேராம் — சூக்குமபூதங்களென்றும் நாமங்களாம் — சாற்றும் — சொல்லப்பட்ட — இவற்றில் — இத்தன்மாத்திரைகளில் — போகசாதனந்தனுவுண்டாகும் — அநுபோகத்துக்குச் சாதனமான சூக்குமசரீரந்தோன்றும் — எ-று.

(அ-கை) தன்மாத்திரை சத்துவகுணத்தில் அந்தக்கரண ஞானேந்திரியவுற்பத்திகூறல்.

ஆதிமுச்சுணமிப்பூதமடங்கலுங்கொடீர்த்துநிற்குங்...... ...*
சோதிலவெண்ணுந்நாத்திலந்தக்கரணாகருவியாரு............*

மோதியபின்னையைந்துமுளம்புந்தியிரண்டாஞான... ......*
சாதநமாமிவ்வேழுஞ்சற்குணப்பிரிவினாலே......................*

(இ-ள்) ஆதிமுக்குணம்-மூன்றுண்டானமூன்றுகுணங்களும்—இப்பூதமடங்கலும்-இத்தன்மாத்திரைகளைந்திலும்—தொடர்ந்துநிற்கும் - கூடியிருக்கும்—கோதில்-குற்றமற்ற—வெண்குணத்தில்-சத்துவகுணத்தில்—ஐந்துகூறு-வியஷ்டியானவைந்துபங்கும், உணர்கருவியாகும்-ஞானேந்திரியங்களாம்—ஓதியபின்னையைந்தும்-சொல்லப்பட்டசமஷ்டியானவைந்துபங்கும், உளம்புந்தியிரண்டாம்- மனம்புத்தியெனவிரண்டாகும்—சற்குணப்பிரிவினால்-சத்துவகுணம்சமாதலால்—இவ்வேழும் - இந்தவேழும்-ஞானசாதனமாம்-அறிகருவிகளாம்—எ-று. (கஎ)

(அ-கை) தன்மாத்திரையின் ரசோகுணத்தில்வாயுகன்மேந்திரியங்களினுற்பத்திகூறல்,

இராசதகுணத்தில்வேறிட்டெடுத்தகூறைந்துமைந்தும்......*
பிராணவாயுக்களென்றும்பெருந்தொழிற்கன்மமென்றும்... *
பராவியபெயராமிந்தப்பதினேழுமிலிங்கதேகஞ்... .........*
சுராசுரர்நரர்விலங்காய்த்தோன்றியவுயிர்கட்கெல்லாம் ......*

(இ-ள்) இராசதகுணத்தில்-ரசோகுணத்தில்—எடுத்தணைந்தும்-எடுத்தொன்றாகவைத்தபங்கைந்தும்—பிராணவாயுக்களென்றும்-பிராணாதிபஞ்சவாயுக்களெனவும்—வேறிட்டெடுத்தகூறைந்தும் தனித்தனியேயெடுத்தபங்கைந்தும்—பெருந்தொழிற்கன்மமென்றும்- பெரியகிரியையைச்செய்யுங்கன்மேந்திரியங்களெனவும்— பராவியபெயராம் பரவியநாமங்களாம்—இந்தப்பதினேழும்- இப்பதினேழுதத்துவங்களும்—சுரர்-தேவர்களும்—அசுரர்-அவுணர்களும்—நரர்-மனிதர்களும்—விலங்காய்-மிருகங்களுமாகி—தோன்றிய-உண்டான—உயிர்கட்கெல்லாம்-சீவர்களனைவர்க்கும் இலிகதேகம்- சூக்குமசரீரகளாம்—எ-று. சிலநூலாசிரியர்சூட்சுமதேகமிருபத்துநான்குதத்துவமென்றதை இந்நூலாசிரியர்விடயமைந்தையுஞ்ஞானேந்திரியத்திலடக்கியும்-அகங்காரத்தையுஞ் சித்தத்தையு மனம்புத்தியிலடக்கியும் பதினேழாகக்கூறினாரெனக்கொள்க. (இ-டீ-க-ம்) சீவேஸ்வரருக்குண்டான சூக்கும சரீரவத்தியாசங்கூறினதாம். (கஅ)

(அ கை) சூக்குமதேகத்தினால் வருங்கற்ப நாமங்களைக்கூறல்.

இவ்வுடன்மருவுஞ்சீவர்க்கிலங்குதைசதனென்று... ......*
மிவ்வுடனமருவுமீசர்க்கிரணியகருப்பனாகு.................*
மிவ்வுடலிரண்டுபேர்க்குமிலிங்கசூக்குமசரீர .......... ..*
மிவ்வுடற்கோசமுன்றுமிதுகனவவத்தையாமே...... .....*

(இ-ள்) இவ்வுடல் - இவ்வியஷ்டிசூக்குமதேகத்தை—மருவுஞ்சீவர்க்கு சார்ந்தபிமானிக்குஞ்சீவர்களுக்கு —இலங்குதைசதனென்றாகும்- விளங்கின்ற வபிமானிநாமந்தை சதனென்பதாம்—இவ்வுடல்-இச்சமஷ்டி சூக

சூக்குமதேகத்தை-மருவுமீசர்க்குசேர்ந் தபிமானிக்கின்ற ஈஸ்வரனுக்கு இரணியகருப்பனுகும்-அபிமானி நாமமிரணியகருப்பனெனபதாம்— இவ்வுடல்-இச்சரீரம்—இரண்டுபேர்க்கும்- சீவேஸ்வரரிருவர்க்கும்—இலிங்கசூக்குமசரீரம்- சூக்குமசரீரமாம், இவ்வுடல்- இச்சரீரத்துக்கு—கோசமூன்றும்-பிராணமயமனோமயவிஞ்ஞான மயமெனக் கோசங்கண்மூன்றும் இதுகனவவத்தையாம்-இதுசொர்ப்பனவத்தையாம்—எ-று.

தனமாத்திரைகள் சூக்குமமாதலின்- அவற்றைச் சூக்குமபூதமெனவும் அவற்றினிறடிப்பைச் சூக்குமதேகமெனவும்-அஃதையபிமானிப்பவர்களை இரணியகருப்பனதைசதனனெனவும் - அஃதுமனோராச்சியஞ்செய்தலை ச்சொர்ப்பனவஸ்தையெனவும்- அஃதுபிராணமனோ புத்திளாகத்தன்னை மறைத்தலைக்கோ சங்களெனவுங்கொள்க. (நக)

(அ-கை) பாஞ்சபூதபௌதிகமானசகத்துற்பத்தியைக்கூறுவான்றொடங்கியஃதுண்டாகுதற்கேது கூறுகின்றார்.

சூக்குமசகமிம்மட்டுஞ்சொல்லினேமிப்பாற்றூல.... ... *
மாக்குமாரோபந்தானுமடைவினின்மொழியக்கேளாய்... ...*
தாக்குமிவ்வுயிர்க்குத்தூலதனுவும்போகமுமுண்டாகக்... ...*
காக்குமிவ்வீசன்பஞ்சீகரணங்கள்செய்தான்றனே ... ...*

(இ-ள்.) சூக்குமசகம்- சூக்குமசரீசப்பிரபஞ்சத்தை—இம்மட்டும்-இதுபரியந்தம்—சொல்லினேம்- சொன்னேம்—இப்பால்- மேல்—தூலமாக்கும்-தூலபூதமுந்தூலதேகமுமுண்டாக்கும்—ஆரோபந்தானும்-அத்தியாசத்தையும்—அடைவினில்-கிரமமாக—மொழியக்கேளாய்- சொல்லக்கேட்பாய்—தாக்குமிவ்வுயிர்க்கு- சூக்குமசரீரத்திற்சேர்ந்திருக்கின்ற விச்சீவர்களுக்கு—தூலதனுவும்- தூலதேகமும்—போகமும்-அனுபோகமும்—உண்டாக-உண்டாகும்படி—காக்குமிவ்வீசன் - சீவர்களைப்பாதுகாக்குமிவ்விஸ்வரன்—பஞ்சீகரணங்கள்- பஞ்சீகரித்தலை—செய்தான்- செய்தனன்—எ-று. தனுவும்போகமுமென்றவும்மையால் அண்டமும் புவனமுங்கொள்க. (சம)

(அ-கை) பஞ்சீகரணமும் அவற்றினாலாயகாரியமுங்கூறல்.

ஐந்துபூதமும்பத்தாக்கியவைபாதிநந்நான்காக்கி ... ... *
நந்துதன்பாதிவிட்டுநாலொடுநாலுங்கூட்ட் ... ... ...*
வந்தனதூலபூதமகாபூதமவற்றினின்றுந்... ... ... *
தந்தனநான்காந்தூலதனுவண்டபுவனபோகம் ... ... ...*

(இ-ள்.) ஐந்துபூதமும்பத்தாக்கி- தமோகுணப்பங்காகியசூக்குமபஞ்சபூதங்களைப் பத்துபங்குசெய்து — அவைபாதி - அவற்றிற்பகுத்தபாதியை— நந்நான்காக்கி- ஒவ்வொன்றைநான்கு நான்குசெய்து—நந்துதன்பாதிவிட்டு-கேடில்லாததன்னம் சமானபாதியைநீக்கி—நாலொடு - மற்றநான்கோடு—நாலுங்கூட்ட- நான்கையுஞ்சேர்க்க—வந்தனதூலபூதம்-தூ

லபூதமுண்டாயின—மகாபூதமவற்றினின்றும்- தூலபூதமாகிய வகைக னின்று—தந்தன- உண்டாகப்பட்டன—தூலதனு-தூலசரீரமும்—அண்டம்-அண்டமும்—புவனம- புவனமும்—போகம்- போகங்களுமாகிய- நான்கும்-நான்குமாம்—எ-று. அண்டமென்பது பஞ்சபூதசமஷ்டியெனவும் புவனமென்பது அவைகளினுள்ளபதப்பிராப்திஸ் தானங்களெனவுங்கொள்க

(இ-உ-க-ம்) சூட்சுமபூதத்தை பஞ்சீகரித்துத்தூலபூதமும்அவற்றிற்றூலசரீரமுதலிய நான்குந்தோற்றினவென்பதாம். (சக)

(அ-கை) தூலதேகத்தினால் வருங்கற்பனாநாமங்களைக்கூறல்.

தூலமேமருவுஞ்சீவன்சொல்லியவிசுவனாகும் ... ... *
தூலமேமருவுமீசன்சூழ்விராட்புருடனாகும் ... ... *
தூலஞ்சாக்கிரவவத்தைசொன்னதோரன்னமே ... *
தூலகற்பனையிதென்றுதொகுத்ததுமனத்திற்கொள்வாய் ...*

(இ-ள்.) தூலமேமருவுஞ்சீவன்- வியஷ்டி-தூலதேகத்தைச்—சேர்ந்தபிமானிக்கிற - சீவனுக்கபிமானிநாமம்— சொல்லிய-சொல்லப்பட்ட —விசுவனாகும்-விசுவனென்பதாம்— -தூலமேமருவுமீசன்- சமஷ்டி தூலதேகத்தைச்சேர்ந்தபிமானிருக்கின்ற வீஸ்வரனுக்கபிமானிநாமம்—சூழ்விராட்புருடனாகும்-கருதாநின்ற விராட்புருடனென்பதாம்—தூலம்- இவையிருவருக்குந்தூலதேகமாம்—சாக்கிரவவத்தை- இவையிவ்விருவர்க்குஞ்சாக்கிரவவத்தையாம்—சொன்னது- சொல்லியவிது—அன்னகோசம்-இவ்விருவர்க்குமன்னமயகோசமாம்- தூலகற்பனையிதென்று-தூலசரீரவத்தியாசமிதுவென்று—தொகுத்தது-தொகுத்துச்சொன்னதை—மனத்திற்கொள்வாய்-மனதிலுணர்வாய்—எ-று.

தன்மாத்திரை பிரமாணத்தை தூலபூதமெனவும்-அஃதோருருவமானதை தூலசரீரமெனவும்-அஃதை அபிமானிப்பவர்களைவிசுவன்விராட்டெனவும்-அதினின்று யெதிரிட்டறிதலை சாக்கிராவவத்தையெனவும்-அஃதன்னமயமாதலின்-அதனை அன்னமயகோசமெனவுங்கொள்க [இ-ம்]அபிமானநாமமுதலிய வைகளுண்டான வத்தியாசங்கூறினதாம். (சஉ)

(அ-கை) சீவேஸ்வரர்களுக்கு பாதியொன்றாயினவர்கள்பேதமறிவதெங்ஙனமென்றவினாவுக்குத்தரம்.

சீரியவீசனார்க்குஞ்சீவர்க்குமுபாதியொன்றே... ... ...*
லாரியகுருவேபேதமறிவதெப்படியென்றக்கால் ... *
காரியவுபாதிசீவன்காரணவுபாதியீசன் ... ... ...*
வீரியமிகுசமட்டிவியட்டியாற்பேதமாமே... ... *

(இ-ள்.) சீரியவீசனார்க்கும்-சிறப்பையுடையவீஸ்வரனுக்கும்—சீவர்க்கும்-சீவனுக்கும்—உபாதியொன்றேல்-உபாதியொன்றானால்—ஆரியகுருவே-அறிவுருவானவாசிரியரே—பேதமறிவது- சீவேஸ்வரனென்கின்றவேற்றுமையறிவது—எப்படியென்றக்கால்-எவ்வாறென்பாயாகில்—காரியவுபாதி-காரியோபாதியுள்ள—சீவன்-சீவர்கள்—வியட்டியால்- வியட்டியினு

லும்—காரணவுபாதி-காரணோபாதியுள்ள—ஈசன்-ஈஸ்வரன்—விரியம்கூ சமட்டி-விரமிருந்தசமட்டியினாலும்—பேதமாம்-பேதமாகும்—எ-று. ()

(அ-கை) (இ-து.)

மரங்கள்போல்வியட்டிபேதம்வனமெனல்சமட்டிபேதஞ் ...*
சரங்கடாபரங்கள்பேதந்தனியுடல்வியட்டியென்பார்.... ...*
பரம்பியவெல்லாங்கூட்டிப்பார்ப்பதுசமட்டியென்பா... ...*
யிரங்கியபலசீவர்க்குமீசர்க்கும்பேதமீதே ... ... — *

(இ-ள்.) மரங்கள்போல்-தருக்களைப்போல— வியட்டிபேதம்-வியட்டியின்பேதமாம்—வனமெனல்- வனமென்பது—சமட்டிபேதம்- சமட்டியின்பேதமாம்—சரங்கடாபரங்கள்- சராசரவுயிர்களின்—பேதம்- பேதமான—தனியுடல்-தனிமையானதேகத்தை—வியட்டியென்பார் - வியட்டியென்றுசொல்லுவார்கள்—பரம்பியவெல்லாங்கூட்டி-விரிந்தநாலதேகமுதலிய வனைத்தையுஞ்சேர்த்து—பார்ப்பதுசமட்டியென்பார்- காண்பதுசமட்டியென்றுசொல்லுவார்கள்—இரங்கிய- இரங்காநின்ற—பலசீவர்க்கும்-அநந்தசீவர்களுக்கும்—ஈசர்க்கும்-ஈஸ்வரனுக்கும்—பேதமீதே- பேதமிதுவாம்—எ-று.

(இ-உ-க-ம்) சமட்டியினாலீஸ்வரனுக்குக்காரணோபாதியும்- வியட்டியாற்சீவனுக்குக்காரியோபாதியுமா மென்பதாம். (சச)

(அ-கை) அத்தியாரோபவுத்தியினாற் றன்னிடத்திலாரோபமாகத்தோற்றின சகசீவபரங்களைக் கூறியவைகளுண்டானகிரமப்படி லயிப்பிக்கும்பவாதவுத்தியைக்கூறத்தொடங்கல்,

கற்பனைவந்தவாறுகாட்டினோங்காண்பவெல்லாஞ் ... ... *
சொற்பனம்போலவெண்ணித்துணிந்தவன்ஞானியாவன், ...*
செற்புதைமழைக்காலம்போய்த்தெளிந்தவ போல *
வற்புதமுத்திசேருமபவாதவழியுங்கேளாய்... ... *

(இ-ள்.) கற்பனைவந்தவாறு- ஆரோபமானசிருட்டியுண்டானமுறைமையை—காட்டினோம்- அறிவித்தோம்—காண்பவெல்லாம் - திரிசியமனைத்தையும்—சொற்பனம்போல-கனவைப்போல— எண்ணித்துணிந்தவன்-கருதித்தெளிந்தவன்—ஞானியாவன் -அறிஞனவன்—செற்புதை-மேகநிறைந்திருக்கின்ற—மழைக்காலம்போய்-வருஷாகாலநீங்கி—தெளிந்தவாகாயம்போல ...லத்திற்றெளிந்தவிண்ணைப்போல அற்புதமுத்திசேரும்- அற்புதமானமோக்ஷமடையும்—அபவாதவழியுங்கேளாய்- அபவாதமார்க்கத்தையுங்கேட்பாய்—எ-று, (சரு)

(அ-கை) அபவாதவிலக்கணங்கூறல்.

அரவனுகயிறெனாற்போல ன்றுதறியென்றாற்போற் ... *
குரவன்றனுபதேசத்தாற்கூறுநூல்வெளிச்சங்கொண்டு......*

புரமன்றுபுவனமன்றுபூதங்களன்றுஞானத்... ... .......*
திரமென்றும்பிரமமென்றுந்தெளிவதேயபவா தங்காண்......*

(இ-ள்.) அரவன்று-சர்ப்பமல்ல—கயிறென்றாற்போல்-பழுதையென்றது போலவும், ஆளன்று-மகனன்று—தறியென்றாற்போல் -குற்றியென்பதுபோலவும்—குரவன்றனுபதேசத்தால்- ஆசிரியருபதேசமென்னுஞானக்கண்ணினால்—கூறுநூல்-தத்துவத்தைச்சொல்லு ஞானசாஸ்திரங்களாகிய—வெளிச்சங்கொண்டு-பிரகாசத்தைக்கொண்டு—புரமன்று - தேகமுதலியதத்துவங்களன்று—ஞானத்திரமென்றும்- அவைகட்கதிட்டானமான கூடஸ்தசைதன்னியமெனவும்—புவனமன்று - புவனங்களுமன்று—பூதங்களன்று-பஞ்சபூதங்களுமன்று--பிரமமென்றும்- அவைகட்கதிட்டானமானபிரமமெனவும்—தெளிவதே-அனுபவமாய்த்தெளிவதே—அபவாதங்காண்-அபவாதமாம்—எ-று. புவனமென்பது - சகளீகரித்திருக்குங்கயிலாசமுதலிய ஸ்தானமும்- பூதங்களென்பது - விராட்டுருவமுமெனக்கொள்க.

(இ-உ-௧-ம்) ஆரோபத்தைநீக்கியதிஷ்டானத்தைத்தரிசிப்பித்ததாம், ()

(அ-கை) அதிஷ்டானத்தைத்தவிரவாரோபமின்றெனல்.

பட்டுநூலும்போற்செய்தபணியும்பொன்னும்போற்பார்க்கிற்
கடமுமண்ணும்போலொன்றுங்காரியகாரணங்க ... ... *
ளுடன்முதற்சுபாவமீறுமொன்றிலொன்றுதித்தவாறே... ...*
யடைவினிலொடுக்கிக்காண்பதபவாதவுபாயமாமே.... .......*

(இ-ள்) பட்டுநூலும்போல்-பட்டாடுந்தந்துவும்போல—செய்தபணியும் பொன்னும்போல் செய்தவாபரணமு மாட்கமும்போல—கடமுமண்ணும்போல்-கல ருத்துவும்போல—பார்க்கில்- பார்க்குமிடத்தில்—காரியகாரணங்க ரியகாரணங்களிரண்டும்—ஒன்றும்- ஒன்றேயாம்—உடன்முதற்சுபாவமீறுன்ய- தூலதேகமுதற்பிரகிருதிபரியந்தம் - ஒன்றிலொன்றுதித்தவாறு - ஒன்றிலொன்றுண்டானபிரகாரம்—அடைவினில்- முறையாக—ஒடுக்கி -அடக்கி—காண்பது-சுத்தப்பிரமத்தைத்தரிசிப்பது அபவாதவுபாயமாம்-அவவாதவுத்தியாம்—எ-று.

[இ-ம்] தனனிடத்திற்கற்பிதமான சகசீவபரங்களைத் தனதுருவமாக வொடுக்கிக்காண்பதே யபவாதவுத்தியெனபதாம். (௬எ)

(அ-கை) முற்கூறிய ஆவரணசத்தியி னிலக்கணம்யாதெனவினாதல்.

தூட்டணதமத்தில்வந்ததோற்றமாஞ்சத்திசெய்யு......... ....*
மீடனை ரஞ்சொன்னீரிரண்டுசத்திகளென்றீரே... ......*
மூடலாணசத்திசெய்யுமோ முந்நுசொல்லுமையா...........*
கேடறுங்குருவேயென்னக்கிருபையோடருள்செய்வாரே ...*

(இ-ள்.) தாமதகுணமதனலவந்த- தாஷிக்கத்தக்கதமோகுணத்தினுண்டான—தோற்றமாஞ்சத்திசெய்யும்-விக்ஷேபசத்தி செய்யாநின்ற—ஈடணைவிகாரஞ்சொன்னீர்- இச்சாரூபப்பிரபஞ்சமுண்டானவேறுபாடுகளைச்சொன்னீர்—இரண்டுசத்திகளென்றீரே- இரண்டுசத்திகளென்றுசொன்னீரே மூடலாஞ்சத்திசெய்யும்- ஆவரணசத்திசெய்கின்ற—மோகமும்-மயக்கத்தையும்—கேடறும்-சத்தியமான—குருவேயையா-குருசுவாமியே—சொல்லுமென்ன-அருளவேண்டுமென்றுகேட்க--கிருபையோடு-கருணையோடும்—அருள்செய்வார்-ஆசிரியரனுக்கிரகிப்பார்—எ-று, (௪அ)

(அ-கை) ஆபரணசத்தியின்றன்மைகூறல்.

தானிகர்தனக்காமீசன்றனையுந்தங்களைத்தான்கண்ட ... ...*
ஞானிகடமையுமன்றிநாஸ்திபாதியென்று... ... .... *
ஊனிறையுயிர்களுளளினுணர்விறிக்குருடாம்வண்ணம்...,...௫
வானிலந்திசைகண்மூடுமறைநிசியிருள்போன்மூடும் ... ...*

(இ-ள்.) தானிகர்தனக்காம் - தனக்குத்தானேசமானமாகிய- ஈசன்றனையும்-பிரமமயமானவீசனையும்—தங்களைத்தானகண்ட- தானாகியகூடஸ்தனைத்தரிசித்த—ஞானிகடமையும் - ஞானவான்களையும்—அன்றி - அல்லாமல்—நாஸ்தி - இல்லை—பாதியென்றும்- இருக்கிற்காரைத்தே வென்கின்றவிருமுகத்தினால்—ஊனிறை - தேகத்தில்வசிக்கும்—உயிர்களுளின்- சீவர்களத்தின்விளங்கிய—உணர்வீறு - ஞானதிருட்டியானது—குருடாம்வண்ணம்-தெரியாதபடி—வானிலந்திசைகள்- விண்மண்திக்குகளை—மூடும்-மூடுகின்ற— மறைநிசியிருள்போல்- கார்காலத்திரவினிருளைப்போல—மூடும்-ஆவரணசத்தியானதுமறைக்கும்—எ-று.

[இ-ம்] கூடஸ்தபிரமங்களை மறை.... மனவைகளினுரோபமான சீவேஸ்வரர்களை மறைக்குமென்பதாம். (௪௯)

(அ-கை) (இ-து)

பூன்றமாம்பிரமத்துக்கும்புறத்துளவிகாரங்கட்கு. ... *
மான்றகூடத்தனுக்குமகத்துளவிகாரங்கட்குந் ... ... *
தோன்றியபேதஞ்சற்றுந்தோன்றுமன்மறைத்துமூடி ... *
ஊன்றியபவவியாதியுண்டாக்குமுபாதியீதே ... *

(இ-ள்.) பூன்றமாம்பிரமத்துக்கும்- பூரணமானபிரமஸ்வரூபத்துக்கும்—புறத்துளவிகாரங்கட்கும்- புறம்பிலுள்ளவீசன்முதலியவேறுபாடுகளுக்கும்— ஆன்றகூடத்தனுக்கும்- மாக்ஷிமையானகூடஸ்தனுக்கும்—அகத்துள விகாரங்கட்கும்-அகத்திலுள்ளசிவன்முதலியவேறுபாடுகளுக்கும்—தோன்றியபேதம்- உண்டானசிற்சடபேதங்களை—சற்றுந்தோன்றமல்-எவ்வளவுந்தோற்றமல்—மறைத்துமூடும்- மறைக்கும்—ஊன்றிய - திரமாண—பவவியாதி- பவப்பிணியை—உண்டாக்கும்- விளைவிக்கும்—உபாதி உபாதியானது—ஈதே-இவ்வாபரணசத்தியேயாம்—எ-று.

[இ-ம்] அதிஷ்டானவாரோபங்களின் பேதந்தெரியவொட்டாமனுஸ்தி தியாதியென்னுமிருமுசத்தால் ஞானதிஷ்டியையமறைக்குதல்- ஆப்ரணசத்தியின்றன்மையென்பதாம். (௫ய)

(அ-கை) அதிஷ்டான திஷ்டிசாமானியமாகத்தோற்றியபின்னர் அஃது மறைபடும்போது மறைபடாதபோது மாரோபந்தோன்றக் காணக்கில்லையேயென்றசிடலை நோக்கியவ்வதிஷ்டான விலக்கணத்தை இரண்டுவிதமாகக்கூறுகின்றார்.

ஆதாரமறைந்துபோனலாரோபமெங்கேதோன்று ... *
மாதாரமறையாதாயினாரோபமிலையேயென்று ... ... *
லாதாரஞ்சமம்விசேடமாமெனவிரண்டுகூறு ... *
மாதாரஞ்சமமாமெங்குமாரோபம்விசேடமாமே ... *

(இ-ள்.) ஆதாரமறைந்துபோனலை- விம்பமறையுமானல்—ஆரோபமெங்கேதோன்றும்-பிரதிவிம்பமெங்ஙனந்தோன்றும்— ஆதாரமறையாதாயின்- விம்பமறையவில்லையெனின்—ஆரோபமிலையேயென்றல்- பிரதிவிம்பமில்லையேயெனின்—ஆதாரம்- ஆதாரமானது—சமம்விசேடமாமென- சமமாமெனவும் விசேடமாமெனவும்—இரண்டுகூறும்- இரண்டுவகையாம் -சமம்-சமமானது-- எங்கும்-எவ்விடத்துமுள்ள—ஆதாரமாம்- ஆதாரமாகும்—விசேடம் -விசேடமானது—ஆரோபமாம்-கற்பிதமாம்—எ-று,

ஆதாரமானசுத்தசைதன்னியம் பூரணமான கூடஸ்தபிரமமாக விளங்குமிடத்திற்சமமெனவு மதனிலுதயமானவறிவு சீவேஸ்வரசகத்தாகவிரிந்தொடுங்குமிடத்து விசேடமெனவு மிங்ஙன முதித்தொடுங்கு மறிவுண்மையாயினு மங்கிரியைகண்மித்தையாதலி னவ்விசேடத்தையாரோபமெனவுங்கொள்க. (௫க)

(அ-கை) (இ-து)

சகமதிலிதுவென்சுட்டாச்சமானக்கண்மறைந்திடாது ... *
மிகவுரைகயிறும்பாம்பும்விசேடங்கண்மறைந்துபோகு ... *
மகமெனுஞ்சமானந்தன்னையஞ்ஞானமறைத்திடாது.. *
பகர்வதோர்விசேடஞ்சீவன்பரனெனுமவைமறைக்கும் ... *

(இ-ள்,) சகமதில் - உலகத்தின்கண்—இதுவென்சுட்டா-இதுவென்றுசுட்டப்படாத - சமானக்கண்- சமமாகியகண்கள்—மறைந்திடாது- ஒன்றுமறைக்கமறைபடாது—மிகவுரைகயிறும்பாம்பும்- மிகவுஞ்சொல்லாநின்ற பழுதையுஞ்சர்ப்பமுமாகிய—விசேடங்கண்மறைந்துபோகும்—விசேடமாகத்தோன்றினவையொன்று மறைக்கமறைபடும்— அதனைப்போல அகமெனுஞ்சமானந்தன்னை - தானென்னுங்கூட ஸ்தபிரமத்தை—அஞ்ஞானமறைத்திடாது- அறியாமையான வாவரணமறைக்கமாட்டாது— பகர்வதோர்விசேடம்-சொல்லப்பட்டவோர்விசேடமாகிய—சீவன்பரனெனும்- சீவேஸ்வரனென்கிற— அவ்விரண்டும்-அவர்களைமறைக்கும் -எ-று. சீவ

ஸ்பர்சிஞானமவனை மூடுமென்றது அவர்கருணையையெனவும்-அந்தஞான மறைக்கிடமென்றது-ஆவரணமறைத்திடாதெனவுங்- கானலிருக்குமிடத்துச் சலந்தோற்றுதலும்- அக்கானலாய்ப்பார்க்குமிடத்தசிந்து தோற்றியுமில்லாததுபோல ஆதாரமிருக்குமிடத்தாரோபந்தோற்றுதலும்- அவ்வாதாரமாய்ப் பார்க்குமிடத்தசிந்து தோற்றியுமில்லாததேயாமெனக்கொள்க.

(இ-ம்) ஆரோபமான சிவேஸ்வரனைத் தமக்காதாரமானகூடஸ்திரமதைப்பார்க்கவொட்டாமலவரதுமைர்வை யிவ்வாவரண மறைக்குமேயன்றியாதாரத்தை மறைக்கமாட்டாதென்பதாம். ([illegible])

(அ-கை) அவ்வுணர்வையான முதலாகத்தோன்றின விக்ஷேபகாரிய மறைத்ததேயன்றி ஆவரணமெங்கேமறைத்ததெனல்.

சேவலிலேதோன்றுமற்கெடுத்ததுபஞ்சகோசந் . ... *
சிவனுந்தசகத்துமாகிச் செனித்தவிக்ஷேபமன்றோ... ....*
வாவரணந்தானேபாழு மநர்த்தமென் றுரைத்ததேதோ ... *
மெய்யருங்குருவேயென்றுவினவினமகனேகேளாய் ..... *

(இ-ள்.) சேவலிலேதோன்றுமல்- முத்திநிச்சயந்தோன்றுமல்---கெடுத்தது-அழித்தது---பஞ்சகோசம்-பஞ்சகோசமும் --- சிவனும்- சிதாபாசனும்---சகத்துமாகி-உலகுமாய்---செனித்தவிக்ஷேபமன்றோ-உண்டானவிக்ஷேபமல்லவா--- அங்ஙனமிருக்க-ஆவரணந்தானே--- ஆவரணமே---பாழ்-பாழெனவும் -- அநர்த்தமென்று- அநர்த்தமெனவும்--- உரைத்ததேது-சொல்லியதென்ன---மெய்யருங்குருவேயென்று- அடைதற்கரியவாசாரியரேயென்று- வினவினமகனே-கேட்டமாணாக்கனே---கேளாய் - நீ கேட்பாய்-- எ-று,

ஆனந்தமயகோசமுஞ் சிவனும் விக்ஷேபகாரியங்களல்லாதனவாயிருக்கவங்ஙனங் கூறியதென்னையெனின்- அந்தக்கரணப்பிரதிபலன் சிவனும் அவ்வவித்தையானந்தமயகோசமுமாதலா லிங்ஙனங்கூறியதென்றுகொள்க (இ-ம்) வெளிப்படை. ([illegible])

(அ-கை) விக்ஷேபசத்தியினாலுண்டாகுநன்மையுமாவரண சத்தியினாலுண்டாகுந்தீங்கையுங்கூறுகின்றார்.

தோற்றமாஞ்சத்திதானே துன்பமாம்பவமானாலு ... *
மாற்றலான்முத்திசேர்வார்க்கனுகூலசகாயமாகு ... *
மூற்றமாம்பகற்காலம்போலுபகாரநிசியினுண்டோ ... *
மீற்றமென்னுமைப்பேன்மந்தாமறைப்பதுமிகப்பொல்லாதே,

(இ-ள்.) தோற்றமாஞ்சத்திதானே-விக்ஷேபசத்தியே--- துன்பமாம்பவமானாலும்-துன்பத்தைக்கொடுக்கின்ற தேகமுதலியவைகளானாலும் ஆற்றலான்-முயற்சியினால்---முத்திசேர்வார்க்கு- வீட்டையடைபவர்களுக்கு, அனுகூலசகாயமாகும்-அதுமிகவுஞ்சகாயமாம்---ஊற்றமாம்- அறிதற்குதவியாகும் பகற்காலம்போல்-...
[illegible]

ண்டோ-இரவிலுளதோ—மாற்றமென்னுரைப்பேன்- என்னசொல் மைந்தா-மகனே—மறைப்பது-மூடுகின்றவாவரணம்—மிகப்பொல்லாது மிகவும்பொல்லாததாம்—எ-று. (௫௪)

(அ-கை) இன்னுமதனைவற்புறுத்தல்.

சுழுத்தியிற்பிரளயத்திற்றோற்றமாஞ்சகங்கண்மாண்டு ... *
மழுத்தியபவம்போய்முத்தியடைந்தபேரொருவருண்டோ *
முழுத்தவிக்ஷேபமெல்லாமுத்தியிற்கூட்டுகிற்குங் ... *
கொழுத்தவாவரணமுத்திகூடாமற்கெடுத்தகேடே... ...*

(இ-ள்)சுழுத்தியில்-நித்தியப்பிரளயமாகியசுழுத்தியிலும்—பிரளயத்தில்-பிரமப்பிரளயத்திலும்—தோற்றமாஞ்சகங்கண்மாண்டும்- உண்டானவுலகமுதலியவைநசித்தும்—அழுத்தியபவம்போய்- நாற்கதியிலமிழ்த்தியசநநீங்கி—முத்தி-வீட்டை—அடைந்தபேர்-பெற்றவர்கள்— ஒருவருண்டோ-ஒருவருளரோ-முழுத்தவிக்ஷேபமெல்லாம்முழுதும்விக்ஷேபகாரியமானவனைத்தும், முத்தியிற்கூட்டுகிற்கும்-வீட்டிற்சேர்க்கும்—கொழுத்த-அறியாமையிருந்த—ஆவரணம்-ஆபரணமானது—முத்திகூடாமல் -வீட்டைச்சேராமல்—கெடுத்தகேடு-கெடுத்தகேடாம்—எ-று. (ப-ம்) மனோநிரோதியாற் பரமசுகத்தையடைதலின்- விக்ஷேபமெல்லா முத்தியிற்கூட்டுகிற்குமென்றார்.

(இ-உ-கம்) முத்தியையடைதற்கு - அறிதலுள்ளவிக்ஷேபஞ்சாதனமாமேயன்றி-அறியாமையான வாபரணமாகாதென்பதாம். (௫௫)

(அ-கை) மித்தையானவிக்ஷேப சத்தியினால்வெளிப்படுமுத்தியு மித்தையேயாமெனி லங்ஙனமாகாதெனல்.

சுத்தியில்வெள்ளிபோலத்தோன்றியதோற்றமான ... *
சத்தியம்பொய்யேயென்றாற்சத்திசாதனமாவந்த ... *
முத்தியும்பொய்யாமென்னின்மோகநித்திரைவிலங்கா ... *
னித்திரைதெளியுமாபோனிருவாணநிலைமெய்யாமே... *

(இ-ள்) சுத்தியில்வெள்ளிபோல - கிளிஞ்சிலில்ரசிதாரோபம்போல— தோன்றிய-உண்டான—தோற்றமானசத்தியம்-விக்ஷேபசத்தியும்—பொய்யேயென்றால்- மித்தையாயின்—சத்திசாதனமாவந்த - அச்சத்திசாதனமாகவுண்டான—முத்தியும்- வீடும்—பொய்யாமென்னில்-மித்தையாமெனின்— மோகநித்திரைவிலங்கால்,- மோகனசொர்ப்பனசிம்மத்தினால்— நித்திரைதெளியுமாபோல்-நித்திரைதெளிந்து சாக்கிரம்வருவதுபோல— நிருவாணநிலை-அச்சத்தியினாலுண்டாகு முத்திநிலையும்—மெய்யாம்-உண்மையேயாம்—எ-று.

(இ-ம்) மித்தையானசொர்ப்பனசிம்மத்தினாலுண்டானசாக்கிரஞ்சத்தியமானதுபோல-மித்தையானவிக்ஷேபசத்தியின்காரியமான ஞானத்தினாலுண்டான வீடும் சத்தியமேயாமென்பதாம். (௫௬)

(அ-கை) இச்சத்திகளின்காரணமான மாயையை நீக்குமேதுகூறல்.

இம்பரினஞ்சைநஞ்சாலிரும்பினையிரும்பாலெய்யு... ...*
மம்பினையம்பாற்பற்றுமழுக்கினையழுக்காண்மாய்ப்பர்... *
வம்பியன்மாயைதன்னைமாயையான்மாய்ப்பர்பின்னைத் ...*
தம்பமாமதுவுங்கூடச்சவஞ்சுடுதடிபோற்போமே... ...*

(இ-ள்) இம்பரில்-இவ்வுலகத்தில்—நஞ்சை-சர்ப்பாதிகளினவிஷத்தை நஞ்சால்-ஒருவிதமானவிஷத்தினாலும்—இரும்பினை-அயக்கத்தை—இரும்பால்-அரவயத்தினாலும்—எய்யுமம்பினை-விடுமம்பை—அம்பால்-அதற்குப்பகையானவம்பினாலும்—பற்றுமழுக்கினை-பிடித்தவழுக்கை—அழுக்கால்-அழுக்கைநீக்குமழுக்கினாலும்—மாய்ப்பார்-கெடுப்பார்கள்—அங்ஙனம், வம்பியன்மாயைதன்னை-அசுத்தமாயையை—மாயையால்-சுத்தமாயையால்-மாய்ப்பர்-கெடுப்பார்கள்—பின்னை-பின்பு—தம்பமாமதுவும்-பற்றுக்கோடானவசுத்தமாயையும்—கூட-அசுத்தமாயையோடுங்கூட—சவஞ்சுடுதடிபோல்-பிரேததகனஞ்செய்யுந் தண்டமதனோடுவேவுதல்போல—போம்-கெடும்—எ-று.

(இ-ம்) சகத்ரூபமானவசுத்தமாயையை-சித்ரூபமானசுத்தமாயையினாற்கெடுத்துவிடத்துதயமான பரஞானத்திற்சுத்தமாயையும் அசுத்தமாயையோடுகெடுமென்பதாம். (ருஎ)

(அ-கை) ஆத்மாக்களுக்கிவ்விருவிதமானமாயைகளாற் சத்தாவத்தைகளவந்தமாறுமவற்றினமுங்கூறல்.

இந்தமாயையினாற்சீவர்க்கேழவத்தைகளுண்டாகு... ...*
மந்தவேழவத்தைதம்மையடைவினின்மொழியக்கேளாய் *
முந்தவஞ்ஞானமூடன்முளைத்தல்காணுதஞானஞ்... ...*
சந்ததங்கண்டஞானந்தழல்கெடல்குளிர்மையாதல் ...

(இ-ள்) இந்தமாயையினால்-இம்மாயையினால்—சீவர்க்கு-சீவர்களுக்கு ஏழவத்தைகளுண்டாகும்-சத்தாவத்தைகளுளவாம்—அந்தவேழவத்தை தம்மை-அவ்வேழவத்தையினங்களை-அடைவினில்-கிரமமாக—மொழியக்கேளாய்-சொல்லக்கேட்பாய்—முந்தவஞ்ஞானம்-முன்னமஞ்ஞானமும்—மூடல்-ஆபரணமும்—முளைத்தல்-விட்சேபமும்—காணுதஞானம் பரோட்சஞானமும்—சந்ததங்கண்டஞானம்-நித்தியாபரோட்சஞானமும் தழல்கெடல்-துக்கநிவிர்த்தியும்—குளிர்மையாதல்-தடையற்றவானந் தமாம்—எ-று. (ருஅ)

(அ-கை) அச்சத்தாவத்தைகளின்றன்மையைக்கூறல்.

பிரமமாந்தன்னைமறந்தபேதமையேயஞ்ஞானம் ... ...*
பரமிலேநானென்றுபகர்தலாவரணமூட... ... *

னரனொருகருத்தாற்சீவனானெனல்முளைத்தறேற்றங்
குரவன்வாக்கியத்தாற்றன்னைக்குறிக்கொளல்பரோட்சஞானம்

(இ-ள்) பிரமமாந்தனை - பிரமஸ்வரூபமாகியதன்னை—மறந்தபேதமை
யே-மறந்தவறியாமையே—அந்ஞானம்-அஞ்ஞானமாம்—பரனிலை- பிர
மமில்லை—காணேமென்று-இருந்தாற்காணேனென்று—பகர்தல்- சொல்
லுதல்—ஆவரணமூடல்- மூடலென்றுமாவரணசத்தியாம்—நரனொருகரு
த்தால்-புருடனோர்நினைப்பினால்—சீவனானெனல்-சிதாபாசனானெனல்-மு
ளைத்தறேற்றம்-விட்சேபசத்தியாம்—குரவன்வாக்கியத்தால்-ஆசிரியருப
தேசத்தினால்—தன்னைக்குறிக்கொளல்-பிரமத்தைக்குறிப்பாகத் தெரிந்து
கொள்ளுதல்—பரோக்ஷஞானம்-பாரோக்ஷஞானமாம்—எ-று. (௫௬)

(அ-கை) (இ-து)

தத்துவவிசாரஞ்செய்துசகலசந்தேகமும்போ ... ...*
யத்துவிதந்தானுதலபரோக்ஷஞானமாகும்... ... *
சத்தனுஞ்சீவபேதங்கழிவதேதுக்கம்போதல்... ...*
முத்தனாயெல்லாஞ்செய்துமுடிந்ததானந்தமாமே... *

(இ-ள்) தத்துவவிசாரஞ்செய்து-தற்பததொம்பதம் விசாரித்து-சகலச
ந்தேகமும்போய்-எல்லாவையமுநீங்கி—அத்துவிதந்தானுதல்-கூடஸ்தபி
ரமவைக்கியமான வத்துவிதஸ்வரூபந்தானாகவிளங்குதல் அபரோட்சஞா
னமாகும்-அபரோட்சஞானமாம்—சத்தனுஞ் சீவபேதம்—ஆபாஸமா
ன சீவேஸ்வரபேதம்—கழிவதே- நீங்கலே—துக்கம்போதல்-துக்கநிவிர்த்
தியாம்—முத்தனாய்-சீவன்முத்தனாய்—எல்லாஞ்செய்துமுடித்தது-கிருத
கிருத்தியமானது—ஆனந்தமாம்-தடையற்றவானந்தமாம்—எ-று.

(இ-௩-௪-ம்) அஞ்ஞானமாபரணமிரண்டும்- அசுத்தமாயா சம்பந்தம்வி
ட்சேபம்பரோட்சமிரண்டுஞ் சுத்தாசுத்தமாயா சம்பந்தம் - அபரோட்ச
முதலிய மூன்றுஞ் சுத்தமாயாசம்பந்தமாம்- அவைகளில் - அபரோட்ச
ஞானத்தினால் பரோட்சமும் விட்சேபசத்தியின்காரியமான திரிஸ்யமும்
துக்கநிவர்த்தியினுல்பரணமும்- தடையற்றவானந்தத்தினு னஞ்ஞானமு
நீங்கும்- அவைகணீங்கவே யிவைகளுமங்களுநீங்கி நிரதிசயானந்தமாக
த்தானே விளங்குமென்பதாம். (௫௭)

(அ-கை) அச்சத்தாவத்தையை விளக்கு நிமித்தந்தசபுமான்றிட்டா
ந்தங்கூறல்.

இதுமினக்கறியும்வண்ணமிப்படியொருதிட்டாந்தம்... ...*
புதுமையாங்கதைகேள்பத்துப்புருடரோராற்றைநீந்தி... *
யுதகதீரத்திலேறியொருவனேனென்பதுபேரெண்ணி ..*
யதனொடுதான்பத்தானென்றறியர்மன்மயங்கிநின்றான் *

(இ-ள்) இதுமினக்கறியும்வண்ணம்-இஃதுனக்குத்தெரியும்படி—இ

டி- இவ்வண்ணம்—ஒருதிட்டாந்தம்- ஒருதிட்டாந்தமாக—புதுமையாங்கதைகேள்-வியப்பானவோர் சரித்திரங்கூறுவன்கேட்பாய்— பத்துப்புருடர்-பதின்மர்—ஓராற்றைநீந்தி- ஓர்நதியைநீந்தி—உதகதீரத்திலேற- நதிக்கரையிலேறி—ஒருவன்- ஒருபுருடன்—ஒன்பதுபேரெண்ணி- ஒன்பதுபேரையெண்ணி—அதனொடு-அவர்களோடும்—தான்- எண்ணினதான்—பத்தானென்றறியாமல்- தசமென்றுதெரியாமல—மயங்கிநின்றான—பிரமித்துநின்றான்—எ-று. (௯௧)

(அ-கை) மடடாந்ததாட்டாந்தங்களுக் கொப்புமைகாட்டல.

அறியாதமயலஞ்ஞானமவனிலேக்காணோமென்றற் ...*
பிறியாவாவரணமாகும்பேடைகொண்டழலவிட்சேப... *
நெறியாளன்றசமனுண்டுநிற்கினறானென்றசொலலைக் ...*
குறியாகவெண்ணினேக்கிக்கொள்வதுப்ரோட்சஞானம் *

(இ-ள்) அறியாதமயல-தன்னைத்தெரியாதமயக்கமே—அஞ்ஞானம்-அஞ்ஞானமாம்—அவனிலே-அத்தசமனிலே—காணோமென்றல- இல்லாமையாற்காணகிலோமெனல—பிறியாவாவரணமாகும்- அறியாமைநீங்காதவாபரணமாம்—பேடைகொண்டழல- தசமனைக்காணோமென்று துன்பமுற்றலறல—விட்சேபம்-விட்சேபமாம், நெறியாளன்-வழிச்செலவோர் ஒருவன் கருத்தைக்கண்டு, தசமனுண்டு- பதின்மனுளன்- நிற்கின்றானென்றசொலலை- இவ்விடத்திலிருக்கிறானென்று சொல்லியவசனத்தை—குறியாகவெண்ணி-குறிப்பாகநினைந்து—நோக்கிக்கொள்வது-அறிந்துகொள்வது—பரோட்சஞானம்-பரோட்சஞானமாம்—எ-று. (௯௨)

(அ-கை) (இ-து)

புண்ணியபதிகனபின்னும்புருடரொன்பதின்மர்தம்மை ...*
யெண்ணியநீபத்தாவானென்னவேதனனைக்காணல ...*
கண்ணினிற்கண்டஞானங்களைதலபோவதுநோய்போதல ...*
திண்ணியமனதிலையந்தெளிதலானந்தமாமே ... ...*

(இ-ள்) புண்ணியபதிகன்-புண்ணியவானென நெறிச்செல்வோன் —பின்னும்-பின்பும்—புருடரொன்பதின் மர்தம்மை- புமான்களொன்பதுபெயரை—எண்ணிய நீ - எண்ணின நீ—பத்தாவானென்னவே-தசமனுமென்றுசொல்லவே—தன்னைக்காணல- தன்னைத்தசமனாக்காணடல—கண்ணினிற்கண்டஞானம்-அபரோட்சஞானமாம்—களைதலபோவது - அழுகைநீங்கினது—நோய்போதல - துக்கநிவிர்த்தியாம்—திண்ணியமனதில-வன்மையானவுளத்தில—ஐயந்தெளிதல-சந்தேகந்தீர்தல—ஆனந்தமாம்-தடையற்றவானந்தமாம்—எ-று.

[இ-௯-௧-ம்] தசமன்றிட்டாந்தத்தூற றனனைமறந்ததனுல வந்தவுபாதிகளையும்- தத்தரிசனத்திலவைகளைக்கத்தைப்புங்கூறினதாம் (௯௨)

(அ-கை) தசமன்றன்னைத்தானெனக்கண்டதுபோலத் தன்னைத்தானாகத் தரிசிப்பிக்கவேண்டுமென்ற சிடனைநோக்கி மகாவாக்கியார்த்த நிருபகத்தின் லத்துவிதமான தன்னை அறிவிக்கத்தொடங்கல.

தெசபுமான்றனைக்கண்டாற்போற்றேசிகமூர்த்தியேயென் ...*
னிசவடிவினையான்காணநீகாட்டலவேண்டுமெனறான் *
சுசிபெறுமிலக்கியார்த்தந்தொம்பதந்தற்பதங்க... ...*
ளசிபதமைக்கியஞ்செய்யுமதிசயவுண்மைகேளாய் ... *

(இ-ள்) தெசபுமான்-பதின்மனைவன்—தனைக்கண்டாற்போல்-தன்னைக்கண்டதுபோல—தேசிகமூர்த்தியே - ஆசாரியரே—என்னிசவடிவினை-எனதத்துவஸ்ரூபத்தை—யான்காண - நான்றரிசிக்கும்படி—நீகாட்டல் வேணடுமென்றான்-தேவரீர்காண்பிக்கவேண்டுமென்று கேட்டான்—தொம்பதந்தற்பதங்கள்- நீயதுவென்னும்பதங்களின்—சுசிபெறுமிலக்கியார்த்தம்-பரிசுத்தமானவிலக்கியார்த்தமான கூடஸ்பிரமத்தின் —ஐக்கியம்- ஐக்கியத்தை—அசிபதம்- ஆனையென்னும்பதமானது—செய்யும்-காட்டும்—அதிசயவுண்மைகேள்-அற்புதமானவுண்மையைக்கேட்பாய்—எ-று (௬௪)

(அ-கை) ஒன்றானசைதன்னியமேநான்கு சைதன்னியமாகத் தோன்றுமெனல்.

விண்ணொன்றேமகர்விண்ணென்றுமேகவிண்ணென்றும்பாரின்
மண்ணென்றகடவிண்ணென்றுமருவியசலவிண்ணென்று ...*
மெண்ணுங்கற்பனைபோலொன்றேயெங்குமாம்பிரமமீச
னண்ணுங்கூடஸ்தன்சீவனான்குசைதன்னியமாமே ,...*

(இ-ள்) விண்ணொன்றே- ஆகாயமொன்றே—மகாவிண்ணென்றும் - மகாகாயமெனவும்—மேகவிண்ணென்றும்- மேகசலப்பிரதி விம்பாகாயமெனவும்—மண்ணென்ற கடவிண்ணென்றும் - மிருத்துவென்றகடாகாயமெனவும்—மருவியசலவிண்ணென்றும் - அதிற்பொருந்தியகடசலப்பிரதிவிம்பாகாயமெனவும்—எண்ணுங்கற்பனைபோல்நினைக்கப்பட்டகற்பிதத்தைப்போல—ஒன்றே-ஏகமானசுத்தசைதன்னியமே—எங்குமாம்பிரமம்-பூரணமானபிரமமெனவும்— ஈசன்-ஈஸ்வரனெனவும்—நண்ணுங்கூடஸ்தன் பொருந்தியகூடஸ்தனெனவும்—சீவன்- சீவனெனவும்—நான்குசைதன்னியமாம்- நான்குசித்துக்களாம்—எ-று. (௬௫)

(அ-கை) ஆரோபசைதன்னியத்தைநீக்கியதிஷ்டானசைதன்னியத்தையடையவேண்டுமெனல.

பூச்சியவீசன்சீவன்புகல்பதமிரண்டினுக்கும் ... ...*
வாச்சியமிலக்கியந்தான்மலமிலாப்பிரமமாத்மா... *
காய்ச்சியபாலினெய்போற்கலந்தொன்றாங்கடைந்தெடுக்கு *
மாச்சியமென்னவன்னையயிந்துநீபிரிந்துகொள்ளே ...*

(இ-ள்) புகல்-மகாவாக்கியத்திற்சொல்லும்—பதமிரண்டினுக்கும்-தற்பதந்தொம்பதமானவிருபதங்கட்கும்—வாச்சியம்-வாய்ச்சியார்த்தமானவை பூச்சியவீசன்சீவன் ஆரோபமானசீவேஸ்வரராம்—இலக்கியந்தான்- இலக்கியார்த்தமானது—மலமிலாப்பிரமாத்மா-நிர்மலமானபிரமகூடஸ்த்ரம் காய்ச்சியபாலில்-காய்ச்சினபாலில்—நெய்போல்-வெண்ணெயைப்போல் கலந்தொன்றும்-சடத்திற்சேர்ந்தொருமித்திருக்கின்ற—உன்னையறிந்து ஆத்மாவைத்தரிசித்து—கடைந்தெடுக்குமாச்சியமென்ன- கடைந்தெடுத்துருக்கியநெய்போல்—நீபிரிந்துகொள் - நீயதனுத்மாவினின்று பிரிவாயாக—எ-று.

[இ-௩-௧-ம்] தற்பததொம்பதங்களின் வாச்சியார்த்தமான சீவேஸ்வரராரோபமெனக்கண்டவைகளை நீக்கி யிலக்கியார்த்தமான கூடஸ்தபிரமவதிஷ்டானத்தை யொன்றுகக்காண்கி லதுவே யசிபதார்த்தமானசுத்தசைதன்னியமாமெனபதாம். (௩௩)

(அ-கை) தன்னைத்தரிசிப்பிக்கு நிமித்தந்தானல்லாதவைகளை நியதிகளாதல்.

பிறிவதெப்படியென்றக்காற்பிணமாகுமுடனுனென்னு... ...*
மறிவினைக்கொல்லல்வேண்டுமைம்பூதவிகாரமன்றோ.........*
வெறியதோர்துருத்திமூச்சுவிடுவதுபோலமூக்கா...... ......*
லெறிபிராணனுநீயல்லைபிராசதகுணவிகாரம ..... .........*

(இ-ள்) பிறிவதெப்படியென்றக்கால் - அனுத்மாவைநீங்குவதெங்ஙனமெனின்—பிணமாகுமுடல்-சவமாகின்றதேகம்—ஐம்பூதவிகாரம்-பஞ்சபூதவிகாரமாமாதலால்—நானென்னுமறிவினை- அஃதைநானென்கிறவுணர்வை—கொல்லல்வேண்டும்- கெடுத்தல்வேண்டும்—வெறியதோர்துருத்தி-வெறுந்துருத்தியானது—மூச்சுவிடுவதுபோல-காற்றைவிடுவதுபோலமூக்காலெறிபிராணனும்-மூக்கினால்வீசும்பிராணவாயுவும்—இராசதகுணவிகாரம்-ரசோகுணத்தின்விகாரமாமாதலால்—நீயல்லை- நீயல்லை—எ-று

(அ-கை) (இது.)

கரணமாமனதுபுந்திகருத்தாவுமவையான்மாவோ ... ...*
தரமுளவிரண்டுகோசஞ்சத்துவகுணவிகாரம் ... ...
வரமறுகனவாநந்தமயனையுநானென்னுதே ... ...
விரவியதமவஞ்ஞானவிருத்தியின்விகாரமாமே ... ...*

(இ-ள்.) கரணமாமனதுபுந்தி- அந்தக்கரணமானமும்புத்தியும்—கருத்தா-அகம்பாவமுமாம்—தரமுள-பேதமுள்ள—இரண்டுகோசம்- மனோமயகோசமும்விஞ்ஞானமயகோசமும்—வரமறுகனவு- நிரமில்லாதசொப்பனமும்—சத்துவகுணவிகாரம்-சத்துவகுணவிகாரமுமாம்- ஆதலால் -அவையான்மாவோ- அவ்விரண்டுமாத்மாவல்ல—ஆநந்தமயனையும்-ஆனந்தமயகோசத்தைசீவனையும்—விரவிய- பொருந்திய தமரூபமான—அஞ்

ஞானவிருத்தியின்- அவித்தியாவிருத்தியினது—விகாரமாம்- விகாரமாமா தலால்—நானென்றுதே-ஆத்மாவென்றுகருகாதே—எ-று.

(இ-உ-க-ம்) தேகமுதல்- அவித்தைபரியந்தமான மூன்றுதேகம்-மூன்றவத்தைமூன்றபிமானியும் பஞ்சகோசங்களையுந் தான் அன்றெனநியதிகளேந்ததாம். (௬௮)

(அ-கை) நியதிகளேந்த நீ யவ்விடத்துள்ள சுத்தசைதன்னியத்தைத் தரிசித்துவாகும்பொருட்டுப் பஞ்சகோசவிலட்சணனுவாயெனல்.

சத்தொடுசித்தாநந்தஞ்சமந்திரஞ்சாக்ஷீயேக ... ... *
நித்தியம்வியாபியான்மாநீயதுவாயறிந்து... ... *
பொத்தொடுசட்த்துக்காதிப்பொருந்துபேதங்களான ... *
குத்திரபஞ்சகோசக்குகைவிட்டுவெளியிலாவாய்... ... ...*

(இ-ள்,) சத்தொடு-சத்தும்—சித்து-சித்தும்— ஆநந்தம்-ஆநந்தமும்—சமம்-சமமும்—திரம்-ஸ்திரமும்—சாக்ஷி- சாக்ஷியும்—ஏகம் - ஏகமும்—நித்தியம்-நித்தியமும்—வியாபி-பூரணமுமாகிவிளங்குவது—ஆன்மா- ஆத்மஸ்வரூபமாதலால்—நீயதுவாய்-கூடஸ்தனே—பிரமம்- பிரமமே—கூடஸ்தனென-வத்துவிதஸ்வரூபமாக—அறிந்து-தரிசித்து— பொத்தொடு சடந்துக்காதி- அனுர்தசடதுக்கமுதலியவற்றை—பொருந்துபேதங்களான-அடையாநின்றவேறுபாடுகளுள்ள—குத்திரபஞ்சகோசக்குகைவிட்டு வஞ்சகமான பஞ்சகோசமாகிய தேகத்தைநீங்கிவெளியிலாவாய்-வெளிப்படுவாய்—எ-று.

(இ-ம்) பஞ்சகோசங்களைக் கண்டவைகட்கு விலக்ஷணனுவா யென்பதாம். (௬௯)

(அ-கை) விலக்ஷணமான விடத்தைப்பார்த் திவ்விருளோ நானெனவினுதல்.

பஞ்சகோசமும்விட்டப்பாற்பார்க்கின்றபோதுபாழே... ...*
விஞ்சியததுவல்லாமல்வேறொன்றுந்தெரியக்காணே ... ...*
னஞ்சனவிருளேயோநான்கமென்றனுபவிப்பேன்... ...*
வஞ்சமில்குருவேயென்றன்மகன்மதிதெளியச்சொல்வார்...*

(இ-ள்) பஞ்சகோசமும்விட்டு-ஐந்துகோசமான மூன்று தேகத்தையுநீங்கி—அப்பால்-மேல்—பார்க்கின்றபோது- பார்க்கும்பொழுது—பாழே மிஞ்சியது- சூனியமேசேஷித்திருக்கின்றது—அதுவல்லாமல்- அச்சூனியமேயன்றி—வேறொன்றும்-மற்றொன்றும்—தெரிய-தோன்ற— காணேன்-பார்க்கிலேன்—அஞ்சனவிருளேயோ- அஞ்சனவிருளேயோ—கபாவந்தகாரியத்தைய—நான்- யான்—அகமெனுவனுபவிப்பேன் - நானென்றனுபவிப்பேன்—வஞ்சமில்குருவேயென்ற உண்மையானவாசாரியரேயென்றுகேட்ட—மகன்மதிதெளிய- சீடனறிவுதெளிவும்படி— சொல்வார் போதிப்பார்—எ-று. அஞ்சனவிருளென்பது பிரகிருதியெனக்கொள்க.

(இ-ம்) நியதிகளைத்தானிருக்க தனைக்காணுமல்நியதிகளாயப்பட்டவைவை பேற்றுமையைத்தான் றேற்றவில்லையெனக் கலங்கிவினுவினதாம் ()

(அ-கை) பிரகிருதியைநீக்கிச் சுததசைதன்னியனை தன்னைத்தரிசிப்பிக்கும்பொருட் டிருளைக்கண்டவன்பாழா - அவனேநீயெனக் காண்பாயெனல்,

முன்புகறசமன்புத்திமோகத்தாலெண்ணியெண்ணி ... ...※
யொன்பதுபேரைக்கண்டவொருவனுந்தனைக்காணுத........※
பின்பவனிடையிற்கண்டபெரியபாழவனேபாரா ... ...※
யன்புளமகனேகாண்பதடங்கலுங்காண்பானீயே... .... ※

(இ-ள்) முன்புகறசமன்- முன்சொல்லியபதின்மனைவன்—புத்திமோகத்தால்- புத்திமயக்கத்தினுல்—எண்ணியெண்ணி- நினைத்துநினைத்து—ஒன்பதுபேரை- ஒன்பதுபெயர்களை— கண்டவொருவனுந்தனை - பார்த்தவொருவனுகியதன்னை—காணுதபின்பு-பாராதபின்— அவனிடையிற்கண்ட-தன்னிடத்திலேதன்னைத்-தசமனைப்பார்த்த—அவனே-அவனேபெரியபாழ்-பெரும்பாழ்—பாராய்-பார்ப்பாய்—அன்புளமகனே-அன்புள்ளபுத்திரா—காண்பதடங்கலும்-ஆனியமுதலிய இரியஸ்யங்களனைத்தையும்—காண்பானீயே-பார்ப்பவனீயேயாவாய்—எ-று,

(இ-ம்) அவ்விருளாகியவவியாமை நியன்மதனைக்கண்டஞானமே நீயெனவறிவித்ததாம், (௭௧)

(அ-கை) அங்ஙனமதிஷ்டான சைதன்னியமான தனது சந்நிதியிற்சகலமுமுதித்தொடுங்குமெனல்.

தூலசூக்குமஞ்ஞானந்தோன்றுமூன்றவத்தைதாமும்... ...※
காலமோர்மூன்றுஞ்சன்மங்கடலெழுங்கல்லோலங்கள் ......※
போலவேவந்துவந்துபோனவெத்தனையென்பேனே........※
ஞாலமர்கடவுளானையவைகளெலாஞ்சாக்ஷிநீயே... ... ...※

(இ-ள்) தூலசூக்குமஞ்ஞானம் - தூலசூக்குமகாரணமாகிய சரீரத்திரியங்களும்—தோன்றுமூன்றவத்தைதாமும்-தோன்றுகின்றசாக்கிரசொப்பன சுழுத்தியென்னுமவத்தாத்திரியங்களும்—அவற்றையபிமானிக்கின்ற விசுவதைசதபிராஞ்ஞனுமான வபிமானத்திரியங்களும்—காலமோ மூன்றும்-திரிகாலங்களும—சன்மம்- பவமாகிய—கடலெழும் - சாகரத்திலுண்டான—கல்லோலங்கள்போலவே- பேரலைகளைப்போலவே—வந்துவந்து-உண்டாகியுண்டாகி—போனது-அழிந்தன—நான் - யான்—எத்தனையென்பேன்-எவ்வளவென்றுசொல்வேன்—ஆலமர்கடவுளானை- கல்லாலின்நிழல்வசிக்குஞ் சற்குருவின் பேரிலாஞ்ஞைப்படிக்கு — அவைகளெலாம்-அவைகளனைத்திற்கும்—சாட்சிநீயே-நீயேசாட்சியாம்—எ-று.

•(இ-ம்) ஆரோபமான வவித்தைமுதலியவைகளனேகதேசமும் அவைகட் கதிஷ்டானமானவாத்ம ஞானவியாபகத்தையுந் தெரிவித்ததாம்.( )

(அ-கை) அவ்வாத்மஞானத்தைத்தவிர மற்றோர் ஞானமன்றென்பதை யுறுதிப்படுத்துநிமித்ததந் தன்னையறிவதுதானேயெனல்.

எல்லாங்கண்டறியுமென்னையேதுகொண்டறிவேனென்று ...*
சொல்லாதேசுயமாஞ்சோதிச்சுடருக்குச்சுடர்வேறுண்டோ *
பல்லார்முன்றசமன்றன்னைப்பார்ப்பதுந்தனைக்கொண்டே கா
னல்லாதுபதினொன்றாறுமவனிடத்துண்டோபாராய்... ..*

(இ-ள்) எல்லாம்-அனைத்தையும்—கண்டறியுமென்னை- பார்த்தறிகின்ற வென்னை—ஏதுகொண்டறிவேனென்று- எதைக்கொண்டறிவேனென்று- சொல்லாதே-உரையாதே—சுயமாஞ்சோதி- சுயஞ்சோதியான— சுடருக்கு-பிரகாசத்தையறிவிப்பதற்கு—சுடர்வேறுண்டோ-பிரகாசம்வேறுமுளதோ—பல்லார்முன்-பலர்முன்ன—தசமன்றன்னை- பதின்மனை—பார்ப்பதும்-காண்பதும்—தனைக்கொண்டேதானல்லாது- தன்னைகொண்டேயன்றி—பதினொன்றாறும்- பதினோரம்புருடனும்—அவனிடத்து- அத்தசமனிடத்து—உண்டோபாராய்-உளனோபார்ப்பாய்—எ-று.

(இ-ம்) ஆத்மசைதன்னியமொன்றே யென்றறிவித்ததாம். (எங)

(அ-கை) சர்வஞ்ஞத்துவகிஞ்சிஞ்ஞத்துவததையும அறிவறியாமையை யுநீக்கிச் சுத்தசைதன்யத்தைத்தரிசிப்பித்தல்.

அறிவுக்குமறிவுசெய்யுமறிவுவேறுண்டென்றெண்ணு... ...*
மறிவற்றகுதர்க்கமூடர்க்கனவத்தைப்லமாய்த்தீரு... ... *
மறிபடும்பொருணீயல்லையறிபடாப்பொருணீயல்லை... ...*
யறிபொருளாகுமுன்னையனுபவித்தறிவாய்நீயே... ... *

(இ-ள்) அறிவுக்கும்-சுயஞ்சைதன்யத்துக்கும்—அறிவுசெய்யுமறிவு-அறிவிக்குஞானம்—வேறுண்டென்று-மற்றொன்றிருக்கின்றதென்று—எண்ணும்-நினைக்கின்ற—அறிவற்றகுதர்க்கமூடர்க்கு- உணர்வின்றிய குதர்க்கஞ்செய்யுமஞ்ஞானிகளுக்கு—அனவத்தை - அனவஸ்தாதோஷம—பலமாய்த்தீரும்- பிரயோசனமாய்முடியும—அறிபடும்பொருணீயல்லை-திரிசியவஸ்துக்களுநீயல்லை—அறிபடாப்பொருணீயல்லை- அறியாமையான சூனியவஸ்துக்களுநீயல்லை—அறிபொருளாகுமுன்னை- சைதன்யவஸ்துவான வுனதாத்மஸ்வரூபத்தை— நீயே நீ—அனுபவித்தறிவாய்- அனுபவித்துணர்வாய்—எ-று.

(இ-ம்) துவிதமாகியவுபரவுணர்வைநீக்கி யத்துவிதமானபரவுணர்விது வெனவுணர்த்தியதாம். (ஏ௪)

(அ-கை) அப்பரவுணர்வேதானாக விளங்கிய சிதானந்தமேசர்வமாக விளங்குகின்றதெனவுணர்த்துதல்.

மதுரமாங்கட்டிசுட்டமாப்பணியாரமெல்லா ... ... ...*
மதுரமாக்கியவுதற்குமதுரந்தானீசுபாவமன்றோ ... ... *

வதுவிதுவெனுஞ்சடங்களறிவாகவறிவைத்தந்தே... ...
யதுவிதுவிரண்டுமாகவகம்பொருளறிவாய்நீயே ...

(இ-ள்.) மதுரமாங்கட்டி-தித்திப்பாகியகருப்புக்கட்டிசேர்த்து—சுட்ட-சுடப்பட்ட—மாப்பணியாரமெல்லாம்-மாப்பலகாரங்களனைத்தையும்—மதுரமாக்கிய-மதுரமாகச்செய்த—அதற்கு- அவ்வெல்லக்கட்டிக்கு—மதுரந்தான்-மதுரமானது—சுபாவமன்றோ-சுபாவமல்லவா— அதுவெனுஞ்சமஷ்டியும்—இது-இதுவென்னும்வியஷ்டியுமான—சடங்கள்- கிரியவஸ்துக்களை—அறிவாக-ஞானமாகஅறிவைத்தந்து - ஞானநிஷ்டையைக்கொடுத்து—அதுவிதுவிரண்டுமாகா - சிவேஸ்வரதுவிதமாகாத— அகம்பொருள்-தானாகியவத்துவிதவஸ்துவை—அறிவாய்நீயே -நீயே தரிசிப்பாய்—எ-று,

(இ-ம்) தனதம்சத்தைத்தவிரவேறொன்றுமில்லையெனத்தனது வியாபகத்தை விளக்கியதாம். (௭௫)

(அ-கை) இவ்வத்துவிதநிலைசித்திக்கும்பொருட்டநிஷ்டானத்துக்கைக்கியமேயன்றியாரோபத்துக்கைக்கியமின்றெனல.

இந்தநீதொம்பதத்தினிலக்கியப்பொருளாமென்றும் ... ...*
பந்தமிற்பிரமமேதற்பதந்தனிலிலக்கியார்த்த ... ... *
மந்தமாஞ்சீவனீசனவர்களேவாச்சியார்த்தந்த ... ... *
சந்ததம்பேதமாவார்தமக்கைக்கியங்கூடாதே... ...*

(இ-ள்) இந்தநீ - இத்தன்மையுள்ள கூடஸ்தனைநீயே— தொம்பதத்தின்- தொம்பதத்தினுடைய — இலக்கியப்பொருளாம் - லட்சியார்த்தமாம்—என்றும்-எப்போதும்—பந்தமிற்பிரமமே - மாயாரகிதமானபிரமமென்னுமதுவே—தற்பதந்தனில்-தற்பதத்தினுடைய—இலக்கியார்த்தம் லக்ஷியார்த்தமாம்—அந்தமாம்-தோற்றிச்சிப்பதான—சீவனீசனவர்களே -சீவேஸ்வரரானவவர்களே—வாச்சியார்த்தம் - வாச்சியார்த்தமாம்—சந்ததம்-எப்போதும்—பேதமாவார்தமக்கு-பேதமாகிய சீவேஸ்வரர்களுக்கு—ஐக்கியங்கூடாது-ஏகமாதற்கூடாதாம்—எ-று.

பேதமாவார்க்கைக்கியங்கூடா தென்றவதனால்- அபேதமாவார்க்கைக்கியங் கூடுமென்றாயிற்று [இ-ம்] மகாவாக்கியத்தினிலக்கியார்த்தமான கூடஸ்தபிரமம்-அபேதமாதலினவர்கட்கைக்கியங் கூடுமென்பதாம். (௭௬)

(அ-கை) (இது)

பேதமானதுவுங்கேளாய்ப்பேராலுமிடங்களாலு ... ......*
மோதருமுபாதியாலுமுடலாலுமுணர்விலும்... ... *
பாதலம்விசும்பும்போலப்பலதரமகன்றுநிற்பா ... ...*
ராதலாலிவர்க்கேக்காலுமைக்கியமென்பதுகூடாதே... ...*

(இ-ள்) பேதமானதுவும்-பேதமென்பதுவும்—கேளாய்- கேட்பாய்—பேராலும்-சீவேஸ்வரரென்னு நாமங்களினுலும்—இடங்களாலும்- அண்டபிண்டங்களாயிருக்கின்ற ஸ்தானங்களினுலும்— ஓதருமுபாதியாலும-சொல்லுதற்கரிய காரணகாரியமானவுபாதிகளினுலும்—உடலாலும்- சமஷ்டி வியஷ்டியாகியதேகங்களினுலும்—உணர்வினுலும்- சர்வஞ்ஞத்துவகிஞ்சிஞ்ஞத்துவமென்னு ஞானத்தினுலும்—பாதலம்விசும்பும்போல பாதாளமும்விண்ணுலகமும்போல—பலதரம்- நாநாவிதத்தினுலும்— அகன்று நிற்பராதலால்-நீங்கி நிற்பவர்களாதலால்—இவர்க்கு - இத்தன்மையுள்ள சீவேஸ்வரர்களுக்கு—எந்நாளும்-எப்போதும்—ஐக்கியமென்பது கலத்தலென்பது—கூடாது- கூடாதாம்—எ-று.

(இ-ள்) மகாவாக்கியத்தின் வாச்சியார்த்தமானசீவேஸ்வரரிவ்விதம்பேதமாதலினவர்கட்கைக்கியங்கூடாதென்பதாம். (எஎ)

(அ-கை) மகாவாக்கியார்த்தப்படி கூடஸ்தபிரம மேகமென்னும் பொருடோன்ற மூவிதவிலக்கணையைக்கூறுகின்றார்.

வடநூல்வல்லவர்கள்சொல்லும்வாசகப்பொருள்சேராம ...*
விடராகிற்பொருளாம்வண்ணமிலக்கணையுரையார்கொள்வா *
திடமானவதுவுமூன்றுச்செப்புவார்விட்டதென்றும்... ...*
விடாவிலாதென்றும்விட்டுவிடாததென்றும்பேராமே... *

(இ-ள்) வடநூல்வல்லவர்கள்-கிரந்தகர்த்தாக்கள்—சொல்லும்-சாஸ்திரங்களிற்சொல்லாநின்ற—வாசகப்பொருள்-வாச்சியார்த்தத்திலை—சேராமல்-பொருள்பொருந்தாமல்—இடராகின்- தடையாயின்—பொருளாம்வண்ணம்- அர்த்தமாகும்பொருட்டு—இலக்கணையுரையால்-இலக்கியார்த்தத்தினுல்—கொள்வார்- பொருள்கொள்வார்கள்—திடமாக-திரமாக—அதுவும-அவ்விலக்கணையையும்— மூன்றுச்செப்புவார்- மூன்றுவிதமாகச்சொல்லுவார்கள்—விட்டதென்றும்- விட்டவிலக்கணையெனவும்—விடாவிலாதென்றும்-விடாதவிலக்கணையெனவும்—விட்டுவிடாததென்றும்-விட்டுவிடாதவிலக்கணையெனவும்—பேராம்-நாமங்களாம்—எ-று.

(இ-ம்). இலக்கணையினமங்களைக்கூறினதாம், (எஅ)

(அ-கை) அவற்றிற்குதாரணங்கூறல்.

கங்கையிற்கோஷமென்றுங்கறுப்புச்சேப்போடுதென்றுந் ...*
தங்கியசோயந்தேவதத்தனென்றுஞ்சொல்வார்க... ...*
ளிங்குதாரணங்களாக்கியிந்தமூன்றுரைகளாலே ... ... *
துங்கநூல்விரோதமானசொல்லெலாம்பொருளாந்தானே *

(இ-ள்.) கங்கையிற்கோஷமென்றும்- பாகீரதியிலிடைச்சேரியெனவும்—கறுப்புச்சேப்போடுதென்றும் - கருமைசெம்மைகள் செல்லுகின்றனவெனவும்—தங்கிய-தங்காநின்றவிசோயம்-அவனேயிவனென— தேவதத்தனென்றும்-தேவதத்தனென்னுமோர் புருடனெனவும்—சொல்வார்கள்-

உரைப்பார்கள்— இங்கு இவ்விடத்து—உதாரணங்களாக்கி-உதாரணங்களைச் சொல்லி—இந்தமூன்றுரைகளால்-இம்மூன்றிலக்கணைப் பொருள்களால்— நூங்கநூல-மேலானசாஸ்திரங்களில்—விரோதமான- அர்த்தம் பொருந்தாமல் வேறுபடுகின்ற—சொல்லெலாம்- வாக்கியங்களனைத்தையும்—பொருளாம்-அருத்தமாம்—எ-று.

[ப-ம்] கங்கைக்கணிடைச்சேரி யென்னுமிடத்துகங்கையினிடத்திடைச்சேரியிருக்குமா அதன்கரையிலிருக்கு மென்றதனை விட்டிதனைக்கொள்வது விட்டவிலக்கணையென்பார்- கங்கையிற்கோஷமெனவும் - கருமை செம்மை செல்லுகின்றனவென்னுமிடத் தவைகடனியேசெல்லுமா- கருமை நிறமாகியபசுவும்- செம்மைநிறமாகிய குதிரையுஞ் செல்லுகின்றன வென்றநிறத்தைவிடாமல் - அவ்வான்மாவைக்கொள்வது-விடாதவிலக்கணையென்பார்- கறுப்புச்சேப்போடுதெனவும்- அவ்விடமுமக்காலமுமவ்வேடமுமுள்ளவனே இவ்விடமு மிக்காலமுமிவ்வேடமுமுள்ள விவனென- அவைகளொழிந்து இப்புருடனைமாத்திரங்கொள்ளும்போது- அவ்விடமுதலானவைகளொழிந்து இப்புருடன்மாத்திரமிருக்கின்றதனை விட்டுவிடாத விலக்கணையென்பார்- தங்கியசோயந் தேவதத்தனெனவும் - இவ்விலக்கணை வாக்கியப்படி பொருள்கோடலே- நூல்களனைத்திலுமுள்ள - அவிரோதமான பொருள்கோடலென்பார்- இந்தமூன்றுரைகளாலே நூங்கநூல்விரோதமான சொல்லெல்லாம் பொருளாமெனவுங்கூறினார்,

[இ-ம்] தொம்பதார்த்தத்தைவிட்ட விலக்கணையாற்றரிசிக்கவேண்டுமென்பது- தூலமுதலவித்தைபரியந்தமான சரீரத்திரயங்களைவிட்டு-அவைகட்கு விலட்சணமான கூடஸ்தசைதன்யத்தைத் தரிசிப்பதும்- தற்பதார்த்தத்தை விடாதவிலக்கணையாற் றரிசிக்கவேண்டுமென்பது - சைதன்யம் ஆனந்தானுபூதியின்றி விளங்காமையால் - இச்சைதன்யத்தைவிடாமலானந்தோப்பிரமத்தைத்தரிசிப்பதும் - அசிபதார்த்தத்தைவிட்டுவிடாத விலக்கணையாற்றரிசிக்கவேண்டுமென்பது ஆனந்தமின்றியறிவும்-அறிவின்றியானந்தமுமின்மையால்- அவைகளின்பேதமானது விதத்தைவிட்டு - அபேதமான அத்துவிதவஸ்துவை விடாமற்றரிசிப்பதுமாம்.

(அ-கை) (இ-து)

பன்னியசோயமென்னும்பதங்களின்வாய்ச்சியார்த்த... ...*
மன்னியதேயங்காலமவனிவனெனபவெல்லாந் ... *
சொன்னவிவ்விரோதம்விட்டுத்தொகையிலக்கியம்விடாம ... *
னுன்னிடற்றேவதத்தனொருவனைவெளியாக்காட்டும்... ...*

(பூ-ள) பன்னிய- முன்சொன்ன—சோயமென்னும்- அவனேயிவனென்னும்- பதங்களின்- பதங்களுக்கு—வாச்சியார்த்தம்- வாச்சியார்த்தமானது—அன்னிய- வேறான—தேயம்-தேசமும்—காலம்- காலமும்—அவனிவனென்ப அவனிவனென்பனவாக—சொன்ன- சொல்லப்பட்ட—இவ்விரோதமெல்லாம்-விரோதமாயுள்ள விவ்வனைத்தையும்—விட்டு-விடுத்து—தொகையில்- முடிவில்— இலக்கியம்விடாமனுன்னிடல்- இலக்கியார்த்

தத்தைவிடாமற்சிந்திக்கில்—தேவதத்தனொருவனை - தேவதத்தனென்னு மொருபுருடனையே—வெளியாக்காட்டும்-பிரத்தியட்சமாகக்காண்பிக்கும் எ - று.

(இ-ம்) இவ்விலக்கணையின் பொருளொருமையை நன்றாகத்தெரிவித்த தாம். (அ௰)

(அ-கை) இத்திஷ்டாந்தப்படி தார்ஷ்டாந்தத்தைவிளக்குதல்.

தத்துவப்பதங்கடாமுஞ்சாட்சியாய்ப்பிரமமான... ... *
வத்துவைவிடாமற்பேதவாச்சியார்த்தத்தைவிட்டு ... ...*
நித்தமுமதுநீயாகுநீயதுவாகுமென்னு ... ... *
மர்த்தமுமகண்டமென்றேயசிபதவைக்கியங்காட்டும்... ...*

(இ-ள்) தத்துவப்பதங்கடாமும்- தற்பதந்தொம்பதங்களின்—பேதவாச்சியார்த்தத்தைவிட்டு- வாச்சியார்த்தமான பேதமாயுள்ளசீவேஸ்வரனைவிட்டு—சாட்சியாப்பிரமமானு- கூடஸ்தபிரமமான்—வத்துவைவிடாமல் பொருளைவிடாமல்—நித்தமும்-எப்போதும்—அதுநீயாகும்- பிரமமேகூடஸ்தனும்—நீயதுவாகுமென்னும்-கூடஸ்தனேபிரமமாமென்னும்—அர்த்தமும்-பொருளும்—அகண்டமென்று-ஒன்றென்று—அசிபதம்-ஆனை என்னும்பதமானது—ஐக்கியங்காட்டும்-அத்துவிதத்தைவிளக்கும்—எ-று,

(இ-ம்) ஆசிரியருபதேசப்படி யாரணநிச்சயமிருப்பது தோன்றவிதின் முடிவானமகாவாக்கியத்தி னிலக்கியார்த்தமான கூடஸ்தபிரமத்தினொருமையையுணர்த்தியதாம். (அக)

(அ-கை) இவ்வத்துவிதமான சுவானுபூதியே தானாக விளங்குவாயெனல்.

கடநீரின்மேகநீரிற்கண்டவானிரண்டும்பொய்யே... ...*
குடவானும்பெரியவானுங்கூடியொன்றுமெப்போது... *
மிடமானபிரமஞ்சாட்சியிரண்டுமெப்போதுமேகந் ...*
திடமாகச்சுவானுபூதிசிவோகமென்றிருந்திடாயே... ...*

(இ-ள்) கடநீரில்-கடசலத்திலும்—மேகநீரில்- மேகசலத்திலும்—கண்டவான்-தோற்றுகின்றபிரதி விம்பாகாயமான—இரண்டும்பொய்யே-இரண்டுமித்தையேயாம்—குடவானும்-கடாகாயமும்—பெரியவானும்-ஆகாயமும்—எப்போதும்-எக்காலமும்—கூடியொன்றும்-கலந்தேகமாகும்—அதுபோல-இடமானபிரமம்-வியாபகமானபிரமமும்—சாட்சி- கூடஸ்தனுமான—இரண்டும்-இரண்டிசைதன்யமும்—எப்போதும்- எக்காலமும்—ஏகம்-ஒன்றேயாமாதலின்—திடமாக-ஸ்திரமாக—சுவானுபூதி-சுவானுபூதியாகிய—சிவோகமென்று- சிவோகமென்று—இருந்திடாய்- இருப்பாய் எ-று.

(இ-ம்). சுருதிகுருவாக்கியார்த்தமொன்றுபட்ட அத்துவிதமானசுத்த தன்மயமே தானாகவிளங்குவாயென மௌனநிலையையுணர்த்தி யாசிரி மௌனமாயிருந்தாரென்பதாம். (௮௨)

(அ-கை) குருவாக்கியப்படி சமாதியிற்றன்னைத்தரிசித்தல்.

தஞ்சமாங்குருவுஞ்சொன்னதத்துவவழிதப்பாமற் ... *
பஞ்சகோசமுங்கடந்துபாழையுந்தள்ளியுள்ளிற் ... *
கொஞ்சமாயிருப்பும்விட்டுக்கூடஸ்தபிரமமென்று ... *
நெஞ்சமுநழுவியொன்றாய்நின்றபூரணத்தைக்கண்டான் *

(இ-ள்) தஞ்சமாம்-தனக்குயிர்த்துணையாக---குருவுஞ்சொன்ன- ஆசாரியானுக்கிரகஞ்செய்த---தத்துவவழி- தற்பதசோதனை செய்த மார்க்கங்கள்---தப்பாமல்-தவறாமல்---பஞ்சகோசமுங்கடந்து- ஐந்துகோசங்கட்கும்வேறாய்---பாழையுந்தள்ளி- அங்ஙனங்கண்ட சூனியத்தையுநீக்கி---உள்ளில்-அகத்தில்---கொஞ்சமாயிருப்பும்- அற்பமாசத்தோற்றியிருக்கின்ற ஸ்மரணத்தையும்---விட்டு-விடுத்து---கூடஸ்தபிரமமென்னும்-கூடஸ்தபிரமமென்கிற---நெஞ்சமுநழுவி-நினைவுமிறந்து---ஒன்றாய் நின்ற-அத்துவிதமாயிருந்த---பூரணத்தைக்கண்டான்-பரிபூரணஸ்வரூபத்தைத்தரிசித்தான்---எ-று. (௮௩)

(அ-கை) சமாதிகூடி சுவானுபூதிமயமாதல்.

அநுபவானந்தவெள்ளத்தழுந்தியேயகண்டமாகித் ... *
தநுகரணங்களாதிச்சகலமுமிறந்துசித்தாய்... ... *
மனதுபூரணமாய்நேசமானசற்குருவுங்காண... ... *
நனவினிற்சுழுத்தியாகிநன்மகனசுபாவமானான் ... *

(இ-ள்) அநுபவானந்தவெள்ளத்து- சுவானுபவமாகிய நிரதிசயானந்த சமுத்திரத்தில்---அழுந்தி-மூழ்கி---அகண்டமாகி- அகண்டாகாரமாய்---தநுகரணங்களாதி-தேகேந்திரியவந்தக்கரணமுதலிய---சகலமுமிறந்து- அவைத்துநசித்து---சித்தாய்-சின்மாத்திரானுபவத்தினால்---மனதுபூரணமாய்-மனம்பூரணமாகி---நேசமான-பூரணமேதிருவுருக்கொண்ட---சற்குருவுங்காண-ஆசிரியரும்பார்க்கும்படி---நனவினிற்சுழுத்தியாகி - நனவிலிற்சுழுத்தியையடைந்து---நன்மகன்-சற்சீடன்---சுபாவமானான்- தனதியல்பானஸ்வரூபமாக விளங்கினான்---எ-று.

(இ-உ-கம்) சுருதிகுருவாக்கியப்படி சுபானுபவம் விளங்கிற்றென்பதாம். (௮௪)

(அ-கை) சமாதியினின்றும்வெளிப்படல்.

அரிமுகனெடும்போதிவ்வாறன்னியின்மாதுமெள்ள
வெளியில்வந்திடவுணர்ந்தானிமலதேசிகனைக்கண்டான்

றுளிவிழிசொரியப்பாதந்தொழுதுவீழ்ந்தெழுந்துசூழ்தான் *
குளிர்முகச்சுவாமிகேட்கக்கும்பிட்டுநின்றுசொல்வான் *

(இ-ள்) அளிமகன்-கனிவுள்ளசீடனானவன்—நெடும்போது- வெகுநேரம்—இவ்வாறானபின்-இவ்வண்ணமாகவிளங்கினபின்பு—மனது:ஸ்வரூப சமஸ்காரமானமனது—மெவளவெளியில்வந்திட-மெள்ளவசமாதியினின்றுந் துரியமாய்வெளிப்பட—உணர்ந்தான்- அறிந்தவனாய் விமலதேசிகனை-நிர்மலமானவாசாரியரை—கண்டான் - பார்த்து—விழி-கண்கள்—துளிசொரிய-ஆனந்தபாஷ்பம்பொழிய—பாதம்-அவரதுபதத்தில்— தொழுதுவீழ்ந்து-சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து—எழுந்து-பின்பெழுந்து சூழ்ந்தான்-வலம்வந்து—குளிர்முக - பிரமானந்தம்— விளங்குகின்றமுகத்தையுடைய—சுவாமிகேட்க- ஆசாரியர்கேடகும்படி —கும்பிட்டுநின்று சொல்வான்-சிரசின்மேலஞ்சலியோடுநின்று துதிப்பான்—எ-று.

(இ-ம்) சமாதியனுபவ சமஸ்காரத்தோடு சகசநிட்டைக்குவெளிப்பாட்டதாம். (அரு)

(அ-கை) கைம்மாறுகாணே னெனக்குருவைத்துதிசெய்தல்.

ஐயனேயெனதுளேநின்றனந்தசென்மங்களாண்ட ...*
மெய்யனேவுபதேசிக்கவெளிவந்தகுருவேபோற்றி ... *
யுய்யவேமுத்திநல்குமுதவிக்கோருதவிநாயேன்... ...*
செய்யவேரொன்றுங்காணேன்றிருவடிபோற்றிபோற்றி *

(இ-ள்) ஐயனே-ஆசாரியரே —எனதுளேநின்று-எனதகத்தினின்று — அநந்தசென்மங்கள்-அளவிறந்தபவங்கடோறும் —ஆண்டமெய்யனே- ஆளாநின்றகர்த்தனே—உபதேசிக்க- அனுக்கிரகிக்குநிமித்தம்—வெளிவந்த குருவே-மானிடவடிவுகொண்டெழுந்தருளிய வாசிரியரே —போற்றி - வணங்குகின்றேன் —உய்யவே-அடியோனீடேறும்பொருட்டு—முத்திநல்குமுதவிக்கு-விடளித்தசகாயத்திற்கு—ஒருதவி - ஓர்கைம்மாறு— நாயேன் செய்ய அடியோன்செய்ய -வேறொன்றுங்காணேன்- மற்றொன்றையுங்காணகிலன்—திருவடிபோற்றிபோற்றி - தேவரீருடையபாதங்களைத்துதிக்கின்றேன்—எ-று.

(அ-கை) சமாதியனுபவம்பெற்ற சீடனைநோக்கிச் சகசநிட்டையனுபவமுதயமாம்பொருட், டினதனுபவந்தடையின்றி விளங்குமெனவிலீடே கைம்மாறெனக்கூறுதல்.

சிட்டனிவ்வாறுசொல்லத்தேசிகர்மகிழ்ந்துநோக்கிக் ...*
கிட்டவாவெனவிருத்திக்கிருபையோடருளிசசெய்வார் *
துட்டமாக்கனைகண்மூன்றுந்தொடராமற்சொருபஞான ...*
நிட்டனயிருப்பாயாகினீசெய்யுமுதவியாமே ... *

(இ-ள்) சிட்டன்-சீடனானவன்—இவ்வாறுசொல்ல-இவ்வணக்துதித்து நோக்க—தேசிகர்-ஆசிரியரானவர்—மகிழ்ந்துநோக்கி-மகிட்சியுடன்பார்த்து—சிட்டவாவெனவிருத்தி-சமீபத்தில்வாவென் றழைத்திருக்கச்செய்து கிருபையோடு-கருணையோடும்—அருளிச்செய்வார் - அனுக்கிரகஞ்செய்வார்—துட்டமாம்- பொல்லாதனவாகிய—தடைகண்மூன்றும்- மூன்றுதடைகளும்—தொடராமல் - தொடர்ந்துவாராமல்—சொரூபஞானநிட்டனாய்- ஸ்வரூபசைதன்யசமாதியையுடையவனாய்—இருப்பாயாகின்-இருப்பாயானால்—நீசெய்யுமுதவியாம்-இஃதே நீ யெனக்குச்செய்யுங்கைம்மாறும்—எ-று.

(இ-உ-க-ம்) தானெனவனுபவமானசுக போதத்தைத்தவிர வேறுகருதாம லிருக்கவேண்டுமென்பதாம். (அள)

(அ-கை) அனுபவமானவத்துவிதஞானந் தடைகளினீங்குமோவென்ற சீடனை நோக்கி யவைகளுண்டே லனுபவந்திரமாகவிள்ங்காவெனல்.

நீநானெனவிரண்டில்லாமனிறைந்தபூரணமாயெங்கு... ...*
நானாகத்தெரிந்தஞானநழுவுமோகுருவேயென்றான் ... *
றானாகும்பிரமரூபஞ்சற்குருநூலாற்றோன்று ... ...*
மானாலுந்தடைகளுண்டேலனுபவமுறைத்திடாதே ... *

(இ-ள்) நீநானென்று-நீயெனவுநானெனவும்— இரண்டில்லாமனிறைந்து-விகற்பமின்றியுந்து விதமாகவியாபித்த—பூரணமாய்- பரிபூரணமாய்—எங்கும்-எவ்விடத்தும்—நானாகத்தெரிந்தஞானம்-தானாகவிளங்கியசைதன்யமானது—குருவே-ஆசாரியரே—நழுவுமோவென்றான்-நழுவுமோவென்றுகேட்டான்—தானாகும்பிரமரூபம்-தன்மயமானபிரமஸ்வரூபமானது சற்குரு- ஆசாரியருபதேசத்தினாலும்—நூலால்- வேதாந்தசாஸ்திரங்களினாலும்—தோன்றுமானாலும்-உதிக்குமானாலும்- தடைகளுண்டேல்-தடைகளிருக்குமானால்—அனுபவமுறைத்திடாது - அவ்வனுபவந்திரப்படாது (எ-று) நீயென்பது முன்னிலையிற்குருவாக விளங்கியவானந்தமெனவும்-நானென்பதுதன்மையிற் சீடனாகவிளங்கிய வறிவெனவுங்கொள்க.

(அ-கை) தடைகளையு மவற்றை நீக்கு முபாயங்களையுங்கூறல்.

தடைகளேதெனிலஞ்ஞானஞ்சந்தேகம்விபரீதங்கள் ...*
படர்செயுமிந்தமூன்றும்பலசன்மப்பழக்கத்தாலே ... *
வுடனுடன்வரும்வந்தக்காலுயர்ஞானங்கெடுமிவற்றைத் *
திடமுடன்கெடுப்பாய்கேட்டல்சிந்தித்தறெளிதலாலே ...*

(இ-ள்) தடைகளேதெனில்- அந்தடைகளியாவையென்றால்—அஞ்ஞானம்-அஞ்ஞானமும்—சந்தேகம்- சந்தேகமும்—விபரீதங்கள்-விபரீதங்களுமாம்—படர்செயும்- துன்பஞ்செய்யும்—இந்தமூன்றும்- இம்மூன்றுதடைகளும்—பலசன்மப்பழக்கத்தால்—அனந்தசென்மப்பழக்கத்தினால்-உடனுடன்வரும்-அடிக்கடிவரும்—வந்தக்கால்- அங்ஙனம்வருமாகில்—உயர்

ஞானங்கெடும்-மேலானஞானமறைபடும்--இவற்றை-இத்தடைகளை--இடமுடன்-ஸ்திரமாக--கேட்டல்-சிரவணத்தினாலும்--சிந்தித்தல்-மனனத்தினாலும்--தெளிதலால்-நிதித்தியினாலும்--கெடுப்பாய்-நீக்குவாய்-எ-று.

(அ-கை) தடைகளுளவாயினனுபவம்விளங்காதெனத்திருஷ்டாந்தமுகத்தாலறிவித்தல்.

அக்கினிகட்டுப்பட்டாலற்பமுஞ்சுடமாட்டாது ... *
மக்கினஞானத்தாலேவந்தபங்காரம்வேவாது... ...*
சிக்கெனப்பழகிக்கேட்டல்சிந்தித்தறெளிதலாலே... ...*
விக்கினமடஞ்சந்தேகம்விபரீதம்போக்குவாயே ... *

(இ-ள்) அக்கினி-நெருப்பானது--கட்டுப்பட்டால்-மந்திரத்தினாலௌஷதசத்திஸ்தம்பனமானால்--அற்பமும்-சிறிதும்--சுடமாட்டாது-எரிக்கமாட்டாது--அதுபோல-மக்கினஞானத்தால்--தடைகளினாற்பிரகாசங்குன்றினசித்தினால்--வந்தபங்காரம்-வரப்பட்ட திரிசியவாசனையும்--வேவாது-கெடாது--ஆதலால்-சிக்கெனப்பழகி இடைவிடாமற் பழக்கஞ்செய்து--கேட்டல்- சிரவணத்தினால்- விக்கினமடம்- ஞானத்துக்குத்தடையாகிய அஞ்ஞானத்தையும்-- சிந்தித்தல்-மனனத்தினால்--சந்தேகம் - சந்தேகத்தையும்--தெளிதலால் அபரோக்ஷானுபவமாய்த்தெளிதலினால்--விபரீதம் கற்பிதமானதிரிசியத்தையும்--போக்குவாய்-நீக்குவாய் --எ-று. (கூ0)

(அ-கை) அத்தடைகளினியல்புகூறல்.

பிரமபாவனையைமூடிப்பேதங்காட்டுவதஞ்ஞானங் ...*
குரவன்வாக்கியநம்பாமற்குழம்பினமனஞ்சந்தேகந் ... *
திரமறுசகமெய்யென்றுந்தேகநானென்றுமுள்ளோ ...*
விரவியமோகந்தானேவிபரீதமென்பர்மேலோர் ... *

(இ-ள்) பிரமபாவனையைமூடி- நிருகுணஸ்மரணத்தைமறைத்து - பேதங்காட்டுவது-திரிசியத்தைக்காண்பிப்பது-- அஞ்ஞானம் அஞ்ஞானமாம் குரவன்வாக்கியம்- ஆசாரியருபதேசவாக்கியார்த்தத்தை--நம்பாமல் நம்புதல்செய்யாமல்--குழம்பினமனம்-மனக்கலக்கமே சந்தேகமே சந்தேகமாம் திரமறு-நிலையில்லாத--சகமெய்யென்றும்- சகத்தைசத்தியமெனவும் தேகநானென்றும்-சரீரம்யானெனவும் --உள்ளோர் மனத்தின்கண்- விரவியமோகந்தானே-பொருந்தினமயக்கமே --மேலோர் மகான்கள் --விபரீதமென்பர்-விபரீதமென்றுசொல்லுவார்கள்--எ-று. (கூக)

(அ-கை) அத்தடைகளைக்கெடுக்குங் கேட்டன் முதலியவைகளினியல்புகூறல்

தத்துவவனுபோகந்தான்சாதித்தல்கேட்டலென்பா...... ...*
ரொத்துளபொருளுக்காலுசாவல்சிந்தித்தலென்பார்... ...*

## தத்துவவிளக்கப்படலம்.

சித்தமேகாந்தமான்தரிசனந்தெளிதலென்பார் ... ... *
நித்தமிப்படிசெய்தக்காணிர்வாணம்பெறுவாய்நீயே ... ... *

(இ-ள்) தத்துவவனுபோகந்தான - மகாவாக்கியார்த்தமான பிரமோபதேசத்தை—சாதித்தல்-குருமுகமாகப்பெறுதலே—கேட்டலென்பார்- கேட்டலென்றுரைப்பார்கள்—ஒத்துளபொருள்- அதனைக்கியார்த்தத்தை—உசாவல்- விசாரித்தலே—சிந்தித்தலென்பார்- சிந்தித்தலென்று சொல்லுவார்கள்—சித்தம்-மனமானது—ஏகாந்தமானதரிசனம்- தனிமையான சுவானுபூதியைத்தரிசித்தலே—தெளிதலென்பார்-தெளிதலென்றுசொல்லுவாாகள்—நித்தம்-எப்போதும்—இப்படிசெய்தக்கால்- இவ்வண்ணமனுசந்தித்தால்—நிர்வாணம்-முத்தியை—பெறுவாய்நீ- நீயடைவாய்—எ-று.

(இ-ரு-க-ம்) அஞ்ஞானமுதலிய தடைகளைக்கேட்டன் முதலிய வுபாயங்களாற்கெடுககிற் சுபானுபவந்தடையின்றிவிளங்குமென்பதாம் (கஉ)

(அ-கை) அக்கேட்டன்முதலியவைகள் வேண்டுங்காலவளவுகூறல்.

எத்தனைநாண்ஞாதாவுஞானமுமிருக்குமென்னி ... ... *
லத்தனைநாளும்வேண்டுமப்பாலோர்செயலும்வேண்டா...... *
நித்தமுமவெளிபோறபற்றுஞேயமாத்திரமாய்சீவன்... ... *
முத்தரானவர்விதேகமுத்திபெற்றிருப்பரென்றும்...... ... *

(இ-ள்) எத்தனைநாள்-எவ்வளவுகாலம—ஞாதாவும் - காண்பானும்—ஞானமும் - காட்சியும—இருக்குமென்னில் - இருக்குமாகில்—அத்தனைநாளும்-அவ்வளவுகாலமும்—வேண்டும - இக்கேட்டன்முதலியமூன்றும் வேண்டும்—அப்பால்-அதற்குமேல்—ஓர்செயலும்வேண்டாம் - ஓரனுஷ்டானமும்வேண்டுவதில்லை—நித்தமும்- எப்போதும்—வெளிபோல்-நான்குபூதத்திலுந்தாக்கற்றிருக்கின்ற வாகாயத்தைப்போல—பற்று- திரிசியங்களிறபற்றுது நிற்கும்—ஞேயமாத்திரமாய் - ஆத்மஸ்வரூபமாய்—சீவன்முத்தரானவர்-சீவன்முத்தியையடைநதவர்கள்—என்றும-எப்பொழுதும்—விதேகமுத்தி-விதேககைவல்யத்தை—பெற்றிருப்பர்- அடைந்திருப்பார்கள்—எ-று.

(இ-ம்) காண்பானுங்காக்ஷியுநீங்கி ஸ்வரூபந்தாகுகிற பரியந்தங்கேட்டன் முதலியவைகளைப்பழகல் வேண்டுமென்பதாம். (கங)

(அ-கை) அச்சீவன்முத்தர்களதொகையு நாமமுஞ்சொல்லி யவர்களியல்புகூறத்தொடங்கல்.

ஞானிகார்சீவன்முத்தர்நால்வகையாவர்கேளாய் ... ... *
வானிகர்பிரமவித்துவரன்வரியான்வரிட்ட ... ... *
னவர்நாமமீதாமவர்களிற்பிரமவித்தின் ... ... ... *
மணமமற்றையமவர்தாரதம்மியமுஞ்சொல்வேன் ... ... *

(இ-ள்) ஞானமார்சீவன்முத்தர்- ஞானநிறைந்த சீவன்முத்தர்கள்—நால்வகையாவர்- நான்குவிதமாவார்கள்—கேளாய்-அதனைக்கேட்பாய்—வாணிகர்பிரமவித்து - ஆகாயத்துக்கொம்பான பிரமவித்தெனவும்— வரன்-பிரமவிரனெனவும்—வரியான்-பிரமவரியானெனவும்-- வரிட்டன்-பிரமவரிட்டனெனவும்—ஆனவர்நாமமீதாம- ஆனவர்களுடையபெயரிவையாம்-அவர்களில்-அவர்களுக்குள்--பிரமவித்தின்றனரும்- பிரமவித்தினிலையும் மற்றைமூவர்-ஏனையமூவருடைய—தாரதமமியமுஞ்சொல்வேன்- தாரதம்மியத்தையுஞ் சொல்வேன்—எ-று.

(இ-ம) வெளிப்படை. (௬௪)

(அ-கை) சீவன்முத்தர்களிற் பிரமவித்தினியல்புகூறல்.

தீரராய்ப்பிரமவித்தாய்த்தெளிந்தவா தெளியுமுன்னம் ... ...*
வாரமாயிருந்ததங்கள்வருணமாச்சிரமஞ்சொன்ன ... ... *
பாரகாரியமானாலும்பலர்க்குபகாரமாக ... ... ... *
நேரதாச்செய்வார்தீர்ந்தநிலைவிடாச்சீவன்முத்தர் ... ... *

(இ-ள்) தீரராய்- தீரமுள்ளவர்களாய்—பிரமவித்தாய்-பிரமவித்தாய்—தெளிந்தவர்-தெளிவுற்றவர்கள்—தெளியுமுன்னம்- இங்ஙனந்தெளிவதற்குமுன்பு—வாரமாயிருந்த-உரிமையாயிருந்த—தங்கள்- தங்களுடைய—வருணமாச்சிரமம்-வருணாச்சிரமங்களைக்குறித்து--சொன்ன- கன்மநூலாற்சொல்லப்பட்டவைகள்—பாரகாரியமானாலும் - வருத்தமான கருமங்களாயினும்--பலர்க்குபகாரமாக-யாவர்க்குமனுகூலமாக— தீர்ந்தநிலைவிடா முடிவானநிச்சயத்தை விட்டுநீங்காத—சீவன்முத்தர்- பிரமவித்தானவர்கள்—நேரதாச்செய்வார்-கிரமமாகவவற்றைச்செய்வார்கள்—எ-று.

(இ-ம்) பிரமவித்து லோகோபகார நிமித்தஞ் சற்கருமமனுஷ்டிப்பானென்பதாம். (௬௫)

(அ-கை) (இ-து)

காமமாதிகள்வந்தாலுங்கணத்திற்போமனத்திற்பற்றார் ... *
தாமரையிலைத்தண்ணீர்போற்சகத்தொடுங்கூடிவாழ்வார் ... *
பாமரரெனக்காண்பிப்பார்பண்டிதத்திறமைகாட்டா ... *
ரூமருமாவாருள்ளத்துவகையாஞ்சீவன்முத்தர் ... ... ...*

(இ-ள்) காமமாதிகள்வந்தாலும்-காமமுதலியவைகளொருபோதுநேரிட்டாலும்--கணத்திற்போம்-அநிச்சாபிராரத்வமாகக்கணத்தினீங்கும்--மனத்திற்பற்றார்-மனதில்வையார்கள்—தாமரையிலைத்தண்ணீர்போல-கமலபத்திரோதகம்போல—சகத்தோடுங்கூடிவாழ்வார்-உலகத்தாருடன் சேர்ந்துவாழ்வார்கள்—பாமரரென - அஞ்ஞானிகளைப்போல—காண்பிப்பார்-காட்டுவார்கள்—பண்டிதத்திறமைகாட்டார்-வித்துவத்திறத்தைக் காண்பியார்கள்—உள்ளத்து-அகத்தின்கண்—உவகையாம் - நித்தியானந்தத்தையுடைய—சீவன்முத்தர்-பிரமவித்தானவர்கள்—ஊமருமாவார் - மௌன

மாயிருப்பார்கள்—எ-று. காமமாதிகள் வந்தாலுமெனறவும்மை-அவைக ள்வாராவென்பதை யுணர்த்தியதாம்.

(ப-ம்) பிராரத்வமனுபவித்துத் தீருமபடியான இச்சையாதிக ளொரு போதேகதேசமாக வுதிக்கினும்- அவைகளாத்மசுகத்தை - விளக்குதற்கு வெஞ்சகமா நின்றுவிளக்கித்தானுடனே நசித்தலின்-காமமாதிகள் வந்தா லுங்கணத்திற்போமெனவும்- மனம்பூரணானந்தமாகத்தெளிந்திருத்தலின் மனத்திறப்பற்றொனவும் உலகருடன்மனமொவ்வாமல் வாகருங்காயமு மொத்திருத்தலை- தாமரையிலைத்தண்ணீர்போற் சகத்தோடுங் கூடி வாழ் வாரெனவும்- எவரெவரெங்ன மெய்ங்ஙனம் வஸ்து நிச்சயங்கூறினுமந் நி சசயங்களனைத்துந்தனது சுவானுபவத்திற் கொத்தலி னவைகளைமறுக்கத் தெரிவின்றியபேதையர்கள்போலககாட்டுதலை- பாமரரெனக்காண்பிப்பா ரெனவும்- அங்ஙனநிச்சயித்த நிசசயங்களனைத்துந்தனதனுபவவியாபகத் திற் கங்கமாகத்தானவைகளினங்கியாக விளங்குமனுபவத்தை யமிவியாதி ருத்தலை-பண்டிதந்திறமை காட்டாரெனவும்- துரியாதீதமான மகாமௌ னமாயிருத்தலை-ஊமருமாவாரெனவும- மனஞ்சென்ற விடமெல்லாஞ் சி தானந்தமாகவிளங்குதலை-உள்ளத்துவகையுமெனவுங்கூறினர்.

(இ-ம்) பிரமவித்தினனுபவவிலாசத்தைக்கூறினதாம். (சகசு)

(அ-கை) (இ-து)

பேதகன்மத்தால்வந்தபிராரத்வநாநாவாகு... ... ... ...*
மாதலால்விபகாரங்களவரவர்க்கானவாகு ... ... *
மாதவஞ்செயினுஞ்செய்வர்வாணிபஞ்செயினுஞ்செய்வர்...*
பூதலம்புரப்பரையம்புகுந்துண்பர்சீவன்முத்தர் ... ... *

(இ-ள்) பேதகன்மத்தால்வந்த-அறியின்மையானசஞ்சித கன்மத்தாலு ண்டான—பிராரத்வம்-பிராரத்வகன்மம்—நாநாவாகும-பலவிதமாம்—ஆ தலால்-ஆதலினால்—விபகாரங்கள்-விருத்திகள்—அவரவர்க்கான வாகும்- அவரவாகளுக்குநியமித்தவையாம—சீவன்முத்தர்-பிரமவித்தானவர்கள்- மாதவஞ்செயினுஞ்செய்வா மகாதவத்தைச்செய்தாலுஞ்செய்வார்கள்— வாணிபஞ்செயினுஞ்செய்வர்-வியாபாரஞ் செய்தாலுஞ் செய்வார்கள்— பூதலம்புரப்பர்- பூமிபாலனஞ்செய்தாலுஞ்செய்வார்கள்— ஐயம்புகுந்து ண்பர்-பிச்சைக்ஷவங்கிபுசித்தாலும புசிப்பார்கள்—எ-று.

(இ-ம்) பிரமவித்தெத்தொழிலைச்செய்யினும் அவைகள் பிராரத்தகன் மமேயன்றியவாகவில்லையென்பதாம். (சகஎ)

(அ-கை) (இது.)

சென்றதுகருதார்நாளைச்சேர்வதுநினையார்கண்முன் ... ...*
னின்றதுபுசிப்பார்வெய்யினிலவாய்விண்விழுதுவீழ்ந்தும்...*
பொன்றினசவமவாழ்ந்தாலும்பூதுமையாயொன்றும்பாரார் *
நன்றுதீதென்னார்சாக்ஷீநவொனசீவன்முத்தர்... ... ...*

(இ-ள்) சென்றதுகருதார் - முன்னிங்கினவைகளைநினைத்துவாடார்கள்- நாளைச்சேர்வதுநினையார்-எதிர்காலத்துவரும்பொருளை நினைத்துமகிழார்கள்—கண்முன்னின்றதுபுசிப்பர்-நிகழ்காலத்துள்ள பொருளைப்பிராரத்வமென்றனுபவிப்பார்கள்—வெய்யில்-உஷ்ணகிரணமானது— நிலவாய்-அமிர்தகிரணமாய்—விண்விழுதுவீழ்ந்தும்-ஆகாயத்தினின்றும் விழுதாகவிறங்கினாலும்—பொன்றின-மரித்த—சவம்வாழ்ந்தாலும்- பிரேதஞ்சீவித்தாலும்—புதுமையாய்-அதிசயமாக—ஒன்றும்பாரார்- ஒன்றையுங்காணார்கள்—நன்றுதீதென்னார் - இதுநன்றென்றுந்தீதென்றுஞ்சொல்லார்கள்— சாக்ஷி- சாக்ஷியாய்—நடுவான-மத்தியகதமாய்விளங்கிய— சீவன்முத்தர் பிரமவித்துக்கள்—எ-று.

(ப-ம்) முன்புள்ளவறிவின்மையும்- பின்புள்ளதிரிசிய வுணர்வையுங்காணாது-நடுநிலையாகிய பரவுணர்விற் சுகித்திருத்தலின்- சென்றது கருதார் நாளைச்சேர்வது நினையார்கண்முன் னின்றதுபுசிப்பாரெனவும் சகலவிசித்திரமுந்தனது லீலையாகக்கருதி- அவைகளில்வியப்புறா திருத்தலின் வெய்யினிலவாய் விண்விழுதுவீழ்ந்தும் பொன்றினசவம்வாழ்ந்தாலும்புதுமையாயொன்றும் பாராரெனவும்- சர்வமுந்தனது சித்துருவமாக விளங்குதலின்- நன்றுதீதென்னாரெனவும்- மத்தியகதசர்வசாக்ஷியானதானத்துவிதமாகவிளங்குதலின்- சாக்ஷிநடுவானசீவன் முத்தரெனவுங்கூறினார்.

(இ-ம்) பிரமவித்துமனமடங்கியனுபவமாய் நிற்றலின்ஒன்றைக்கருதுதலும வியப்புறுதலுமிலவென்பதாம் இந்நான்குசெய்யுளின் முந்தினபிரமவித்தினியல்பைக் கூறினதெனக்கொள்க. (சுஎ)

(அ-கை) மற்றைமூவரியல்புகூறல்,

பின்னைமூவரிலிரண்டுபேர்களுஞ்சமாதியோகந் ... ...*
தன்னையுற்றிருப்பாதேகசஞ்சாரநிமித்தந்தானு ... *
முன்னுவோன்வரன்வேறொருவராலுணர்பவன்வரியானுரு ...*
மன்னியர்தம்மாற்றன்னாலறியாதோன்வரிட்டனாமே... *

(இ-ள்) பின்னைமூவரில்- மற்றமூன்றுபேர்களில்—இரண்டுபேர்களும்- பிரமவரன் பிரமவரியானென்னுமிரண்டு சீவன்முத்தர்களும்— சமாதியோகந்தன்னை-சமாதிஞானத்தை—உற்றிருப்பார்-அடைந்திருப்பார்கள்- தேகசஞ்சாரநிமித்தந்தானும் - தேகஞ்சஞ்சரிக்கும்பொருட்டு — உன்னுவோன்-உணவுமுதலியவற்றைநினைப்பவன்—வரன்-பிரமவரனும்—வேற்றோரால்-மற்றொருவரால்—உணர்பவன்- முன்சொல்லியவைகளைக் கொள்ளவறிபவன்—வரியானும்-பிரமவரியானும்—அன்னியர்தம்மால்-பிறராலும்—தன்னால்-தம்மாலும்—அறியாதோன்- முன்சொல்லியவைகளைக்கொள்ளவறியாதவன்—வரிட்டனும்-பிரமவரிட்டனும்—எ-று.

பிரமவரிட்டன்சமாதியில தீதமானவனெனக்கொள்க.

(இ-ம்) பின்னுள்ளபிரமவரன் பிரமவரியான் பிரமவரிட்டனிவர்களியல்பைக்கூறினதாம். (சுஅ)

(அ-கை) இந்நால்வர்பயன்களைக்கூறல.

அரிதாகுமிவர்களிவ்வாறநேகராலுமுத்தி... ... *
சரியாகும்பாடுபெட்டசமாதிகளுக்குப்பலனேதென்றாற் ...*
பெரிதானதிட்டதுக்கம்பிரமவித்தனுபவிப்பன் ... *
வரியானுமவரனுமற்றைவரிட்டனுஞ்சுகமாய்வாழ்வார் ...*

(இ-ள்) அரிதாகும்-திரிலோகதுல்லபமாகும்—இவர்கள்- இச்சீவன்மு த்தர்கள்—இவ்வாறு-இவ்வண்ணம—அநேகராலும்-அநந்தராலும்—முத்திசரியாகும்-வீடொருதன்மைத்தாம்--பாடுபட்ட - வருத்தமுற்றுச் செய்த—சமாதிக்கு-நிஷ்டைக்கு--பலனேதென்றால்-பிரயோசனமியாதெனில்—பெரிதான-மகத்தான—வரியானும்- பிரமவரியானும்—வரனும் பிரமவரனும்—வரிட்டனும்-பிரமவரிட்டனும்—சுகமாய்வாழ்வார்-நிரதிசயானந்தமாகவாழ்வார்கள்—மற்றை-ஏனைய—பிரமவித்து- அசசமாதியிற் பாடுபடாத பிரமவிததானவன்—திட்டதுக்கம்- நேரிடுந்துன்பங்களை—அனுபவிப்பவன்-அனுபவிப்பான்—எ-று.

[இ-ம்] இசசீவன் முத்தர்கள் பிராரத்வததினால வருஞ்சுகதுககானுபவத்தின முரதம்மியராயினும் பிரமானந்தகைவல்யப் பேறறிலஃதிலரென்பதாம். (௰)

(அ-கை) முத்தன்பெத்தனியல்புகூறல்.

பிரமஞானிகளுங்கன்மப்பேதையர்போலேவாழ்ந்தாற் .*
றிரமுறுமஞ்ஞானம்போய்சசெனியாதவழியேதென்னிற் *
பரவுமாகாயமொன்றிற்பற்றுதுமற்றைநாலும் ... ...*
விரவினதோடுகூடும்விதமிருவோருமாவார்... ... *

(இ-ள்) பிரமஞானிகளும்-ஸ்வரூபஞானிகளும்--கன்மப்பேதையர்போல்-காமிகளானவஞ்ஞானிகளைப்போல—வாழ்நதால்-சீவித்திருந்தால்—திரமுறுமஞ்ஞானம்போய் நிலையாநதோறறிய வறியாமைநசித்து—செனியாத-இனிபபிறவாத—வழியேதெனனில- மார்க்கமியாதென்றால—பரவுமாகாசம-வியாபிதநிருக்குங்ககனமானது-ஒன்றிற்பற்றுது- ஒன்றிலுந்தோயாதுநிற்க—மற்றைநாலும்- மற்றைநான்குபூதங்களும்—விரவினதோடுங்கூடும்-ஒன்றுடனொன்றுகலக்கும்--விதம்-இவ்விதமாக—இருவோரும்-ஞானியஞ்ஞானிகளிருவரும்—ஆவார்-ஆகுவார்—எ-று.

(இ-ம்) ஞானியஞ்ஞானிகளின் கிரியையொன்றாயினுங் கருத்துவேறென்பதாம். (௰௧)

(அ-கை) சீவன்முத்தர்களின்றரிசனமகிமை சொல்லியவர்கள் விதேகமுத்தரா[illegible]சொல்லத்தொடங்கல்.

சீவன்முத்தனைச்சேவித்தோர்சிவனயனெடுமாலான ...*
மூவருமகிழநோன்புமுழுவதுஞ்செய்துசந்ம... ... *
பாவனமானொன்றுபலமனைமுழங்குமிப்பான்... ...*
மேவருஞ்சீவன்முத்தர்விதேகமுத்தியுநீகேளாய் ... *

(இ-ள்) சீவன்முத்தரை-சீவன்முத்தர்களை—சேவித்தோர்-தரிசித்தவர்கள்—சிவன்-அரனும்—அயன்-பிரமனும்—நெடுமால்- திருமாலும்—ஆன ஆகிய--மூவருமகிழ-மும்மூர்த்திகளும்மகிழ்வுகூற--நோன்புமுழுவதுஞ்செய்து-தவங்களைத்துமுடித்து—சம்பாவனமாருமென்று- பவம்பரிசுத்தமானர்களென்ற--பலமறைமுழங்கும்- அநந்தவேதங்கண்முறையிடும்—இப்பால்-இனி—மேவருஞ்சீவன்முத்தர் - அறிதற்கரியசீவன்முத்தர்களையும்—விதேகமுத்தியும்- விதேகமுத்திப்பதத்தையும—நீகேளாய்- நீகேட்பாய்—எ-று. (௭௨)

சம்பாவனமாருமென்பது-ஞான்தனுவாயினதெனக்கொள்க

(அ-கை) கன்மத்திரயவொழிபுகூறல்.

பஞ்சினையூழித்தீப்போற்பலசன்மவிவிதவித்தாஞ்... ...*
சஞ்சிதமெல்லாஞானத்தழல்சுட்டுவெண்ணீறாக்குங் *
கிஞ்சிலாகாமியந்தான்கிட்டாமல்விட்டுப்போகும... ...*
விஞ்சினபிராரத்வத்தின்வினையனுபவித்துத்தீரும் ...*

(இ-ள்)பஞ்சினை-பஞ்சை--ஊழித்தீப்போல்-வடவாநலமெரிப்பதுபோல—பலசன்ம - அநந்தபவங்களுண்டாதற்கு—விவிதவித்தாம்- பலவிதவிதைகளான—சஞ்சிதமெல்லாம்- சஞ்சிதகன்மங்களனைத்தையும்—ஞானத்தழல்-ஞானக்கினியானது—சுட்டுவெண்ணீறாக்கும்-எரித்துவெண்மையாகிய சாம்பலாக்கும்—கிஞ்சில்-அற்பமும்—ஆகாமியந்தான்-ஆகாமியகன்மமானது—கிட்டாமல்விட்டுப்போகும் - நெருங்காமனீங்கும்—விஞ்சின-சேடித்த—பிராரத்வத்தின்வினை- பிராரத்வகன்மமானது—அனுபவித்துத்தீரும் - மூன்றுவிதமாகவனுபவித்துநீங்கும்—எ-று-மூவிதமான இச்சையனிச்சை பரவிச்சையென்பனவாம். (௭௩)

(அ-கை) இருவினைநீங்குமேதுகூறல்.

பொறுமையாற்பிராரத்வத்தைப்புசிக்குநாட்செய்தகன்ம ...*
மறுமையிற்றொடர்ந்திடாமன்மாண்டுபோம்வழியேதென்னி
சிறியவரிகழ்ந்துஞானிசெய்தபாவத்தைக்கொள்வ... ...*
ரறிபவரறிந்துபூசித்தறமெல்லாம்பறித்துண்பாரே ... *

(இ-ள்) பொறுமையால்-சாந்தத்தினால்—பிராரத்வத்தை-பிராரத்வகன்மத்தை—புசிக்குநாள்-அனுபவிக்குங்காலத்தில்—செய்தகன்மம்- செய்யுங்கருமங்கள்—மறுமையில்-மேறபிறவியைக்கொடுப்பதற்கு- தொடர்ந்திடாமல்-தொடர்ந்துவாராமல்—மாண்டுபோம் - நசிக்கும்—வழியேதென்னில்- மார்க்கமியாதென்றால்—சிறியவரிகழ்ந்து- மூடர்கணிந்தித்து—ஞானிசெய்த-ஞானவான்செய்யும்—பாவத்தைக்கொள்வர்- பாவகன்மத்தைப்பெற்றுக்கொள்ளுவார்கள்—அறிபவர்-விவேகிகள்—அறிந்து-சிவஸ்வரூபமென்றறிந்து—பூசித்து-ஆராதித்து—அறமெலாம்- அவர்கள்செய்யுந்த

ருமங்களனைத்தையும்—புசித்துண்பார்-அவர்ந்தனுபவிப்பார்கள்—எ-று.

(அ-கை) சரீரத்திரயவொழிபுகூறல்.

அரியமெய்ஞ்ஞானத்தீயாலவித்தையாமுடனீருமே ... *
பெரியதூலமுங்காலத்தாற்பிணமாகிவிழுமந்நே ... *
ருரியசூக்குமசரீரமுலையிரும்புண்டநீர்போற் ... *
றுரியமாய்விபுவாய் நின்றசொரூபத்திலிறந்துபோமே *

(இ-ள்) அரியமெய்ஞ்ஞானத்தீயால-அறிதற்கரியஞானாக்கினியினால்—அவித்தையாமுடனீருமே-காரணசரீரநசிக்கும்—பெரியதூலமும்-பருத்த தூலசரீரமும்—காலத்தாற்பிணமாகிவிழும்-காலநியமப்படிபிரேதமாம்—அந்நேரம்-அப்போது—உரியசூக்குமசரீரம்-சாதனைத்துக்குரித்தானசூக்குமதேகமானது—உலையிரும்பு-கொல்லனுலையிலகாய்ந்தவயமானது—உண்டநீர்போல்-கிரகித்தசலத்தைப்போல—துரியமாய்-துரியமாகவும்—விபுவாய்நின்ற-வியாபகமாகவுமிருந்த—சொரூபத்திலிறந்துபோம்-பிரமஸ்வரூபத்திலசிக்கும—எ-று.

[இ-ச-கம்] சஞ்சிதவினையுங்காரணசரீரமும்பரஞானத்தினாற்கெடுதலுமாகாமியவினையுஞ் சூக்குமதேகமு மஞ்ஞானத்தி லயமாகுதலும் பிராரத்வகன்மமுந் தூலதேகமு நியமித்தகாலவளவிலொழிகுதலுமாமென்பதாம

(அ-கை) விதேகமுத்தியினியல்புகூறல்.

கடமெனுமுபாதிபோனாற்ககனமொன்றானாற்போல ... *
வுடலெனுமுபாதிபோனவுத்தரஞ்சீவன்முத்த ... *
ரடிமுடிநடுவுமின்றியகம்புறமின்றிநின்ற ... ... *
படிநிகழ்விதேகமுத்திபதமடைந்திருப்பரொன்றும் ... *

(இ-ள்) கடமெனும-குடமென்கிற—உபாதிபோனால்-உபாதிநீங்கினால் ககனமொன்றானாற்போல-கடாகாயமுதலிய நான்குமேகமானதுபோல—உடலெனும்-மூன்றுதேகமென்கிற—உபாதிபோனவுத்தரம்-உபாதிநீங்கினக்ஷணம்—சீவன்முத்தர்-சீவன்முத்தரானவர்—அடிமுடிநடுவுமின்றி-ஆதிமத்தியாந்தரகிதமாய்—அகம்புறமின்றி-உட்புறமின்றி—என்றுநின்றபடிநிகழ-எப்போதுமிருந்தவண்ணம் விளங்குகின்ற—விதேகமுத்திப்பதம் விதேகமுத்திப்பதத்தை—அடைந்திருப்பார்-பெற்றிருப்பார்—எ-று. ௱௧

(அ-கை) இவ்வனுபவமெய்ஞ்ஞானமும் விளங்குவதெனல்.

சொல்லியமகனேயெங்குஞ்சூழ்வெளியிருக்கமண்ணைக் ... *
கல்லியபின்புதோன்றுங்கிணறதினாகாயம்போல ... *
வொல்லையாம்பிரமநூலாலுற்றதுபோலேதோன்று ... *
மெல்லையினுமெப்போதுமேகமென்றிருந்திடாயே ... *

(இ-ள்) சொல்லியமகனே-மனனனுபவஞ்செய்யனபுத்திரா—எங்கும

வவட்டத்தும்—சூழ்தெளியிருக்க- சூழ்ந்தவாகாயமருக்க—மண்ணை-பூமி யை—கல்லியபின்பு- அகழ்ந்தபின்பூ—தோன்றும் - உண்டானதுபோலத் தோற்றுகின்ற—கிணற்றிறுகாயம்போல-கூபாகாசம்போல—ஒல்லையாம் பிரமம்-அநாதியாய்விளங்குகின்ற பிரமஸ்வரூபமானது—நூலால்- ஆத்ம ஞானசாஸ்திரங்களால்—உற்றதுபோலேதோன்றும் - உதித்ததுபோலத் தோன்றும்—எல்லையில்- பிரமாணாதீதமான—நாம்-சுத்தசைதன்யஸ்வரூ யமானயாம்—எப்போதும்-எககாலமுமம—ஏகமென்றிருந்திடாய்- ஒன்றே யென்றிருப்பாய்—எ-று.

[இ-உ-க-ம்] இப்போதுதித்ததுபோலத் தோற்றியவனுபவஞ் சிருட்டிக்குமுன்னும் பின்னுநடுவுமான வெப்போதுமிருந்து நித்தியதிருத்தியாக விளங்கியசச்சிதானந்தமே யன்றிஇபபோது துதித்தன்றென்பதாம். (௭௭)

(அ-கை) சத்தசத்தினுண்மையைத் தெரிவித்தல.

கானனீர்கிளிஞ்சில்வெள்ளிகந்தர்ப்பநகர்கநாவூர் ... ... *
வானமைகயிற்றிற்பாம்புமலடிசேய்முயலின்கோடு... *
பீனமாந்தறிபுமானிப்பிரபஞ்சமெல்லாம்பொய்யே... ... *
ஞானமெய்மகனேயுன்னைநம்மாணைமறந்திடாதே... ... ...*

(இ-ள்) கானனீர்-கானற்சலம்போலவும்—கிளிஞ்சில்வெள்ளி- சுத்திகாரசிதம்போலவும்—கந்தர்ப்பநகர்- கந்தர்வநகரம்போலவும்—கநாவூர்-சொற்பனநகரமபோலவும்—வானமை-ஆகாயநீலம்போலவும்—கயிற்றிற்பாம்பு-ரச்சுசர்ப்பமபோலவும்—மலடிசேய்- வந்தியாபுத்திரன்போலவும்- முயலின்கோடு-சகவிஷாணம்போலவும்—பீனமாந்தறிபுமான்-பருத்ததாணு சோரனைப்போலவும்— இபபிரபஞ்சமெல்லாம்-பிரமத்திற்றோன்றுகின்ற விச்சகத்தனைத்தும்—பொய்யே-மித்தையேயாம்—ஞானமெய்-சுத்தசைதன்யமொன்றுமேயுண்மையாம்—மகனேமாணாக்கனே—உனனை-இங்ஙனம் விளங்கியவுனதுஸ்வரூபசைதன்யத்தைநம்மாணை-நமதாணைப்படிக்கு—மறந்திடாதே- மறவாமலதுவாய்விளங்குவாம்—எ று.

[இ-ம்] எப்போதுஞ்சத்தான சுகபோதமிருக்கின்றதேயன்றி யசத்தானதிரிசியங்களிலவென்பதாம். (௭௮)

தத்துவவிளக்கப்படலம்.

முற்றியது.

உ

சிவமயம்.

இரண்டாவது

# சந்தேகந்தெளிதற்படலம்

(அ-கை) முற்படலத்திற் றத்துவமானவானந்தபிரஞையை நிஷ்டாபிரஞையால்விளக்கியினிச் சொரூபபிரஞையினுன் முற்கற்பனையாகத்தோற்றிய சீவேஸ்வரசகஞ் சிற்சுகாகாரமாகவிளங்குவதை விளக்கும்பொருட்டுச் சந்தேகந்தெளிதலைக்கூறுகின்றார்.

நரர்குழிபறித்துமெள்ளநாட்டியநெடியகம்ப... ...
முரமுறக்குத்திக்குத்தியுரப்பிக்குமுபாயம்போலப்
பரமமாஞ்சொரூபந்தன்னிற்பற்றியமனோவிருத்தி ...
திரநிலைபெறச்சந்தேகந்தெளிதலைமொழிகின்றேனே...

(இ-ள்) நரர்-மானிடர்கள்—குழிபறித்து-பள்ளங்கல்லி—மெள்ளநாட்டிய-மெள்ளவெடுத்துநட்ட—நெடியகம்பம்-நீண்டஸ்தம்பமானது-உரமுற- அசைவின்றித்திரமாகநிற்கும்பொருட்டு—குத்திக்குத்திகுத்திக்குத்தி உரப்பிக்கும்-பலப்படுத்துகின்ற—உபாயம்போல-யுத்தியைப்போல—பரமமாஞ்சொரூபந்தன்னில் - பிரமஸ்வரூபத்தில—பற்றியமனோவிருத்தி-பொருந்தியசித்தவிருத்தியானது— திரநிலைபெற - திரநிலையையடையும்பொருட்டு—சந்தேகந்தெளிதலை-சந்தேகந்தெளிதலை—மொழிகின்றேன் சொலகின்றேன்—எ-று. இத்திட்டாந்தந்தூணுகநந்நியாயமெனக்கொள்க,

[ப-ம்] தானல்லாதவிஷைநீங்களை நீக்கித்தானுகிய பிரமத்திற்கலந்தமனம் அப்பிரமவியாபகமான பூரணவிருத்தியிற் சஞ்சரிக்குமிடத்திற் சர்வம்பிரமமயமென்னுஞ் சாட்சாத்காரானுபவந்தடையின்றிவிளங்குவகுத விவகரித்தும் விவகரியாதநிலையாதலின் அதற்குத்தடையா யுள்ளவைகளைக் களைதல்வேண்டுமென்பார்- சொரூபந்தன்னிற்பற்றிய மனோவிருத்தி திரநிலைபெறச் சந்தேகந்தெளிதலென்றார் [இ-ம்] சித்தனிடத்துதயமாய்ப்பகிர்முகமின்றியச் சித்திற்கனாந்தமனமானது சென்றவிடமெல்லாஞ் சிதானந்தமாகரமிக்கும்பொருட்டுச் சந்தேகந்தெளிதலைக் கூறத்தொடங்கினதாம். (க)

(அ-கை) குருகுலவாசஞ்செய்யுந்தன்மையைக்கூறல்.

நற்கருத்துடையோனுகிஞானவானுகினின்றேன் ...
மர்க்கடநியாயம்போலமகாபூதவிகாரந்தொட்டு ...
நிர்க்குணவிதேகமுத்திநிலையாரியுந்தஞ்சொன்ன ... ...
சற்குருவினைவிடாமற்சந்ததமனுசரித்தான் ...

(இ-ள்) நற்கருத்துடையோனாகி- பேரானந்தமான சிந்தையையுடையவனாய்—ஞானவானாகி - சைதன்யஸ்வரூபியாகி—நின்றோன-இருந்தசீடனானவன்—மர்க்கடநியாயம்போல-மர்க்கடநியாயத்தைப்போல—மகாபூதவிகாரந்தொட்டு-பஞ்சபூதகாரியமான தூலதேகமுதல்—நிர்க்குண-திரிகுணரகிதமான—விதேகமுத்தி நிலைபரியந்தம்-விதேககைவல்யமட்டும்—சொன்னசற்குருவினைவிடாமல்-அருளிய வாசாரியனைவிட்டுநீங்காமல—சந்ததமனுசரித்தான்-சதாகாலமுந்தொடர்ந்துநின்றான்—எ-று.

(இ-ம்)வெளிப்படை. (உ)

(அ-கை) ஆசிரியர்சீடனை யனுபவம்வினாதல்.

சந்ததம்புருடன்றன்னைச்சாயைபோல்விடாமலன்பா *
மைந்தனைநோக்கிசாட்சிமாத்திரமாய்நின்றாயோ ...*
சிந்தையிலையமெல்லாந்தீர்ந்தவோதெளிவினுள்ளே... *
யந்தரங்கலந்ததுண்டோவனுபவமுரைசெய்வாயே ...*

(இ-ள்) சந்ததம்-எப்போதும்—புருடன்றன்னை-ஓர்புருடனை—சாயைபோல்-விட்டுநீங்காதசாயையைப்போல—விடாமல்-ஆசாரியனைவிட்டுநீங்காமல—அன்பாமைந்தனை-அன்புருவமாய்நிற்கின்றசீடனை—நோக்கி- அருட்கண்சாத்தி—சாட்சிமாத்திரமாய்நின்றாயோ- பிரத்யேகாத்மஸ்வரூபமாகநிற்கின்றாயா—சிந்தையில்-மனதின்கணுள்ள—ஐயமெல்லாம்-சமுசயங்களனைத்தும்—தீர்ந்தவோ-நீங்கினவோ—தெளிவினுள்ளே - தெளிவினகண்—அந்தரம்-சீவேஸ்வரசகத்பேதம்—கலந்ததுண்டோ-சேர்ந்ததுமுளதோ—அனுபவமுரைசெய்வாய்-உனதனுபவத்தைசசொல்வாய்—எ-று.

(இ-ம்) பேதமின்றித்தெளிவாகச் சுவானுபவமாய்- விளங்குகின்றாயாவென மூவகையாகவினாவினதாம் (௩)

(அ-கை) முன்வினாமூன்றற்கும்விடைகூறல்

எனவுரைத்தருளுமாசானிருபதம்வணங்கியெந்தாய ...*
சனனவன்காட்டின்மோகத்தமத்தெழுபேதப்பேய்க்... *
ளுனதருளுதயவெற்பிலுபதேசவருக்கன்றோன்றி ...*
மனவிழிதெரியஞானவான்கதிர்பரந்தாலுண்டோ... *

(இ-ள்) எனவுரைத்தருளும்- என்றுகேட்டருளிய—ஆசானிருபதம்வணங்கி-தேசிகருபயபாதங்களைப்பணிந்து—எந்தாய் என்னுடையபிதாவே—சனனவன்காட்டின்-வலிமையானபவாரண்யத்திலிருக்கும்மோகத்தமத்து-மோகாந்தகாரத்தில்—எழும்-தோன்றுகின்ற—பேதப்பேய்கள்-பேதங்களென்னும்பிசாசங்கள்—உனதருளுதயவெற்பில் - தேவரீரதுகருணையென்னுமுதயகிரியில—உபதேசவருக்கன்றோன்றி- பிரமோபதேசமென்னுஞ்சூரியனுதித்து—மனவிழிதெரிய-அகக்கண்விளங்க—ஞானவான்கதிர்-மேலானசிற்பிரகாசமானது—பரந்தால்-வியாபித்தால—உண்டோ- இருக்குமோ—எ-று.

(-பம்) காட்சிமாத்திரமாய்விளங்குகின்றதென்பார்- உபதேசவருக்கன் றோன்றியெனவும்- சிந்தையிலேயமெல்லாந்தீர்ந்ததென்பார்-மனவிழிதெ ரியவெனவும்- அந்தரமானபேதமுதிக்கவில்லை யென்பார்ஞானவான் கதி ர்பரந்தாலுண்டோவெனவுங்கூறினர் (இ - ம்) தனதனுபவத்திற் சந்தேக விபரீதமின்றென்பதையறிவித்ததாம். (ச)

(அ-கை) சமாதியிற்றடையின்றாயினுஞ் சகசத்திலவையின்றி நிற்றதற் கு வினவவேண்டுவதுண்டெனல.

மந்திரமூர்த்திதன்னுன்மாற்றியபேய்போனலு... ...*
மெந்திரமெழுதிக்கட்டியினிவராவகைசெய்வார்போன் *
முந்தியுன்னுபதேசத்தான்மோகம்போனலுமையா ...*
புந்திநின்றுனைக்கவின்னம்புகலும்விண்ணப்பமுண்டே *

(இ-ள்) மந்திரமூர்த்திதன்னல் - மாந்திரிகனல்—மாற்றியபேய்-நீக்கிய பிசாசமானது—போனலும்-நீங்கினலும்—எந்திரமெழுதிக்கட்டி- எந்தி ரஸ்தாபனஞ்செய்து—இனிவராவகை-மேல்வராத்வண்ணம்—செய்வார் போல்-செய்பவர்களைப்போல—முந்தி-முன்னமே—உன்னுபதேசத்தால் தேவரீரனுக்கிரகத்தினல்—மோகம்போனலும்-மயக்கநீங்கினலும்—ஐய எனதாசிரியரே—புந்திநின்றுனைக்க- அறிவினிலேபெறும்பொருட்டு—இன் னம்-மேலும்—புகலும்விண்ணப்பமுண்டு- அடியேன்கேட்கும்விண்ணப் பமுளது—எ-று.

(இ-ம்) சகசத்துக்குத்தடையாயுள்ள சந்தேகங்களை நீக்கும்பொருட்டு வினவத்தொடங்கினதாம். (ரு)

(அ-கை) சீடன்றனக்கனுபவமான பிரமவஸ்துமனே வாக்குக்கோசர மாகோசரமாவென வறியுநிமித்த மங்ஙனங்கூறுஞ் சுருதிவாக்கியத்தை யிரண்டுசங்கையாகவினுதல்.

ஆகமப்பிரமாணத்தாலறியென்றும்வாக்குக்கெட்டா ...*
ஏகமாம்பிரமமென்றுமிதயத்தாலுணர்வாயென்றுஞ் [ர்
சோகமாமனத்திற்கெட்டாச்சுயஞ்சோதியென்றுஞ்சொன்னீ
மோகமாமிரண்டுசங்கைமூளைத்தனபறித்திடீரே ..

(இ-ள்) ஏகமாம்பிரமம்-அத்துவிதப்பிரமத்தை—ஆகமப்பிரமாணத்தா ல் வேதமுடிவான மகாவாக்கியப்பிரமாணத்தினல்—அறியென்றும்-அறி வாயெனவும்--வாக்குக்கெட்டாதென்றும்- இவ்வேதவாக்கியத்துக்கெட்ட மாட்டாதெனவும்—சுயஞ்சோதி - இச்சுயம்பிரகாசத்தை—இதயத்தாலு ணர்வாயென்றும்-மனதினலறிவாயெனவும்—சோகமாமனத்திற்கு- துன் பமானமனத்திற்கு—எட்டாதென்றும் - அறிதற்கரியதெனவும்—சொன் னீர்-அருளினீர்—மோகமாம்- மயக்கமாகிய—இரண்டுசங்கைமூளைத்தன இரண்டுசங்கைகளுள்வாயின—பறித்திடீர்- அவைகளைக்களைந்திடீர்—எ- று. பிரமவஸ்துமனேவாக்குக்களுக்கோசரமுங்கோசரமுமாமெனவே தங்கூறுவதை ஆசிரியர்கூறின்தாகக் கொண்டுவினவினதெனக.

## சந்தேகந்தெளிதற்படலம்.

(இ-ம்) வெளிப்படை. (௬)

(அ-கை) மூதற்சங்கையிற் பிரமஞ்சுருதிக் ககோசரமா மென்றதற்கு த்தரங்கூறல்.

மற்றைமுப்பிரமாணத்தால்வஸ்துநிர்ணயங்கூடாதே ...*
யுற்றதோர்விடயம்பூதமுபயமன்றுதலாலே ... *
குற்றமாங்குணவிசேடங்கூடாமலிருக்கையாலே ...*
யிற்றதுவாக்குக்கெட்டாதென்பதுமறிவாய்நீயே ... *

மற்றைமுப்பிரமாணத்தால்-ஏனைமூன்றுபிரமாணங்களினாலும்—வஸ்துநிர்ணயங்கூடாது-ஸ்வரூபநிச்சயத்தையறிதற்கூடாவாம்-உற்றதோர்விடயம்-பிரத்தியட்சமெதிரிடுவதோர்விஷயமாதலானும்—பூதம்-அனுமானங் காரியத்தைக்கொண்டறியப்படுங் காரணமாதலானும்—உபயம்-உபமானம்முபமேய வுபமானமென்னு மிரண்டாதலானும்—அன்றுதலால்-கூடாததலால்—குற்றமாம்- அவைகளாலறியலாமென்பதும் பிழையேயாம்—குணவிசேடம்- குணவிசேடங்களானவை—கூடாமலிருக்கையால்-சேராதிருக்கின்றபடியால—இற்றது- இத்தன்மையானவப்பிரமம்—வாக்குக்கெட்டாதென்பதும்-சத்தமாகியவேதங்களுக்கதீதமென்பதும்—அறிவாய்நீ-தெரிந்துகொள்வாய்-எ-று.

(இ-ம்) பிரமம் அகோசரமென்பதையுறுதிப்படுத்து; நிமித்தமாகமுதலிய நான்குபிரமாணங்களினுலுமறியக்கூடாத தெனவறிவித்ததாம். (௭)

(அ-கை) அச்சங்கையிற் பிரமஞ்சுருதிகளுக்கோசரமா மென்றதற்குத்தரம்.

வாக்கியந்தனக்கெட்டாதவஸ்துவென்றுரைத்தவேதம் *
வாக்கியவிருத்தியாலவவஸ்துவைக்காட்டிற்றன்றே ...*
வாக்கியங்களிலேமானமாவதேதென்றாயாகில... ...*
வாக்கியமிரண்டுமெய்யேமறைகள்பொய்யாநீகேளாய் *

(இ-ள்) வாக்கியந்தனக்கு - சத்தத்திற்கு—எட்டாதவஸ்துவென்றுரைத்த-எட்டாதபொருளென்றுசொன்ன—வேதம்-வேதமானது—வாக்கியவிருத்தியால்- மகாவாக்கியவிசாரத்தால்— அவ்வஸ்துவை - அப்பிரமப்பொருளை—காட்டிற்று- காட்டியது—வாக்கியங்களில்- இவ்விரண்டுவாக்கியங்களில்—மானமாவதேதென்றாயாகில - பிரமாணமாவதி யாதென்று கேட்பாயாகில்—வாக்கியமிரண்டுமெய்யே- இவ்விரண்டுவாக்கியங்களுமுண்மையே—மறைகள்-வேதங்கள்—பொய்யா- அசத்தியமுளவல்லா—நீகேளாய்-அதைநீகேட்பாய்—எ-று.

அன்றேவென்பதசை (இ-ம்) வெளிப்படை.

(அ-கை) பிரமஞ்சுருதிவாக்கியங்களுக் ககோசரமுங் கோசரமுமாமெனக்கூறுதல்.

தன்பதியல்லாப்பேர்கட்மையல்லனல்லனென்று... ... *
ளன்புனேக்கேட்டநேரமவள்வெட்கிமெளனமாறு... ......*
ளென்பதுபோலநீக்கியிதன்றிதன்றெனச்சேடித்த ... *
பின்பரப்பிரமந்தன்னைப்பேசாமற்பேசும்வேதம் ... ...*

(இ-ள்) தன்பதியல்லாப்பேர்கட்மை - தனதுநாயகனல்லாதவர்களை—அல்ல னல்ல னென்றுள்- இவனல்ல னிவனல்ல னெனக கூறினுள்—அன்பனைகேட்டநேரம- நாயகனைக்காட்டிக்கேட்டபோது—அவள்- அத்தலைவியானவள்—வெட்கி- வெட்கமுற்று—மெளமாறு ளென்பதுபோல- பேசாதிருந்தாளென்பதைப்போல—இதன்றிதன்றென - இதுவல்லவிது வல்லவென்று—நீககி- தள்ளி—பின்-பின்பு—சேடித்த-விஞசின— பரப்பிரமந்தன்னை- பரப்பிரமவஸ்துவை—வேதம்- வேதமானது —பேசாமற் பேசும்- சொல்லாமற்சொல்லும்—எ-று.

(இ-ம்) சுருதி சத்தரூபத்தாலறிவிக்காமல் - அருத்தரூபத்தாலறிவிக்குமென்பதாம். (௬)

(அ-கை) இரண்டாஞ்சங்கையிற் பிரமமனதிற்கெட்டு மெட்டாதென்பதற் குத்தரங்கூறுவான் றொடங்கி மனோவுற்பத்தியின் காரணங்கூறுகின்றார்.

முந்தியசங்கைதீரமொழிந்ததையறிந்துகொள்வாய்... ... *
பிந்தியசங்கைதீரப்பேசுமுத்தரநீகேளாய் ... ... ...*
இந்தியங்களுக்கிராசனிதயமாமதினெண்ணெங்கள்... ... *
புந்தியுமனமுமென்றேபுறததகத்துலாவியாடும் ... ...*

(இ-ள்) முந்தியசங்கைதீர - முதற்சங்கைதீரும்படி — மொழிந்ததை சொன்னதை—அறிநதுகொள்வாய் - தெரிந்துகொள்வாய்— பிந்தியசங்கைதீர- இரண்டாஞசங்கைதீரும்படி—பேசுமுததரம்- சொலலுமுத்தரத்தையும்—நிகேளாய்- நீகேட்பாய்—இந்தியங்களுககு- மனமுதலியவிந்திரியஙகளுக்கு—இராசன்-தலைவனைது—இதயமாம்- ஞானமாம்—அதினெண்ணெங்கள்-அதனினைவுகள்—புந்தியுமனமுமென்று-புத்தியெனவுமனமெனவும்—புறத்தகத்து - புறம்பிலு முள்ளிலும்—உலாவியாடும்- சஞ்சரிக்கும்—எ-று.

(இ-ம்) ஞானஸ்மரணமே மனமும்புத்தியுமாமென்பதாம். (எ)

(அ-கை) (இ-து)

உன்முகம்போற்கண்ணுடிக்குள்ளொருமுகங்கண்டாற்போற*
சின்மயவடிவின்சாயைசித்தும்போற்புத்திதோன்று ... ...*
நின்மலவிருத்தியந்தநிழல்வழியாயுலாவுந் ...... ... ...*
தன்மநன்மகனேயித்தைதத்தானன்றேஞானமென்பார் ... *

(இ-ள)உன்முகம்போல-உனதுவதனத்தைப்போல—கண்ணடிக்குள்- எதிரிட்டகண்ணுடிக்குள்ளே— ஒருமுகங்கண்டாற்போல் - ஒருவர்வதன

கண்டதுபோல—சின்மயவடிவின்சாயை-சைதன்யஸ்வரூபச்சாயையே—சித்துப்போல்- அறிவைப்போல—புத்திதோன்றும் - புத்தியிற்பிரதிபலிக்கும்—நின்மலவிருத்தி - நின்மலவிருத்தியானது—அந்தநிழல்வழியாய்- அச்சாயையின்மார்க்கமாக—உலாவும்- சஞ்சரிக்கும்— தன்மநன்மகனே-தர்மரூபியானசற்புத்திரா—இத்தைத்தானன்றோ - இவ்விருத்தியையன்றோ—ஞானமென்பார்-அறிவென்றுசத்துக்கள்சொல்லுவார்கள்ள-று

(ப-ம்) அந்தக்கரணப்ரதி பலனஞ்சிதாபாசனென்பார் - சித்துப்போற் புத்திதோன்றுமெனவும் - புத்தியிற்றங்குஞ்சிற்சாயையே விருத்தியென்பார்- நின்மலவிருத்தியெனவும் - அவ்விருத்திசிதாபாசனுக்கிடமாகவிளங்குமென்பார் - அந்தநிழல்வழியா யுலாவுமெனவும் - லோகாந்தருந்தம் போலச்சிதாபாசாந்தவிருத்தியே ஞானமென்பார் - இத்தைத்தானன்றோ ஞானமென்பாரெனவுங்கூறினர். (இ-ம்) விருத்திஞானமுஞ் சிதாபாசனுமிணையெனக்கூறினதாம். (௰க)

(அ-கை) (இ-து.)

உருக்கியதராநீர்நாநாவுருவங்களானாற்போல ... ... ...*
விருத்திகள்கடபடாதிவிடயமாய்ப்பரிணமிக்கு ... ... *
மருப்பலவிடயமெல்லாமாபாசன்றோற்றுவிக்கு... ... ...*
மிருட்டினில்விளக்குங்கண்ணுமில்லாமற்பொருள்காணா *

(இ-ள்) உருக்கியதராநீர் - குகையில்வைத்துருக்கியதராநீரானது—நாநாவுருவங்களானாற்போல - பலவிதவடிவங்களானதுபோல— விருத்திகள்- விருத்திகளானவை—கடபடாதிவிடயமாய்ப்பரிணமிக்கும்-கடம்படமுதலியவாகாரங்களாகவேறுபடும்— விடயமெல்லாம் -விடயங்களனைத்தையும்—அருப்பலம-அரும்பலமென்னப்பட்ட— ஆபாசன்றோற்றுவிக்கும்-சிதாபாசன்றெரிவிக்கும்—விளக்குங்கண்ணுமில்லாமல் - தீபமும்விழியுமின்றி—இருட்டினில்- இருளிலிருக்கும்— பொருள்காணாது- வஸ்துதெரியமாட்டாது—எ-று.சிற்சாயையேசகத்தாகத்தோற்றுதலின்விருத்தியே கடபடாதிவிடயமாய்ப்பரிணமிக்குமென்றார். (௰உ)

(அ-கை) (இ-து)

எரிகின்றவிளக்காற்கண்ணாலிருட்பொருள்காணலவேண்டுங் *
தெரிகின்றபரிதிகாணச்சென்றிடிற்கண்ணேபோதும் ... *
விரிகின்றசகத்தைக்காணவிருத்தியும்பலமும்வேண்டும் [க்கே
புரிகின்றவிருத்தியொன்றேபோதுமெய்ப்பொருள்காண்போர்

(இ-ள்) எரிகின்றவிளக்கால்-பிரகாசிக்கின்றதீபத்தினாலும்—கண்ணால-விழியினாலும்—இருட்பொருள்காணல்வேணடும்- இருட்டின்கண்ணுள்ள வஸ்துவைப்பார்க்கவேண்டும்—தெரிகின்றபரிதி-தெரியாநின்ற சூரியனை-காணச்சென்றிடில்- பார்க்கச்செல்லில்—கண்ணேபோதும்- நேத்திரமொன்றுமேபோதும்— அவைபோல-விரிகின்றசமத்தைக்காண - பரந்திருக்கின்ற லகத்தைப்பார்க்க—விருத்தியும்பலமும்வேண்டும் - விருத்தியும்பல

மும்வேண்டும்—மெய்ப்பொருள்காண்போர்க்கு-உண்மையானபிரமவஸ்துவைத்தரிசிப்பவர்களுக்கு—புரிகின்ற- முன்சொல்லாநின்ற— விருத்தியொனறேபோதும்- விருத்தியொன்றுமேபோதும்—எ-று.

(ப-ம்) விஷயஞ்ஞானத்தைப்போக்குதற்கு விருத்திஞானமும் அதையறிதற்குப்பலரூபமானசிதாபாசனும் வேண்டுமென்பார்-சாத்தைக்காண விருத்தியும் பலமும்வேண்டுமெனவும்- ஆத்மாவைத்தரிசித்தற்கு விசாரரூபமானவிருத்திஞானம் வேண்டுமென்பார் - விருத்தியொன்றேபோது மெய்ப்பொருள்காண்போர்க்கெனவுங் கூறினார்.

(இ-உ-க-ம்) லோகாந்தகுந்தம்போல வாதாரமான விருத்திஞானமுமாதேயமான சிதாபாசனுமாகிய விவ்விரண்டிலக்கணமுங்கூறியதாம்.

(அ-கை) மனத்தினுருவங்கூறல்.

விருத்தியும்பலமுங் கூடும்விகாரமேமனமென்பார்கள் ... ...*
கருத்தெழுமவிருத்திவேண்டுங்காணகின்றன்மனத்திற்கெட்டும்
வருந்தியபலமாமிந்தமனத்திற்கெட்டாதுகண்டா ... *
யருத்தமிப்படியென்றையமகன்றுநீதெளிந்திடாயே... ...*

(இ-ள்) விருத்தியும்பலமுங்கூடும்-விருத்தியும்பலமுஞ்சேர்ந்த—விகாரமே-விகாரரூபமே—மனமென்பார்கள் - மனமென் றுசத்துக்கள் சொல்லுவார்கள்—கருத்து- பரத்தவியுமிலைவில—எழும்விருத்தி-உண்டாகும் விசாரஞானமானது —வேண்டுங்காணகின்றல் - சித்தையறிதற்கொருதலையாகவேண்டுதலின்—மனத்திற்கு- அவ்விருத்திரூபமானமனத்திற்கு—எட்டும்-சித்தெட்டும்—வருந்திய- வருத்துகின்ற—பலமாம்- வியத்தையறியும்பலரூபமான—இந்தமனத்திற்கு-இம்மனத்திற்கு—எட்டாதுகண்டாய்-சித்தெட்டாது—அருத்தம்-முன்சொல்லிய விரண்டுக்கும்பொருள்—இப்படியென்று-இவ்வண்ணமென்றறிந்து—ஐயமகன்று- சந்தேகநீங்கி—நீதெளிந்திடாய்நீதெளியக்கடவாய்—(எ-று) சித்துசம்பந்தஞானம் விருத்தியுஞ் சடசம்பந்தஞானம பலமுமெனக்கொள்க.

(ப-ம்) சிற்சடரூபமனமென்பார்- விருத்தியும்பலமுங் கூடுவிகாரமேமனமெனவும்- சித்தம்சமானவிருத்தியினறை சித்தையறியலாமென்பார்- விருத்திவேண்டுங்காணகின்றன் மனத்திறகெட்டு மெனவும்-சடாம்சமான மனதினற் சித்தையறியககூடாதென்பார் - பலமாமிந்தமனதிற் கெட்டாதெனவுங்கூறினார் (இ-ம) அகமுள்ளமனதிற் கறியப்படுமெனவும் பகிர்முகமுள்ள மனதிற்கறியப்படாதெனவுந்தெரிவித்ததாம் (௰௬)

(.—கை) முற்கூறியகடாவிடைகளாற் கோசராகோசரமின்றிய சுத்தப்பிரமமான சுவானுபூதியே தானென்றறிந் ததிலுதிக்குமனதை யதிற்கரைக்கும்பொருட்டோர்சங்கைவினுதல்.

வஞ்சகமிடபரமார்த்த குருவேசொன்ன வழிகளறிந்தேனினி
யோர்வசனங்கேளீர், சஞ்சலமற்ற கண்டபூரணமாய்ச் சித்தர்
ததாகார மாவதன்றோ சமாதியோக,.முஞ்சலேயொத்தலேவது

## சந்தேகந்தெளிதற்படலம்.

தன் சுபாவமாகி யொருகணத்திற் பலவுலகாயுதிக்கு மிந்த,
நெஞ்சகம்வஸ்து விலசையாநிவாததீப நிலையடைவு தெப்ப
டியோநீர்சொலவீரோ... ... ... ... ...

(இ-ள்) வஞ்சகமில-வஞ்சனையின்றிய—பரமார்த்தகுருவே- யதார்த்தமாகவிளங்கியவாசாரியரே—சொன்னவழிகளறிந்தேன் - தேவரீரனுக்கிரகித்தமார்க்கங்களைத்தெரிந்துகொண்டேன் — இனியோரவசனங்கேளீர்-இன்னுமோர் விண்ணப்பங்கேட்கவேண்டும்—சித்தம்-மனமானது—சஞ்சலமற்று-சலனமின்றி—அகண்டபூரணமாய்- அகண்டபரிபூரணஸ்வரூபமாய்—ததாகாரமாவதன்றே-தன்மயமாவதன்றே—சமாதியோகம்-நிஷ்டையிலுதிக்கும்ஞானம்—உஞ்சலையொத்து- ஊசலைப்போல—அலைவது சஞ்சலப்படுவது—தன்சுபாவமாகிதனதியல்பாய்—ஒருகணத்தில-ஒருக்ஷணத்தில்—பலவுலகாயுதிக்கும் - நானாவுலகமாய்த்தோன்றுகின்ற—இந்த நெஞ்சகம்-இம்மனது—வஸ்துவில்-பிரமத்தில்—அசையா- சலனமின்றிய—நிவாததீப-காற்றில்லாதவிளக்கைப்போல— நிலையடைவதெப்படி-நிலைமையைப்பெறுவதெவ்வண்ணம்—நீர்சொலவீர்-தேவரீரருள்செய்வீர்—எ-று.

(இ-ம்) வெளிப்படை. (௫௫)

(அ-கை) மனதின்முக்குணமு மவைகளாலுண்டாகும்பயனையுங்கூறல்

கருதுமனேகுணமூன்றுமூன்றிலொன்றுகதித்தெழுந்தான்மற்
றிரண்டுங்கரந்துநிற்குந்,தருமமிகுசத்துவமேலானபோதுசன்
மார்க்கமானதெய்வசம்பத்துண்டா, மருவுமிராசதமாதிலுலக
தேகவாதனையாஞ்சாத்திரவாதனையுமாகு,மருமகனேதாமதமே
லானபோதிலசுரசம்பத்துண்டாகுமறிந்துகொள்ளே ...*

(இ-ள்) கருதுமனம்-நினைக்கின்றமனதிற்கு—குணமூன்றும்- திரிகுணமாம்—மூன்றில்-அம்மூன்றுகுணங்களில—ஒன்றுகதித்தெழுந்தால-ஒன்றுமிகுந்தெழுமாயின்—மற்றிரண்டும்- பின்னிரண்டுகுணங்களும— கரந்துநிற்கும்-மறைந்திருக்கும்—தருமமிகும்-சற்கருமமுயர்ந்த—சத்துவம்-சத்துவகுணமானது—மேலானபோது - மிகுந்தபோது—சன்மார்க்கமான-சன்மார்க்கமாகிய—தெய்வசம்பத்துண்டாம்- தேவச்செல்வமுண்டாகும்—மருவுமிராசதமாகில்- பொருந்தாநின்ற ரசோகுணமிகுமாயின்—உலக-லோகவாதனையும்—தேக- தேகவாதனையும்—சாத்திரவாதனையும்-சாஸ்திரவாதனையும்—ஆகும்-உண்டாகும்—அருமகனே-அருமையாகிய புத்திரா—தாமதமேலானபோதில்- தமோகுணமிகுந்தபோதில—அசுரசம்பத்துண்டாகும்-அசுரசெல்வமுண்டாகும்—அறிந்துகொள்-தெரிந்துகொள்வாய்—எ-று.

(அ-கை) சித்தம்சமானசத்துவஞ், சேஷிக்கின்மனஞ்சித்தி லசையின்றி நிற்குமெனல,

மனதுசத்துவசொரூபமற்றிரண்டும்வந்து கலந்தனவவற்றை
மாற்றினூற்போம், தனதுசன்மார்க்கத்தைவிடாதிருந்தபோது
தாமதமூமிராசதமுஞ்சமிக்கும்பின்னைக, கனபரிணமஞ்சலன
ம்போம்போனக்காற்களங்கமற்றுநின்றவாகாயம் போலு, நின
துளமப்படியாமப்பிரமத்தொன்றாய்நிருவிகற்பசமாதியிலேநி
ற்குந்தானே ... ... ... ...

(இ-ள்) மனது-மனமானது—சத்துவசொரூபம்- சத்துவவடிவமாம்—மற்றிரண்டும் - மற்றரசோதமோகுணங்களாகியவிரண்டும்—வந்துகலந்தன-வந்துசேர்ந்தவைகளாம்—அவற்றை-அவ்விரண்டுகுணங்களையும்—மாற்றினூற்போம்-நீக்கிடினீங்கும்—தனதுசன்மார்க்கத்தை-தனதுசன்மார்க்கமானசத்துவகுணத்தை—விடாதிருந்தபோது-விடாமலிருந்தபோது—தாமதமூமிராசதமுஞ்சமிக்கும்- தமோகுணமூமிரசோகுணமுநசிக்கும்—பின்னை-பின்பு—கனபரிணமம்-கனமானதிரிசியமாதலும—சலனம்- அதிற்சலனமடைதலும்—போம்-நீங்கும்—போனக்கால்- அவைநீங்கினால்—களங்கமறறுநின்ற-நிர்மலமாயிருந்த-ஆகாயம்போலும்-அம்பரத்தைப்போலும்—நினதுளம்-உன்மனமானது—அப்படியாம்- அவ்வண்ணமாம்—அப்பிரமத்து-அப்பிரமஸ்வரூபத்தில்—ஒன்றாய்- ஏகமாய்—நிருவிகற்பசமாதியிலேநிற்கும்-நிருவிகறபசமாதியிலே நிலைபெற்றிருக்கும்—எ-று. (ய௱)

(அ-கை) (இ-து)

—களங்கமற்றகண்ணாடிதன்முன்வேறோர் களங்கமற்றகண்ணாடி
காட்டும்போது, விளங்கியதன்மயமாகியபேதமாகிவிகற்பமின்
றிநிருவிகற்பமானூற்போல,வளந்தறியப்படாவிபுவாய்சசத்தா
ய்ச்சித்தாயானந்தமாம்பிரமத்தைக்கியமான,வுளந்தெளிந்தப
டியிருந்தாலுலகமெங்கேயுலைவெங்கேயென்றுசஙகையொழித்
திடாயே... ... ... ... ... ௬

(இ-ள்) களங்கமற்றகண்ணாடிதன்முன்- நிர்மலமாகியகண்ணாடிமுன்—வேறோர்-மற்றொரு—களங்கமற்றகண்ணாடி-நிர்மலமாகியகண்ணாடியை—காட்டும்போது-காண்பிக்கும்போது—விளங்கியதன்மயமாகி-பிரகாசியாநின்றதனதுஸ்வரூபமாய்—அபேதமாகி-பேதமிறந்ததாகி—விகற்பமின்றி-வேறுபாடின்றி—நிருவிகற்பமானூறபோல-ஒன்றானதுபோல்—அளந்தறியப்படா-அளவிட்டறியககூடாத—விபுவாய்-வியாபகமாகியும்—சத்தாய்சந்தாகியும்—சித்தாய்-சித்தாகியும்—ஆனந்தமாம்- ஆனந்தமாகியும்விளங்குகின்ற—பிரமத்து-பிரம்ஸ்வரூபத்தில்—ஐக்கியமான-வுளம்-கனாந்தமனமானது—தெளிந்தபடியிருந்தால்- பிரமமாகத்தெளிந்தவண்ணம்விளங்கிநின்றால்—உலகமெங்கே - திரிஸ்யமானசகத்தின்று—உலைவெங்கேயென்று-அதைப்பற்றியசஞ்சலமின்றென்று—சங்கையொழித்திடாய்-சங்கையைநீக்குவாய்—எ-று

(இ-கூ-க-ம்) சித்தம்சமானமனஞ்சித்தாகவேவிளங்கின் சகமாதலுமதி ற்சலனமடைதலுமதற்கின்றென வறிவித்ததாம். (ம்அ)

(அ-கை) முற்கூறியவுத்தரத்திறைற் சித்தம்சமானமனஞ்சித்தேயாயிற் றெனவறிந்து மேற்சடாம்சமானமனமு மதன்றொழிலு மெவ்விதமாயின வென்பதையறியுநிமித்தமனஞ் சித்திலிறக்கிற் சீவன்முத்தரெங்ஙனஞ் சஞ்சரிப்பாரெனல்,

ஏகமாய்மனமிறந்தாற்சீவன்முத்தரிருக்குமட்டும்பிராரத்வமெ
திறைலுண்பார், போகமானதுபுசித்துத் தொலைப்பதன்றேபுசி
த்தாலுமனந்தானும்போனதன்றே,சோசமாமனமிறந்தாற்போ
கமில்லைதோன்றுமெனின்முத்தரென்றுசொலக்கூடாதே,மோ
கமாமிதுதெளியக்குருவேநன்று மொழிந்தருளவேண்டுமென்
றன்முழுதுமானேன்... ... ... ... ...

(இ-ள்) ஏகமாய்-பிரமஸ்வரூபமாகி—மனமிறந்தால்-மனதுநசிக்கின்—சீவன்முத்தரிருக்குமட்டும்- சீவன்முத்தர்களிருக்குமளவும்—பிராரத்வம் பிராரத்வகன்மங்களை—எதிறைலுண்பார்-யாதினலனுபவிப்பார்கள்--போகமானது-போகங்களை-புசித்துததொலைப்பதன்றே-அனுபவித்துநீக்கவேண்டுமன்றே—புசித்தால்- அனுபவிகின்—மனந்தானும்போனதன்றே-மனமிறந்ததன்றே—சோசமாமனமிறந்தால் - துன்பமாயமனமிறகின் போகமில்லை-போகானுபவமில்லை—தோன்றுமெனில்- மனமுநிக்குமாயின்—முத்தரென்று-சீவன்முத்தரென்று—சொலக்கூடாதே-உரைத்தல்கூடாதே-- மோகமாமிதுதெளிய-மயக்சமானவிசசங்கைதெளியுமாறு—முழுதுமானேன்-யாவுமானசீடன்-குருவே- ஆசிரியரே—நன்று-தெளிவாக மொழிந்தருளவேண்டுமென்றன்-சொலலவேண்டுமென்றுகேட்டான்—என்று.

(இ-ம்) வெளிப்படை. (ம்கூ)

(அ-கை) அச்சங்கைக்குத்தரங்கூறுவான்றொடங்கி மனோநாசமிருவிதமாகக்கூறுகின்றார்.

மனநாசஞ்சொரூபமென்றுமரூபமென்றும் வகுத்துரைப்பாரி
ருவகையாய்வருமிவற்றில், வினவாதசீவன்முத்தரிடத்திலொ
ன்றும்விதேகமுத்தரிடத்திலொன்றுமேவுமைந்தா, கனதானச
த்துவமாய்மனஞ்சேடித்துத்தூமதமிராசதநசித்தல்சொரூபநா
ச, மனகாசத்துவந்தானுமிலிங்கதேக மடங்கும்போதடங்குவ்
தேயரூபநாசம்... ... ... ... ...

(இ-ள்) மனநாசம்-மனோநாசமானது—சொரூபமென்றும்- உருவநாசமெனவும்—அரூபமென்றும்-அருவநாசமெனவும்—வகுத்துரைப்பார்-வகுத்துச்சொல்லுவார்கள்—இருவகையாய்வருமிவற்றில்-இரண்டுவிதமாக வருகின்றவைகளில்--வினவாத-சங்கையறததெளிந்த- சீவன்முத்தரிட

த்தில்-சீவன்முத்தர்களிடத்து—ஒன்றும்- உருவநாசமொன்றும்—விதேக முத்தரிடத்தில்- விதேகமுத்தர்களிடத்தில்—ஒன்றும்- அருவநாசமொன்றும்—மைந்தா-மாணாக்கனே—மேவும்- உண்டாகும்—தனதானசத்துவமாய்-தனதுசுபாவமானசத்துவகுணமாக—மனஞ்சேடித்து-மனம்விஞ்சி-தாமதமிராசதநசித்தல- தமோரசோகுணங்களிறத்தல்—சொரூபநாசம்-உருவநாசமாம்—அனகா-மாசற்றவனே—சத்துவந்தானும்-அச்சத்துவகுணமும்—இலிங்கதேகமடங்கும்போது-சூக்குமசரீரநசிக்கும்போது—அடங்குவது-நசிப்பதே—அரூபநாசம்-அருவநாசமாம்—எ-று.

(இ-ம்) மனமுருவநாசமாயின் சீவன்முத்தியும் அருவநாசமாயின் விதேகமுத்தியுமாமெனக்கூறினதாம் (௨௰)

(அ-கை) உருவமின்றியருவமா யுணருருவமான மனதினால் யாவுமனுபவிக்கலாமெனல்.

சுத்தமாஞ்சத்துவமேயுண்மையாகுந்துக ளிருள்போனான்மன
மென்சொல்லும்போம்போம், வர்த்தமானத்தில்வந்தவுணவை
யுண்பார்வருவதும்போவதுநினைந்துமகிறார்வாடார், கர்த்தரா
மகந்தையைவிட்டகர்த்தராகிக்கரணவிருத்திகளவத்தை காண்
பாராகி, முத்தராயிருக்கலுமாம்புசிப்புங் கூடுமுட்டிலையென்
றறிந்துசங்கைமோசிப்பாயே... .... ...

(இ-ள்) சுத்தமாஞ்சத்துவமே-களங்கமற்றசத்துவகுணமே—உண்மையாகும்- தத்துவமாம்—துகளிருள்போனால்- ரசோதமோ குணங்கணீங்கினால்—மனமென்சொல்லும்போம்போம்-மனமெனறுணர்ப்பதுநீங்கும்—வர்த்தமானத்தில்- நிகழ்காலத்தில்— வந்தவுணவையுண்பார்- கிடைத்தவுண்டியைப்புசிப்பார்கள்— வருவதும்- எதிர்காலத்துவரும் பொருளையும்—நினைந்துமகிறார்- கருதிமகிறார்கள்—போவதும் - செல்காலத்திற்போனபொருளையும்—நினைந்து- கருதி—வாடார்-வாடார்கள்—கர்த்தராமகந்தையைவிட்டு - யானெனதென்னுமகந்தையைநீக்கி — அகர்த்தராகி-அகர்த்தராய்—கரணவிருத்திகள்- அந்தக்கரணவிருத்திகளையும்—அவத்தை- அவஸ்தாத்திரயங்களையும்—காண்பாராகி- பார்ப்பவர்களாகி—முத்தருமாயிருக்கலுமாம்- சீவன்முத்தராயிருக்கலுமாம்—புசிப்புங்கூடும்- எல்லாவற்றையுமனுபவிக்கவுங்கூடும்—முட்டிலையென்றறிந்து - தடையில்லையென்றறிந்து—சங்கைமோசிப்பாய்-சங்கையைநீக்குவாய்—எ-று.

(இ-ம்) சத்துவமான மனதினாலெவற்றைப் புசிக்கினு மவைகளால் வருந்துக்கதுக்கமிவர்க்கிலவென்பதாம். (௨௧)

(அ-கை) மனஞ்சத்துவமாகவிவகரிக்கின் சமாதியெங்ஙனங்கூடுமென்றவினாவிற்குத்தரம்.

விவகாரவேளையெல்லாஞ்சமாதியென்றால்விகற்பமன்றோ ம
னமலைந்துவிடாதோவிட்டா, லவுதானமுமன்றோ வென்று
யாகிலதற்கொருதிட்டாந் தந்தேனதைகொண்டுநவமாகப்பா

புருடன்றன்னைக்கூடிநயந்துசுகமனுபவித்த நாரிநெஞ்சந், தவ
மானமனைத்தொழில்கள் செய்யும்போதுந்தழுவி யனுபவித்த
சுகந்தனைவிடாதே ... ... ... ... *

(இ-ள்) விவகாரவேளையெல்லாம் - விவகரிக்குங்காலங்களனைத்தும்— சமாதியென்றால்- சமாதியென்றுசொன்னால்—விகற்பமன்றோ- அவ்விவகாரந்திரிசிய வேறுபாட்டைத்தோற்றுவிக்குமன்றோ—மனமலைந்துவிடாதோ-அங்ஙனமாயின்மனஞ் சஞ்சலத்தையடையாதோ—விட்டால்-அங்ஙனஞ் சஞ்சலத்தையடையுமாயின்—அவதானநழுவுமன்றோ-ஞானநழுவுமன்றோ—என்றாயாகில்-என்றுகேட்பாயாகின்—அதற்கு-அந்தாட்டாந்தத்திற்கு— ஒருதிட்டாந்தங்கேள் - யாமொருதிட்டாந்தஞ் சொல்லுதுங்கேட்பாய்— ஆசைகொண்டு- காமமுற்று—நவமாக- நூதனமாக—பரபுருடன்றன்னை- சோரபுருடனை—கூடிநயந்து - இன்புற்றுப் புணர்ந்து—சுகமனுபவித்த- விடயானந்தந்தையனுபவித்த— நாரிநெஞ்சம்- வஞ்சியின்மனமானது—தவமான- தவத்துக்குரிய—மனைத்தொழில்கள்- இல்வாழ்க்கைக்குரியசெயல்களை—செய்யும்போதும் - செய்யுங்காலத்தும்—தழுவியனுபவித்தசுகந்தனை - முன்கூடியனுபவித்த விடயானந்தத்தை—விடாது-நீங்காது—எ-று.

நெஞ்சஞ்சுகந்தனை விடாதென்பதைச் சுகநெஞ்சந்தனை விடாதெனப் பொருள்கொள்க.மனதைவிழுங்குவது சுகமாதலின். (இ-ம்) விவகாரங்களைச்சத்துவத்தினுதயமானசுகபோதம் விழுங்கிக்கோடலி னவ்விவகாரஞ் சமாதியேயாமென்பதாம். (௨௨)

(அ-கை) விவகாரங்களிலகம்பாவ நீங்குதற்பொருட்டுச் சிற்சுகமானசிவன்முத்தராது சத்துவமானமனதிற் ககங்கூடுமோவென்ற வினாவிற்குத்தரமாக விரதத்ரயங்கூறல்.

தேகத்தனலனாகியகர்த்தனாகிசீவனின்றிப்பிரமமாய்த்தெளிந்
தமுத்தன், போகத்தையுண்பனென்றாற்கர்த்தாவாமே பூரண
மாமகர்த்தனுக்குப்போகமுண்டோ,சோகத்தையறுத்தருளுங்
குருவேயிந்தத்துகளறுக்க வேண்டுமென்று சொன்னையாயின்,
மாகர்த்தன்மாபோகி மாத்தியாகிவகைமூன்று யவரிருக்கமதி
மைகேளாய்... ... ... ... ...*

(இ-ள்) தேகத்தனல்லனாகி -உடலோனாளென்பதல்லாதவனாய்—அகர்த்தனாகி- அகர்த்தாவாய்—சீவனின்றி,- சீவேஸ்வரத்துவமில்லாமல்—பிரமமாய்-கூடஸ்தபிரமவைக்கியமாகி—தெளிந்தமுத்தன்- தெளிந்தசீவன் முத்தனானவன்—போகத்தையுண்பனென்றால் -விடயபோதங்களைப் புசிப்பானென்றால்—கர்த்தாவாமே- யானென்பவனாமே— பூரணமாமகர்த்தனுக்கு- பரிபூரணமானவகர்த்தாவுக்கு—போகமுண்டோ-விடயபோகமுளவோ—சோகத்தையறுத்து-துன்பத்தைக்கெடுத்து—தாருளுங்குருவே இன்பத்தைக்கொடுக்கின்றவாசாரியரோ—இந்தத்துகளறுக்க வேண்டுமென்று-இக்குற்றத்தைநீக்கவேண்மென்று—சொன்னையாகில்-சேடபாயாகில

மாகர்த்தன் - மாகர்த்தனும்—மாபோகி-பாபோகியும்—மாத்தியாகி-மாத்தியாகியுமாகிய--வகைமூன்றும்-மூன்றுவிதமாக—அவரிருக்குமகிமைகேளாய் அச்சீவன்முத்தர்களிருக்கின்ற பெருமையைக்கேட்பாய்—எ-று.

[இ-ம்] கர்த்தத்துவமின்றிய கர்த்தத்துவமானசீவன்முத்தருக்குப்போகங்கூடுந்தன்மையெங்ஙனமென்ற வினாவிற்குத்தரங் கூறத்தொடங்கினதாம் (உக)

(அ-கை) மாகர்த்தனிலக்கணங்கூறல்.

செய்கையுஞ்செய்விக்கையுமற்றிருக்குங் காந்தச்சிலைமலைமுன்
னிரும்புகள் சேட்டிக்குமாபோற், செய்கையுஞ்செய்விக்கையு
மற் றிருக்குமென்முன் சடமானவுலகமெல்லாஞ் சேட்டை
செய்யு, மெய்கலந்தவிந்திரியவிகாரரூப விவகாரவிருத்திக்குவி
ருத்திதாறு, மெய்கலந்தசமாதிக்குஞ் சாட்சியேநான்வெயில்
போலென்றுரைத்தவனேவிபுமாகர்த்தன்.... ...

(இ-ள்) செய்கையும்- தொழில்செய்தலும்—செய்விக்கையும்-தொழில்செய்வித்தலும்—அற்றிருக்கும்- இல்லாதிருக்கின்ற—காந்தச்சிலைமலைமுன்- காந்தக்கல்லின்சந்நிதானத்தில்—இரும்புகள்-அயங்கள்—சேட்டிக்குமாபோல்- அசையுமாபோல—செய்கையுஞ்செய்விக்கையும் - பிரேரகப்பிரேரியங்கள்—அற்றிருக்கும்- இல்லாதிருக்கின்ற—என்முன் - எனதுசந்நிதியில்—சடமானவுலகமெல்லாம்- சடமாயுள்ளசகங்களனைத்தும்--சேட்டைசெய்யும்- அசைந்துகொண்டிருக்கும்—மெய்கலந்த- தேகத்திற்சேர்ந்த—இந்திரிய-ஞானேந்திரியகன்மேந்திரிய—விகாரரூப-பேதரூபங்களான—விவகாரவிருத்திக்கும்- பிரேரகபிரேரியமான விருத்திகளுக்கும்—விருத்திதாறும்- அவ்விருத்திகளடங்கித்தன்மயமான—மெய்கலந்தசமாதிக்கும்- உண்மைகலந்திருக்கும் ஸ்வரூபசமாதிக்கும்—வெயில்போலென்று சூரியகிரணத்தைப்போலச் சர்வசாட்சியேநானென்று— உரைத்தவனே ஸ்திரமானவனே—விபு- சர்வவியாபகமாகிய—மாகர்த்தன்-மாகர்த்தனும் —எ-று.

(இ-ம்) அத்துவிதமான வெனசந்நிதியினடக்குந் தேகமுதலியவிவகாரங்களுக்கு மிவைகளிறந்துநின்ற ஞானசமாதிக்குஞ் சாட்சிநானேயென் றவைகளோடுங் கூடாமற்கூடியிருப்பவனே மாகர்த்தனென்பதாம். ()

(அ-கை) மாபோகிமாத்தியாகிகளி னிலக்கணங்கூறல்.

புறுசுவையின்குணங் குற்றமசுத்தஞ்சுத்தம்பத்தியம்பத்திய
மெனவூணையுந்நிடாமற், பொறுமையுடன் கிட்டினதைக் காட்
டுத்தீப்போற்போகங்கள் புசிப்பவன்மா போகியாகுஞ்,சிறிது
துகடனக்கண்ணியங்கணன்மைதீமைகள்சே ரினும்படிகச்
செயல்போ[illegible] கம், வெறுதிருக்குமவனேமாத்தியாகியாவன்
யிரதமிம்மூன்றுள்ளவரோவிடுள்ளோரோ... ... ...

(இ-ள்) அறுசுவையின்- சுவிதரசங்களின்—குணங்குற்றம் - குறைகு ணங்கள்—அசுத்தஞ்சுத்தம் - சுத்தாசுத்தங்கள்— அபத்தியமபத்தியமெ ன- பத்தியாபத்தியங்களென—ஊறாய்ந்திடாமல் - உணவையாராய்ந்து பாராமல்—பொறுமையுடன்- சாந்தத்தோடும்—கிட்டினதை - நேரிட்ட தை—காட்டுத்தீப்போல்- காடாக்கினிபோல— போகங்கள்புசிப்பவன்- போகங்களையனுபவிப்பவன்—மாபோகியாகும்- மாபோகியாம்— சிறிது வலிதுகள்-அற்பமகத்துக்கள்—தனதன்னியங்கள்-அன்னியான்னியங்கள் —நன்மைதீமைகள்- நன்குதீங்குகளாகியவிவைகள்—சேரினும்-அடைந் தாலும் — படிகச்செயல்போல - படிகத்தின்றன்மையைப்போல—சித் தம்- சித்தமானது—வெறிதிருக்குமவனே - பற்றின்றிநிற்பவனே— மாத் தியாகியாவான்- மாத்தியாகியாவான்—விரதவிம்மூன்று- இம்மூன்றுவிர தங்களும்—உள்ளவரே - உடையவர்களே—வீடுள்ளோர் - முத்தியையு டைய சீவன்முத்தர்கள்—எ-று,

(இ-ம்,) உணவின்ரசாரசங்களைப்பாராமற் றனதுரசமாகவாவையும்புசி ப்பவனே மாபோகியெனவும் - தன்னிடத்திற் றனக்கன்னியமான வை களியாதுபற்றினுந்தான் பற்றின்றிச்சுயமா விளங்குகின்றவனே மாத்தியா கியெனவுங்கூறினதாம் (௨௫)

(அ-கை) சீவன்முத்தன் விவகரித்துக்கொண்டிருக்க வஃதின்றிக் கிருத கிருத்தியனுன தெங்ஙனமெனவினுதல்.

வேறு.

மெய்யுங்கொண்டுபிராரத்வந்தரு விதிவழிநின்றிடவு... ...*
முய்யுங்கன்மிகளுக்கனுகுணமாவுறுதொழில்செய்திடவுஞ் *
செய்யுஞ்செய்கைமுடிந்தவனென்றுரைசெப்புவதெப்படியோ
னையுந்துன்பமகற்றியகுருவே நலமாவருள்வீரே... ...*

(இ-ள்) மெய்யுங்கொண்டு- தேகத்தைந்தாங்கிக்கொண்டு—பிராரத்வந் தரு- பிராரத்வகன்மங்கொடுக்கின்ற—விதிவழிநின்றிடவும்- நியதிமார்கக த்தினிற்கவும்—உய்யுங்கன்மிகளுக்கு-முமூட்சுக்களுக்கு—அனுகுணமா- அனுகூலம்—உறுதொழில்செய்திடவும்- பொருந்தியசிரவணுதிகளைச்செ ய்துகொணடிருக்கவும்—செய்புஞ்செய்கைமுடிந்தவனென்று- கிருதகிரு த்தியனென்று—உரைசெப்புவதெப்படி- சொல்லுவதெவ்வண்ணம் -னை யுந்துன்பம்-வருந்தும்பவத்துன்பத்தை—அகற்றியகுருவே- நீக்கியவாசா ரியரே—நலமாவருள்வீர்- நன்மையாகச்சொல்வீர்—எ-று

(இ-ம்) வெளிப்படை. (௨௬)

(அ-கை) அவ்வினுவிற்குத்தரங்கூறல்.

ஆட்டவர்செய்தொழின்மூவகையாருமவித்தைவசத்துறுநு
வீட்டிணைமமதையகந்தையுளார்க்குயிகபரவி ம்...
வீட்டினுகுவமெனுமிச்சையுளார்க்கேவித்தைபடிப்பவெலாம்*
பாட்டின்மிகுந்தொழிலாற்பலனுண்டோபரிபூரணமாகுல் ...*

(இ-ள்) ஆடவர்செய்தொழில்-புருஷர்கள்செய்கின்றகிரியையானது—மூவகையாகும்- மூன்றுவிதமாம்—அவித்தைவசத்துருநாள் - அஞ்ஞானவசமோய்ச்செலகின்றகாலத்தில்—ஈடணை- ஈஷணைத்திரியமும்—மமதை- மமதையும்—அகந்தை- அகந்தையும்—ஊர்க்கே- உள்ளவர்களுக்கே—இகபரவிவகாரம் - இகலோகபரலோக விவகாரங்களுளவாம்— வீட்ணுருவமெனுமிச்சையுளார்க்கு- முமூட்சுக்களுக்கு—வித்தைபடிப்பவெலாம்-சடசித்தைப்பகுத்தறியுஞ் சாஸ்திரங்களனைத்தையு மப்பியாசித்தலுள்வாம் —பரிபூரணமானல் - பரிபூரணமானவர்களுக்கு—பாடன்மிகுந்தொழிலால்- மிகுந்தசாஸ்திராப்பியாசத்தினுலே—பலனுண்டோ - பயனுளதோ—எ-று.

[இ-ம்] அஞ்ஞானநிசையி லுலகவிவகாரங்களுமுமூட்சுநிசையிற்சிரவணாதி விவாரங்களுமுளவாம் முத்தித்நிசையிற்பல வியாப்தியின்றி விர்த்தியாப்தியாக விவகாரங்களைச் செய்தலி னவையுஞ்செய்துஞ் செய்திலரென்பதாம், (உஎ)

(அ-கை) ஜீவன்முத்தர்க் குலகவிவகாரங்களிலவாயினுஞ் சிரவணாதி விவகாரங்கள் வேண்டாவோவெனவினுதல்.

குரவர்சிகாமணியேகேளீர்கூறினவழியொக்கும் … … *
பரமுடனிகமுமிறந்தவரன்றேபருகுவர்மெய்ஞ்ஞானம்… *
விரவுமுயற்சியின்மீண்டவரதையினிவேண்டுவரோவேண்டார்
சிரவணமனனதிகள்வேண்டாவோசித்தமுறைத்திடவே … *

(இ-ள) குரவர்சிகாமணியே- தேசிகசிரோரத்னமே—கேளீர்-கேட்டருளவீர்—நீர்கூறினவழியொக்கும்-தேவரீரருளிசசெய்த முறைசரியே—பரமுடன்- பரலோகவிச்சையோடும்—இகமும்- இகலோகவிச்சையையும் இகழ்ந்தவரன்றே - நீங்கினமுமூட்சுக்களலரோ—மெய்ஞ்ஞானம்- உண்மைஞானத்தை—பருகுவர்- அப்பியாசிப்பவர்கள—விரவுமுயற்சியின்மீண்டவர் - கலக்கின்றமுயற்சியினின்று நிங்கினவர்கள—அதை - அவ்விகலோகபரலோகவிச்சயை — வேண்டுவரோவேண்டார் - விரும்புவார்களோவிரும்பார்கள—ஆயினும் - சித்தமுறைத்திட - மனநிலைபெறும்பொருட்டு—சிரவணமன்னதிகளவேண்டாவோ- சிரவணமனனமுதலியவைகளும்வேண்டாமோ—எ-று,

[இ-ம்] வெளிப்படை (உஅ)

(அ-கை) அவ்வினுவிற்குத்தரங்கூறல்,

கிளர்மகனேகேள்தத்துவமறியார்கேட்டல்செயக்கடனே …*
தளர்வறுசிந்தித்தலின்முயல்வார்சிலர்சந்தேகங்களுளார் …*
தெளிதலினிற்பார்விபரீதப்பேய்நீராவாதனையோர் …*
வெளியுருவாயறிவாய்நிறைவாயினர்வேண்டுவதொன்றுண்டோ

(இ-ள்) கிளிர்மகனே - விளங்காநின்றபுத்திரனே—கேள் - கேட்கக்கடவாய்—தத்துவமறியார்-வுண்மைஞானத்தைத்தெரியாதவர்கள்—கேட்டு

ஸ்செய்க்கடன்-சிரவணஞ்செய்யவேண்டியதுகடமையாம்—சிலர்சந்தேக ங்களுளார்- கேட்டவஸ்துநிச்சயத்திற் சந்தேகமுள்ளவர்களாகிய சிலர்— தளர்விறுசிந்தித்தலின்முயல்வார்- தளர்வற்றிருக்கும்படி மனனஞ்செய் தலின் முயற்சிசெய்வார்கள்—விபரீதப்பேய்- ஒன்றையொன்றாகவறியும் பேய்த்தன்மையுள்ள—திராவாதனையோர்-நீங்காதவாதனையையுடையவர் கள்—தெளிதலினிற்பார்- நிருத்தியாசனத்தைக்கொண்டுசமாதியிலிருப்பா ர்கள்—வெளியுருவாய்பரமாகாசமாய்—அறிவாய்- அபரோட்சஞானமா ய்—நிறைவாயினர்- பரிபூரணமானவர்கள்—வேண்டுவதொன்றுண்டோ- விரும்புவதொன்றுளதோ—எ-று,

[இ-ம்]கேட்டன்முதலிய முன்றுவிவகாரங்களு மஞ்ஞானமுதலியமூன் றுமுள்ளமட்டும் வேண்டுமேயன்றி மேல்வேண்டப்படுவன வல்லவென் றதாம், (உகூ)

(அ-கை) விவகாரநீங்கிற் சீவன்முத்தர்க்கெங்ஙனமகம் பாவமுண்டாத ல் கூடுமெனவினுதல்.

ஐயாகேளீர்தத்துவஞானியுமஞ்ஞானிகள்போலச் ... ... *
செய்யாநின்றேன்கண்டேனுண்டேன்சென்றேனெனலாமோ
பொய்யாவிபரீதங்களவர்க்குப்போயினதென்றீரோ... ... *
மெய்யாம்பிரமவிவ்காரமிதன்றேவெளியாயுரையீரோ... ...*

(இ-ள்) ஐயாகேளீர்- எனதாசிரியரோகேட்டருள்வீர்—தத்துவஞானியு ம்-மெய்யுணர்வுடையசீவன்முத்தனும்—அஞ்ஞானிகள்போல- அஞ்ஞா னிகளைப்போல—செய்யாநின்றேன் - இதைசசெய்கின்றேன்— கண்டேன்- இதைப்பார்த்தேன்—உண்டேன்- இதைப்புசித்தேன்—சென்றேன்- இங் ஙனஞ்சென்றேன்—எனலாமோ- என்றுசொல்லலாமா— அவர்க்கு - அ ச்சீவன்முத்தர்களுக்கு—பொயயாம்விபரீதங்கள்- அசத்தியமானபேதபா வனைகள்—போயினதென்றீரோ- நீங்கினதென்றருளினீரோ—மெய்யாம்- தத்துவமான—பிரமவிகாரம்- பிரமவிவகாரமானது—இதன்றே- இஃதன் றே—வெளியாயுரையீர்- நன்றாகத்தெரியும்படிசொல்வீர்—எ-று,

[இ-ம்] சீவன்முத்தனஞ் ஞானிகளைப்போல விவகரிக்கினவர்களுக்குவி பரீதமெங்ஙன நீங்கிற்றெனவினவினதாம்,

(அ-கை) அவ்வினுவிற்குத்தரங்கூறல்.

ஓய்ந்தகனவிற்கண்டபழங்கதையோதுவன்வாதனையா... ...*
லாய்ந்தறிவுற்றவனப்படிசெப்புவனுபாசனுமாகான் ... ...*
மாய்ந்ததனுடல்வேமளவும்விண்ணவன்மனிதனெனப்படுவான்
மீய்ந்தசிதாபாசன்போமளவும்விவகாரந்தொடரும் ... *

(இ-ள்) ஓய்ந்த-இந்திரியங்களொழிந்த—கனவிற்கண்டபழங்கதை-சொ ர்ப்பனத்திற்கண்டபழங்கதையை—வாதனையால் - வாசனையினுல்—ஓது வ- சாக்கிரத்திற்சொல்லுவன்—அதுபோல- ஆய்ந்தறிவுற்றவன் வேத

முடிவான மகாவாக்கியார்த்தத்தை யாராய்ந்து தன்னையறிந்தசீவன் முத்தன்—அப்படி செப்புவன்- அத்தன்மையாகச்சொல்லுவான்—ஆபாசனுமாகான்-சிதாபாசனுகான்—மாய்ந்ததனுடல்வேமளவும்- மரித்ததேகந்தனமாகும்பரியந்தம்—விண்ணவன்- தேவனுயினேன்— மனிதனெனப்படுவான்- மனிதனென்றுசொல்லப்படுவான்—அதுபோல- வீய்ந்தசுதாபாசன்- சித்துருவமாகநசித்த சிதாபாசன்—போமளவும் - விதேகமுத்தியையடையுமளவும்—விவகாரந்தொடரும் - விவகாரந்தொடர்ந்து வரும்—எ-று,

[இ-ம்] சொர்ப்பனத்திற்கண்ட கற்பிதத்தைச்சாக்கிரத்திற் சொல்வதுபோல வஞ்ஞானநிலையிற்கற்பிதமாயுள்ள வுலகவிவகாரத்தை ஞானநிலையிற் சொல்வதேயன்றி யுண்மையன் றெனினுமவை விதேகமுத்திபரியந்தந் தொடருமென்பதாம். (கஅ)

(அ-கை) சகத்விவகாரநீங்கிச் சமாதிசெய்யினச்செயலு மோர் விவகாரமாதலிலவனெங்ஙன நிர்விவகாரியாவனெனல்.

ஆனலையாகுருவேகாண்பதசத்தியமென்றுல் ... ... ... *
நானுவிவகாரந்துயரலவோஞானசுகந்தருமோ ... ... *
போனலன்றோநன்றுநிட்டைபுரிந்திடல்வேண்டாவோ... ... *
தானுநிட்டைபுரிந்தாற்செய்கைதவிர்ந்தவனெப்படியோ ... *

(இ-ள்) ஆனலையாகுருவே- அப்படியானலென்பிதாவாகியவாசிரியரே—காண்பது- திரிசியம்—அசத்தியமென்றாலும்- பொய்யாயினும்—நானுவிவகாரம்- அதைப்பற்றியபலதொழில்கள்— துயரலவோ - துன்பத்தைத்தருபவைகளல்லவா—ஞானசுகந்தருமோ- சிதானந்தத்தைக் கொடுக்குமா—போனலன்றோ- அத்தொழினீங்கினலல்லவா—நன்றாம் - நன்மையாம்—நிட்டை- அவைகணீங்கும்பொருட்டுச்சமாதி— புரிந்திடல்வேண்டாவோ- செய்யவேண்டாமோ—தானுநிட்டைபுரிந்தால-தன்மையாகுருசமாதிசெய்தால்—எப்படி- எவ்விதம—செய்கைதவிர்ந்தவன் - தொழிலைவிட்டவன்—எ-று.

[இ-ம்] வெளிப்படை. (கஉ)

(அ-கை) அவ்வினுவிற்குத்தரம்,

தெரிதருமகனேயாரம்பத்தொடுநீரும்விவகார... ... ... *
முரியசமாதியும்விவகாரங்களுமுள்ளத்தொழிலன்றோ... ... *
துரியமரம்பொருளானவர்வேறெரு தொழில்செய்வதுமுண்
வுரியசமாதிகள்பழகுவனேலவனுடனுமன்றே ... [டோ

(இ-ள்) தெரிதருமகனே- உண்மையையறிகின்றபுத்திரா—உரியசமாதியும்- தனக்குரிய நிட்டையும்—விவகாரங்களும்- சகத்தொழில்களும்—உள்ளத்தொழில்- மனோவிவகாரங்களாதலால்—விவகாரம்- அத்தொழில்க

ள்—ஆரம்பத்தோடுதீரும - சிரவணுதிகளாற்றீரும— துரியாரம்பொரு ளாவா- துரியமானபிரமவஸ்துவானவாகள—வேறொருதொழில-மாறொ ருகிரியை—செயவதுமுண்டோ- செய்வதுமுளதோ— அரியசமாதிகள- அருமையானஞானநிட்டைகளை —பழகுவனேல்- அபபியாசிபபானுகில-- அவன்- அவ்வபபியாசி—ஆரூடனுமமன்று அனுபவியலலன—எ று. சக த்விவகாரஞ் சமாதியினுஞ்சமாதி விவகாரஞ்சாக்ஷாத்காரத்திலுநிகழுமெ னககொள்க. [இ-ம்] சித்துவிவகாரமான சமாதியுமபபியாசிக்கேயன்றியா ரூடனுக்கின்றென்பதாம். (அரு)

(அ கை) ஆரூடர்களிலுஞ் சிலர்சமாதிமுதலிய வற்றைசசெய்வதென் னென்ன வினுதலுக்குத்தரம.

உத்தமகுருவேயாரூடருமாயொருதொழிலறவைருள் ... *
சித்தமடங்குஙியாருதிகளசிலாசெய்குவதெதனனென்று .....*
வித்தலமருவுமபிராரத்தவபபிவிவெபபடியப்படியே ... ... *
முத்தருமவெகுவிதமாகுவொனபதுமுனனேசொன்னேனே*

(இ-ள்)உத்தமகுருவே-நன்மையான தேசிகரே—ஆரூடருமாய-சுவானு பவமுளளவாரூடருமாய—ஒருதொழிலறவருள- ஒருகிரியையுமிலலாதவ ரசருள—சித்தமடங்கு- மனமடங்குகின்ற—ஙியாருதிகள சமாதிமு தலியவைகளை—சிலா சிலாகள—செய்குவதென்னென்று- செய்வதெ னனென்று கேட்பாயாகில— இத்தலமருவும இப்பூமியிற்பொருந்தும — பிராரத்தவபபிவு பிராரத்தவகன்மப்பகுபபு—எப்படி எவவிதமோ —அப் படியே- அவவிதமேயாம—முத்தரும சீவன்முத்தரும—வெகுவிதமாகு வொன்பது நாநாவிதமாயிருபபாரகளென்பதை—முனனேசொன்னேனை முன்னாசசொன்னேனை—எ-று.

[இ-ம்] ஆரூடன்றொழிலபிராரத்தவகன்மயனெ வழிகவெனபதாம் (நூச)

(அ-கை) (இ-து)

நல்லவனேகேளுலகுபகாரஞானிகளவிவகார .. . . .. *
மல்லதுவேறொருபெறுபேறும்மிலையதனுபபிணியுமிலை ... *
வல்லசிருட்டிமுதலபலதொழிலாலவருபுண்ணியபாவ *
மெல்லவருக்குமனுக்கிரகஞ்செயுமீசனடைட்டுதிலனே ... *

(இ-ள்) நல்லவனேகேள்-நன்மையானமாணக்கனேகேட்பாய—ஞானி கள்விவகாரம-ஞானவான்கடொழில--உலகுபகாரமலலது லோகோபகா ரநிமித்தமேயன்றி—வேறொரு-மற்றொரு—பெறுபேறுமிலலை- அடை யக்கடவதாயபயனெனறுமிலலை—அதனல்- அக்கிரியையினுல —பிணியு மிலை-துன்பமுமில்லை—அஃதெங்ஙனமென்னின்- வலலசிருட்டிமுதல வ ல்லமையானசிருட்டியாதி--பலதொழிலால நாநாவிதகிருத்தியங்களினுல —வருபுண்ணியபாவம்- வராநின்றதருமாதருமம—எலலவருக்கும யாவ ருக்கும்—அனுக்கிரகஞ்செயும்- அளிக்கின்ற—ஈசனடைட்டுதிலன - ஈசனை டைகிலன்—எ-று.

[இ-ம்] அருட்டன்செய்யுந்தொழிலீசனைப்போலுலகோபகாரநிமித்தமே யானி தன்னிமித்தமன்றென்பதாம். [௩௫]

(அ-கை) வஞ்சகமில்லென்ற செய்யுண்முதலிது காறுஞ்சித்திலுத்தித்த மனஞ்சலனமின்றிச்சித்தாக விளங்குமென்பதை விளக்கியினிச்சித்து வியாபகத்தைவிளக்கும்பொருட் டம்மனமுள்ள ஞானவானீசனுக்கொப்பாவனெனக் குறிப்பாற்கூற வெங்ஙனமொப்பாவனென்ற வினாவுக்குத்தரம்.

ஈசனுமாயருவாயுருவாகி யெழுந்தருளுங்குருவே... .. *
யீசனுஞானியுமொப்பென்றீரே யெப்படியொப்பென்று *
லீசனுஞானியுமமதையகந்தை யிகந்தநிலொப்பா ...*
மீசனுமாம்பலசீவருமாமுல கெல்லாமிவனுமே ...*

(இ-ள்) அருவாய்-நிஷ்களமாய்—ஈசனுமாய்-மும்மூர்த்தியுமாய்—உருவாய்-மானிடவடிவுமாய்—எழுந்தருளுங்குருவே- எழுந்தருளியவாசிரியரே—ஈசனும்-மாயாரகிதரான மும்மூர்த்திகளும்—ஞானியும்-ஞானவானும்—ஒப்பென்றீரே-சமானமென்றீரே—எப்படியொப்பென்றால்-என்விதஞ்சமானமாவாரென் றுகேட்பாயாகில்—ஈசனும்-ஈஸ்வரனும்—ஞானியும்-ஞானவானும்—மமதையகந்தை-மமதையுமகந்தையும்—இகந்தநிலொ ல்-நீங்கிநிற்றலால்—ஒப்பாம்-சமானமாவர்—இவன்- இந்தஞானி—ஈசனுமாம்-மும்மூர்த்தியுமாவன்—பலசீவருமாம்- அந்தசீவர்களுமாவன்—உலகெல்லாம்-சகங்களனைத்தும்—ஆம்-ஆவான்—எ-று.

(இ-ம்) அறிஞனீசனுக் கொப்பாவனென்பதற்கேதுகூறி மற்றுஞ்சீவேஸ்வரசகத்தாகவும் விளங்குவானெனக்கூறினதாம் (௩௬)

(அ-கை) அறிஞனெங்ஙனஞ் சீவர்களாக விளங்குவானெனவினுதல்.

எல்லாச்சீவருமிவனுமென்றீரிவன்முன்முத்தியடைந் ...*
தெல்லாச்சீவருமுத்திபெறாமலிருப்பானேனையா... ...*
வெல்லாச்சீவரும்வெவ்வேறானவிவனெல்லாமலனே ...*
யெல்லாப்பொருளுமுரைத்தருள்குருவேயிதைநீர்மொழியீரே

(இ-ள்) எல்லாச்சீவரும்- சகலசீவர்களும்—இவனுமென்றீர்- இந்தஞானியாவனென்றுசொன்னீர்—இவன்முன்- இந்தஞானி—முத்தியடைந்துவிட்டடைய—எல்லாச்சீவரும்-சகலசீவர்களும்—முத்திபெறாமல்-வீடடையாமல்—இருப்பானேன்- இருப்பதென்ன—ஐயா-ஆசிரியரே—எல்லாச்சீவரும்-சகலசீவர்களும்—வெவ்வேறானால்- தனித்தனியாயிருப்பராயின்—இவன்- இந்தஞானி—எல்லாமலனே - அனைத்துமாகானே—எல்லாப்பொருளும்-சர்வார்த்தங்களையும்—உரைத்தருள்குருவே-அருளுகின்றதேசிகரே—இதைநீர்மொழியீர்- இச்சங்கைக்குத்தரந்தேவரீரருள்செய்வீர்—எ-று-முத்தியடையவென்பது அடைந்தெனத்திரிந்துநின்றது.

(இ-ம்) ஞானவானுயிர் வொருவன்பெற்றபேரனை யுயிர்களபொருமையா யிவனெல்லாமாவ னெனப்பெத்தங்ஙனங்கூடு மெனவினாவினதாம்(௩௭)

(அ-கை) அவ்வினவிற்குத்தரங்கூறல்,

அகமெனுமான்மாபூரணமேகமநேகவிதஞ்சீவ ...*
னகமெனுமந்தக்கரணவுபாதிகளளவிலையாதலினற்... *
சகமுழுதுங்குளிர்சந்திரனேகஞ் சலசந்திரரும்பலவாஞ் *
சகமதிலேரிகுளஞ்சிறுகுழிசாலசட்டிகுடம்பலவால் *

(இ-ள்) அகமெனுமான்மா-நானெனனுமாத்மாவானது—பூரணமேகம் பரிபூரணமானவொன்றாம்—அகமெனும்- நானென்கின்ற அந்தக்கரணவுபாதிகள் -மனோவுபாதிகள்—அளவிலை-மட்டில்லை—ஆதலினல்- ஆதலால்—சீவன்-சிதாபாசன்—அநேகவிதம்- நாநாவிதங்களாம்—சகமுழுதும் உலகமனைத்தும்—குளிர் - குளிர்ச்சிசெய்கின்ற—சந்திரனேகம்-மதியொன்று—சகமதில்-உலகத்தின்கண்—ஏரி-ஏரிகளும்—குளம்-தடாகங்களும் —சிறுகுழி- சிறியபள்ளங்களும்—சால்-சால்களும்—சட்டி- சட்டிகளும் —குடம்-குடங்களும்—பலவால்- பலவாதலால்—சலசந்திரரும்பல-சலப்பிரதிப்பிம்பரான சந்திரர்களுமநந்தமாம்—எ-று.

(அ-கை) (இ-து)

சட்டிகுடங்களினென்றுநசித்திடவதனுட்சலசந்திர ...*
னொட்டுமுதற்சந்திரனொடுகூடுமொழிந்தவைகூடாவே *
கட்டுமுபாதிநசித்திடுசீவன்காரணவான்மாவிற்... ...*
கிட்டுமைக்கியமுப்பாதிகெடாதவர்கேவலமாகாரே... ...*

(இ-ள்) சட்டிகுடங்களில் - சட்டிகடமுதலியவைகளின்— ஒன்றுநசித்திட- ஒன்றுகெட—அதனுட்சலசந்திரன்- அதற்குட்டோன்றிய பிரதிபிம்பசந்திரன்—ஒட்டும்- பொருந்திய—முதற்சந்திரனொடுகூடும்- பிம்பசந்திரனோடுசேரும்—ஒழிந்தவை- ஏனைய—கூடாவே - கூடாவாமவைபோல—கட்டுமுபாதி- பந்தித்திருககுமுபாதியாமை—நசித்திடுசீவன் - மரித்தசீவனனவன்—காரணவான்மாவில் - ஆதாரமானவாத்மஸ்வரூபத்தில்—கிட்டும் - ஐக்கியமுண்டாம்—உபாதிகெடாதவர்- அவித்தைநீங்காதவர்கள் —கேவலமாகார்- கைவல்லியத்தையடையமாட்டார்கள்—எ-று.

[இ-உ-க-ம்] ஓர்கடசலநசிக்கினதிற் பிரதிபிம்பித்த சந்திரன் பிம்பசந்திரனுவனன்றி யேனையபிரதிபிம்ப சந்திரர்களாகார்போல ஓரவித்தை நசிக்கினதிற் றோன்றிய சீவன் சிவமாவனே யன்றி யேனைய சீவர்க ளாகாரென்பதாம். (கூச)

(அ-கை) முன்பறிஞனீசனுக் கொப்பென்றீரங்ஙனமாயினவர் மகிமையிவனுக்கே னின்றெனவினுதல்.

இவனயன்மால் சிவனுகியவீசரொடெப்படியொப்பாகுஞ்...*
சிவன்முதன்மூவருமகிலசிருட்டிதிதிநாசங்கள்செய்வா *
ரவர்பிறர்மதிகளுமுக்காலங்களுமறிவார்விபுவாவார் ...*
தவமிகுகுருநீவேயிவனுக்கவைபோற்சற்றுங்காணேனே *

[இ-ள்] இவன்-இந்தஞானி—அயன்மால்சிவனாகிய-பிரமவிஷ்ணுருத்திரராகிய—ஈசரோடு- மும்மூர்த்திகளுடன்—எப்படியொப்பாகும்- எவ்விதஞ்சமானமாவன்—சிவன்முதன்மூவரும்-உருத்திரன்முதலிய மும்மூர்த்திகளும்—அகிலம்-சகத்தை—சிருட்டி- உண்டாக்குதலும்—திதி-இரட்சித்தலும்—நாசங்கள்-அழித்தலும்—செய்வார்-செய்வார்கள்—அவர்-அவ்வீஸ்வரர்—பிறர்மதிகளும்-பிறரறிவையும்—முக்காலங்களும்- திரிகாலங்களையும்—அறிவார் - தெரிவார்—விபுவாவார் - வியாபகமாவார்கள்— தவமிகுகுருவே-தவத்தின்மிகுந்தவாசிரியரே—இவனுக்கு-இந்தஞானிக்கு—அவைபோல்- அவற்றைப்போல—சிற்றுங்காணேன் - எவ்வளவும் பார்த்திலன்—எ-று.

[இ-ம்] வெளிப்படை. (சய)

(அ-கை) அவ்வினாவிற்குத்தரம்.

தடத்துநீர்நிலாத்திரிபெரியுபயமுந்தழுவுமூர்தனைக்காக்கும் [க்கு
குடத்துநீர்விளக்கினிலொளியிரண்டு மோர்குடும்பமாத்திரங்கா
மடுத்தமைந்தனேஞானியுமீசனுமறிவினாற்பிறிவில்லைக் [வாமால்
கெடுத்தமாயையின்குணங்களான் மேலென்றுங்கீழென்றும்பிரி

(இ-ள்) தடத்துநீர்- தடாகத்துசலமும்—நிலாத்திரியெரி- பகல்வர்த்தியுமாகிய—உபயமும்- இரண்டும்—தழுவுமூர்தனைக்காக்கும்- பொருந்திய வூரையிரட்சிக்கும்—குடத்துநீர்- கடத்துச்சலமும்— விளக்கினிலொளி-தீபப்பிரகாசமுமாகிய—இரண்டும்-உபயமும்— ஓர்குடும்பமாத்திரங்காக்கும்- ஒரு குடும்பத்தைமாத்திர மிரட்சிக்கும்—அடுத்தமைந்தனே- சத்துக்களையடைந்தபுத்திரா—ஞானியும்- ஞானவானும்—ஈசனும்- ஈஸ்வரனும்—அறிவினாற்பிறிவில்லை- ஞானத்தினாலேவேறுபாடில்லை— கெடுத்த பிரமகத்திசெய்த—மாயையின்குணங்களால் - மாயையின்றன்மைகளால் —மேலென்றும்-கீழென்றும்- தாழ்வென்றும்ய-உர்வென்றும்— பிரிவாம் -வேறாகும்எ-று

"(இ-ம்) ஏரிநீரூரையுங் கடநீரில்லத்தையுங் காக்குமிடத்திற சிறிதுபெரிதென்னுந் தொழிற்பேதமேயன்றிக் காக்குந்தன்மை யொன்றாவதுபோல ஈசனுக்கு ஞானிக்கு மாயை யவித்தைகளாற்றாரதம்மியமிருக்கினுமறிவின்றன்மையி லொப்பாவனென்பதாம்," (சக)

(அ-கை) (இ-து)

நரரின்மன்னனைச்சித்தரைப்போலவேநாரணன்முதலான ...*
சுரர்கண்மாயைவல்லவரணிமாதிகடொக்கமாதவமிக்கோர்...*
தரணிமானிடர்க்கவைகளில்லாமையாற்றாழ்வுளராளுனும்.. *
பிரமபாவனையாலிவரவரொனும்பேதமொன்றிலைபாராய்.. ...*

(இ-ள்) நரரில்- மானிடரில்—மன்னனை - அரசனைப்போலவும்—சித்தரைப்போல- சித்தர்களைப்போலவும்—நாரணன்முதலான- திருமான்முதலிய—சுரர்கள்- தேவர்கள்—மாயைவல்லவர்- மாயையில்வல்லமையுடையவர்களாதலால்—அணிமாதிகடொக்க-அணிமாமுதலியவட்டசித்திகணி

றைந்த—மாதவமிக்கோர்-மகாதவத்தின்மிகுந்தவர்களாவர்—தரணிமானிடர்க்கு - பூமியிலுள்ளமனிதர்களுக்கு—அவைகளில்லாமையால்- அவைகளில்லாமையால்—தாழ்வுளராஞலும் - தாழ்வையுடையவர்களாஞலும்—பிரமபாவனையால்- பரமதிருஷ்டியிஞல்—இவர்- இவர்கள்மானிடரெனவும்—அவர் - அவர்கள்தேவர்களெனவும்—பேதமொன்றிலை பாராய்- வேறுபாடொன்றிலையெனக்காணபாய்—எ-று.

[இ-ம்] மானிடரிற் சித்தருக்குள்ளமகிமை கண்மற்றவர்களுக்கின் றாயினு மம்மானிடத்தன்மையி லொப்பாவதுபோலச் சித்துருவமான திரிமூர்த்திகளுஞ் சீவன்முத்தர்களுந்தேவத்தன்மை மானிடத் தன்மைகளால் வேற்றுமையுள்ளோராயினுஞ்சித்துத்தன்மையிலொப்பாவரென்பதாம்()

(அ-கை) அணிமாதிகவீசனதாயினவிஞனுக்கெங்ஙன முண்டாயிற்றெனிலவனைநோக்கி யுபாசனை செய்ததிஞலாமெனக்கூறல்.

முத்திநல்கியசற்குருவேபலமுனிகளுக்கணிமாதி ... ... *
சித்திபூமியிற்கண்டிருக்கவுமந்தச்செல்வமீசனதென்றீர ...*
புத்தியொத்திடவுரைத்தருளென்றிடிற் புகழுமீசனைவேண்டிப்
பத்திசெய்திடுந்தவத்திஞல்யோகத்தாற்பலித்ததென்றறிவாயே

(இ-ள்) முத்திநல்கிய- வீடருளிச்செய்த— சற்குருவே - ஞானதேசிகரே—பலமுனிகளுக்கு- அநந்தமிருடிகளுக்கு—அணிமாதிசித்தி - அணிமாமுதலியவஷ்டசித்திகளுண்டாயிருப்பதை — பூமியிற்கண்டிருக்கவும்- இவ்வுலகத்திற்பார்த்திருக்கவும்—அந்தச்செல்வம்- அச்செல்வமானது—ஈசனதென்றீர் - ஈஸ்வரனதென்றுசொன்னீர்—புத்தியொத்திட- அறிவிலொவ்வும்படிக்கு—உரைத்தருள்-சொல்லவேண்டும்—உன்றிடில்-என்றுகேட்பாயாகின்—புகழுமீசனைவேண்டி - துதியாநின்றவீஸ்வரனைவிரும்பி—பத்திசெய்திடுந்தவத்திஞல் - பத்திசெய்கின்றதவத்திஞலும்—யோகத்தால்-கன்மயோகத்திஞலும்—பலித்ததென்றறிவாய்- கிடைத்ததென்றறிந்கொள்வாய்—எ-று.

[இ-ம்] வெளிப்படை (௬௫)

(அ-கை) முன்புள்ள ஞானிகளைப்போல விவர்களுக் கணிமாதிகளேனில்லையெனவிஞதல்,

சிவசொருபமாந்தேசிகமூர்த்தியேசித்தமுத்திகளிரண்டுந் ...*
தவமுளோரடைகுவரெனிலவர்கள்போற்சகலருமடைவாரோ
வவர்கள்பூருவசித்தியுஞானமுமடைந்ததுங்கண்டோமே ...*
யிவர்கண்ஞானிகளென்றூற்சித்திகளிவர்க்கிலாவகையேதோ *

(இ-ள்) சிவசொருபமாம்- சிவகாரமாகிய—தேசிகமூர்த்தியே - குருமூர்த்தியே—சித்திமுத்திகள்- அணிமாதிசித்தியு மோட்சமுமாகிய—இரண்டும்- உபயத்தையும்—தவமுளோர்- தவத்தையுடையவர்கள்— அடைகுவரெனில்-அடைவார்களென்ருல்— அவர்கள்போல் - அத்தவத்தரைப்போல—சகலருமடைவாரோ- அனைவருமடைவார்களா— அவர்கள்-அந்

தவமுடையவர்கள்—பூருவ- முன்புள்ள—சித்தியும் - அணிமாதிசித்தியும்—ஞானமும்- முத்தியும்—அடைந்ததுங்கண்டோம்- பெற்றதுமாகமப்பிரமாணத்தாற்பார்த்தோம்—இவர்கண்ஞானிகளென்றால்- இவர்களைஞானவான்களென்றுசொன்னால—சித்திகள் - அணிமாதிசித்திகள்—இவர்க்கிலாவகையேது- இவர்களுக்கில்லாதவிதமியாதினால்—எ-று,

[இ-ம்] வெளிப்படை,

(அ-கை) அவ்வினாவிற்குத்தரம்.

காமியத்தவங்காமியமொன்றையுங்கருதிடாத்தவமென்றும் *
பூமியிற்றவமிருவகைசித்தியும்போதமுந்தருமைந்தா... .. *
வாமிவற்றிலொன்றியற்றினரொன்றையேயடைகுவரிதுநீர்மை
யாமுரைத்தவவ்விரண்டையுமியற்றினரன்றுளபெரியோரே *

(இ-ள்) காமியத்தவம் - காமியதபசெனவும்— காமியங்கருதிடாத்தவமென்றும்- நிஷ்காமியதபசெனவும்—பூமியில் - உலகத்தில—தவமிருவகை- தவமிரண்டுவிதமாம்—சித்தியும்- காமியதபஞ்சித்தியையும்—போதம்- நிஷ்காமியதபமுத்தியையும்— தரும்- கொடுக்கும்—மைந்தா- மாணாக்கா—ஆமிவற்றில்- ஆகாநின்றவிவ்விரண்டில்—ஒன்றியற்றினர்- ஒன்றையப்பியாசஞ்செய்தவர்கள்—ஒன்றையேயடைகுவர்- அவ்வொன்றினையேயடைவார்கள்—இதுநீர்மை- இதுநிச்சயமாம்—அன்றுளபெரியோர்- அப்போதுள்ளமகான்கள்—யாமுரைத்த - நாம்சொன்ன—அவ்விரண்டையுமியற்றினர்- அக்காமியத்தவநிஷ்காமிய தவமென்னுமிரண்டிலுமுயற்சிசெய்தார்கள்—எ-று.

[இ-ம்] முன்னுள்ளஞானவான்களிற் சிலரிரண்டுதவத்தையுமனுசந்தித்ததனாற்சித்தி முத்திகளிரண்டையும் பெற்றார்களென்பதாம். (சரு)

(அ-கை) (இ-து)

அனகமைந்தனேமுத்திஞானத்தையேயடைந்தனரல்லாமற் *
சனகன்மாபலிப..........ன்முதலினோர்சித்திகள்படித்தாரா...... *
இனியசித்தியை...மயபினர்சிலர்சிலரிரண்டையுமுயன்றார்கண்
முனிவர்சித்திகள்விநோதமாத்திரந்தருமுத்தியைத்தாராவே ,*

(இ-ள்) அனகமைந்தனே- களங்கமற்றவனே—சனகன்-சனகராசன்—மாபலி- மகாபலிச்சக்கரவர்த்தி—பகீரதன்-பகீரதராசன்—முதலினோர்- ஆதியானவர்கள்—ஞானத்தை- ஞானத்தையப்பியாசித்து—முத்தி- மோட்சத்தை— அடைந்தனரல்லாமல் பெற்றார்களேயன்றி—சித்திகள்படித்தாரா—அணிமாதிசித்தியையப்பியாசஞ்செய்தார்களா—சிலர் -சில்முனிவர்கள்—இனியசித்தியைவிரும்பினர்- இனிமையானவணிமாதிசித்தியைமாத்திரம் விரும்பினார்கள்—சிலர்-சில்முனிவர்கள்— இரண்டையுமுயன்றார்கள்- சித்திமுத்திகளிரண்டையுமப்பியாசித்தார்கள்—முனிவர்சித்திகள்-முனிவரப்பியாசித்தவணிமாதி சித்திகளானவை—விநோதமாத்திரந்

ருமெ- காலம்போக்கும்விளையாட்டைமாத்திரங்கொடுக்கும்—முத்தியைத்தா ரா- மோட்சத்தைக்கொடுக்கமாட்டா—எ-று.

[இ-ம்] யோகத்திலணிமாதிகளைப் பெற்று மவைகளாற்பயன் படாம ற் பின்னர்ஞானப்பேற்றினுன் முத்தியைப்பெற்றார்க ளாதலா லச்சத்திக ளைஞானிகள் விரும்பவில்லையென்பதாம். (சசு)

(அ-கை) சித்திகளிற்பயனின் றென்பதுதெரிந்துஞ் சிலஞானிகளேன தைவிரும்புகின்றார்களென்ன வினுதலுக்குத்தரம்.

யோகஞானமேமுத்தியைத்தருமெனிறெழிந்தசித்திகள்வேண்டி *
மோகமாயுடல்வருந்தினர்சிலசிலமுத்தர்களேனென்றாற் ...*
போகமாய்வரும்பிராரத்வகன்மங்கள்புசித்தன்றேநசித்தேகு *
மாகையாலந்தச்சித்திகள்பிராரத்வமாகுமென்றறிவாயே ...*

(இ-ள்) யோகஞானமே- ஐக்கியமானவத்துவிதஞானமே—முத்தியைத்த ருமெனின்-மோட்சத்தைக்கொடுக்குமாயின்—ஒழிந்தசித்திகள்- அதுநீங் கியவணிமாதிசித்திகளை—வேண்டி - விரும்பி—மோகமாய்- ஆசையுற்று —சிலசிலமுத்தர்கள்- சிலசீவன்முத்தர்கள்—உடல்வருந்தினர்- தேகம்வ ருத்தமுற்றார்கள்—ஏனென்றால் - அவ்வாறுவருந்தியதியாதினுறென்னில் —போகமாய்வரும்-அநுபோகமாய்வருகின்ற—பிராரத்வகனமங்கள்- பி ராரத்வகன்மங்களானவை—புசித்தன்றேநசித்தேகும் -புசித்தல்லவாகெ ட்டுப்போம்—ஆகையால்-ஆதலால்—அந்தச்சித்திகள் - அவர்கள்பெற்ற வணிமாதிசித்திகள்—பிராரத்வமாகுமென்று-இச்சாபிராரத்வமாகுமென் று—அறிவாய்-அறிந்துகொள்வாய்—எ-று.

(இ-ம்) சித்தியைவிரும்புவது பிராரத்வகன்மமென்பதாம (சஎ)

(அ-கை) ஐயந்தெளிவித்த வாசிரியனையன்பின் வியந்துதுதித்தல்,

இலக்கமாயிரஞ்சுருதியாலூகத்தாலென்மனமசையாமற் ...*
பிலக்கவேண்டுமென்றருட்குருவேயகப்பிராந்திபோய்த்தெளிவாே
ன், முலக்கமானகண்ணடியையடிக்கடிதுலக்கினுற்பழுதன்றே *
யலக்கண்மாற்றியதேவரீரெனக்குரையமுதங்[illegible]ட்டவிட்டாவே *

(இ-ள்)இலக்கமாயிரஞ்சுருதியால்-அளவற்றவேதங்களினுலும்—ஊகத்தா ல்-யுத்தியினுலும்—என்மனம் - என்மனமானது— அசையாமற்பிலக்க வேண்டுமென்று - சலனமின்றிஸ்திரமாயிருக்கவேண்மென்று—அருட்கு ருவே-அனுக்கிரகஞ்செய்யுந்தேசிகரே—அகப்பிராந்திபோய் - மனதின்க ணுள்ளமயக்கநீங்கி--தெளிவானேன்-தெளிவையடைந்தேன்—துலக்கமா னகண்ணடியை-விளக்கமானகண்ணடியை—அடிக்கடிதுலக்கினுல்-திரும் பத்திரும்பவிளக்கினுல்—பழுதன்றே- குற்றமல்லவே—அலக்கண்மாற்றி ய-பவத்துன்பநீக்கிய—தேவரீர்- சுவாமிகள்—எனக்குரை- அடியேனுக்க ருளிய—அமுதங்கள்-உபதேசாமுதங்கள்—தெவிட்டா- புசிக்கப்புசிக்கத் தெவிட்டாவாம்—எ-று.

[இ-ம்] வெளிப்படை (அச)

(அ-கை) கிரமசிருஷ்டியான் சிவேஸ்வரசகத்விவகாரங்களறிஞனதுபி ராரத்வமென்றறிந்த சீடனதற்குவித்தாக வுகடித்திசிருஷ்டியினுலமைந்து கிடக்கின்ற சஞ்சிதத்தைக்கெடுக்கும் பெர்ருட்டஃது நசிக்குமென்ற விரண்டுவகையில் யாதுண்மையெனவினைதல்.

கைதவங்களைச்சாத்திரஞ்சொல்லுமோகருணையாலெனையாளு ... ... ...*
மையனேகுருவேயெவராகிலுமனுபவித்தாலன்றிச் ... ... ... ...*
செய்தகன்மங்கள்விடாதென்றவசனமுஞ்சென்மசஞ்சிதம்வேகக ... *
துய்யஞானத்திசுடுமென்றவசனமுந்துணிவதெப்படிநானே... ... ...*

(இ-ள்) கைதவங்களை- அசத்தியங்களை— சாத்திரஞ்சொல்லுமோ- நூல்களுரைக்குமோ—கருணையால்-கிருபையினுல்—யெனையாளும்- அடியேனையாளாநின்ற—ஐயனேகுருவே- என்னுண்டவனுகிய வாசாரியரே—எவராகிலும்- யாவராகிலும்—செய்தகன்மங்கள் - செய்தசெநநபீசமாகிய சஞ்சிதவினைகளை—அனுபவித்தாலன்றி- புசித்தாலல்லது—விடாதென்ற வசனமும்- நீங்காதென்றவாக்கியமும்—வேக- அஃதுநீறுகும்படி—துய்யஞானத்தி- பரிசுத்தமான ஞானுககினியானது—சுடுமென்றவசனமும்- எரிக்குமென்ற வாக்கியமுமாகியவிரண்டையும்—நான் - அடியேன்—துணிவதெப்படி- தெளிவதெவ்விதம்—எ-று.

(இ-ம்) சஞ்சிதகன்மமனுபவித்தாற்றீரும் ஞானத்தாற்றீருமென்றவசனத்தில் யாதுறுதியென வினவினதாம். (சக)

(அ-கை) அவவினவிற்குத்தரம்.

சிவபேதங்கள்ளவில்லைமைந்தனேசெய்கையுமளவில்லை... ... ... ...*
யாவவாமவரதிகாரங்களறிந்துபக்குவநோக்கிப் ... ... ... ... *
பூவலர்ந்துபின்பலங்கள்காட்டுவனபோற்பூருவஞ்சித்தாந்தம் ... ...*
காவல்வேதங்களிரண்டையும்வசனிக்குங்காண்டமூவகையாலே ... ...*

(இ-ள்) மைந்தனே- மாணுக்கனே—சீவபேதங்கள்-சீவர்களுடையவேறுபாடுகள்—அளவில்லை- மட்டில்லை—செய்கையுமளவில்லை- அவர்கள்செயலுமட்டில்லை—ஆவவாம்- அவரவர்களுக்காவனவாகுமாதலால்—அவரவரதிகாரங்களறிந்து- அவரவர்களி னதிகாரந்தெரிந்து— பக்குவநோக்கி- பருவம்பார்த்து—பூ- மலரானது—அலர்ந்து- விகசித்து—பின்-பின்பு—பலங்கள்காட்டுவனபோல்- பயனைக்கொடுப்பதுபோல— காவல்வேதங்கள்- நம்மைக்காக்குகின்ற சுருதிகள்—காண்டமூவகையால்- கர்மகாண்டம் பத்திகாண்டஞானகாண்டமென்னு மூன்றுபகுப்பினுல்—பூருவம்- பூருவபட்சவாக்கியமும்—சித்தாந்தம்- சித்தாந்தவாக்கியமுமாகிய—இரண்டையும்வசனிக்கும்- இரண்டுவகையையுஞ் சொல்லும்—எ-று.

[இ-ம்] சீடனது பக்குவத்திற்கேற்கப் பூருவபட்சஞ் சித்தாந்தமெனவிரண்டாக வேதங்கூறுமென்பதாம். (ருய)

(அ-கை) (இ-து)

ஆனபாவிகளடைவனரகங்களவசியமானுலுந் ... ... ... ... ...*
தானமந்திரவிரதமோமங்களாற்றவிருமென்பதுபொய்யோ... ... *
வீனமாம்பலசன்மசஞ்சிதவினையெத்தனையானுலு ... ... ... ... *
ஞானமாங்கனல்சுடுமென்றமறைமொழிநம்பினுல்வீடுண்டே ... ...*

(இ-ள்) ஆனபாவிகள்- கொடிதானபாவிகள்—அடைவதுநரகங்கள்-நரகங்களையடைவது—அவசியமானுலும்- உண்மையானுலும்—தானம்- தானங்களினுலும்—மந்திரம்- மந்திரஙகளினுலும்— விரதம்-நோன்புகளினுலும்— ஓமங்களால்- யாகங்களினுலும்—தவிருமென்பது - ஒழியுமெனபது—பொய்யோ- அசத்தியமா—ஈனமாம- இழிவாகிய—பலசன்ம-அனந்தசனநத்தைக்கொடுக்கும்—சஞ்சிதவினை - சஞ்சிதகன்மம்— எத்தனையானுலும்- எவ்வளவுசேர்ந்திருககினும்—ஞானமாங்கனல் - ஞானுககினியானது—சுடுமென்ற-எரிககுமென்ற—மறைமொழி- வேதவாக்கியத்தை—நம்பினுல்- நம்புவானுனுல்—வீடுண்டு- முத்தியுண்டாகும—எ-று.

[இ-ம்] அனுபவித்துத்தீருமென்ற பூருவபட்சத்தைநீக்கி யறிவினுற்கெடுமென்ற சித்தாந்தத்தைக் கொண்டறிவைவளர்ககிலதனுற்சஞ்சிதங்கெடுமெனபதாம். (௫௧)

(அ-கை) சஞ்சிதத்தைக்கெடுக்குஞான மிருக்கக்கனமத்தை விரும்புவதென்னெனவினுவல்.

என்மனந்திருக்கோயிலாத்தினங்குடியிருந்தருள்குருமூர்த்தி ... ... *
சென்மசஞ்சிதவினையைவேரறுத்திடுந்தேவரீர்மெய்ஞ்ஞானந் ... ...*
தன்மயந்தருமகிமையைவிபுதரர்சகத்துளோரறியாமற் ... ... *
கன்மமாங்குழியினில்விழுந்தழிகின்றகாரணமுரையீரோ ... ... ...*

(இ-ள்) என்மனம்- அடியேனிதயாம்பரமே—திருக்கோயிலா - சிறந்தகோயிலாக—தினம்- எப்போதும்—குடியிருந்தருள் - குடிகொண்டிராநின்ற— குருமூர்த்தி-தேசிகமூர்த்தியே—சென்மசஞ்சிதவினையை - பவவிருட்சமானசஞ்சிதகன்மத்தை—வேரறுத்திடும்-மூலத்தோடுகெடுக்கின்ற தேவரீர்மெய்ஞ்ஞானம்- சுவாமிகள்போதிக்குமுண்மைஞானமானது—தன்மயந்தரும்- தனதுஸ்வரூபத்தைக்கொடுக்கும்—மகிமை-பெருமையை—விபுதரர்- வானவரும்—சகத்துளோர்-உலகத்தாரும்—அறியாமல்-தெரியாமல்—கன்மமாம்-கிரியையாகிய—குழியினில் - படுகுழியில்—விழுந்தழிகின்ற- வீழ்ந்துகெடுகின்ற—காரணமுரையீர் - காரணத்தைச்சொல்வீர்—எ-று.

[இ-ம்] வெளிப்படை. (௫௨)

(அ-கை) (இ-து) அவ்வினுவிற்குத்தரம்.

அழிவிலாததற்பதந்தனைமைந்தனேயகமுகத்தவர்சேர்வார்... ... ...*
வழிநடப்பவர்பராமுகமாகினுன்மலர்ந்தகணணிருந்தாலுங் ... ...*

குழியில்வீழ்வர்காணப்படிவெளிமுகங்கொண்டுகாமிகளானோர்... ...*
பழிதரும்பிறவிக்கடலுழலுவார்பரகதியடையார்ோ ... ... *

(இ-ள்) அழிவிலாத-கெடாத—தற்பதந்தனை- பிரமபதத்தை— மைந்தனே- புத்திரா— அகமுகத்தவர்சேர்வார்- அந்தர்முகத்தை யுடையவர்களடைவார்கள்—வழிநடப்பவர்- மார்க்கத்திற்செய்பவர்கள்— பராமுகமானால்-பரார்முகமானால்—மலர்ந்தகண்ணிருந்தாலும்- விக்சிதமான நேத்திரமிருக்கினும்—குழியில்வீழ்வர்காண் - பள்ளத்தில்விழுவார்கள்—அப்படி- அவ்வண்ணம்—வெளிமுகங்கொண்டு- பகிர்முகத்தினால்— காமிகளானோர்- இச்சையையுடையவர்கள—பழிதரும்- பழியைக்கொடுக்கின்ற—பிறவிக்கடலுழலுவார் - பவசமுத்திரத்திற்சுழலுவார்கள்—பரகதி-முத்தியை—அடையார்-பெறமாட்டார்கள்—எ-று.

[இ-ம்] அகமுகமின்றிப் பகிர்முகமாகச்செல்வதலே கன்மங்களிற் செல்லுதற்கேதுவென்பதாம். (௫௩)

(அ-கை) சீவச்செயலிவை சிவச்செயலிவையெனத் தெளியநிமித்தஞ் சீவன்பகிர்முகமாத லீசன்செய்விக்குஞ் செயலேயன்றிச சீவர்களென் செய்வார்களென்ற வினாவிற்குத்தரம்.

சிறந்தநன்மையுந்தீமையுமீசனார்செய்விக்குஞ்செயலன்றோ ... ... *
பிறந்தசீவர்களென்செய்வாரவர்கள்மேற்பிழைசொலும்வகையேதோ... *
துறந்ததேசிகமூர்த்தியேயென்றிடிற்சுருதிநூற்பொருண்மார்க்க... ...*
மறந்தமூடர்கள்வசனிக்கும்பிராந்திகாண்மைந்தனேயதுகேளாய்... ...*

(இ-ள்) சிறந்தநன்மையும்- சிறப்பானநன்கும்—தீமையும் - தீங்கும்—ஈசனார்- ஈசனனவர்—செய்விக்குஞ்செயலன்றோ-செய்விக்குஞ்செய்கையல்லவா—பிறந்தசீவர்கள்- சநித்தசீவர்கள்— என்செய்வார்- என்னசெய்வார்கள்—அவர்கள்மேல்- அசசீவர்கள்மேல்—பிழைசொலும்-குற்றஞ்சொல்கின்ற—வகையேதோ- வகையென்ன— துறந்ததேசிகமூர்த்தியேயென்றிடில்- சகலபற்றுகளையும் விடுத்தவாசிரியரோயென்று கேட்பாயாகில் —சுருதிநூற்பொருண்மார்க்கம் -வேதசாஸ்திரார்த்தவழியை—மறந்தமூடர்கள்-மறந்தவஞ்ஞானிகள்—வசனிக்கும பிராந்திகாண் - சொல்கின்றமயக்கமாம்—மைந்தனே- புத்திரனே—அதுகேளாய்-அதைக்கேடபாய —எ-று (௫௪)

(அ-கை) (இ-து)

திகழ்ந்தவீசனார்சிருட்டியுஞ்சீவனார்சிருட்டியும்வெவ்வேறே ...*
சகந்தனிற்பொதுவீசனார்சிருட்டிகள்சராசரப்பொருளெல்லா ...*
மகந்தையாமபிமானங்கள்கோபங்களாசைகளிவையெல்லா ...*
நிகழ்ந்தசீவனார்சிருட்டிகளாகுங்காணிமலனார்செயலன்றே ...*

(இ-ள்) திகழ்ந்தவீசனார்சிருட்டியும்- விளங்கியவீஸ்வரசிருட்டியும்—சீவனார்சிருட்டியும்-சீவசிருட்டியும்—வெவ்வேறு- வேறுவேறும்—சகந்தனில

## சந்தேகந்தெளிதற்படலம்.

உலகத்தில்—பொது-பொதுவாகிய—சராசரப்பொருளெல்லாம்-தாபரசங்கமங்களனைத்தும்—ஈசனார்சிருட்டிகள்-ஈஸ்வரசிருட்டிகளாம்—அகந்தையாம்-அகந்தையாகிய—அபிமானங்கள் - அபிமானங்களும்—கோபங்கள்-துவேஷங்களும்—ஆசைகள்-இராகங்களுமாகிய--இவையெல்லாம்-இவைகளனைத்தும்—நிகழ்ந்த-விளங்கிய—சீவனார்சிருட்டிகளாகுங்காண- சீவசிருட்டிகளாம்—நிமலனார்செயலன்று-நின்மலமானவீஸ்வரசிருட்டிகளல்ல—என்-று.

(இ-ம்) ஈஸ்வரசிருட்டி சீவசிருட்டிக ளிவையெனப் பிருத்துக்கூறினதாம்

(அ-கை) (இ-து)

மூவராம்பரன்சிருட்டிகளுயிர்க்கெலாமுத்திசாதனமாகுஞ் ...*
சீவனாதுசிருட்டிகடங்களைச்செனிப்பிக்கும்பிணியாகுந் ... *
தாவராதிகணசித்திடிலொருவர்க்குஞ்சநநங்கணசியாவாங் ...*
கோபமாதிகணசித்திடிற்பந்தமாங்கொடும்பிறவிகள்போமே *

(இ-ள்) மூவராம்பரன்சிருட்டிகள் - மும்மூர்த்திகளான வீஸ்வரசிருட்டிகளானவை—உயிர்க்கெல்லாம்-சீவர்களனைவர்களும்- முத்தி-வீடடைதற்கு சாதனமாகும் - சாதனமாம்—சீவனாது சிருட்டிகள்- சீவசிருட்டிகளானவை—தங்களைச்செனிப்பிக்கும் பிணியாகும்-சீவர்களைப்பிறப்பிக்கின்ற சஞ்சிதரோகமாம்—தாவராதிகணசித்திடில்-ஈஸ்வரசிருட்டியாகிய தருமுதலியபஞ்சபூத பௌதிகவடிவங்கணசிக்கின்—ஒருவர்க்கும்- ஒருவருக்காவது—சநநங்கணசியாவாம்- பவங்கணீங்காவாம்—கோபமாதிகணசித்திடில் சீவசிருட்டியாகியதுவேஷமுதலிய விகற்பமிறக்கின்—பந்தமாம்- பந்தமான— கொடும்பிறவிகள்-கொடியசநநங்கள்—போம்-நசிக்கும்—என்-று.

(இ-ம்) ஈஸ்வரசிருட்டியான பாஞ்சபூதபௌதிகமுதலிய தத்துவங்கள் முத்திக்குச்சாதனமுஞ் சீவசிருட்டியான காமக்குரோதாதிகள் பவத்திற்கதுவுமாமென்பதற் குத்திகூறினதாம் (ருக)

(அ-கை) (இ-து)

ஈசர்காரியம்பிரளயத்தொழியவுமெவர்பவமொழிந்தார்க ...*
டேசகாலதேகாதிகளிருக்கவுஞ்சீவகாரியமோக... ... ...*
நாசமாகியவ்விவேகத்தினுயிரொடுஞானமுத்தர்களானோர் ...*
பாசமோகங்கள்பசுக்களின்செயலனறிப்பசுபதிசெயலன்றே *

(இ-ள்) ஈசர்காரியம்-ஈஸ்வரசிருட்டியான பஞ்சபூதபௌதிகங்கள்—பிரளயத்தொழியவும்-கற்பத்திற்கெடவும்—எவர்பவமொழிந்தார்கள்- யாவர் பிறவியையொழிந்தவர்கள்—தேசகாலதேகாதிகள்-தேசமுங்காலமுந் தேகமுமுதலியவீஸ்வரசிருட்டிகள்—இருக்கவும்- இருக்கும்போதே—சீவகாரியமோகம்-சீவசிருட்டியான காமமுதலியவைகள்—நாசமாகி- நசிந்து- அவ்விவேகத்தின்- அவ்விவேகத்தினால்—உயிரொடுஞானமுத்தர்களானோர்- சீவன்முத்தர்களானோர்களாதலால்—பாசமோகங்கள்-காமமவெகுளிமயக்க

ங்கள்—பசுக்களின்செயலன்றி-சிவச்செயலேயன்றி—பசுபதிசெயலன்று ஈஸ்வரச்செயலல்ல—எ-று,

(இ-ம்) ஈஸ்வரதிருட்டியிருக்கச் சீவதிருட்டி நசிக்கினப்போதே வீடடைதலாற் காமாதிகள் சிவச்செயலேயன்றிச்சிவச்செயலன்றென்பதாம்(கூள)

(அ-கை) (இ-து)

அச்சுவத்தமென்றொருமரமதிலிரண்டரும்பறவைகள்வாழு
நச்சுமப்பொருபறவையம்மரக்கனிநன்றுநன்றெனத்தின்னு
மெச்சுமங்கொருபறவைதின்றுதெனவியங்கியப்பொருளாக
வைச்சுமாமறைசீவனையீசனைவகுத்தவாறறிவாயே

(இ-ள்) அச்சுவத்தமென்றொருமரம்- அரசென்றுபேருள்ளவொருவிருட்சம்—அதில்-அத்தருவில்—இரண்டரும்பறவைகள்-இரண்டரியபட்சிகள் வாழும-வாழ்ந்துகொண்டிருக்கும்—அங்கு-அவ்விடத்து—நச்சும்-விரும்புகின்ற—ஒருபறவை-ஒருபட்சியானது—அம்மரக்கனி- அத்தருவின்பலத்தை—நன்றுநன்றெனத்தின்னும் - நல்லதுநல்லதென்றுபுசிக்கும்—அங்கு-அதன்கண்—மெச்சும்-மெச்சப்பட்ட—ஒருபறவை- ஒருபட்சியானது—தின்றதெனப்புசியாதென்று—வியங்கியப்பொருளாகவைச்சு- குறிப்புப்பொருளாகவைத்து—சீவனை-சீவனையும்—ஈசனை- ஈசனையும்—வகுத்தவாறு-பகுத்தவண்ணம்—அறிவாய்-தெரிவாய்—எ-று.

அச்சுவத்தமென்பது தலைகீழானமாயாவிருட்சமெனக்கொள்க.

[இ-ம்] மாயையில்வாழ்கின்ற சீவேஸ்வரர்களின் றாரதம்மியமிஃதெனப்பகுத்துக்கூறினதாம் (கூஅ)

(அ-கை) (இ-து)

இந்தச்சீவனால்வருமறுபகையெலாமிவன்செயலல்லாம...
லந்தத்தேவனால்வருமென்றமூடர்களதோகதியடைவார்க...
ளிந்தச்சீவனால்வருமறுபருபகையெலாமிவன்செயலல்லாம
லநதத்தேவனலன்றெனும்விவேகியேயமலவீடடைவாரே

(இ-ள்) இந்தச்சீவனால்-இச்சீவனால்—வரும் - உண்டான—அறுபகையெலாம்-காமமுதலியபகைகளாறும்—இவன்செயலல்லாமல்-இவன்திருட்டியேயன்றி—அந்தத்தேவனால்-அவ்வீசனால்—வருமென்ற- உண்டாமென்ற—மூடர்கள்-அறிவிலர்கள்—அதோகதியடைவார்கள் - நரகத்தையடைவார்கள்—இந்தச்சீவனால்-இச்சீவனால்—வரும்- உண்டாகும்—அறுபகையெலாம்-சட்பகைகண்முதலியவனைத்தும்—இவன்செயலல்லாமல்- இச்சீவதிருட்டியேயன்றி—அந்தத்தேவனால்-அவ்வீசனால்—அன்றெனும்- வரு தன்றென்னும்—விவேகியே-விவேகிகளே—அமலவீடடைவார்-நின்மலமானமோட்சத்தையடைவார்கள்—எ-று.

(இ-ம்) காமாதிகளை யீஸ்வரதிருட்டியெனக்கருதாமற்சிவதிருட்டியெனக்கொண்டவற்றை விசாரத்தாற்கெடுக்கின் முத்தியுண்டாமெனபதாம்

(அ-கை) மூண்பீஸ்வரசிருட்டிபொது வென்றமையால் வரும்பொது வாகவேண்டுமே யங்ஙனமாயிற் சீவர்களிடத்திற் பட்சபாதம்வருவானே னென்ற வினவிற்குத்தரம்

நலமெய்யையனேயெல்லவர்க்குந்தெய்வநாயகன்பொதுவானாற்... ...*
சிலரைவாழ்வித்துஞ் சிலரோடுகோபித்துஞ்செய்வதேனென்றியேற் *
குலவுமைந்தரைத் தந்தைபோற்சிட்டரைக்குளிர்ந்து துட்டரைக்காய்வன்
கலைகணல்வழிவரச்செயுந் தண்டமுங்கருணையென்றறிவாயே......... *

(இ-ள்) நலமெய்யையனே- உண்மையான நல்லவாசிரியரே—எல்வர்க்கும்-அனைவர்க்கும்—தெய்வநாயகன்-ஈஸ்வரன்—பொதுவானால்- பொதுமையானால்—சிலரைவாழ்வித்து-சிலரைவாழ்வுறவும—சிலரொடுகோபித்து-சிலரைத்துன்புறவும்—செய்வதேனென்றியேல்- செய்வதென்னவென்றுகேட்பாயாகின்--குலவுமைந்தரை-லகுவாகின்றபுத்திரர்களை-- தந்தைபோல்-பிதாவைப்போல—சிட்டரைக்குளிர்ந்து- சற்சனருக்கின்பஞ்செய்து—துட்டரைக்காய்வன்-துர்சனருக்குத்துன்பஞ்செய்வன்—கலைகள்-சாஸ்திரங்கள்சொல்லும்—நல்வழிவர- சன்மார்க்கத்தையடைய--செய்யுந்தண்டமும்-சீவர்களைச்செய்யுஞ்சிட்டையும்-கருணையென்றறிவாய்-கிருபையென்றுணர்வாய்—எ-று.

(இ-ம்) சீவர்கள்சுகப்படும்பொருட்டு வருத்தினவஃதும் கருணையயன்றிப் பட்சபாதமன்றென்பதாம். (௬௰)

(அ-கை) அங்ஙனமாயினீசன் யாவரையுமேனி ரட்சிக்கவில்லையெனவருஞ் சங்கைக்குத்தரம்.

மனைவிலங்கறுமைந்தனேகற்பகமரங்கனல்புனன்மூன்றுந் ...*
தனையடைந்தவர்வறுமையுஞ்சீதமுந்தாகமுந்தவிர்த்தாளு... *
மனையவீசனுமடைந்தவர்க்கருள்செய்வாரகன்றவர்க்கருள்செய்யா *
ரினையகுற்றங்களெவர்குற்றமாகுமென்றெண்ணிநீயறிவாயே *

(இ-ள்) மனைவிலங்கறும்-சம்சாரவிலங்குநீங்கிய—மைந்தனே-புத்திரா—கற்பகமரம்-கற்பகவிருட்சமும்—கனல்-அக்கினியும்—புனல்-சலமும்—மூன்றும்-இவைமூன்றும்—தனையடைந்தவர்-தம்மைச்சேர்ந்தவர்களது—வறுமையும்-தரித்திரத்தையும்—சீதமும்-குளிரையும்—தாகமும்-தாகத்தையும்—தவிர்த்தாளும்-நீக்கியிரட்சிக்கும்—அனைய-அத்தன்மையனவாக—ஈசனும்-ஈஸ்வரனும்—அடைந்தவர்க்கு-தம்மையடைந்தவர்களுக்கு—அருள்செய்வார்-கிருபைசெய்வார்—அகன்றவர்க்கு-அடையாதவர்களுக்கு—அருள்செய்யார்-கிர்பைசெய்யார்—இனையகுற்றங்கள்-இத்தன்மையானகுற்றங்கள்—எவர்குற்றமாகுமென்று-யாவர்குற்றமாமென்று—எண்ணி- ஆலோசித்து—நீயறிவாய்-நீதெரிந்துகொள்வாய்—எ-று.

(இ-ம்) கற்பகவிருட்சமுதலியவற்றைச் சார்ந்தவர்க்குத் துன்பநீங்கியின்பமுண்டாவதுபோல வீசனைச்சார்ந்தவர்களுக்குப் பவத்துன்பநீங்கி வீட்டின்பமுமுண்டாவ துண்மையெனவறிந்தவனைச்சார முயற்சிசெய்யாத திவன்குற்றமேயென வறிகவென்பதாம.

(அ-கை) ஞானமுண்டாகசசீவன் முயற்சிக்குமரபுகூறல்.

ஒன்றுகேண்மகனேபூமான்முயற்சியாலுரைத்துமானிடர்க்கீச ...
னன்றுசெய்யவேகாட்டியநூல்வழிநடந்துநல்லவர்பின்னே
சென்றுதுட்டவாதனைவிட்டுவிவேகியாய்ச்செனித்தமாயையைத்தள்ளி
நின்றுஞானத்தையடைந்தவர்பவங்கள்போநிச்சயமிதுதானே ...

(இ-ள்) மகனே-புத்திரா—ஒன்றுகேள்- ஒருவசனங்கேட்பாய்--பூமான்மு யற்சியால்-புருஷப்பிரயத்தினத்தினால்—ஈசன்-ஈஸ்வரன்--மானிடர்க்கு-ம னிதர்க்கு-நன்றுசெய்ய-நன்மையைசெய்ய—உரைத்து- சொல்லி—கா ட்டிய-காண்பித்த—நூல்வழிநடந்து- சுருதிமார்க்கத்திற்போய்—நல்லவர் பின்சென்று - சத்துக்கள் - வாக்கியப்படியவர்பின்சென்று—துட்டவாத னைவிட்டு-அசுத்தவாசனையைநீக்கி—விவேகியாய்- சிற்சடங்களைப்பகுத்த றியும் விவேகத்தையுடையவனாய்—செனித்தமாயையைத்தள்ளி-கற்பனை யாகவுதித்த சடமானமாயையைநீக்கி—நின்று - விலட்சணமானகூடஸ்த னாயிருந்து—ஞானத்தை-பிரமசைதன்யத்தை—அடைந்தவர்- பெறுவார்க ளுடைய—பவங்கள்போம்-பிறவிகணீங்கும்—இதுதான்-இதுவே—நிச்ச யம்-சத்தியமாம்—எ-று.

(இ-ம்) சீவன்றனதுமுயற்சியினா லீஸ்வரானுக்கிரகம்பெற்று அவன்வாக் கியமான வேதாந்தமுடிவைக் குருமுகமாக விசாரித்ததனான்விவேகமுண் டா யஞ்ஞானநீங்கி ஞானமுதயமாகிற் பவநீங்குமென்பதாம்,

(அ-கை) யதினாலிந்தஞானமுதிக்குமென்ற வினாவிற்குத்தரம்,

இந்தஞானந்தான்வருவதெப்படியெனிலிடைவிடாவிசாரத்தால்
வந்தடைந்திடும்விசாரந்தானேதெனின்மனுதியாஞ்சரீரத்தி... ...
லிந்தநானெவன்சித்தெதுசடமெதுவிரண்டுமொன்றுக்கூடும்... ...
பந்தமேதுவீடேதெனவுசாவுதல்விசாரமென்றறிவாயே ...

(இ-ள்) இந்தஞானந்தான்- இப்பிரமஞானமானது— வருவதெப்படியெ னில்- உதிப்பதெவ்வண்ணமென்று கேட்பாயாகில்— இடைவிடாவிசார த்தால்- இடையறாதவாத்ம விசாரணையால்—வந்தடைந்திடும் - வரும்— விசாரந்தான்- விசாரணையாவது—ஏதெனில்- யாதெனில்— மனுதியாஞ் சரீரத்தில்- மனமுதலியதேகத்திலிருக்கின்ற—இந்தநானெவன்- இந்தநா ன்யாவன்—சித்தெது- சித்தென்பதியாது—சடமெது - சடமென்பதியா து—இரண்டுமொன்றுக்கூடும்-சித்துசடமாகிய விரண்டுமொன்றுகக்கூட ப்பெற்ற—பந்தமேது-பந்தம்யாது—வீடேது- அதனைவிடப்பெற்ற முத் தியாதென—உசாவுதல்-விசாரித்தல்—விசாரமென்றறிவாய்- விசாரணை யென்றறிந்துகொள்வாய்-

[இ-ம்] சிற்சடவிலக்கணங்களைப் பகுத்தறியும் விசாரமேஞானமுதிப்ப தற்கு மூலமென்பதாம். (சுஙு)

(அ-கை) கன்மமுக்கியமென்னுங் கொள்கைநீங்கும்பொருட்டு ஞானமு திப்பதற்கு சற்கருமமிருக்க விசாரமியாதுக்கென்ற வினாவிற்குத்தரம்.

போனசன்மங்கடமிலனுட்டித்தநற்புண்ணியபரிபாக... ...*
ஞானமாகுமேவிசாரமேனென்றிடிறாமுறைத்திடக்கேளா ...*
யானபுண்ணியமீசுரார்ப்பணஞ்செயின்சுசிபோஞ்சுசியாகு ...*
மானதம்பினேவிசாரித்துஞானத்தைமருவுமென்றறிவாயே... *

(இ-ள்) போனசன்மங்கடமில்- முன்சநநங்களில்—அநுட்டித்த-அப்பியாசஞ்செய்த—நற்புண்ணியபரிபாகம்- சற்கருமபரிபாகத்தால்—ஞானமாகுமே- ஞானமுதிக்குமே— விசாரமெனென்றிடில்- விசாரணையாதுக்கென்றுரையாகில்—நாமுறைத்திடக்கேளாய- யாஞ்சொல்லுதுங்கேட்பாய்—அனபுண்ணியம்- அத்தன்மையான சற்கருமத்தை—ஈசுரார்ப்பணஞ்செயின் ஈஸ்வரப்பிரதிசெய்யில்—அசுசிபோம்- அசுத்தநீங்கும்—சுசியாகும்-சித்தசுத்திவரும்—மானதம்- மனது—பினே- பின்பு—விசாரித்து - சிறசடவிசாரஞ்செய்து—ஞானத்தைமருவுமென்று- சைதன்யத்தையடையுமென்று—அறிவாய்-தெரிவாய்—எ-று.

(இ-ம்) நிஷ்காமமாகச்செய்யுஞ் சற்கருமஞசித்த சுத்தியையும் விசாரம் ஞானத்தையுங்கொடுக்குமாதலால் விசாரமேவேண்டுமென்பதாம்

(அ-கை) பலபேற்றையுந்தரத்தக்க வலியுள்ளகன்மம் ஞானத்தைத்தராதோ விசாரம்யாதுக்கெனவினுதல்,

பத்தியும்வைராக்கியமும்பரலோகமுமணிமாதி... ... ..*
சித்தியுந்தவநிட்டையும்யோகமுந்தியானமுஞ்சாரூப ... *
முத்தியுந்தரும்விசித்திரகருமங்கண்மோகமாத்திரந்தன்னுமே *
புத்தியுந்தரலருமையோவிசாரமேன்புண்ணியகுருமூர்த்தி ...*

(இ-ள்) பத்தியும்-ஈஸ்வரபத்தியையும—வயிராக்கியமும்-நிராசையையும் பரலோகமும்-சுவர்க்காதிலோகங்களையும—அணிமாதிசித்தியும்-அணிமாமுதலியவஷ்டசித்திகளையும்—தவநிட்டையும் - தவமுள்ளசமாதியையும் யோகமும்-இயமாதியஷ்டாங்க யோகங்களையும்—தியானமும்-மூர்த்தியாதியதியானங்களையும்—சாரூபமுத்தியும்-சாரூபபதமுத்தியையும் —தரும் கொடுக்கின்ற —விசித்திரகருமங்கள-பலசத்தியுள்ளகன்மங்களானவை—மோகமாத்திரந்தன்னும்-அஞ்ஞானத்தைக்கொடுக்கின்ற— புத்தியுந்தரல்-அறிவையுங்கொடுப்பது—அருமையோ-அரியதோ —விசாரமேன்-விசாரணையாதுக்கு—புண்ணியகுருமூர்த்தி-தருமவஸ்வரூபமான வாசிரியரோ--எ-று.

[இ-ம்] வெளிப்படை. (கூரு)

(அ-கை) அவ்வினுவிறகுத்தரங் கூறுவான் றொடங்கித்திட்டார்தங் கூறல்.

வேடமாறியபோர்களையறியவேவேண்டினுன்மகனேகேள் ...*
கூடமாமவர்சுபாவங்கள்சிலங்கள்குறிகளாய்ந்தறியாம .. ...*
லோடியுங்குதித்துந்தலைகீழ்நின்றுமுயர்ந்தகம்பத்தேறி ... ...*
யாடியும்பலகன்மங்கள்செய்யினுமவருண்மைதெரியாதே ...*

(இ-ள்) வேடமாறியபேர்களை- மாறுவேடங்கொண்டவர்களை — அறிய வேண்டினால்- அவர்யதார்த்தவடிவத்தை யறியவிரும்பினால்— மகனேகே ள்- மாணக்கனேகேட்பாய்—கூடமாம்- இரகசியமான—அவர் குடரிவங்க ள்- அவர்களுடையகுணங்களையும—சீலங்கள்- நடைகளையும்—குறிகள்- அடையாளங்களையும்—ஆய்ந்தறியாமல்- ஆராய்ந்தறியாமல்—ஓடியும்-ஓ டியும்—குதித்தும்- குதித்தும்—தலைகிழ்நின்றும்- தலைகீழாகநின்றும்—உ யர்ந்தகம்பத்தேறி- உன்னிதமானஸ்தம்பத்திலேறி—ஆடியும்-ஆடியும்— பலகன்மங்கள்செய்யினும்- இவவாறான பலகன்மங்கள்செய்தாலும்—அ வருண்மைதெரியாது-அவர்களதுயதார்த்தவடிவந்தெரியமாட்டாது-எ-று

(அ-கை) தாஷ்டாந்தங்கூறல்.

இன்னவாறந்தப்பிரமத்தையறிவிக்குமிலக்கணத்தால்வேதஞ்... ...*
சொன்னஞானமும்விசாரத்தால்வருமன்றிச்சுருதிநூல்படித்தாலு,*
மன்னதானங்தவங்கண்மந்திரங்களாசாரங்கள்யாகங்க... . ... *
ளென்னசெய்யினுந் தன்னைத்தானறிகின்றதிவைகளால்வாராதே *

(இ-ள்) இன்னவாறுபோல்- இத்தன்மையைபபோல—பிரமத்தையறிவிக் கும்- பிரமஸ்வரூபத்தைத் தெரிவிக்கும்— இலக்கணத்தால் - லட்சணத் தால்—வேதஞ்சொன்ன- சுருதிசொல்லிய—ஞானமும்-பிரமஞானமும்- விசாரத்தால்- விசாரணையினால்—வருமன்றி- வருமேயல்லாமல்— சுருதி நூல்- வேதசாஸ்திரங்களை—படித்தாலும்- வாசித்தாலும்— அன்னதான ங்கள்-அன்னதானங்களும்—தவங்கள்- தவங்களும— மந்திரங்கள்-மந்திர ங்களும—ஆசாரங்கள்- ஆசாரங்களும்—யாகங்கள் - வேள்விகளுமாகிய விவைகளில்—என்னசெய்யினும்-எக்கருமங்களைச்செய்தாலும்— தன்னை த்தானறிகின்றது - ஆத்மாவாகிய தன்னைத்தெரிந்துகொள்வது— இவைக ளால்- இக்கன்மங்களால—வாராது- வரமாட்டாது—எ-று.

[இ-உ-க-ம்.] ஒருவனுண்மையைத் தெரிவிக்குஞ் சத்தியுணர்வுக்கே ய ன்றித் தொழிறகின்மைபோல ஞானத்தை யறிவிக்குஞ் சத்திவிசாரத்திற் கேயன்றிக கன்மத்துககின்றென்பதாம. (சுள)

(அ-கை) ஞானமுகிபபதறகு நீங்கவேண்டியவஞ்ஞானங் கருமத்தால ன்றி விசாரத்தாலெங்ஙன நீங்குமெனல்.

துளங்குதர்ப்பண மழுக்கறக்கைக்கொண்டுதுலக்கினுற்போமன்றி *
விளங்குபுத்தியாலுலகிலார்துலக்கினார்விமலதேசிகமூர்த்தி... ...*
களங்கமாகுமஞ்ஞானமுமப்படிகருமத்தாறகழுவாம ... ... *
வுளங்கூறித்தஞானத்தினுலெப்படியொழியுமீதருள்வீரே ... ... *

(இ-ள்) துளங்குதர்ப்பணம்- விளங்காநின்றசெம்புக்கண்ணாடியினுள்ள— அழுககற - களங்கமற—கைகொண்டு-கரங்கொண்டு— துலக்கினுற்போ மன்றி—விளக்கினுற்போமேயல்லாமல்—விளங்குபுத்தியால் -விளங்காநி ன்றவறிவினால்—உலகில்- சகத்தினகண்—ஆர் துலக்கினார்-எவர்விளக்கினு

ர்கள்—விமலதேசிகமூர்த்தி- நின்மலமானகுருமூர்த்தியே— களங்கமா ம்- களங்கமாகிய—அஞ்ஞானமும்- அஞ்ஞானத்தையும்—அப்படி- அவ வண்ணம்—கருமத்தால்- கன்மத்தினால்—கழுவாமல்-சுத்திபண்ணாமல்— உளங்குறித்த- மனதிற்குறிக்கப்பட்ட—ஞானத்தினால் - அறிவினால்—எ ப்படியொழியும்- எங்ஙனநீங்கும்—ஈதருள்வீர்- இதைச்சொல்வீர்-எ-று

(அ-கை) ஞானமுதிப்பதற்கஞ்ஞானத்தைநீக்குதல் விசாரத்தாலன்றிக் கன்மத்தாற் கூடாவெனல்.

தர்ப்பணத்தினிற்களிம்புவாஸ்தவமலஞ்சகசமாதலின்மைந்தா ...*
கற்பளிங்கினிற்கருநிறஞ்சகசமாக்கறுத்ததன்றாரோபங் ... ... *
தர்ப்பணத்தினிலழுக்கறவேண்டிறைற்சாதனத்தொழில்வேண்டுங்...*
கற்பளிங்கிலாரோபமேகறுப்பெனக்கண்டிடமனம்போதும் .. ...*

(இ-ள்) தர்ப்பணத்தினில்- செம்புக்கண்ணாடியில்—களிம்பு- களிம்பாகிய—வாஸ்தவமலம்- உள்ளவழுக்கானது—சகசமாதலின் - சுபாவமாதலா ல்—மைந்தா- மகனே—கற்பளிங்கினில்- படிகக்கல்லிற்றோற்றிய—கருநி றம்- கருமைநிறமானது—சகசமாக்கறுத்ததன்று-சுபாவமாகக்கறுத்ததன் று—ஆரோபம்-கற்பிதமாம்—தர்ப்பணத்தினில்-செம்புக்கண்ணாடியில்— அழுக்கறவேண்டிறைல- களங்கமறும்படிவிரும்பினால்— சாதனத்தொழில வேண்டும்- கருவிகளாற்செய்யுஞ் செயல்களவேண்டும்— கற்பளிங்கில்- படிகக்கல்லிற்றோற்றிய—கறுப்பு- கருநிறம்—ஆரோபமேயென -கற்பித மேயென்று—கண்டிட-பார்த்திட—மனம்போதும்-மனமேபோதும எ-று

(அ-கை) அதற்குபமேயங்கூறல்.

இங்குமப்படிசச்சிதானந்தத்திலிடர்சடம்பொய்மூன்றும் ... ... *
தங்குமாயையின்கற்பிதமன்றியேசகசவாஸ்தவமன்றே ... ... *
பங்கமாகுமஞ்ஞானத்தைக்கருமங்கள்பகைசெயாதுறவாக்கும் ...*
துங்கஞானமேகருமவஞ்ஞானத்தைசசுடுகின்றநெருப்பாமே .... *

(இ-ள்) இங்கும்- இத்தாஷ்டாந்தத்தினும்—அப்படி-அத்திஷ்டாந்தத்தைப்போல—சச்சிதானந்தத்தில்-அஸ்திபாதிப்பிரியத்தில்—இடர்சடம்பொ ய்- அனுர்தசடதுக்கமாகிய—மூன்றும- மூன்றும்— தங்கும்- தங்காநின்ற —மாயையின்கற்பிதமன்றியே - மாயாகற்பிதமேயலாமல்— சகசவாஸ் தவமன்று- சுபாவமாயுள்ளதன்று—பங்கமாகுமஞ்ஞானத்தை-பழுதாகு வஞ்ஞானத்தை—கருமங்கள்- கன்மங்களானவை—பகைசெயாது-பகை புண்ணாமல்—உறவாக்கும்- நட்பாக்கும்—துங்கஞானமே - மேலானஞா னமே—கருமவஞ்ஞானத்தை - கன்மரூபமாகியவஞ்ஞானத்தை—சுடுகி ன்றநெருப்பாம்- எரிக்கின்றவக்கினியாம்—எ-று.

[இ-ங-க-ம்.] செம்பிற் களிம்புபோல வாத்மாவுக்கஞ்ஞானஞ் சகசமா காமற் பளிங்கிற் பஞ்சவன்னம்போலப் பிராந்தியாதலா லங்ஙனந் தோ று ங் கன்மசம்பந்தமான வஞ்ஞானத்தைக் கெடுப்பதுவிசாரரூபமானஞா னமேயாமென்பதாம். (எ௰)

(அ-கை) முற்கூறியதைவற்புறுத்தல்.

மனைக்குள்வைத்தபண்டங்களைமறந்தவன்வருடநூறமூதாலு ... ...
நினைத்துணர்ந்தபின்கிட்டுமெப்படியிந்தநிருமலவான்மாவு ... ...
மனர்த்தமானதன்மறதியைக்கெடுக்குந்தன்னறிவினாற்காணுமற் ... ...
கனத்தகன்மங்கணூறுகஞ்செய்யினுங்காணுமோகாணுதே ... ...

(இ-ள்) மனைக்குள்-வீட்டிற்குள்—வைத்தபண்டங்களை- வைத்த வஸ்துக்களை—மறந்தவன்- மறந்துவிட்டவன்—வருடநூறமூதாலும்- நூறுண்டாற்றினும்—நினைத்து- முன்வைத்தவிடத்தைஞாயகஞ்செய்து— உணர்ந்தபின்கிட்டும்- அறிந்தபின்கிடைக்கும்—அப்படி-அதைப்போல— இந்தநிருமலவான்மாவும் -இந்தநிருமலமானவாத்மஞானமும்— அனர்த்தமான-பிரயோசனமில்லாத— தன்மறதியைக்கெடுக்கும் - தனதறியாமையைப்போக்கும்—தன்னறிவினாற்காணுமல்-தனதறிவினாற்றரிசிக்கப்படாமல்—கனத்தகன்மங்கள்- கனமானகன்மங்களை—நூறுகஞ்செய்யினும்- அநேகயுகஞ்செய்தாலும்—காணுமோ- காணப்படுமோ—காணுது- காணப்படாது—எ-று.

[இ-ம்] ஞாபகத்தான்மறதிநீங்கின் முன்வைத்தபொருள் வெளிப்படுமேலதுதொழிலால் வெளிப்படாததுபோல விசாரஞானத்தா லஞ்ஞானநீங்கின் முன்னுள்ள பிரமப்பொருள் வெளிப்படுமேல்லது கன்மத்தால் வெளிப்படாதென்பதாம். (எக)

(அ-கை)பிரமசுகத்தை விசாரஞானங் கொடுக்குமென்றுவேதமச் சுகத்தை கன்மமுங் கொடுக்குமென்ப தியாதெனவினுதல்.

நன்மையாங்குருவேசுகந்தருவதுஞானமேயெனும்வேதந் ... ...
தன்மபாவமிச்சிரங்களாற்றேவர்க்கடருவிலங்குகண்மாந்தர் ... ...
சென்மமாகுவசாதியாசாரமேசெய்தவஞ்சுகமன்று ... ... ...
கன்மகாண்டத்தில்விதிப்பதேன்விதித்துளகாரணமுரையீரோ ... ...

(இ-ள்) நன்மையாங்குருவே - நன்மையாகியவாசிரியரே— சுகந்தருவது-பிரமானந்தத்தைக்கொடுப்பது—ஞானமேயெனும்- அறிவேயென்கின்ற-வேதம்- சுருதியானது—தன்மம்- புண்ணியகன்மங்களால்—தேவர்கள்-தேவர்களும—பாவம்- பாவகன்மங்களால்—தருவிலங்குகள்- விருட்சமூதன்மிருகமிருகியவைவகைத்தோற்றமும்—மிச்சிரங்களால்- மிஸ்ரகன்மங்களால்—மாந்தர் - மனிதர்களுமாகிய—சென்மமாகுவ - செநநமாவனவென்றும்—சாதியாசாரமே- வன்னச்சிரமதருமப்படி — செய்தவஞ்சுகமென்றும்-செய்கிறதவமேசுகமெனவும்—கன்மகாண்டத்தில் - கிரியாகாண்டத்தில்—விதிப்பதேன்- விதித்ததென்ன— விதித்துள- அங்ஙனம்விதியாநின்ற—காரணமுரையீர்-காரணத்தைச்சொலவீர்—எ-று.

[இ-ம்]வெளிப்படை. (எஉ)

(அ-கை) அங்ஙனம்விதிப்பக்வேதத்தினபிப்பிராயம்வேறெனக்கூறல்.

தினமுமண்ணுகர்பிள்ளைநோய்க்கிரங்கியேதீம்பண்டமெதிர்காட்டிக்,
கனமருந்துகளொளித்துவைத்தழைக்கின்றகருணையாந்தாய்போல*,
மனையறங்கள்செய்மகங்கள்செய்நன்றென்றுமலர்ந்தவாசகஞ்சொல்
நினைவுவேறுகாண்சுவர்க்ககாமிகளந்தநிர்ணயந்தெரியாரோ ... [வு

(இ-ள்.) தினமுமண்ணுகர்- நாடோறுமண்ணைப்புசிக்கின்ற— பிள்ளைநோய்க்கு- குழந்தையின்வியாதிக்கு—இரங்கி- இரக்கமுற்று— கனமருந்துகளொளித்துவைத்து- கனமானவௌஷதங்களை மறைத்துவைத்து —தீம்பண்டமெதிர்காட்டி- தித்திப்புள்ளவஸ்துக்களையெதிரோகாண்பித்து —அழைக்கின்ற- அக்குழந்தையைக்கூப்பிடுகின்ற—கருணையாந்தாய்போல-கிருபையுள்ளமாதாவைப்போல—மனையறங்கள்செய்- இல்லறதருமங்களைச்செய்—மகங்கள்செய்- யாகங்களைச்செய்—நன்றென்று- அஃதுநன்மையென்று—மலர்ந்தவாசகம் -விகசிதமானவேதவாக்கியம்—சொல்லுநினைவு வேறுகாண்-சொல்கின்றகருத்து வேறாகும—சுவர்க்ககாமிகள்-சுவர்க்கவிருப்பமுள்ளவர்கள்—அந்தநிர்ணயந்தெரியார்- அக்கருத்தினிண்ணயத்தையறியார்கள்—எ-று.

[ப-ம்] மண்ணுகர்பிள்ளையென்பதனல்- மிடயத்தைநுகருமறிவிலியென்பதும்-நோயென்பதனற்பிறவித்துன்பமென்பதும்- இரங்கியென்பதனலருளுற்றென்பதும்- தீம்பண்டங்காட்டி யென்பதனல் சுவர்க்காதிபதங்களைக்காட்டிவமென்பதும்மருந்துகளொளித்துவைத்தென்றதனல் - ஞானமுகத்தையொளித்துவைத்தெனவும்- அழைக்கின்றதாயென்றதனல்- 'அவ்வமுறைக் கொடுக்கவேதம் விளிக்குமென்பதுங்கொளக்கிடந்தன.

[இ-ம்] வேதம் இகவின்பத்தை நீக்குவான்பரவின்பத்தைக்கூறி யஃது நீங்கினபின்னிஃதையு நீக்கிப் பரமசுகமாகக்கும்பொருட்டங்ஙனங் கூறினதென்பதாம். (எக)

(அ-கை) வேதம்போகபோக்கியங்களையனுபவிக்க விதியாதென்பதற்குவமைகூறல்.

போகமாருயிர்கண்டதையுண்பதும்புணர்வதுமியல்பேகாண் ... ...*
ஞகமங்களுஞ்சுபாவத்தைவிதிக்குமோவத்தனைதெரியாதோ ... *
காகமேகறுத்திடுநெருப்பேசுடுநிசசந்திடுவேம்பேநீ ... ... ... *
வேகவாயுவேயசையெனவொருவரும்விதித்திடல்வேண்டாவே *

(இ-ள்) போகமாருயிர்- போகத்தைப்புசிக்கின்ற சீவர்களுக்கு — கண்டதை- பார்த்ததை—உண்பதும்- அருந்தலும்— புணர்வதும்- பொருந்தலும்—இயல்பேகாண்- சுபாவமேயாம்—ஆகமங்களும் - வேதங்களும்—சுபாவத்தைவிதிக்குமோ- சுபாவத்தைநியமிக்குமோ — அத்தனைதெரியாதோ- அவ்வளவுதெரியாதா—காகமேகறுத்திடு - காக்கையே நீகறுத்திடுவாய்—நெருப்பேசுடு-அக்கினியேநீசுடுவாய்— வேம்பே- நிம்பமே—நீகசந்திடு- நீகைப்பாய்—வேகவாயுவே அதிவேகமுள்ளகாற்றே—அசையென- நீசலிப்பாயென்று—ஒருவரும்- ஒருவருமே—விதித்திடல் வேண்டாவே நியமிக்கவேண்டுவதில்லையே—எ-று.

விலக்குமெனப்பாடமன்று விதிக்குமென்பதே பாடமெனக்கொள்க.

[ப-ம்] அறிவின்மையானுயிர் கட்கியல்பான மருந்தல்பொருந்தலென்னு ம்வாசனையை வேதம்விலக்குமேயன்றி விதிக்குமோவென்பார் போகமா ருயிர்கண்டதை யுண்பதும் புணர்வதுமியல்பே கானாகமங்களுஞ் சுபாவ த்தை விதிக்குமோ வெனக்கூறினார். [இ-ம்] வேதம்போக போக்கியமே பயனானகன்மத்தை விலங்கினதேயன்றி விதித்ததன்றென்பதாம். (எச)

(அ-கை) கன்மகாண்ட வாக்கியம் பூருவபட்சமென்பதற்குத்திகூறல்.

கள்ளூமூனுநீவிரும்பினான்மகங்கள்செய்காமத்தின்மனதானாற், கொ
ள்ளும்பெண்டொடுகலவிசெய்யெனிலிவன்கு றையெலாந்தொடா
னென்றே, தள்ளும்வேதத்தின்சம்மதஞ்சகலமுந்தவிர்வதேகருத்தா
கும், விள்ளுமிவ்விதியென்னெனிற்பூருவநியமமாம்விதியன்றே... *

(இ-ள்) கள்ளூமூனும் - மதுவையுமாமிசத்தையும்—நீவிரும்பினால் - நீயுண்ணவிச்சித்தால்—மகங்கள்செய்- யாகங்களைச்செய்துபுசிப்பாய்—காமத்தின்மனதானால்- காமவேட்கையுண்டானால்—கொள்ளும்பெண்டொடு விவாகஞ்செய்யுமனைவியோடும்—கலவிசெய்யெனில்- புணர்ச்சிசெய்வாயென்றால்—இவன்- இக்காமி—குறையெலாந்தொடானென்று-குற்றவைகளைத்துநீண்டானென்று—தள்ளும்- நீக்கும்—வேதத்தின்சம்மதம் - வேதத்தினுடையசம்மதமானது— சகலமுந்தவிர்வதே - அனைத்துநீங்குவதே—கருத்தாகும்-அபிப்பிராயமாகும்—விள்ளுமிவ்விதி-சொல்லாநின்றவிக்கன்மகாண்டவிதி—எனனெனில்-என்னவென்றால்—பூருவநியாயமாம்விதி- பூருவபட்சமாகநியமித்தவிதியாம்—எ-று. (எரு)

(அ-கை) இவ்விதிபூர்வபட்சமென்பதை வற்புறுத்தல்.

மதுவிறைச்சிகளுண்ணென்றசுருதிபின்மணந்துபாரெனல்பாராய் *
மிதுனவிச்சையும்புத்திரோற்பத்தியால்விரும்பென்றவிதிபாரா *
யிதையும்விட்டொழியதிநயிட்டிகவன்னிக்கிகழ்ச்சியற்றதும்பாரா *
யதையறிந்துகன்மங்களாசைகளொழிந்தானந்தமடைவாயே *

(இ-ள்) மதுவிறைச்சிகள்- மதுமாமிசங்களை—உண்ணென்றசுருதி- புசியென்றவேதமானது—பின்- பின்பு—மணந்துபாரெனல் பாராய்-ஆக்கிராணஞ்செய்தார்போதுமென்பதைப்பார்—மிதுனவிச்சையும் - மனைவியோடு புணர்ச்சியின்பமும்—புத்திரோற்பத்தியால்- மகப்பேறுண்டாம்பொருட்டு—விரும்பென்றவிதிபாராய்- இச்சிப்பாயென்றவிதியைப்பார்— இதையும்விட்டொழி- இவ்விதியையும்விட்டொழிந்த—யதி- சந்நியாசிக்கும்—நயிட்டிகவன்னிககு- நைஷ்டிகப்பிரமசாரிக்கும்—இகழ்ச்சியற்றதும்பாராய- நிந்தையில்லாததும்பார்—அதையறிந்து - அக்கருத்தையுணர்ந்து—கன்மங்கள் - கன்மங்களின்மேல்வைத்த—ஆசைகளொழிந்து-இச்சைகணீங்கி—அனந்தமடைவாய்- ஞானத்தினாற்பிரமானந்தத்தை யடைவாய்.—

# சந்தேகந்தெளிதற்படலம்.

மிழியின்மையைப் பாரென்பார் பதிகயிட்டிகவன்னிக் கெகழ்ச்சியற்றதும யாராயென்க்கூறினார் (இ-உ-க்-ம்)வேதங்கன்மகாண்டத்திற்கூறும் வன்னு ச்சிரமதன்மங்கள் அதனாலுண்டாகும்போக வின்பங்களனைத்தும் பின்று ன்பங்களாக்வருத்துதலைக் கண்டவற்றைவிடுத்துப் பரமசுகத்தைத்தேட வேண்டுமென்ப ததனபிப்பிராயமாதலா லிவற்றையொழித் தச்சுகத்தை த்தேடல்வேண்டுமென்பதாம்.

(அ-கை) முற்கூறியவண்ணஞான மஞ்ஞானத்துக்குச் சத்துருவாயினம் மிம்மோடுஞ்சேர்ந்தொரு தொழிலைச்செய்யலாமோவென வினுதல்.

உலகமானவஞ்ஞானமுங்கருமமுறவென்றவழிகூடும்... ...*
பலவுமானவஞ்ஞானஞானமும்பகையென்பதுளதானு ...*
னிலவிலேமறுப்போலவஞ்ஞானமுநிமலஞானத்தோடே *
குலவிநின்றிந்தச்சிருட்டிகள்செய்யவுங்கூடுமோகுருமூர்த்தி ...*

(இ-ள்) உலகமானவஞ்ஞானமும் - சகத்துருவமானவறியாமையும்—கருமமும்- கன்மமும்—உறவென்றவழிகூடும்- நட்பென்றமார்க்கமொக்கும்--பலவுமானவஞ்ஞானமும்-நாநாவிதமானவஞ்ஞானமும்— ஞானமும்-ஏகமானஞானமும்—பகையென்பது - சத்துருவென்பது—உளதானல் - உள்ளதானல்—நிலவிலேமறுப்போல - சந்திரனிடத்திற் களங்கமிருப்பது போல—அஞ்ஞானமும்- அஞ்ஞானமானது—நிமலஞானத்தோடு - களங்கமற்றஞானத்தோடு—குலவிநின்று - சேர்ந்திருந்து—குருமூர்த்தி- தேசிகரே—இந்தச்சிருட்டிகள்செய்யவுங் கூடுமோ- இந்தச்சிருட்டியாதிகளைச்செய்யவுங்கூடுமோ—எ-று.

(இ-ம்) வெளிப்படை (எஎ)

(அ-கை) அவ்வினுவிற்குத்தரங்கூறல்

சொரூபஞானமும்விருத்திஞானமுமென்றுசோதிஞானமுமிரண்டா
கு, சொரூபஞானமேவிருத்தியின்ஞானமாய்த் தோன்றும்வேறிலை
மைந்தா, சொரூபஞானமஞ்ஞானசத்துருவென்று சுழுத்தியிற்கண்
டாயே, சொரூபஞானத்தின்மருவுமஞ் ஞானத்தைச்சுடும்விருத்தியி
ன்ஞானம் ... ... ... ... ... ...

(இ-ள்) சோதிஞானமும் - சுயம்பிரகாசமானசைதன்யமே—சொரூபஞானமும்- சொரூபஞானமெனவும்—விருத்திஞானமென்று- விருத்திஞானமெனவும்—இரண்டாம்- இருவகையாம்—சொரூபஞானமே - சொரூபஞானமே—விருத்தியின்ஞானமாய்-விருத்திஞானமாய்--தோன்றும்-தோன்றுமேயன்றி—மைந்தா- மாணாக்கா—வேறிலை- மற்றொன்றில்லையாம் சொரூபஞானம்- ஸ்வரூபஞானமானது—அஞ்ஞானசத்துருவென்று-அஞ்ஞானத்துக்குப்பகையென்று—சுழுத்தியிற்கண்டாய்- சுழுத்தியவத்தையிற்பார்த்தாய்—சொரூபஞானத்தின்மருவும் - ஸ்வரூபஞானத்திற்கூடியிருந்த—அஞ்ஞானத்தை- அறியாமையை—விருத்தியின்ஞானம் - சமாதியிலுதித்தவிருத்திஞானமானது—சுடும்- எரிக்கும்—எ-று.

[ப-ம்] அத்தசைதன்யமென்பார்- சோதிஞானமெனவும்- பரஞானமெ ன்பார்-சொரூபஞானமெனவும்-விசாரஞானமென்பார்விருத்திஞானமெ னவும்- சுழுத்தியிலறிவின்மையினவசமாகாமற்றுனறிவாகவிருந்ததையெ கிரிட்டுக்காண்கின்றதென்பார் சொரூபஞான மஞ்ஞானசத்துருவென்று சுழுத்தியிற்கண்டாயேயெனவும்- சமாதியிலுதயமான விவ்வறிவினா லஞ் ஞானநசிக்குமென்பார்- சொரூபமஞானத்தின் மருவுமஞ்ஞானத்தைச்சு டும் விருத்தியின்ஞானமெனவுங்கூறினார்(இ-ம்)ஆத்மசங்கற்பமான வறி விற்குண்டான வறியாமை யவ்வறிவிலுதயமானவனுபூதியினாற் கெடுமெ ன்பதாம் (எஅ)

(அ-கை) காரணத்தாற்கெடாத வஞ்ஞானங் காரியத்தாலெங்ஙனங் கெடு மென்ற வினாவிற்குத்தரம்.

துருத்திமாயையைச்சுழுத்தியிற்சுடாதநுசொரூபஞானந்தானே *
விருத்திஞானமாய்ச்சுட்டதெப்படியென்னில்வெய்யிலாலுலகெங்கும்
பரித்தசூரியன்சூரியகாந்தத்திற்பற்றியக்கினியாக்கி *
யெரித்தவாறுபோற்சமாதியில்விருத்தியாலெரிக்குமென்றறிவாயே

(இ-ள்) துருத்திமாயையை- சடமாகியவஞ்ஞானத்தை—சுழுத்தியில்- சு ழுத்தியவத்தையில்—சுடாதது-கெடுக்காததான—சொரூபஞானந்தானே சொரூபஞானமே—விருத்திஞானமாய் - விருத்திஞானரூபமாய்—சுட்ட தெப்படியெனில்- எரித்ததெங்ஙனமெனின்—சூரியன்- சூரியனானவன்-- உலகெங்கும்-சகத்திலெவ்விடத்தும்—பரித்த-வியாபித்த— வெய்யிலால் உஷ்ணகிரணத்தினாலெரிக்காமல்—சூரியகாந்தத்திற்பற்றி - சூரியகாந்தக் கல்லிற்பற்றி—அக்கினியாகி- வன்னிரூபமாய்—எரித்தவாறுபோல்- சக லவஸ்துக்களையுந்தகித்த தன்மையைப்போல—சமாதியின்- நிட்டையின் கணுகிக்கும்—விருத்தியால்- பூரணவிருத்திஞானத்தினால்--எரிக்குமென் றறிவாய்- திரிசியரூபமானவஞ்ஞானத்தைக் கெடுக்குமென்றுணர்வாய்— எ-று,

(இ-ம்) காரணமானகிரணத்தாற் கெடாதபொருள் காரியமானவக்கினி யாற் கெடுவதுபோல சொரூபஞானத்தாற் கெடாதவஞ்ஞானமதி லுதய மான பூரணவிருத்திஞானத்தாற் கெடுமென்பதாம்

(அ-கை) விருத்திஞானமந்தக் கரணகாரியமாதலி னதைக்கருமமெனப்ப டாதோவெனவினுதல்.

அருளுமையனேதிரிவிதகரணத்தாலாகியதொழிலெல்லாம் *
கருமமல்லவோவிருத்திஞானமுமந்தக்கரணகாரியமன்றோ *
வுரியகன்மமஞ்ஞானத்தைக்கெடுக்குமென்றோதினலாகாதோ *
பெரியஞானமென்றதற்கொருபேரிட்டபெருமையையுரையீரோ *

(இ-ள்) அருளுமையனே - அநுக்கிரகஞ்செய்யாநின்ற வெனதாசிரியரே திரிவிதகரணத்தால்- மனம்வாக்குக்காயமென்கிற முக்கரணங்களால்--ஆ கியதொழிலெல்லாம்- உண்டானகிரியைகளனைத்தும்—கருமமல்லவோ - கன்மமல்லவா—விருத்திஞானமும்- பூரணவிருத்திஞானமும்—அந்தக்க

...ரியமன்றோ-அந்தக்கரணத்தின்காரியமன்றோ—உரியகன்மம்-அறியா ...ருரியகன்மமானது—அஞ்ஞானத்தைககெடுக்குமென்று - அஞ்ஞா ...ப்பிக்குமென்று—ஓதினைலாகாதோ - உரைக்கினைகாதா—பெரி ...மென்று- களமானஞானமென்று—அதற்கு- அக்கன்மத்திற்கு— ...பேரிட்ட—ஓர்நாமந்தரித்த—பெருமையையுரையீர்- மகிமையைசசொ ல்லீர்—எ-று.

இ-ம்) வெளிப்படை (அய)

(அ-கை) அவ்வினைவிறகுத்தரம்.

விருத்திஞானமந்தக்கரணத்தொடுவிருத்தியாகிலுமைந்தா ...*
வொருத்திமக்களேதங்களிற்பகைக்கின்றதுலகெங்குங்கண்டோமே*
கருத்தனுகியபுருடதந்திரங்களாங்கருமங்களவைபோல ...*
வருத்தஞானமோபுருடதந்திரமன்றுவஸ்துதந்திரமாமே *

(இ-ள்) விருத்திஞானம்- விருத்திஞானமானது—அந்தககரணத்தொடு-ம னத்தினுடைய—விருத்தியாகிலும்- விருத்தியானுலும்—மைந்தா- மாணு க்கா—ஒருத்திமக்களேதங்களில் - ஒருமாதாவின்புத்திரர்கள் தங்களுககு ள்ளே—பகைக்கின்றது- கொலைசெய்கின்றது—உலகெங்குங்கண்டோம் சகமெங்கும்பார்த்தோம்—கருமங்கள்-கன்மங்களானவை—கருத்தனுகிய அகம்பாவமுள்ள—புருடதந்திரங்களாம் - புருடதந்திரங்களேயாம்—அ வைபோல-அவற்றைப்போல—வருத்தஞானம் - அகமகிழ்ச்சியுள்ளஞா னமானது—புருடதந்திரமன்று- புருடதந்திரமன்றும்—வஸதுதந்திரமாம் வஸ்துவினதுதந்திரமாம்—எ-று.

[இ-ம்] விருத்திஞானமுங்கன்மமுமந்தக்கரணகாரியமாயினும் புருடதந் திரத்தான் மனதிலுதிக்கும் கன்மத்தை வஸ்துதந்திரத்தான் மனதிலுதிக் கும் பூரணவிருத்திஞானங்கெடுக்குமாதலி னவ்விருததிஞானங் கன்மமூ காவென்பதாம் (அக)

(அ-கை) போனகன்மங்களென்றசெய் யுண்மூதலிதுகாறுங்கன்மமானது ஞானமூதிப்பதறகேதுவன்றெனவதை விசாரஞானத்தானீககி மேலவ்வி சாரஞானத்தையு நீக்குவான் றொடங்கி யஃதை யோகஞானமும் விவே கஞானமுமென விருதிறனைக்கூறுகின்றார்.

வகுத்தகன்மங்கள்செய்யவுந்தவிரவுமற்றென்றாக்கவுங்கூடு ...*
மிகுத்தஞானமப்படியன்றுதியானமூம்விவேகஞானமும்வேறே *
செகத்திலொன்றையொன்றுவிவன்பாவிகருந்தியானங்கற்பிதயோக
முகஸ்தமாய்க்கண்டஞானமேவாஸ்தவமோகமாய்மயங்காதே *

(இ-ள்) வகுத்தகன்மங்கள் - புருடர்களால்வகுககப்பட்ட கன்மங்களான வை—செய்யவும்- செய்தற்கும்—தவிரவும்- ஒழிதற்கும்—மற்றென்றாக கவும்- மற்றொருவிதமாகசசெய்தற்கும்—கூடும்-ஆம்—மிகுத்தஞானம - பூரணஞானமானது—அப்படியன்று-அக்கன்மையுடையதன்று—தியான

மும்- தியானமும்—விவேகஞானமும்- விவேகஞானமும்—வேறு-வேறு கும் --செகத்தில்- உலகத்தின்கண்—ஒன்றையொன்றாக - ஒருவஸ்துவை மற்றொருவஸ்துவாக—இவன்பாவிக்கும் இப்புருடன்பாவிக்கின்ற— கற்பிதயோகம்- கற்பனையோகமானது— தியானம்- தியானமாம்—மூகஸ்தமாயககண்டஞானமே பிரத்தியட்சமாகத்தரிசித்தஞானமே—வாஸ்தவம்-உண்மையானவிவேகஞானமாம்--மோகமாமயங்காது-மோகமாகாது--எ-று

[இ-ம்] யோகஞானங் கற்பிதமான பரோக்ஷமும் விவேகஞான முண்மையான வபரோக்ஷமுமாமென்பதாம் (அஉ)

(அ-கை) (இ-து)

கண்டறிந்தஞானங்கேட்டதுகனாநதுபாவனையோகங் ... ...*
கண்டபோர்சொலக்கேட்டதுமறந்துபோங்கண்டதுமறவாதே ... *
கண்டவஸ்துமெய்யாம்யாவஸ்துக்கள்பொய்சீறுவியஞ்ஞானத்தை *
கண்டவக்கணங்கொல்வதுஞானமேகருமமன்றறிவாயே... ... *

(இ-ள்) கண்டறிந்தஞானம்- அனுபவமாகப் பார்த்துணர்ந்தஞானமாம்—கேட்டதுதனை- கேட்டதை —கருதுபாவனை- தியானிக்கின்றபாவனையானது—யோகம்- யோகமாம்—கண்டபேர்சொல- பார்த்தவர்கள் சொல்ல—கேட்டது- கேட்டபொருள்—மறந்துபோம மறதியாம்--கண்டது மறவாது- பார்த்ததுமறக்காது—கண்டவஸ்து- பார்த்தபொருளானது—மெய்- உண்மையாய்—தியானவஸ்துக்கள் - பாவிக்கின்றபொருள்களானவை—பொய்- மித்தையாம் —சுறுவி- கோபித்து—அஞ்ஞானத்தை-அறியாமையை—கண்டவக்கணம்- பார்த்தவந்தக்ஷணத்தில்.— கொல்வதுஞானம்-கெடுப்பதுஞானமேயன்றி — கருமமன்று - கன்மமன்று—அறிவாய்-இதனையுணர்வாய்—எ-று.

[இ-ம்] தியானயோகங்கேட்டவண்ணம் பாவித்தலும் விவேக ஞானம் பாவித்தவண்ணங்காண்டலுமாதலா லிஃதேயுண்மையென்பதாம் (அங)

(அ-கை) தியானயோகங் கற்பிதமெனி னஃதிலுதிக்கு முத்தியுங்கற்பிதமன்றோ வென்னும் வினவிற்குத்தரம்.

சருவமுத்தியைத்தருகின்றதியானமுஞ்சத்தியமன்றென்றால்... ...
சருவமுத்தியுஞ்சத்தியமன்றென்றுசங்கியாதேநீகே ... ... ...*
ளுருவங்கேட்டவன்றியானிக்கும்பொழுதிலவ்வுருவம்வாஸ்தவமன்
றுருவமாகுமப்பொழுதுகண்ணுறுகண்டவுருவம்வாஸ்தவமாமே[றே

(இ-ள்) சருவமுத்தியை- சருவம்பிரமமயமென்னும்வீட்டை—தருகின்ற தியானமும்- கொடுக்கின்றதியானத்தையும்—சத்தியமன்றென்றால்-உண்மையன்றென்றுசொன்னால் —சருவமுத்தியும்- அத்தியானத்தினால்வரும் பூரணானுபவமும்—சத்தியமன்றென்று- உண்மையன்றென்று— சங்கியாதே- சங்கைசெய்யாதே—நீகேள்- நீகேட்பாய்—உருவம் - பிரமஸ்வரூப

த்தை—கேட்டவன்- கேள்வியுற்றவன்—தியானிக்கும்பொழுதில்-சிந்திக்கும்பொழுதில்—அவ்வுருவம்- அத்தியானரூபமாகியஸ்வரூபம்—வாஸதவமன்று- உண்மையன்று—உருவமர்கும்பொழுது-தானந்தஸ்வரூபமாகும்போது—கண்ணுற்கண்டவுருவம்- ஞானதிருஷ்டியினுற்பார்த்தஸ்வரூபமானது—வாஸ்தவமாம்- உண்மையாம—எ-று.

[இ-ம்] பாவனைகற்பிதமும் அகினின்றதைக் கனைத்தெழாநின்ற பாவிப்பவனுண்மையுமாதலா லப்பாவனை மிதலையேயதனுலுதயமாகுமூர்த்தி சத்தியமே யாமென்பதாம. (அ௰)

(அ-கை) பொய்க்கு மெய்யையுதிப்பிக்குஞ் சத்தியேதெனற வினுவிற குத்தரம்.

சடமதாகியதியானமெய்யாகியசர்வமுத்தியைநல்கும் ... ... ... ...*
திடமதானதெப்படியெனிலவரவர்தியானமேபிறபபாகு ... ... ...*
முடலமாசையாற்றியானிகதிற்றியானித்தவுடல்களாகுவர்மைந்தா... ...*
தொடர்பவங்கெடசசொரூபமேதியானிகறிசொரூபமாகுவர்மெய்யே *

(இ-ள்) சடமதாகியதியானம்- மிதலையாகியதியானமானது— மெய்யாகிய- சத்தியமாகிய—சர்வமுத்தியை - பரிபூரணமானகைவலயந்தை—நல்கும்- கொடுக்கின்ற— திடமதானதெப்படியெனில் - வலிமையையுடைத்தான தெங்ஙனமென்றுகேட்டில்—அவரவர் - அவரவர்களுடைய—தியானமேபிறப்பாகும்- தியானமேசாரூபம — உடலமாசையாற்றியானிகக தேகவிச்சையினுற்சிந்திக்க—தியானித்தவுடலமாகுவர்- சிந்தித்தவடிவமாவார்கள்—மைந்தா- மாணாக்கா- தொடர்பவங்கெட - தொன்றுதொடடுவருகின்ற பவங்கெடும்பொருட்டு—சொரூபமேதியானிகக- ஆத்மஸ்வரூபத்தைச்சிந்திக்க—சொரூபமாகுவர்- அச்சொரூபமேயாவார்கள்— மெய்யே-உண்மையாம்—எ-று.

[ப-ம்] தியானஞ்சிற்சடவுருவமாகுமென்பார் தியானிக்கவுடல்களாகுவரெனவும் சொரூபமாகுவரெனவுங் கூறினர். [இ-ம] தியானத்திற்குக்காரணவுருவஞ் சடமுங் காரியவுருவ மசத்துமாதலி னதுறகச் சத்தையாவிகரும வல்லமையுண்டாயிற் றென்பதாம. (அ௫)

(ஆ-கை) தியானத்திறவிச்சத்திபிருக்க விசாரஞான மியாதுக்கென்றவினுவிற குத்தரம்.

பிரமரூபத்தைத்தியானித்தபேர்களும்பிரமமாகுவரென்று... ...*
னரசரீரமாங்குரவனேவிசாரமேன்ஞானமேனென்றே ... ... *
பரமபாவனைபரோக்ஷமாம்பின்பந்தப்பரோக்ஷமேயபரோக்ஷம் ... *
திரவிசாரமாஞானமேமுத்தியாந்தீரவைமிதறிவாயே... ... ... ...*

(இ-ள்) பிரமரூபத்தை- பிரமஸ்வரூபத்தை—தியானித்தபேர்களும்-சிந்தித்தவர்களும்—பிரமமாகுவரென்றல்- அப்பிரமமேயாவார்களென்றுசொன்னல்—நரசரீரமாங்குரவனே- மானிடவடிவங்கொண்டவெனதாசிரியரே—விசாரமேன்-விசாரமியாதினுக்கு—ஞானமேன்- ஞானமேதியாதுக்

கு—என்றுதே- என்றுசோளாதே—பரமபாவனே; பிரமத்தியானமானது பரோக்ஷமாம் பரோக்ஷஞானமாம்- புன்பு- பின்—அந்தப்பரோக்ஷமே- அபரோக்ஷஞானமே — அபரோக்ஷம்- அபரோக்ஷஞானமாதல்—திர விசாரமாம்- திடமானவிசாரத்தினு லாகிப்பதாம்—ஞானமே- அந்தவப ரோக்ஷஞானமே—முத்தியாம்- மோக்ஷமாம்—ஈது- இதுவே— தீர்வை யென்றறிவாய் - தீர்ப்பென்றுணருவாய்—எ-று.

[இ-ம்] தியானத்தின்காரியம் யோகமுங்காரணம் விசாரஞானமு மாக லால் அவ்விசாரஞானமே வீடடைதற்கு வேண்டுமென்பதாம். (அகூ)

(அ-கை) முன்புத்தியான யோகத்தைநீக்கி மேல்விசாரஞானத்தை நீக் குவான் விருத்திஞானமிருக்கிற சுபானுபவமெங்ஙனங்கூடுமென்றயினுவி ற்குத்தரம்.

விடதாம்பரிபூரணசொரூபத்தில்விருத்திஞானமுங்கூடிச் ... ...*
சேடமாகிலகண்டமாமனுபவசித்தியெப்படியென்றால் ... ...*
சாடிநீர்மண்ணைப்பிரித்ததேற்றம்பொடிதானுமண்ணொடுமாய்... *
மூடிஞானமுமறிவிலாமையைக்கெடுத்தொக்கவேகெடுந்தானே ...*

(இ-ள்) வீடதாம்- முத்தியாகிய—பரிபூரணசொரூபத்தில் - பூரணமாகிய பிரமஸ்வரூபத்தில்—விருத்திஞானமுங்கூடி- விருத்திஞானமுஞ்சேர்ந்து —சேடமாகில்- விசேடமானல்—அகண்டமாமனுபவசித்தி-அகண்டா காரவனுபவசித்திப்பது—எப்படியென்றல்- எங்ஙனமென்னின்—சா டிநீர்மண்ணை- தாழியிலிருக்குஞ்சலத்திலுள்ளசேற்றை— பிரித்ததேற்ற ம்பொடிதானும்-வேறுசெய்ததேற்றங் கொட்டைத்தூளும்—மண்ணொடு மாயும்- அச்சேற்றொடுங்கெடும்—ஊடு-படகைத்து— ஞானமும் -விருத்தி ஞானமும்—அறிவிலாமையைக்கெடுத்து- அஞ்ஞானத்தைக் கெடுத்து— ஒக்கவேகெடும்- தானுங்கூடவேநசிக்கும்—எ-று.

[இ-ம்] விசாரஞான மவித்தியமாம் பொருட்டவி வின்மையைக் கெடுத் ததோடுங் கெடுவதேயன்றிச் சேடிக்கமாட்டாதென்பதாம். (அஎ)

(அ-கை) கைதவங்களென்ற செய்யுண்முதலிருகாறுமுகபத்திருட்டியா லுண்டானசஞ்சிதம் பரஞானத்தாற்கெடுமெனவு மதனுலுண்டானமனு சாரியமான கன்மத்தையதன்காரணமான விசாரஞானங்கெடுத்தகன்றுமிக னுேடும் கெடுமெனவுங்கூறி யிச்செய்யுளின் அவ்வனுபவமுள்ள சீவன்மு த்தரிலக்கணங்கூறல்.

இந்தநிச்சயமுத்தருளனுபவமிருப்பதெப்படியென்றால்... ... *
சிந்தையற்றபூமண்டலவிராசனுஞ்சிசுவும்போறசுகமாவர்... ... *
பந்தமுத்திகண்மறந்துபோமுண்டென்றுபலர்சொலினகையாவ ...*
ரந்நாத்தைபுண்டுமிழ்ந்ததோர்கொசுகெனுமவர்களோநகையாரோ..*

(இ-ள்) இந்த[illegible]சயம்- இந்தநிச்சயமானது—முத்தருள்- சீவன்முத்தருள் [illegible]ளினிடம்—அனு பவம்- அனுபவமாக—இருப்பதெப்படியென்றால் -இருக் கின்றதெவ்வ[illegible]ணமென்றால்—சிந்தையற்ற - பசையருள்ளொன்னுஞ் சிந்

தையின்றிய—பூமண்டலவிராசனும்- பூவுலகமுழுதுமாளுகின்றசக்கிரவர்த்தியையும்—சிசுவம்போல்- பாலகனையும்போல—சுகமாவர் - சுகஸ்வரூபராயிருப்பார்கள்—பந்தம்-பந்தமானது—மறந்துபோம் கெட்டுபோய்—முத்தி- வீடானது—உண்டென்று - இப்போதுளதாமெனறு— பலர்சொல்லில்-அநேகருரைக்கில்—நகையாவர்- சிரிப்பார்— ஓர்கொசுகு-ஒருமசகமானது—அந்தரத்தை- ஆகாயத்தை—உண்டுமிழ்ந்ததெனும-விழுங்கிக்கக்கிற்றென்னும—அவர்களைநகையாரோ- அவர்களையார்தா னகையார்கள்—எ-று.

[ப-ம்] சுவானுபூதியெப்போது மொருதன்மையவாக விளங்குகின்றதனக்கு- அறியாமையால் பந்தமுமதனிவிர்த்தியான வீடுமிப்போதுண்டானதென்றென்பார்- பந்தமுத்திகளைமறந்துபோ முண்டென்றுபலர்சொலவினகையாவரெனக்கூறினா. [இ-ம] அறிவறியாமையின்றி முன்னுள்ள சத்தமாத்திரமாக விளங்கிசுகி யிருப்பவனே சீவன்முத்தனென்பதாம ()

(அ-கை) மத்தியிலவாந்தரமாக தோன்றுங் கற்பனையின் மயங்காமைக்கோர்கதைகூறல்.

மலடிமைந்தனுந்தானுவிற்புருடனுமவான்மலர்முடிசூடி ... ...*
யிலகுகூந்தர்ப்பநகரிலேசுத்திசையிரசதமயிலேபேசிக் ... ... *
கலகமாயினரிடையினிறகயிற்றராக்கடித்திருவருமாண்டா... ....*
நலகையாயினரெனும்விவகாரத்தையறிந்தவன்மயங்கானே ... ...*

(இ-ள்) மலடிமைந்தனும் வந்தியாபுத்திரனும்—தானுவிற்புருடனும்-குதிரையின்மகனும—வான்மலர்- ஆகாயதாமரைப்பூவை—முடிசூடி- சிரசிற்றரித்து—இலகுகந்தர்ப்பநகரில் விளங்காநின்றகந்தர்வநகரத்தில்—சுத்திசையிரசதம்- கிளிஞ்சிலவெள்ளியை—விலைபேசி- கிரயமபேசி—கலகமாயினர்- பிணக்கடைந்தார்கள் — இடையில்-நடுவில் - கயிற்றராக்கடித்து- ரசசுசர்ப்பந்தீண்டி—இருவரும்- முன்சொன்னவிரண்டுபேர்களும்—மாண்டார்- இறந்து—அலகையாயினர்- பேயானார்கள்— எனும்விவகாரத்தை- என்கின்றகதையினதுபியாயத்தை- அறிந்தவன்மயங்கான்- தெரிந்தவன்மயங்கமாட்டான்—எ-று.

[இ-ம்] கற்பனையின் மூலந்தெரிந்தவ னதனிடத்தின் மயங்கா னென்பதாம். (அகூ)

(அ-கை) இதுகாறுங் காரியோபாதியான வவித்தையினா லுண்டானமயக்கத்தை நீக்கி மேற்காரணோபாதியான மாயையினாலுண்டாகு மயக்கத்தைக் களைதற்பொருட்டதுமித்தையாதலி னதனாலவரும்பலபிராப்திகளு மித்தையென்றகற்றி நீ சுவானுபூதியாக விளங்குவாயெனக்கூறல்.

மாயையென்பதுபொய்யெனிலதுபெற்றவையெலாமபொய்யாமே
தாயையன்றிமக்களுக்கொருபிறவிபுஞ்சாதியும்வேறுண்டோ.......*
சேயசொர்க்கமுநரகமுநன்மையுந்தீமையுமபாராமற் ... ....*
றூயசத்துச்சிதானந்தபூரணசொரூபமாயிருப்பாயே. ... ....*

(இ-ள்) மாயையென்பது- மாயையென்றுசொல்லப்படுவது— பொய்யெனில்- மித்தையென்றால்—அதுபெற்றவகையெலாம் - அதனாலுண்டான பொருளனைத்தும்—பொய்யாம்-மித்தையேயாம்—தாயையன்றி - மாதாவைத்தவிர—மக்களுக்கு- புத்திரருக்கு—ஒருபிறவியும்-ஓர்பிறப்பும்—சாதியும்- குலமும்—வேறுண்டோ-வேறுளவோ—ஆதலால் - சேயசொர்க்கமும்- செவ்விதானசுவர்க்கமும்—நரகமும்-நரகமும்—நன்மையும் - நன்கையும்—தீமையும்- தீங்கையும்—பாராமல்-பார்க்காமல்—தூய-பரிசுத்தமான—சத்துச்சித்தானந்த-சச்சிதானந்தமாகிய—பூரணசொரூபமாயிருப்பாய்-பரிபூரணஸ்வரூபமாகவிருப்பாய்—எ-று.

[இ-ம்] மாயைமித்தையாதலினதன்காரியங்களனைத்துமித்தையேயாமென்பதாம் (கஙஉ)

(அ-கை) மாயாகாரியமித்தையாயின் பிரமன்முதலிய வனைத்துமித்தையாமே அங்ஙனங்கூறிற் குற்றம்வாராவோ வெனவினுதல்:

பங்கயாசனன்முதற்பலதேவரும்பாருளபெரியோருங் ...
கங்கையாதியாந்தீர்த்தமுந்தேசமுங்காலமுமறைநாலு ...
மங்கமாறுமந்திரங்களுந்தவங்களுமசத்தியமெனச்சொன்ன ...
லெங்களையகனேயுதனாற்குற்றங்களில்லையோமொழியீரே ...

(இ-ள்) பங்கயாசனன்முதல்- பிரமதேவனுதியான—பலதேவரும்- சமஸ்ததேவர்களும்—பாருளபெரியோரும்- பூமியின்கணுள்ளமகான்களும்—கங்கையாதியாம்- பாகீரதிமுதலிய—தீர்த்தமும் - தீர்த்தங்களும்—தேசமும்- நாடுகளும்—காலமும் - திரிகாலங்களும்—மறைநாலும் - வேதங்களான்கும்—அங்கமாறும்- சாத்திரங்களாறும்—மந்திரங்களும்- பிரணவாதிமகாமந்திரங்களும்—தவங்களும் - தபசுகளும்—அசத்தியமெனச்சொன்னால்- மித்தையென்றுரைக்கில்—எங்களையகனே- எம்முடையவாண்டவனே—அதனால்- அங்ஙனஞ்சொல்லுவதனால்—குற்றங்களில்லையோ-பிழைகளில்லையோ—மொழியீர்-சொல்வீர்—எ-று.

(இ-ம்] வெளிப்படை (கஙக)

(அ-கை) அவ்வினாவிற்குத்தரம்.

சொர்ப்பனந்தனிற்கண்டதைப்பொய்யென்றுசொல்வதுபிழையானா
லற்பமாயையிற்றோன்றியசகங்களையசத்தெனல்பிழையாமே
சொர்ப்பனந்தனிற்கண்டதைப்பொய்யென்று சொல்லலாமெனின்
மைந்தா- வற்பமாயையிற்றோன்றியசகமெலாமசத்திய மெனலாமே

(இ-ள்) சொர்ப்பனந்தனில்- கனவில்—கண்டதை - பார்த்ததை—பொய்யென்று-மித்தையென்று—சொல்வதுபிழையானால் - சொல்லுவதுகுற்றமாயின்—அற்பமாயையில் - சிறுமையானமாயையினிடத்தில்—தோன்றிய- உண்டான—சகமெலாம்- உலகங்களனைத்தும்—அசத்தெனில்-மித்தையென்றால் பிழையாம் - குற்றமாம்—சொர்ப்பனந்தனில் - கனவில் —கண்டதை- பார்த்ததை—பொய்யென்று- மித்தையென்று—சொல்ல

ஙாமெனில்- உரைக்கலாமெனின்—மைந்தா- புத்திரா—அற்பமாயையில் சிறுமையானமாயையினிடத்தில்—தோன்றியசகங்களை- உண்டானவுலகமனைத்தையும்—அசத்தியமெனலாம்- மித்தையென்றுரைக்கலாம்—எ-று.

(இ-ம்) சொர்ப்பனம்போல மாயாகாரியமான சகசீவபரங்களென்று மித்தையாதலின் அவைகளின்மெய்யில்லையைக்கூறுதலாற் குற்றமில்லையென்பதாம் ()

(அ-கை) சத்தசத்தினுண்மையிதுவெனக்கூறல்.

பொய்யைமெய்யென்றமூடர்புண்ணியமென்றுபுராணங்கூறியதொ
ஞன், மெய்யைமெய்யென்றஞானிக்குக்குற்றங்கள்விதிக்கசாத்தி
ரமுண்டோ, பொய்யதேதெனிற்நாமரூபங்களாம் பூதமாகியமாயை
மெய்யதேதெனிற்சச்சிதானந்தமாய்வியாபிக்குமான்மாவே

(இ-ள்) பொய்யைமெய்யென்ற- மித்தையைச்சத்தியமென்ற—மூடர்- அறிவிலாரை—புண்ணியரென்று- தருமவான்களென்று—புராணங்கூறியதிமானல்- அஷ்டாதசபுராணங்களுமுரைத்திடுமாயின்—மெய்யைமெய்யென்ற- உண்மையையுண்மையென்ற- ஞானிக்கு-ஞானவானகளுக்கு—குற்றங்கள்விதிக்க- குற்றங்களைவிதிக்க சாத்திரமுண்டோ - நூல்களுமுளவோ—பொய்யதேதெனில்- மித்தையாவதேதெனில்—நாமரூபங்களாம்- நாமரூபவடிவங்களான—பூதமாகியமாயை- பஞ்சபூதமெனத்திகழ்ந்தமாயையேயாம்—மெய்யதேதெனில்- தத்துவம்யாதெனில்—சச்சிதானந்தமாய்- சச்சிதானந்தஸ்வரூபமாக—வியாபிக்கும்- வியாபித்திருக்கும்—ஆன்மாவே- ஆத்மஸ்வரூபமேயாம்—எ-று.

[இ-ம்] ஆத்மானாத்மாவிவேகலக்கணங்கூறினதாம் (௩௧)

(அ-கை) மாயையின்றன்மையிதுவெனத்தோன்றவுருவுரையால்விளக்குதல்

மாயையென்பதேதுடையாரெப்படிவந்ததுவந்தவானேன் ... *
மாயையென்பதுபிரமத்தின்வேறெனின்வஸ்துவிரண்டாமே *
மாயையென்பதும்பிரமமுமொன்றெனின்வஸ்துவும்பொய்யாமே *
மாயையென்றமேகங்களுக்கொருசண்டமாருதகுருமூர்த்தி *

(இ-ள்) மாயையென்றமேகங்களுக்கு - மாயையென்றமுகில்களுக்கு—ஒருசண்டமாருதகுருமூர்த்தி- ஒப்பற்றபெருங்காற்றாகியதேசிகமூர்த்தியே—மாயையென்பதேது- மாயையென்றுசொல்லுவதியாது— உடையார்- அதனையுடையவரியாவர்—எப்படிவந்தது- எவ்விதமுதயமாயிற்று—வந்தவானேன்- உண்டானகாரணமென்ன—மாயையென்பது- மாயையென்றுசொல்வது—பிரமத்தின்வேறெனில் - பிரமத்துக்குவேறானதென்றுரைக்கின்—வஸ்துவுமிரண்டாமே வஸ்துவுந்துவிதமாமே-மாயையென்பதும் மாயையென்றுரைக்கப்படுவதும்—பிரமமும்- பிரமமென்றுரைக்கப்படுவதும்—ஒன்றெனில்- ஏகமென்றால்—வஸ்துவும்பொய்யாமே - மாயாவஸ்துவைப்போலப் பிரமவஸ்துவுமசத்தியமாமேஇதனையருள்வீர்—எ-று.

(இ-ம்) மாயையினுருவமும் அதையுடையவர்களையும் அதனுற்பத்தியும்

ஃதுதித்ததற்குக்காரணமும் அஃதுபிரமத்திற்குப்பின்னமாயின வஸ்துவி தமாமேயென்னவும் அபின்னமாயினவஸ்துவு மித்தையாமேயெனவும் அத னுண்மையைத்தெரியவினவினதாம் (௯௪)

(அ-கை) அவைகளின்முதனான்குவினாவிற்குத்தரங்கூறல்.

அதனையின்னதென்றுரைத்திடப்படாமையாலவாச்சியவடிவாகு *
மிதுதனக்குளதாடலியானுலகுமெய்யெனுமவருடையோர்கள் *
கதையிலாதபொய்வந்ததெப்படியென்றுகண்டபேரிலைமைந்தா *
விதனமாயையேன்வந்ததென்றற்புத்திவிசாரமற்றதனாலே *

(இ-ள்) அதனை- அம்மாயையை—இன்னதென்று - இத்தன்மையுள்ள தென்று—உரைத்திடப்படாமையால்- சொல்லக்கூடாமையால்—அவாச் சியவடிவாகும்- அவாச்சியவுருவமாம்— இதுதனக்குளது- இஃதெனக்கு ள்ளது—உடலியான் - இந்தேகநான்—உலகுமெய்-இசசகஞ்சத்தியம்— எனுமவருடையோர்கள்- என்கின்றவர்களேயதனையுடையவர்கள்-கதை யிலாதபொய்-காரணமில்லாதமித்தையானமாயை,— வந்ததெப்படியென்று உதித்ததெவ்விதமென்று—கண்டபேரிலை-பார்த்தவர்களில்லை— மைந்தா-ம கனே—விதனமாயை- துன்பமயமானமாயையானது—ஏன்வந்ததென்று ல்- என்றேற்றிற்றெனில்—புத்திவிசாரமற்றதனால்- ஆத்மஞானவிசாரஞ் செய்யாததினால்வந்தது—எ-று,

[ப-ம்] உருவமருவமுருவாருவமென மாயையையுருத்துச் சொல்லக்கூ டாததென்பார் அவாச்சியவடிவெனவும் தேகாதிப்பிரபஞ்சத்தை யுண் மையென்றுகொள்பவரே அம்மாயையுடையவரென்பார் உடலினுலுலக மெய்யெனு மவருடையோர்களெனவும் மித்தையாகத்தோன்றன் மாத்தி ரமேயன்றி யுற்பத்தியில்லையென்பார் பொய்வந்ததெப்படியென்று கண்ட பேரிலையெனவும் அங்ஙனந்தோன்றுதல் யாதினாலென விசாரிக்குமவிசா ரமின்மையே அதனுற்பத்திக்குக் காரணமென்பார் மாயையேன்வந்ததெ ன்றற் புத்தி விசாரமற்றதனாலேயெனவுங்கூறினார்

[இ-ம்] மாயையினுருவமும் அதனையுடையவர்களையும் அதனுற்பத்தியும் அஃதுதித்ததற்குக்காரணமு மிவையெனக்கூறினதாம். (௯௫)

(அ-கை) ஐந்தாம்வினாவிற் குத்தரம்.

அருவமாகுமாயாவிவித்தைகள்விளையாடுமுன்றெரியாவே *
யுருவமாம்பலகந்தர்ப்பசேனையாயுதித்தபின்வெளியாகும் *
பிரமசத்திகளனந்தமாமதைக்கண்டுபிடித்திடல்கூடாதே *
பரவிபூதங்கள்கண்டனுமானத்தாற்பலருக்கும்வெளியாமே *

(இ-ள்) மாயாவி- இந்திரசாலஞ்செய்பவன்— விளையாடுமுன்- விளையாடு தற்குமுன்பு—அருவமாகும்- தோன்றாமையாயுள்ள—வித்தைகள் - வித்தையாசத்திகள்—தெரியாவே- தோன்றுவாம—உருவமாம்-வடிவங்களா னற—பலகந்தர்ப்பசேனையாய்- அநேகந்தர்வசேனைகளாக—உதித்தபி ன்- உண்டானபின்பு—வெளியாகும்- அச்சத்திகள்விளக்கமாகும்— அ

வைப்போல- பிரமசத்திகள்—பிரமத்தினதுசத்திகளானவை—அனந்தமாம்- அநேகமாம்—அதை- அம்மாயாசத்தினை—கண்டுபிடித்திடல்கூடாது பார்த்தல்கூடாததாம்—பரவுபூதங்கள்கண்டு- விரியும்பஞ்சபூதங்களைப்பார்த்து—அனுமானத்தால்-[அனுமிதிப்பிரமாணத்தால்—பலருக்கும்வெளியாம்- யாவர்க்குமஃதுண்டென்றுவிளங்கும்—எ-று.

[இ-ம்] மித்தையானசகந்தோன்றுதலின் அங்ஙனந்தோற்றுவிக்கு மித்தையானமாயாசத்தியொன்றுளதென வுணரவேண்டுமென்பதாம்.

(அ-கை) (இ-று)

காரியங்களுஞ்சத்தியாதாரமுங்காணுமற்றதுமாயம் ... *
பாரினின்றமாயாவியுஞ்சேனையும்பார்ப்பவர்கண்காணும் ...*
வீரியந்திகழ்வித்தையாயினசத்திவெளிப்படாததுபோலப்... *
பேரியற்பிரமத்துக்குமுலகுக்கும்பிறிதுசத்திகளுண்டே .... ...*

(இ-ள்) சத்தி- அச்சத்தியினது—ஆதாரமும்- ஆதாரமான்பிரமமும்—காரியங்களும்-சிவேஸ்வரசகத்தாகியகாரியங்களும்—காணும்-தோன்றும்—அது- அம்மாயாசத்தியானது—மாயம் - மாயமாயிருக்கும்—பாரினின்ற பூமியின்கணிருந்த—மாயாவியும்- மாயாவித்தைசெய்பவனும்—சேனையும்- அவனுற்காட்டப்பட்டபடைகளும்—பார்ப்பவர்கண்காணும்- காண்பவர்கண்ணிற்குத்தோன்றும்—வீரியந்திகழ்- கெம்பீரமாய்விளங்குகின்ற—வித்தையாயினசத்தி- வித்தையாகியசத்தியானது—வெளிப்படாது- தோன்றுது—அதுபோல - அதைப்போல—பேரியற்பிரமத்துக்கும்- மகத்துவமுள்ளபிரமஸ்வரூபத்துக்கும்—உலகுக்கும் - சகத்துககும்—பிறிதுசத்திகளுண்டு- மத்தியிற்சிலசத்திகளுளவாம்—எ-று,

[இ-ம்] பிரமத்திற்கும் பிரபஞ்சத்திற்கு மத்தியினவாந்தரமாகத் தோற்றுகின்றமாயை தனியேயோர்முதலாகிப் பிரமத்திற்குவேறுபட்டிராததனுல் வஸ்துவிரண்டாகமாட்டாதென்பதாம். (௬௱௭)

(அ-கை) ஆறும்வினுவிற்குத்தரம்.

சத்திசத்தனைத்தவிரவேறன்றுகாண்சத்தனுமாயாவி ... *
வித்தைகாட்டியவிந்திரசாலம்போய்வித்துவானும்போலப் ...*
புத்திமைந்தனேசத்திமானுகிப்பூரணவான்மாவின் ... *
வஸ்துநிர்ணயஞ்சொன்னதிர்ஷ்டாந்தத்தின்வழிகண்டுதெளிவாயே*

(இ-ள்) சத்தி- சத்தியானது—சத்தனைத்தவிர - சத்தனைவிட—வேறன்று காண்- வேறன்றும்—சத்தனும்- சத்தனுகிய—மாயாவி- வித்தைசெய்வான்—வித்தைகாட்டிய- வித்தையைக்காண்பித்த—இந்திரசாலம்போய்- இந்திரசாலநீங்கி—வித்துவானும்போல-வித்துவானுமாறுபோல—புத்திமைந்தனே- அறிவுள்ளமகனே—சத்திமானுகிய-சத்தனுகிய—பூரணவான்மாவின்]- பரிபூரணவாத்மாவின்—வஸ்துநிர்ணயம் - ஸ்வரூபநிச்சயத்தை—சொன்னதிர்ஷ்டாந்தத்தின்- சொல்லியதிஷ்டாந்தத்தினுடைய—வழிகண்டு- மார்க்கத்தைப்பார்த்து—தெளிவாய்-தெளிந்துகொள்வாய்—எ-று.

[இ-ள்] சத்தனைத்தவிரச் சத்தியென்றோர்வஸ்து வேறின்மையானு ம்அசசத்தியில்லாவிடத்துஞ் சத்த னிருக்கையானும் அச்சத்தனுஞ் சத்தியுமெங்ஙனமொன்றும் அங்ஙனமொன்றாகாமையா னச்சத்தியைப் போல விசசத்தனசத்தாகானென்பதாம், (௬௮)

(அ-கை) பிரதிவிம்பமான மாயாசத்தியைநீக்கி விம்பமானசிற்சத்தியை வெளிப்படுத்துவான் அசத்தானமாயாசத்தியுளதென்பதெங்ஙனமென்ற

வினவிற்குத்தரம்.

இல்லையாகியசத்தியையுண்டென்பதெப்படியெனக்கேட்கிற்... *
புல்லையாதியாமசேதனப்பொருளெலாம்பூத்துக்காய்ப்பனபாராய்.*
நல்லையாமகனேயதிலநிற்சத்தி நடந்திடாதிருந்தக்காற்... ,... *
றொல்லையாய்வருஞ்சராசரவுயிர்க்கெலாஞ்சுபாவங்கள்வேறுமே *

(இ-ள்) இல்லையாகியசத்தியை- மித்தையாகியமாயாசத்தியை—உண்டென்பது- உளதென்பது—எப்படியெனக்கேட்கில்- எங்ஙனமென்றுகேட்பாயாகில்—புல்லையாதியாம- புன்முதலியனவாகிய—அசேதனப்பொருளெல்லாம்- சட வஸ்துக்களனைத்தும்—பூத்துக்காய்ப்பன-புஷ்பித்துக்காய்ப்பனவற்றை—பாராய்- பார்த்திடாய்—நல்லையாமகனே- நன்மையான புத்திரனே—அதிலநிற்சிற்சத்தி- அவ்வவற்றிற்சிற்சத்தியானது—நடந்திடாதிருந்தக்கால்- செல்லாதிருக்குமாயின்—தொல்லையாய்வரும்- தொன்றுதொட்டுவருகின்ற—சராசரவுயிர்க்கெல்லாம்-தாபரசங்கமாகிய வுயிர்களனைத்திற்கும்—சுபாவங்கள்வேறும்- குணங்கள்மாறும—எ-று.

(அ-கை) (இ-து)

கருப்பைமுட்டையுட்பறவைகளபலநிறங்கலந்தசித்திரம்பாரா ...*
யருப்பமாஞ்சத்திநியமமில்லாவிடிலரசிலாநகர்போலாம் ...*
நெருப்புநீர்களாங்கசப்புமேமதுரமாநீசனுமறையோதும் ...*
பொருப்புமேகமாங்கடலெலாமண்களாமபுவனமிப்படிபோமே...*

(இ-ள்) கருப்பை- கருப்பையினிருக்கும்—முட்டையுள் - அண்டத்தினுள்ளிருக்குங்கருவில்—பறவைகள்- பட்சிகள்—பலநிறங்கலந்த - அனந்தவன்னமான—சித்திரம்பாராய் - சித்திரத்தைப்பார்—அருப்பமாஞ்சத்தி அருமையானசிற்சத்தியின்—நியமமில்லாவிடில்- நியமமில்லாமற்போனால்—அரசிலாநகர்போலாம்-அரசனில்லாதபட்டணத்தைப்போலாகும்—நெருப்பு- அக்கினியானது—நீர்களாம்- சலமாகும—கசப்பும்- கைப்பும்—மதுரமாம்- தித்திப்பாகும்—நீசனும்- சண்டாளனும்—மறையோதும் வேதாத்தியானஞ்செய்வான்—பொருப்பு- மலைகளும்—மேகமாம் - மேகங்களாம்—கடலெலாம்- சமுத்திரங்களனைத்தும்—மண்களாம் - புழுதிகளாம்—புவனம்- சகத்தானது—இப்படிபோம-இவ்வண்ணமாகும்-எ-று

இ உ-க-ம் சூரியகிரணமேபிரமகத்தின்மித்தையானசலமாகவும்அங்ஙனமகத்தினுண்மையான கானலாகவுந் தோற்றுவனபோல பிரமப்பிரகா

சமே பகிர்முகத்தின் மித்தையான மாயாசத்தியாகவும் அந்தர்முகத்தினு ண்மையான சிற்சத்தியாகவுந் தோன்றியவிசசத்தியே யனைத்திறகுமுள் ளீடாயிருந்து நடாத்துதலினிஃதின்றன்மையையதன்மேல்வைத்துககூறி னதேயன்றி யதற்கின்றென்பதாம். (ள)

(அ-கை) இச்சத்திகணீங்கலுஞ் சத்தனைத்துவிதமின்றித் தரிசித்தலுமமு த்தியையடைதலுமெங்ஙனமென்று முனறுவசையான்வினுதல்.

ஆர்க்குங்காணவுமறியவும்படாதென்றுமவாச்சியவடிவென்றுந் *
சேர்க்குநாமரூபப்பயிர்வித்தென்றுஞ்செப்பியசிறசத்தி ...*
போக்குமாறெங்ஙன்பிறித்திடப்படாதெனிறபிரமபாவனையொன்றுப்
பார்க்குமாறெங்ஙன்முத்தியாகுவதெங்ஙன்பரமசறகுருமூாத்தி ...*

(இ-ள்) ஆர்க்கும்- யாவராலும் —காணவும்- பார்க்கவும—அறியவும்- உணரவும்—படாதென்றும கூடாதெனவும —அவாச்சியமாவெனறும்-நிர்வசனரூபமெனவும்—சோக்கும சறபனையாகசசேர்கின்ற - நாமரூபப் பயிர்- நாமரூபபிரபஞசமாகியபயிருககு—வித்தென்றும - விதையெனவும்—செப்பியசிறசத்தி - சொலலியசிறசத்தியை—போககுமாறெங்ஙன் நீக்குமவாறெபபடி —பிரித்திடப்படாதெனில வேறுபடுத்தககூடாதெ ன்றால்—பரமசறகுருமூாத்தி- மேலானதேசிகரே—பிரமபாவனை-ஸ்வரூ பசமாதியில—ஒன்று- அத்துவிதமாக —பாாககுமாறெங்ஙன்-தரிசிககுமா றெப்படி —முத்தியாகுவதெங்ஙன்- வீடுண்டாவதெப்படி—எ-று.

[இ-ம்] வெளிப்படை (௧க)

(அ-சை) முதலிரண்டுவினுவிறகுத்தரங்கூறல்.

வாயுஸ்தமபனஞசலஸதம்பனமணிமந்திரமருந்தாலே... ...*
தேயுஸ்தம்பனஞ்செய்திடலதிலதிறசிறந்தசததிகளெங்கே... *
நீயசசசிதானந்தமாய்வேறென்றுநினைந்திடாதிருப்பாயேல் *
மாயசத்திபோமிதன்றிமந்திரமறைகளிறகாணேமே ...*

(இ-ள்) மணிமந்திரமருந்தால்- மணிமந்திரவௌஷதங்களினால் —வாயுஸ் தம்பனம்-வாயுஸ்தம்பனமும்—சலஸ்தம்பனம-சலஸ்தம்பனமும்—தே யுஸ்தம்பனம்-அக்கினிஸ்தம்பனமும்—செய்திடல-செய்தால- அதிலதி ல்- அவ்வவற்றில—சிறந்தசத்திகளெங்கே- சிறந்திருக்குஞசலனகிரமுசசி யுஷ்ணமாகிய மூன்றுசத்திகளுமெங்கேயிருக்கின்றன— நீயசசசிதானந்த மாய்-நீயசசசிதானந்தவடிவமாகி— வேறென்றும - மற்றொன்றையும நினைந்திடாதிருப்பாயேல - நினையாதிருப்பாயாகில—மாயசத்திபோம மாயாசத்திநீங்கும்—ஈதன்றி- இதைததவிர—மந்திரம-உபாயமான்து- மறைகளிற்காணேம்- வேதங்களிற்பார்ததிலம்—எ-று.

(இ-ம்) குருவாக்கியப்படி யுண்மையான சசசிதானந்தஸ்வரூபமே தானெனச சிந்திக்கின் தன்மயமாதலு மில்லாததான மாயாசத்தியில்லாததாகவே நீங்குதலுமாமென்பதாம.

(அ-கை) மூன்றாம் வினாவிற்குத்தரங்கூறல்.

மேவுமண்ணிலவ்வியத்தமேயவித்தமாம்விவகரித்திடவேண்டி ... ✽
னாவினான்மண்ணைக்குடமென்பரக்குடநசிப்பதுநாவாலே ... ...✽
பாவுநாமரூபங்களைமறந்துமண்பார்ப்பதேபரமார்த்தந் ... ...✽
சீவபேதகற்பிதங்களைமறந்துநீசின்மயமாவாயே ... ... ...✽

(இ-ள்) மேவும்-பொருந்தாநின்ற—மண்ணில்- மிருத்துவில்— அவ்வியத்தம்- மறைபட்டிருந்தகடசத்தி—வியத்தமாம்- வெளிப்படும்—விவகரித்திடவேண்டில்- விவகரிக்குநிமித்தம்—நாவினால் - நாக்கினால்—மண்ணை-அம்மிருத்துவை—குடமென்பர்- கடமென்றுசொல்லுவார்கள்—அக்குடம்-அக்கடநாமம்—நசிப்பதும்—மண்ணாகவிருப்பதும்—நாவாலே- நாக்கினாலேயாம்—பாவும்- கற்பனையாகவழங்குகின்ற—நாமரூபங்களைமறந்து- நாமரூபவடிவங்களைநினையாது—மண்பார்ப்பதே- மிருத்துவாகப்பார்ப்பதே—பரமார்த்தம்- உண்மையாம்—அங்ஙனம்-சீவபேதகற்பிதங்களைமறந்து—சீவேஸ்வரசகத்தென்னும்-வேறுபாடுகளைநீக்கி—நீசின்மயமாவாய்-நீசின்மாத்திரமாவாய்—எ-று.

[இ-ம்] கடத்தைமண்ணென்றறியின் கடமென்பதுநசித்து அதுமண்ணாகவிளங்குவது போலச் சிற்சத்தியைச்சித்தெனக்காணின் அச்சத்தி நீங்கியது சித்தாக விளங்குவதே மாயா நிவிர்த்தியாகிய முத்தியென்பதாம் ()

இந்த மேற்கூறு மஷ்டவிதானந்தத்தி னென்றுணவத்துவிதானந்தமெனக்கொள்க.

(அ-கை) அச்சத்திகளிங்கினவிடத்து மகன்காரியமானதிரிபிய நீங்காமையா னிந்து நீங்குமுபாயமனுக்கிரகிக்க வேண்டுமென்ற வினாவிற்குத்தரம்.

பூரிக்குங்கனசச்சிதானந்தத்திற்பொய்சடந்துயர்மூன்றுந் ... ...✽
தூரத்தாயினுந்தோன்றுபாழ்விபரீதந்துடைப்பதெப்படியென்று ✽
னீரிற்றோன்றுந்தன்னிழறலைகீழதாய்நின்றலையினுநேராய்ப் ... ...✽
பாரிற்றோன்றியதன்னைநோக்கிடிலந்தப்பாழ்நிழல்பொய்யாமே ...✽

(இ-ள்) பூரிக்கும்- பூரணமாயிருக்கின்ற—கனசச்சிதானந்தத்தில் —கனமானசச்சிதானந்தஸ்வரூபத்தில்—பொய்சடந்துயர்- அனிர்தசட துக்கமாகிய—மூன்றும்-திரிவிதமும்—தூரத்தாயினும்- இலவாயினும்— தோன்றுபாழ்விபரீதம- தோற்றுகின்றபாழாகிய விபரீதத்தை— துடைப்பதெப்படியென்றால்-கெடுப்பதெவ்விதமென்னில்—நீரிற்றோன்றுந்தன்னிழல்- சலத்திற்பிரதிபலித்துத் தோன்றுகின்றதனதுசாயையானது—தலைகீழதாய்நின்று- தலைகீழாயிருந்து—அலையினும்- சலிக்கினும்—நேராய்- செவ்விதாய்—பாரிற்றோன்றிய- பூமியிற்றோன்றிய—தன்னைநோக்கிடில்- தனதுருவத்தைப்பார்க்கில்—அந்தப்பாழ்நிழல்- அப்பாழானசாயையானது—பொய்யாம்- மித்தையாம்—எ-று.

## சந்தேகந்தெளிதற்படலம்.

[இ-ம்] தன்னைத்தரிசிக்கிற் றனதுசாயையான திரிசியந்தானாகவேநீங்கு மென்பதாம். (௱௪)

(அ-கை) (இ-து)

ஞானங்காரணமறிவுகாண்காரியநாமரூபப்பேர்க ... ... .. *
னானதெப்படியழிந்ததெப்படியெனவாய்குதல்பலனன்றே ... ...*
மானமைந்தனேநீக்கசொர்ப்பனசகம்வந்ததும்பாராமற் ... ...*
போனதுநினையாமலுன்போதமாய்ப்பூரணமாயிருப்பாயே, ... *

(இ-ள்) காரணம்-காரணமானது—ஞானமறிவுகாண் - ஞானத்தையறியுமறிவாம்—காரியம்- காரியமானது—நாமரூபப்பேர்கள்-நாமரூபமானசீவேஸ்வரசகங்களாம்—ஆனதெப்படி யழிந்ததெப்படியென - இவையுற்பத்தி நாசமெவ்வண்ணமென்று—ஆய்குதல் - விசாரித்தல்—பலனன்று-பயனன்றாம்—மானமைந்தனே - பெருமையுள்ளபுத்திரா— நீக்கசொர்ப்பன சகம்- நீண்டகனவாகியவுலகங்கள்—வந்ததும் பாராமல்- உதித்ததையும் விசாரியாமல்—போனதுநினையாமல் -நசித்ததையும்விசாரியாமல்—உன் போதமாய்- உனதுஞானமாயும்—பூரணமாயிருப்பாய் - பரிபூரணஸ்வரூபமாயுமிருப்பாய்—எ-று,

[இ-ம்] காரணமான சின்மாத்திரமாகத்தான்விளங்கின் காரியமானயாவு மஃதாகவே விளங்குமென்பதாம். (௱௫)

(அ-கை) சிந்திக்குமுறை மதிலுதிக்குமத்துவிதாநந்தமுங்கூறல்.

அசத்திலெம்மட்டிண்டம்மட்டும்பராமுகமாகினையம்மட்டு ... ...*
நிசத்திலுள்விழிப்பார்வையாயிப்படிநிரந்தரப்பழக்கத்தால் ... ...*
வசத்திலுன்மனநின்றுசின்மாத்திரவடிவமாகிடின்மைந்தா........*
கசத்ததேகத்திலிருக்கினுமானந்தக்கடல்வடிவாவாயே... ... ...*

(இ-ள்) அசத்தியில்- திரிசியமானமித்தையில்—எம்மட்டிண்டு- எவ்வளவு காலமிருந்தனையோ— அம்மட்டும்- அவ்வளவுகாலமும்—பராமுகமாகினை ய்- பகிர்முகமானாய்—அம்மட்டும்- அவ்வளவாக—நிசத்தில்-நிருக்கானசத்தில்—உள்விழிப்பார்வையாய்-அந்தர்முகதிஷ்டியாய்—இப்படி-இவ்விதம்—நிரந்தரப்பழக்கத்தால்- இடைவிடாதவப்பியாசத்தினால்— உன்மனம் உன்மனமானது—வசத்தினின்று- உனதுவசமாகவிருந்து— சின்மாத்திர வடிவமாகிடின்-சைதன்யஸ்வரூபமானால்—மைந்தா- மகனே—கசத்ததே கத்தில்- வெறுக்கப்பட்டசரீரத்தில்—இருக்கினும்- நீயிருந்தாலும்—ஆனந்தக்கடல்வடிவாவாய்- பிரமானந்தசாகரஸ்வரூபமாவாய்—எ-று.

[இ-ம்] இங்ஙனஞ்சிந்தித்துத் சித்துருவமாவானையி னவ்வுருவமானவானந்தஸ்வரூபமே தானாகவிளங்குவனென்பதாம். (௱௬)

(அ-கை) மாயையவித்தைமுதலிய சடபாவநீங்கிச் சிற்சத்தியாகிய சிற்பாவமாத்மாவிற் கரைந்தஃதானபின்பவ்வாத்மாசச்சிதானந்தஸ்வரூபமென்றுணர்த்தின் வாசிரியரை நோக்கியங்ஙனமாயின் சத்தையுஞ்சித்தையும் போல வானந்தமே னதனிடத்திற் காணப்படவில்லையெனவினைதல்.

தானன்றிவேறொன்றுமில்லாதபூரணச்சச்சிதானந்தகுணமா... ...*
யூனின்றவுயிர்தோறுமொன்றாகுமென்றாலதொக்கின்றபடிகண்டிலே
னானென்றசீவன்கள்சத்தானவகையொக்கு ஞானங்கள்வெளிகண்ட
மானந்தமிவைபோலவெளியாகவுதியாகவடைவேதுகுருநாதனே[தா

(இ-ள்) குருநாதனே- தேசிகனே—தானன்றி- தன்னைத்தவிர— வேறொன்றுமில்லாத- இதரவஸ்துக்களில்லாத—பூரண - பரிபூரணமாகிய—சச்சிதானந்தகுணமாய்- சச்சிதானந்தசுபாவமாய்—ஊனின்ற- தேகத்தின்கண்ணிருந்த—உயிர்தோறும்-சீவர்கடோறும்— ஒன்றாகுமென்றால்-ஏகமாயிருக்குமென்னில்—அது- அச்சச்சிதானந்தமானது— ஒக்கின்றபடிகண்டிலேன்-ஒத்திருக்கும்வண்ணம்பார்த்திலன்—நானென்றசீவன்கள்- அகம்பாவமுள்ளசீவர்கள்—சத்தானவகையொக்கும்-சத்தென்கின்றவழியொக்கும்—ஞானங்கள்- சித்தும்—வெளிகண்டது-விளங்குகின்றது— இவைபோல- இவற்றைப்போல—ஆனந்தம்- ஆனந்தமானது— வெளியாகவுதியாத- வெளியாகத்தோன்றாத—அடைவேது-கிரமமேது—எ-று. (௯௭)

(அ-கை) அவ்வினாவிற்குத்தரங்கூறல்.

உருவங்களிரதங்கள்பரிசங்களொருபூவிலொன்றாகுமென்றாலுமே*
கரணங்களோரொன்றினோரொன்றுதெரியுங்கணக்கன்றிவாராதுகா*
ணருமந்தசச்சிதானந்தச்சுபாவங்களான்மாவின்வடிவாகினும் ... *
பிரபஞ்சமயமாம்விருத்திபேதத்தினாற்பேதங்களாமைந்தனே......*

(இ-ள்) உருவங்கள்-வடிவங்களும்—இரதங்கள்- சுவைகளும்— பரிசங்கள்- பரிசங்களும்—ஒருபூவில்- ஒருமலரில்—ஒன்றாகுமென்றாலும்-ஒன்றாயிருக்குமென்னினும்—கரணங்களோரொன்றின்- இந்தியமொவ்வொன்றிற்கு—ஓரொன்றுதெரியுங்கணக்கன்றி- ஒவ்வொருவிடயந்தெரியுங்கணக்கேயல்லாமல்—வாராதுகாண்- தெரியமாட்டாது—அதுபோல-அருமந்த—அருமருந்தன்ன—சச்சிதானந்தச் சுபாவங்கள்- சச்சிதானந்தவியல்புகள்—ஆன்மாவின்வடிவாகினும்- ஆத்மஸ்வரூபமானாலும் - பிரபஞ்சமயமாம் சகத்துருவமான—விருத்திபேதத்தினால் - விருத்தியின் வேற்றுமையினால்—மைந்தனே- மகனே—பேதங்களாம்- வேற்றுமைகளாம்—எ-று.

(அ-கை) (இ-து.)

தாமிதமிராசதஞ்சாத்துவிதமுக்குணத்தால்வரும்விருத்திமூன்று *
மாமவைகண்மூடமுங்கோரமுஞ்சாந்தமுமபிதானமாகுமகனே ...*
யேமுறவிருக்கின்றசச்சிதானந்தங்களென்றென்றுமொன்றாகினு...*
நாமுனாக்கும்விருத்திப்பிரிவினாற்சொருபஞானதிபிறிவாகுமே ...*

(இ-ள்) தாமதம்- தமசும்—இராசதம்-இரசசும்— சாத்துவிதம் - சத்துவமுமாகிய—முக்குணத்தால்- திரிகுணங்களால்— வரும்விருத்திமூன்றும்- உண்டானவிருத்திகடிரிவிதமாம்—ஆம்-ஆகின்ற—அவைகள்-அம்மூன்றும்—மூடமும்-மூடவிருத்தியெனவும்—கோரமும் - கோரவிருத்தியெனவும்—சாந்தமும்-சாந்தவிருத்தியெனவும்— அபிதானமாகும்-பெயரைப்பெ

றவனவாம்—மகனே- மைந்தா—ஏமுறவிருக்கின்ற- இன்புறவிருக்கின்ற—சச்சிதானந்தங்கள் - சச்சிதானந்தமானவைகள்—என்றென்றும்- எப்போதும்—ஒன்றிலும்- ஒக்காலுமும்—நாமுறைாகரும்- யாஞ்சொல்லுமு—விருத்திப்பிரிவினால்- விர்த்திபேதத்தினால்—சொருபஞானதி- சித்துமுதலியசத்தானந்த ஸ்வரூபங்கள்—பிறவாகும்-பேதங்களாம—எ-று.ாசு

(அ-து) (இ-து)

சடமானமூடத்தருக்கல்லுமண்களிற்சத்தொன்றுமேதோன்றுமால் *
விடமானகாமாதிகோரத்திலானந்தமவிளையாதுமறறவைகளாந் ... *
திடமானவொழிவாதிசாந்தத்திலேசச்சிதானந்தமூன்றும்வெளியா *
மடமானமூடங்கள்கோரங்கள்விடுசாந்தமனமாகிலானந்தமே.. ...*

(இ-ள்) சடமான- சடமாகிய—மூடத்தருகசல்லுமண்களில் -மரஞ்சிலைமண்களின்மூடவிருத்தியில்—சததொனறுமேதோன்றும் - சத்துமாத்திரந்தோற்றும்—விடமான- விடரூபமான —காமாதிகோரத்தில்- காமமுதலியகோரவிருத்தியில்—ஆனந்தம்விளையாது- ஆனந்தமுதியாது—மறறவைகளாம்-சததுஞ்சிததுந்தோன்றும்—திடமான- உறுதியான—ஒழிவாதிசாந்தத்தில்- ஒழிவுமுதலியசாநதவிருததியில்— சச்சிதானந்தமூன்றும்வெளியாம்-சச்சிதானந்தமூன்றுமவெளிப்படும— மடமான - அறிவினமையாகிய—மூடங்கள்- மூடவிருத்திகளையும்—கோரங்கள் - கோரவிருத்திகளையும—விடு-விடாநின்ற—மனம்-மனமானது—சாந்தமாகில்- சாந்தவிருத்தியைப்பெறில்—ஆனந்தம்- ஆனந்தம்வெளியாம—எ-று.

[இ-சு-கூ-ம்] ஆத்மசுபாவமான சச்சிதானந்தம்விருத்திபேதங்களினன் மறைபட்டதும் வெளிபட்டதும்போலததோறறினுந்தேயமறிய யவைகளாதனிடத்தில்லாத தன்றென்பதாம் (ளய)

(அ-கை) அச்சசசிதானந்தவிலக்கணமியாதென்றவினாவிற்குத்தரம்.

இகமானகுருநாதனேசச்சிதானந்தமெனுமிலக்கணமறிகிலே *
னகலாதசத்தாவதேது சித்தாவதேதானந்தமேதென்மிடின் *
மிகுகாலமூன்றுங்கெடாதிருப்பதுசத்துவேறுபாடறிதல்சித்தா *
மகிழ்காமநுகர்போதுசுகமாகுமனுபூதிவாழ்வென்பதானந்தமே *

(இ-ள்) இகமான- இம்மாவிடைவழிவமாசவெழுந்தருளிய—குருநாதனே- குருசாமியே—சச்சிதானந்தமெனும் - சசசிதானந்தமென்கின்ற—இலக்கணமறிகிலேன்- இலக்கணத்தைத்தெரிந்திலன்—அகலாத - நீங்காத—சத்தாவதேது- சத்தென்பதியாது—சித்தாவதேது- சித்தென்பதியாது—ஆனந்தமேது- ஆனந்தமெனபதியாது—என்றிடில்-என்றுகேட்டையாயின்—மிகு- மிகுந்த—காலமூன்றும்- திரிகாலங்களினும்—கெடாதிருப்பது- நசியாதிருப்பது—சத்து- சத்தாகும்—வேறுபாடறிதல் - சிற்சடபேதங்களையறிதல—சித்தாம்- சித்தாகும—மகிழ்காமம்- மகிழாநின்றகாமம்நுகர்போது- அநுபவிக்கும்போது—சுகம்- இன்பத்தைப்போல—ஆகும்- ஆகாநின்ற—அனுபூதிவாழ்வென்பது - சுவானுபூதிசுகமென்றுசொல்லப்படுவது—ஆனந்தம- ஆனந்தமாம—எ-று.

[இ-ம்] சச்சிதானந்தவிலக்கண மிவையெனக்கூறினதாம். (௩௰௧)

அ-ங்க) ஆத்மாசச்சிதானந்தமென்பதற் கனுபவம்விளுதல்.

நாசச்சரீரத்திருக்குஞ்சரீரிதனை நால்வேதமாவாக்கிய ... ௧
நீசச்சிதானந்தமென்றிடினுமாசிரியர்நீபிரமமாகுமெனினு ௨
மாசற்றசச்சிதானந்தநானென்னவிவன்மன்னுமனுபவமெங்ஙனே ௩
கோசப்புரங்களையிடித்துத்தகர்த்தமதகுஞ்சரகுருநாதனே ௪

(இ-ள்) நாசச்சரீரத்து- நசிக்கின்றதேகத்தில—இருக்குஞ்சரீரிதனை - இருக்கின்றதேகியை—நால்வேதமாவாக்கியம் - நான்குசுருதியின்முடிவிலுள்ள மகாவாக்கியங்களும—நீ சச்சிதானந்தமென்றிடினும்-நீயேசச்சிதானந்தஸ்வரூபமென்றுசொல்லினும—ஆசிரியர் - தேசிகருபதேசமும—நீபிரமமாகுமெனினும- நீயேபிரமமென்றுசொல்லினும—மாசற்ற- நின்மலமான—சச்சிதானந்தம- சச்சிதானந்தமே—நானென்ன -நானென்று- - இவன்- இம்மாணாக்கன—மன்னுமனுபவம்- பொருந்துமனுபவமான து—எங்ஙன- எவ்விதம—கோசப்புரங்களை பஞ்சகோசமாகிய வீடுகளையும—இடித்துத்தகர்த்த- உடைத்துத்தகர்த்த- மதம-மதத்தையுடைய —குஞ்சரகுருநாதனே- யானையாகியகுருசாமியே—எ-று,

[இ-ம] வெளிப்படை. (௩௰௨)

(அ-கை) ஆத்மாசத்தென்பதற் கனுபவங்கூறல்.

சென்மாந்தரஞ்செய்தவினைகளுண்டாருமெனிற்செலகாலமினனுண்ட
லோ, கன்மானுபவநரகசொர்க்கமெனில்வருகின்ற காலத்துமிவனு
ண்டலோ, வுன்மாதயாதனைவுடலகடவுளுடனமனுடவுடலமாறிமா
றியழியும், தன்மாயவுடல்கெடினுமிவனிருப்பதுகொண்டுசத்தென்
பதொககுமகனே ... ... ... ... ...

(இ-ள) சென்மாந்தரஞ்செய்த- முன்சென்மங்களிற்செய்த—வினைகள் - கன்மங்களானவை—உடனருமெனில- தேகத்தைத்தொடருமென்றால்—செலகாலம்- சென்றகாலத்தினும—இவனுண்டலோ-இப்புருடனிருந்தானல்லவா—கன்மானுபவம- இப்போதுசெய்தகன்மமனுபவித்தற்குத்தக்க—நரகசொர்க்கமெனில- இனிநரகசொர்க்கங்களையடைவனென்றால—வருகின்றகாலத்தும- எதிர்காலத்தினும—இவனுண்டலோ - இவனிருப்பானல்லவா—உன்மாதயாதனைவுடல - உன்மத்தமாகியயாதனைசரீரமும—கடவுளுடல்- தேவசரீரமும—மனுடவுடல- மானுடசரீரமுமாக—மாறிமாறியழியும்- மாறிமாறிநசிக்கும்—தன்மாயவுடல்கெடினும் - தனதுமித்தையாகிய தேகநசிக்கினும்—இவனிருப்பதுகொண்டு- இத்தேகிகெடாமலிருப்பதனால்—மகனே- மைந்தா—சத்தென்பதொக்கும்- இவனைச்சத்தென்னுமனுபவமொக்கும்—எ-று.

[இ-ம] தேகமுதலியவைகணசிக்கினுந் தானசியாமன் மூன்றுகாலங்களினு மிருத்தலினாத்மாவே சத்தென்பதாம (௩௰௩)

(அ-ஙக) ஆதமாசித்தென்பதற்கு மானந்தமென்பதற்கு மனுபவங்கூறல்.

இருளாகமூடுஞ்சுழுத்தியிலிராத்திரியிலிரவிசுடரற்றபொழுது ...*
மருளாமலிருளையும்பொருளையுந்தெரிகின்றவகைகொண்டுசித்தாகு
மே, பெருவாழ்வுமிக்கதானேதன்னிடத்தினிற் பேராதபிரியமதனு
லருகாதபிரியஞ்சுகத்தில்வருமாதலாலானந்தமாமைந்தனே *

(இ-ள்) இருளாகமூடுஞ்சுழுத்தியில் - அந்தகாரமாகமூடிக்கொள்ளுஞ் சுழுத்தியவத்தையிலும்—இராத்திரியில் - இரவிலும்—இரவிசுடரற்றபொழுதும்- சூரியப்பிரகாசமில்லாதபோதும்—மருளாமல்- மயங்காமல்—இருளையும்- இருட்டையும்—பொருளையும் - வஸ்துக்களையும்—தெரிகின்றவகைகொண்டு- காண்கின்றவகையினால்—சித்தாகும்- இவனேசித்தாகும்—பெருவாழ்வுமிக்க- பேரானந்தமிகுந்த—தானேதன்னிடத்தினில்- தானேதனதிடத்தில்—பேராதபிரியமதனல்- நீங்காதபிரியம்வைப்பதனல்—அருகாதபிரியம்- குறையாதபிரியமானது—சுகத்தில்வருமாதலால்- தனதுசுகத்தில்வருவதனுபவமாதலால்—மைந்தனே- மகனே—ஆனந்தமாம் இவனேயானந்தமாவன்—எ-று.

[இ-ம்] ஆத்மாவறிவறியாமையின்றி யறிவாயிருந்தறிதலிற் சித்தும் விடயங்களனைத்தினுமுள்ள பிரியநீங்கினுந் தனதுபிரியநீங்காமையி னானந்தமுமாமென்பதாம் (௱மச)

(அ-கை) சுகசாதனங்களிற் பிரியமிருப்பதுபோல வாத்மாவிலும்பிரியமிருக்கலி னஃதானந்தத்திற்குச சாதனமாகாதோவெனி லங்ஙனமாகாவென்பதற் கனுபவங்கூறல்.

அன்னபானுதிசுகசாதனமதாகையாலார்க்கும்வெகுபிரியமாகு ...*
மின்னவாறான்மாவுமானந்தசாதனமெனக்கருதல்பொருளலலவே*
சொன்னவான்மாவையொருசுகசாதனங்களொடு சொல்லுவாயாகி
ன்மகனே, யுன்னதானந்தம்வேறாவனுபவிப்பதாமுபயவான்மாவு
முளவோ ... ... ... ... ... ... *

(இ-ள்) அன்னபானுதி-உண்பனபருகுவனமுதலியவைகள்— சுகசாதனமதாகையால்- சுகத்துக்குச்சாதனமாகையால்—ஆர்க்கும்-யாவர்க்கும—வெகுபிரியமாகும்- மிகுந்தபிரியமாம்—இன்னவாறு- இவ்வண்ணம்—ஆன்மாவும்- ஆத்மாவும்—ஆனந்தசாதனமென் - ஆனந்தத்துக்குச சாதனமென்று—கருதல்பொருளல்லவே- நினைப்பதருத்தமல்லவே—சொன்னவான்மாவை-சொல்லியவாத்மஸ்வரூபத்தை—ஒருசுகசாதனங்களோடு- ஓர்சுகசாதனங்களோடுங்கூட—சொல்லுவாயாகின்- சொல்லுவை யாகில்—மகனே-மைந்தா—உன்னதானந்தம் - உனதானந்தமானது— வேறா உன்னைவிடவேறா—அனுபவிப்பதாம் - அனுபவிப்பதாகிய—உபயவான்மாவுமுளவோ-இரண்டாமாத்மாவுமுண்டோ—எ-று,

(இ-ம்) சாதனமிறந்து சாத்தியமானவிடத்திற்சேடித்தநிரதிசயானந்தம்வேறு மஃதனுபவிக்கு மாத்மாவேறு மின்றாதலி னவ்வாத்மாவேயானந்தமாவதன்றியதற்குச் சாதனமாகாதென்பதாம,

# சந்தேகந்தெளிதற்படலம்.

(அ-கை) ஆத்மாவானந்தஸ்வரூபமாயி னெகிரிட்ட னுபவிக்குமானந்த
ஃதாகாதோவெனவரி னஃதுவிடையானந்தமாதலி னைகொள்ளவென்பதற்கு
புவங்கூறல்.

விடயசுகமதில்வருதல்பிரியமாத்திரமாகும்வெகுபிரியமான்மாவிலா
ம், விடயசுகம்வருபிரிய மாறிவருமான்மாவில்வெகுபிரியமாறாதுகா
ண், விடயசுகம் விடலுமாங் கொளலுமா மான்மாவைவிடுவதெவர்
கொள்வதெவர்பார், விடயசுகபோகங்கள் விடுமவனையவனால்விடப்
படாதொருநாளுமே...

(இ-ள்) விடயசுகமதில்- விஷயானந்தத்தில்—வருதல்பிரியம்-இன்பமுண்
டாதல்—மாத்திரமாகும்- அற்பவளவாம்—ஆன்மாவில்- ஆத்மாவினிடத்
தில்—வெகுபிரியமாம்- மிகுந்தபிரியமாகும்—விடயசுகம் - விடயானந்த
த்தில்—வருபிரியம்- உதிக்கின்றபிரியமானது—மாறிவரும் - மாறிமாறியு
ண்டாகும்—ஆன்மாவில- ஆத்மாவினிடத்துள்ள—வெகுபிரியம்- மிகுந்
தபிரியமானது—மாறாதுகாண்- விடநீங்காது—விடயசுகம்- விடயானந்
தமானது—விடலுமாம்- விட்டுவிடவுமாம்—கொளலுமாம் - கொள்ளவு
மாம்—ஆன்மாவை- ஆத்மானந்தத்தை—விடுவதெவர்- விடுகின்றவர்யார்
—கொள்வதெவர்- கொள்ளுகின்றவர்யார்—பார்- நன்றாகப்பார்—விடய
சுகபோகங்கள்- விடயானந்தானுபவங்களை—விடுமவனை - நீக்கினவவ்வா
த்மாவை—ஒருநாளும்- எக்காலமும்—அவனால்விடப்படாது - அவ்வாத்
மாவினால் விடக்கூடாது—எ-று.

[இ-ம்] விடயவின்பங்களனைத்து மாத்மப்பிரிய லேசமாதலி னஃதுக
சித்து மிஃதுசகியாதிருத்தலினவ்வானந்தமாத்மானந்தமாகாவென்பதாம

(அ-கை) ஆத்மாவானந்தவடிவமாகி னதனிடத்தின் வெறுப்பிருக்கின்ற
தேபொரி லங்ஙனமின்றென்பதற் கினுடாவங்கூறல்.

வேகின்றகோபங்களாலென்னைநான் கொன்றுவிடுகிறேனென்றுசில
பேர், சாகின்றபடியினாற்றன்னையேதான்கொன்று சாவனெனல் சங்
கையலவே, தேகந்தனைக்கொல்லுமவனால்விடப்பட்ட தேகமவனல்
லன்மகனே, யாகந்தனிற்கோபமல துதனையொருநாளு,மான்மாவெ
றுப்பதிலையே

(இ-ள்) வேகின்றகோபங்களால்- வேகாநின்றகோபங்களால்—என்னை-த
ன்னை—நான்கொன்றுவிடுகிறேனென்று-நான்கொல்கின்றேனென்று—சி
லபேர்- சிலர்—சாகின்றபடியினால்-இறக்கின்றபடியினால்—தன்னையேதா
ன்கொன்று- தன்னைத்தானேகொலைசெய்துக்கொண்டு—சாவனெனல்-ம
ரிப்பானென்பது—சங்கையல- அங்ஙனஞ்சங்கிப்பது சங்கையன்றாம்—
தேகந்தனைக்கொல்லும்- உடலைக்கொல்கின்ற—அவனால்- அப்புருடனால்
—விடப்பட்டதேகம்- நீக்கப்பட்டதேகமானது—அவனல்லன் - அவ்வா
த்மாவலன்றாம்—மகனே- மைந்தா—அகந்தனில்-தேகத்தில்—கோபமலது

சோபமவந்ததேயல்லாமல்—தனே - ஆத்மாவை—ஒருநாளும் - எப்போ தும்—ஆன்மா வெறுப்பதிலே- ஆத்மாவானவன் வெறுப்பதில்லை—எ-று

[இ-ம்] ஆத்மா தற்பிரியத்திற் குறைவுவராமற் றேகத்தை நீக்கினதேய ன்றித் தன்னிடத்தின் வெறுப்புண்டான தல்லவென்பதாம். (௱௰௭)

(ஆ-கை) தனவானந்தமுதலிய வானந்தங்க ளாத்மாவென வருமெனில் நிஜமாகாவெனக்கூறி யாத்மானந்தமே முக்கியமெனக்கூறல.

தாகப்படும்பொருளிலும்மகன்பிரியமாந்தயனிலுமுடல்பிரியமா... ...*
மாகத்திலும்பிரியமிந்திரியமாங்கரணமதனிலும்பிரியமுயிரா ... ... *
மேகப்பிராணனிலும்வெகுபிரியமான்மாவிலிந்தவான்மாமுக்கிய... ...*
மூகத்தினாற்கௌணமித்தைகர்த்தாமூன்றுமொன்றினென்றதிகமகனே *

(இ-ள்) தாகப்படும்பொருளிலும்- பிரியமாகச்சம்பாதிக்குந் தனங்களி லும்—மகன்பிரியமாம்- புத்திரன்பிரியமாகும்—தநயனிலும்—அப்புத்தி ரனிலும்—உடல்பிரியமாம்- தேகம்பிரியமாகும்—ஆகத்திலும்- அத்தேக த்திலும்—இந்திரியம்-பொறிகளானவை—பிரியமாம் - பிரியமாகும்— அ தனிலும்- அவ்விந்திரியங்களினும்—கரணம்பிரியம்- அந்தக்கரணம்பிரிய மாம்—அதனிலும்- அவ்வந்தக்கரணங்களினும்—உயிர் - சீவனானது—பி ரியமாம்-பிரியமாகும்—ஏகப்பிராணனிலும்- ஒன்றானவசீவனிலும—ஆ ன்மாவில்- கூடஸ்தனிடத்தில்—வெகுபிரியம்- மிகுந்தபிரியமாமாதலால —இந்தவான்மாமுக்கியம்- இவ்வாத்மாவேமுக்கியமாம்—மகனே - மைந் தா—ஊகத்தினால்- உத்தியினால்—கௌணம-கௌணாத்மா— மித்தை-மி த்தையாத்மா—கர்த்தா- கர்த்தாத்மாவாகிய—மூன்றும்- மூன்றும— ஒன் றினொன்றதிகம்- ஒன்றினொன்றதிகமாம்—எ-று.

[இ-ம்] தனமுதலியவாறினும் வைக்கின்ற பிரியங்கௌண மெனவுமாத் மப்பிரியமே முக்கியமெனவுங்கூறினதாம். (௱௰௮)

(ஆ-கை) ஆத்மானந்தமே முக்கியமாயின் புத்திரன்முதலிய வைகளாத் மாவெனவு மவைகண்முக்கியமெனவுங்கூறிய தென்னெனவினவுதற்குத் தரங்கூறல்.

கெடலானபொழுதிவன்காணிக்குமகனைகௌணவான்மாமுக்கியம்... *
விடலாதவுடலம்பரிக்குநாளுடலானமித்தையான்மாமுக்கியம் ... ... *
திடமானநன்மைகதிவேண்டினாற்கர்த்தனாஞ்சீவவான்மாமுக்கியஞ் ,. .. *
சடமாயுமுத்தியிலினிஞானவான்மாவானதானேமகாமுக்கியம்... ... *

(இ-ள்) கெடலானபொழுது- மரணகாலத்தில்—இவன்காணிக்கு- இவ னுதீனத்துக்குவேண்டிய—மகனை- புத்திரனை—கௌணவான்மா-கௌ ணாத்மாவே—முக்கியம்- ஆத்தருணத்துக்குமுக்கியமாம்—விடலாதவுடல ம்பரிக்குநாள்- நீங்காததேகத்தைத் தாங்குகின்றநாளில்—உடலான- அந் தேகமான—மித்தையான்மா- மித்தையாத்மாவானது—முக்கியம- அத்த ருணத்துக்குமுக்கியமாம்—திடமானநன்மைகதி- பலமாகியநல்ல கதியை —வேண்டினால்- விரும்புங்காலத்தில்—கர்த்தனாஞ்சீவவான்மா- கர்மேன

ஸுந்திரிவாசமர்வானது—மோக்ஷம் - அத்தருணத்தாக்குமுக்கியமாம்—அ
டமாயுமுக்தியினில் - கிரியாகாண்டியமோக்ஷத்தில்—ஞானவானென்ம
வானதானே- ஞானாத்மஸ்வரூபமாகியதானே—மகாமுக்கியம்- மிகமுக்
கியமாம்—எ-று.

[இ-ம்] புத்திரன்முதலிய மூன்றைப்புமுக்கியாத்மா வென்றது, அவ்
வோர் சமயத்தாதலாற் பூருவபக்ஷமும் ஆத்மாவைமுக்கியமென்ற தென்
னுமாதலாற சித்தாந்தமு மாமென்பதாம். (௩௰௫)

(அ-கை) விருப்புமுதன்மூன்று நீங்கியவானந்தமே யாத்மஸ்வரூப மா
மெனல்.

புலியுமனுகூலமெனிலிட்டமாம்பகைசெயிற் புதல்வனெனினும்வெறுப்
பாமுலகிலிருவகையுமல்லாதபுல்லாதியிலுதாசீனமாமாதலான் ... ...*
மலினமறுசின்மயன்பலவகையுமிப்படிமகிழ்ச்சியில்விருப்பமிகழா..... *
னலகிலானந்தவடிவாகுமென்சொரூபத்தையாராய்ந்துபார்மைந்தனே,.. *

(இ-ள்) புலியும- வியாக்கிரமும்—அனுகூலமெனில்- அனுகூலஞ்செய்
யுமாயின்—இட்டமாம்- சிநேகமாகும—புதல்வனெனினும- புத்திரனாயி
னும்—பகைசெயில்- பகைக்கின்—வெறுப்பாம்- துவேஷமாம— உலகி
ல்-பூமியின்கண்—இருவகையுமல்லாத- இவ்விரண்டுமல்லாத —புல்லாதி
யில-திரணமுதலியவைகளில—உதாசீனமாம் - உபேக்ஷையாம்—ஆத
லால்-ஆதலினால—மலினமறு- களங்கமற்ற—சின்மயன் - ஞானஸ்வரூப
னானவன்—பலவகையும்- நாநாவிதத்திலும்—இப்படி - இவ்வண்ணம்—
மகிழ்ச்சியில்- ஆத்மானந்தத்தில்—விருப்பமிகழான் - பிரியத்தைநீங்கான்
—அளவில்- அளவற்ற—ஆனந்தவடிவாகும - பிரமானந்தஸ்வரூபமாகிய
—உன்சொரூபத்தை- உனதாத்மஸ்வரூபத்தை- மைந்தனே - மைந்தா—ஆ
ராய்ந்துபார்- ஆராய்ந்தறிவாய—எ-று.

[இ-ம்] விருப்புவெறுப்பு உதாசீனமாகிய மூன்று மாத்மசுகத்திற்குமா
றுபடுதலின்றே பிரியாதிகளினியவை சுகமாவபடாதிருத்தலின்றே யவ்வா
னந்தமேயாத்மஸ்வரூபமாமெனபதாம், இதுமேற்கூறும் அஷ்டவிதான
ந்தத்தொன்றான ஆத்மானந்தமெனக்கொள்க, . (௩௰௬)

(அ-கை) ஆத்மாநிரதிசயானந்தமென்ப தனுபவமாம்பொருட்டதிசயான
ந்தமெண் விதமாகக்கூறுவான்றொடங்கி யானந்தமெத்தனைவகையென்ற
வினாவிற் குத்தரங்கூறல்.

மானஞ்சிறந்தகுருநாதனேயானந்தவகைகளெத்தனையென்னிலோ*
ஞானந்திகழ்ந்தபிரமானந்தமவாசனானந்தம்விடயானந்தமென்
றானந்தமூன்றுவிதமெட்டுவகையென்பர்சிலரவ்வைந்துமிதிலடக்கும்
யானோதுநவ்வகைசொலக்கேண்மைந்தனேயெட்டுமிஃதின்னதின்னதெ
னவே ... ... ... ... ... ... ...

(இ-ள்) மானஞ்சிறந்த- பெருமைமிகுந்த—குருநாதனே- தேசிகோத்தம
னே— ஆனந்தவகைகள்- ஆனந்தப்பிரிவுகள்—எத்தனையென்னில் - எவ்வ

[illegible]மீகேட்பாயாகில்—ஞானங்கிழ்ந்த - சித்துவிளங்கிய—பிரமான ந்தம்- பிரமானந்தமெனவும்—வாசனானந்தம் - வாசனானந்தமெனவும— விடயானந்தமென்று- விஷயானந்தமெனவும—ஆனந்தம்- ஆனந்தமான து—மூன்றுவிதம்- மூன்றுவிதமாம்—சிலர் - சிலபெரியோர்கள்—எட்டு விதமென்பார்- அஷ்டவிதமென்றுஞ் சொல்லுவார்கள்—அவ்வைந்துமிதி லடக்கம்- அந்தவைந்துமிம்மூன்றிலடக்கமாம—எட்டும் - அஷ்டவிதவா னந்தமும்—இஃதின்னதின்னதென- இஃதின்னதின்னதென்று—யானங் ஙவகைசொல்- நானப்படிருப்பைச்சொலல—மைந்தனே- மகனே—கேள் நீகேள்—எ-று.

[ப-ம்] பிரமானந்தத்தில் ஆத்மானந்தமும் முக்கியானந்தமும் நிசானந்தமும் அத்துவிதானந்தமும் ஞானானந்தமுமானவைந்துமடங்கியிருக்கின் றதென்பார் அவ்வைந்துமிதிலடக்கமென வொருமையாகக்கூறினர்.

(இ-ம்) ஆனந்தத்தின்றொகைமுக்கியபட்சமூன்றெனக்கூறினதாம். (௫௨௧)

(அ-கை) அவ்வஷ்டவிதவானந்தத்தின்வகைகூறல்

யோகத்தில்வருசுகம்விடயசுகநித்திரைப்போதுளதுபிரமசுகமா ...*
மோகத்தனந்தலிற்சுகம்வாசனைசுகமுழுபபிரியமான்மசுகமாம் *
யோகத்திலுளதுமுக்கியசுகமுதாசீனமுற்றசுகநிச்சுகமதா *
மேகத்தைநோக்கலத்துவிதசுகம்வாக்கியமெழுந்தசுகஞானசுகமே *

(இ-ள்) போகத்தில்வருசுகம்- போகங்களில்வருகின்றவானந்தம்—விடய சுகம் - விடயானந்தமாம்—நித்திரைபபோதுளது - சுழுத்திகாலத்துள்ள வானந்தம்— பிரமசுகமாம் - பிரமானந்தமாம—மோகத்தனந்தலிறசுகம்- மயக்கமாகியநித்திரைதெளிந்து வருஞ்சமயத்துள்ளவானந்தம—வாசனை சுகம்- வாசனானந்தமாம்—முழுபபிரியம - முழுதுஞ்சுகமாயிருத்தல்— ஆன்மசுகம்-ஆத்மானந்தமாம்—யோகத்திலுளது-சமாதியிலுள்ளசுகம்— முக்கியசுகம்- முக்கியானந்தமாம் —உதாசீனமுற்றசுகம- உதாசீனத்திலு ள்ளவானந்தம்—நிச்சுகமதாம- நிசானந்தமாம—ஏகத்தைநோக்கல - பூர ணதிருஷ்டியிலுள்ளசுகம—அத்துவிதசுகம- அத்துவிதானந்தமாம்—வா க்கியமெழுந்தசுகம- மகாவாக்கியார்த்தத்திலுதயமானவானந்தம—ஞான சுகம்- வித்தியானந்தமாம்—எ-று.

[ப-ம்] ஞேயத்திலுதிக்குமின்பமென்பார் போகத்தில்வருசுகமெனவும் கனவிற்சுழுத்தியிலுள்ளது பிரமசுகமென்பார் நித்திரைபபோதுளது பிர மசுகமெனவுங்கூறினர்.

[இ-ம்] சுருக்கமானவருத்தத்துட னவ்வானந்தங்களி னுமங்கவோகக்கூறின தாம். (௫௨௨)

(அ-கை) அவற்றில்விடயானந்த விலக்கணங்கூறல்.

இவ்வாறுரைசெய்தசுகபேதங்களினியல்பாமவைசொலமகனேகேள் *
ஒவ்வாககனவினிலுழல்வானிடர்கெடவுரங்குஞ்சயனத்திலுறுமே .

## சந்தேகந்தெளிதற்படலம்.

ஏறு,செவ்வாமனமகமுகமாமதிலொளிர்சித்தின்சுகநிழல்சேருங்கா *
ணவ்வாறிவனுளமகிழ்வாமனுபவந்துதான்விடயசுகானந்தம்

(இ-ள்) இவ்வாறு - இந்தப்பிரகாரம் — உரைசெய்த - சொல்லிய நயங்களின் - ஆனந்தம்வேறுபாடுகளின் — இயல்பாமவைசொல - இயல்பான தன்மைகளைச்சொல்ல — மகனேகேள் - மைந்தாகேட்டாய் — ஒவ்வா - இசைப்பொருந்தாத — நனவினில் - சாக்கிரத்தில் — உழல்வான் - சுழல்பவனுடைய — இடர்கெட - துன்பம்நீங்கும்பொருட்டு — உறங்குஞ்சயனத்திலுறுநேரம் - படுக்கையினித்திரைசெய்யுஞ்சமயத்தில் — செவ்வாமனம் - செவ்விதானமனமானது — அகமுகமாம - அகமுகப்படும் — அதில் - அம்மனதில — ஒளிர் - பிரகாசிக்கின்ற — சித்தின்சுகநிழல் - சிதானந்தச்சாயையானது — சேருங்காண் - சேரும் — அவ்வாறு - அவ்வண்ணம் — இவனுளம் இவன்மனமானது — மகிழ்வாமனுபவம - மகிழ்ச்சியாகுமனுபவமான — அதுதான் - அதுவே — விடயசுகானந்தம - விடயானந்தமாம — எ-று.

[ப-ம்] அறிவறியாமையிற்சுழலும பவத்துன்பநீங்கும்பொருட்டுச்சமாதியின்சமுகமாய்மனஞ்சிதத்தைத்தரிசிக்கிற சிற்சுகமுண்டாகு மென்பாரனைவினிலுழலவானிடர்கெடவுறங்குஞ்சயனத்திலுறுநேரஞ்செவ்வாமனமகமுகமாமதிலொளிர சித்தின்சுகநிழலசேருங்காணெனவும அங்ஙனமகிழ்தல் ஞேயானந்தமென்பார அவ்வாறிவனுள மகிழ்வாமனுபவந்தான்விடயசுகானந்தமெனவுங்கூறினார்

[இ-ம்] சமாதியிலகமுகமாகச்சென்றறியுமிடத்துண்டானதுபிரமசுகமாயினு மனத்தையெதிரிட்டறிந்து மனமகிழ்தலின சுகமவிடயானந்த மாயிற்றென்பதாம். (௮௧)

(அ-கை) பிரமானந்தவிலக்கணங்கூறல்,

ஈனந்தருசுகவிடயந்திரிபுடியிடராமெனமனமசையாமற் ... ...*
சேனந்தனதுகுலாயந்தனிலவிழுசெயலபோனித்திரைசெறிசீவன்*
அந்தமிலபரனுடனொன்றுவனொருதனியலலதுபிறவினையாம.: .*
ஆனந்தமயமாவன்சுகமிகுமதுதானுயர்பிரமானந்தங் ... ... *

(இ-ள்) ஈனந்தரு - குறைவைக்கொடுக்கின்ற — சுகவிடயம் - விஷயசுகமானது — திரிபுடியிடராமென - திரிபுடியானதுன்பமாமென்று — மனமசையாமல் - மனஞ்சலியாமல — சேனம - பருந்தானது — தனதுகுலாயந்தனில் தனதுகூண்டில — விழுசெயலபோல - அடங்குதொழிலபோல — நித்திரைசெறிசீவன - நித்திரைசெய்கின்றசீவனானவன் — அந்தமில - முடிவிலாத — பரனுடனொன்றுவன் - பிரமத்தோடுகூடுவன் — ஒருதனியல்லது - ஒப்பற்றதனியல்லாமல் — பிறவினையாமல - வேறுகருதாமல் — ஆனந்தமயமாவன - ஆனந்தாகாரமாவன் — சுகமிகுமதுதான் - சுகமிகுந்தவவ்வானந்தமே — உயர்பிரமானந்தம் - மேலானபிரமானந்தமாம் — எ-று.

[ப-ம்] பிரமத்தையெதிரிட்டறியினன்றிப்புவனமிவு அறிபொருளென மூவாறுமதனுறறுன்பமாமென்பார ஈனந்தருசுகவிடயந்திரிபுடியிடராமென

வும் மனத்தையடக்கிச் சொரூபசமாதி செய்கின்றவாத்மாபிரமத்திற் கலக்கு மென்பார் மனமசையாமனித்திரைசெறி சீவன்முனைந்தமில் பரனுடனுறவெனவும் அங்ஙனம்பிரமத்திற்கூடிய வாத்மாவப்பிரமானந்தமாக வானந்திப்பானென்பார் ஒருதனையல்லது பிறதினையாம லானந்தம்ம யனுவெனவும் இஃதேபேரானந்த மென்பார் சுகமிகுமதுதானுயர் பிரமானந்த மெனவுங்கூறினார் நித்திரையென்பதறிதுயி லெனக்கொள்க. ()

(அ-கை) (இ-து)

தூங்குஞ்சுகமதுபிரமச்சுகமெனல்சுருகிப்பெருள்விழிதுயில்வோர்க *
டாங்குமலரணைநன்றாகச்சிலர்சம்பாதிப்பதுதானசுகந் ... ... ... *
தீங்குநன்மையுமாண்பெண்முறைமையுந் தெரியாதமளிசெய் பொழுதே
லாங்குள்வெளிகளுமறியாவனுபவமதனாலதுபிரமானந்தம் ... ...[போ

(இ-ள்) சுருகிப்பொருள்- வேதமுடிவான மகாவாக்கி யார்த்தத்தின்—தூங்குமஞ்சுகமது- அறிதுயிலுதயமான மானந்தமானது—பிரமசுகமெனல்-பிரமானந்தமென்றுகொள்க— விழிதுயில்வோர்கள்-நித்திரைசெய்பவர்கள்—தாங்குமலரணை- தாங்காநின்ற புஷ்பசயனத்தை—நன்றாக- நல்லதாக—சிலர்- சிலபேர்கள்—சம்பாதிப்பது- சேகரிப்பது— தானசுகம்-ஸ்தானசுகமாம்—தீங்கும்- தீமையும்—நன்மையும் - நன்கும்—ஆண்பெண்முறைமையும்- ஆண்பெண்ணின்றமுறைமையும்—தெரியாது- அறியாமல்—அமளிசெய்பொழுதேபோல்- நித்திரைசெய்கின்றகாலத்தைபபோல—ஆங்கு- அவ்விடத்து—உள்வெளிகளுமறியா- அகம்புறங்களுமறியாத—அனுபவமதனால்-சுபானுபவமாதலால—அதுபிரமானந்தம்- அவ்வறிதுயிற்பிரமானந்தமாம்—எ-று.

[ப-ம்] வேதமுடிவான மகாவாக்கியார்த்த வுபதேசத்தில்ரமிக்கும்யோகநித்திரையே பிரமானந்தமென்பார் தூங்குஞ்சுகமது பிரமசுகமெனல் சுருகிப்பொருளெனவும் அங்ஙனஞ்சமாதி யடைதற்குச் சாதனமானஞானபூமி முதலியவைகளைப்பெற வேகாந்தமா யிருந்ததேயிடமென்பார் துயில்வோர் கடாங்குமலரணை நன்றாகச்சிலர்சம்பாதிப்பது தானசுகமெனவும் அகம்புறமின்றிப் பரிபூரணமாக விளங்கும்போதுள்ள சுகமே... னந்த மென்பார் உள்வெளிகளுமறியா தனுபவமதுவே யுயர்பிரமானந்த மெனவுங்கூறினார் [இ-உ-க-ம்.] சுழுத்தியைப்போலச் சமாதியிலசமுகமாயாத்மாபிரமத்திற் சேர்ந்ததன்மயமாயச் சுகத்தையனுபவித்ததனி னஃதுபிரமானந்த மாயிற்றென்பதாம், (௱உ௫)

(அ-கை) சித்திற்சுகம்விளங்கு மனுபவந்தெரிவான் அறிவின்றிய வானந்தமறிவிலெங்ஙனந் தோற்றுமென்றிடையின்வினாதல.

உதவும்புவியினிலொருவன்னனுபவமொருவன்மனதினிலுதியாதே ...
மதியுங்கெடுகிறதுயில்கொண்டானந்தமயனன்றேசுகமுறுகின்றான் ... ..
னிதுவிஞ்ஞானமயனுஞ்சிந்தையினினைவாய்வந்திடுமெனல்கண்டேன்..
சுதைவிண்ணோர்புகழ்குருவேகிரிதுசொல்லீர்சகலமும்வல்லீரே ... ;

(இ-ள்) உதவும்புவியினில்- முத்திக்குச்சகாயஞ்செய்யு மிப்பூமியுல-

# ந்தேகந்தெளிதற்படலம்..

ஒருவனனுபவம-ஒருவனுக்குதிக்குமனுபவமானது—ஒருவன்மனதினி
ல்- வேறொருவன்மனதில—உதியாதே- உண்டாகாதே— மதியுங்கெடுகி
ன்ற- அமிதனுமிறககின்ற— துயில்கொண்டு- யோகநித்திரையைக் கொண்
ட —ஆனந்தமயனன்றே-ஆருந்தாகாரனல்லவா—சுகமுறுகின்றான்-பரம
சுகத்தையடைகிறான்— இது- இச்சுகமானது—விஞ்ஞானமயனும்- விஞ்
ஞானவடிவமாகிய-சிந்தையில-மனதில்—நினைவாய்வந்திடுமெனல்-நினை
வாகவருமென்பது—கண்டேன் -அறிந்தேன்—இதைதெங்ஙனங்கூடும் -சு
தைவிண்ணோர்புகழ்- அமிர்தபானஞ்செய்யுந்தேவர்க டுதிககாநின்ற—சக
லமுமவல்லீர- சமஸ்தவலலமையுமுள்ள—குருவே- தேசிகரே—நீர-நீவி
ர - இதுசொல்லீர்-இதைசசொல்வீராக—எ-று.

[இ-ம] வெளிபபடை (௱௬௨)

(அ-கை) அவ்வினாவிற்குத்தரங்கூறல்:

நெய்யும்வெண்ணெயுமிருபேர்களுமறிநினைவிற்பிறிவறிவினிலில்லை*
செய்யுநனவினிலிறுகும்மனதொடுசேருஞ்சின்மயவிஞ்ஞானன் *
னையுந்துயர்மனமுழவும்பொழுதுணர்ஞானசசுகமுறுமானந்தன *
பெய்யுந்துளிகளுநீருஙகுளமொடுபொருமபோலிவர்பிறிவன்றே *

(இ-ள்) நெய்யும்வெண்ணெயும் - நெய்யென்பதும் வெண்ணெயென்பது
மாகிய—இருபேர்களும்- இரண்டுநாமங்களும்—அறிநினைவிறபிறவு- நாம
ரூபமாகவறிகின்றமனதிற்பேதமேயன்றி—அறிவினிலில்லை- அவைறின்சு
வையைக்கொள்ளுகின்றவறிவினிலில்லை—செய்யுநனவினில - கிரியையை
சசெய்கின்றசாககிரத்தில—இறுகும்மனதொடு-ஸ்திரமானமனதோடும்-
சேருமு- சேருகின்ற—சின்மயவிஞ்ஞானன்-சின்மாத்திரமானவிஞ்ஞான
மயனும் —னையுந்துயர்மனம்- வருந்துகின்றதுன்பமுள்ளமனது —முழு
மபொழுது- நீஙகுஙகாலத்தில்—உணர்ஞானச்சுகம்- அறிகின்றஞானானு
ந்தத்தை—உறுமானந்தன்- அநுபவியாநின்றவானந்தமயனுமாகிய—இ
வா- இவர்சள—பெய்யுநதுளிகளுநீரும் - பொழியாநின்ற விந்துவுஞ்சல
மும்—குளமொடுபொரும்போல் - குளமுங்கரையுமபோல—பிறிவன்று-
வேறல்லா—எ-று.

[இ-ம] அறிவிறகுதிககு மானந்தந்தெரிவாகவிளங்குதலினாலும் ஆன
ந்ததினின்றுதிக்கு மறிவுசுகமாயிருந்தலினாலும் இச்சிறசுகமனுபவத்தி
லொன்றுதலி னறிவில்வருமென்பதாம் இதைக்குருமுகமாகச்செய்யுஞ்
சகசநிட்டையிறகாண்க (௱௬௩)

(அ-கை) அங்ஙனமாயின் பிரமானந்தமயமாக நின்றுவிடாமலறிவில்வரு
வானேனென்ற வினாவிற்குத்தரமும் வாசனைகதவிலக்கணமுங்கூறல்.

ஒன்றாகியபிரமானந்தன்சுகமொழிவானேன்வெளிவருவானே *
னெமமுன்முனசெய்தகருமம்வெளியினிலிழுக்குஞ்சுழுத்திகெட்டெ
ழுப்போது, நன்றாயினசுகமகலாள்வெளியிலுறவான்மறவியுமவை
மாடா, னமாமெனவிருந் துறங்குஞ்சிலசுன்ம மதுவேவாசனை

(இ-ள்) ஆனந்தமாகியபிரமானந்தன்—ஏகமாகியபிரமானந்தன்—சுகமொழிவானேன்—ஆனந்தத்தைநீங்குவானேன்—வெளிவருவானேனென்றால் வெளிப்படுவானேனென்றுகேட்கில்—முன்செய்தகருமம்- முன்னஞ்செய்தகிரியையானது—வெளியினிலிழுக்கும்- வெளியினிற்கொண்டுவரும்—சுழுத்திவிட்டு- சுழுத்தியினின்று—எழுநதோனும்- வெளிப்பட்டவனும் நன்றுவினைசுகமகலான்-நன்மையானசுகத்தைநீங்கான்—வெளியிலுநடவான்- திரிசியத்திலும்வாரான்——மறதியும்பெறமாட்டான் - மறதியையுமடையான்—அன்றுமெனவிருந்து- அல்லவெனவுமாமெனவுநின்று—உறங்கும்- நித்திரைசெய்கின்ற—சிலகன்மம்-சிலகன்மமாகிய—அதுவே-அதுதான்வாதனையானந்தம்- வாசனானந்தமாம்—எ-று.

[இ-ம்] ஆனந்தமயத்தினின்றும் விஞ்ஞானமயத்தில்வருதல்சகசநிட்டையையும் பிராரத்வகன்மானுபவத்தையுங் குறித்தெனவும் துயிலைபோலச் சமாதியினின்று நீங்குஞ்சமயத்திற் பிரமானந்தசமஸ்காரத்தோடும வருதலினச்சுகம் வாசனானந்தமாயிற்றெனவுங் கூறினதாம (௱உ௫)

(அ-கை) நிசானந்தவிலக்கணங்கூறல்.

அந்தக்கணமுடலகமென்றிடர்களிலலைந்தேசுகந்தனைமறந்தேபோ ✻
முந்தைச்செயும்வினைசுகதுக்கந்தருமோனந்தருநடுவடிவேகா..... ✻
ணெந்தப்புருடனுமொருசிந்தையுமறவிருந்தேனெனலனுபவமாகு ✻
மிந்தப்படிதனுதாசினச்சுகமிதுவேநிஜமெனுமானந்தம்... ...✻

(இ-ள்) அந்தக்கணம்- நினைத்தவப்போதே—உடலகமென்று- தேகத்தைநானென்று—இடர்களிலலைந்து- துன்பங்களிற்சுழன்று—சுகந்தனை- ஆனந்தத்தை—மறந்தேபோம்- மறந்துவிடும்—முந்தைசசெய்யும்வினை-முன்செய்யுங்கன்மமானது—சுகதுக்கந்தரும்-இன்பதுன்பங்களைகொடுக்கும் மோனந்தரும்- மகாமௌனநகொடுப்பது—நடுவடிவேகாண்- மத்தியசுதஸ்வரூபமேயாம்—எந்தப்புருடனும் - எத்தன்மையானபுருஷனும்—ஒருசிந்தையுமற- ஒருநினைப்புமின்றி—இருந்தேனெனல-இருந்தேனென்பது அனுபவமாகும்- அனுபவமாம்—இந்தப்படி- இப்படியான—தனுதாசினச்சுகம்-தனதுதாசினத்திலுண்டானவானந்தமான்—இதுவே-இதுதான்—நிசமெனுமானந்தம்- நிசானந்தமாம்—எ-று.

[இ-ம்] சமாதியில்விருப்பு வெறுப்பின்றிச் சமரசமானவுண்மையாயிருத்தலினச்சுக நிசானந்தமாயிற்றெனபதாம் இஃதைமுக்கிய மானந்தமெனக கூறுவாருமுளர் (௱உ௬)

(அ-கை) முக்கியானந்தவிலக்கணங்கூறல்.

நிசமானதுமுக்கியமோருட்த்துளநீரன்றேவெளியிரந்தான்... ...✻
வசமாமகங்காரமறைந்தானிசமதுபடிந்தான்முக்கியவகையாகும்... ✻
திசையார்திரிசயமறியாதேதுயில்செறியாதேயுட்டறிபோலே...... ✻
யசையாதேமகிழ்சமமாகியநிலையதுதான்முக்கியவானந்தம் ...✻

(இ-ள்) நிசமானதும்- நிசானந்தமானதும்—முக்கியமோ - முக்கியானந்தமாமோவெனில்—குடத்துளநீரன்றோ- கடத்துக்குள்ளிருக்குஞ் சலமல்லவா—வெளியிரந்தான்- புறமபிலிருக்கின்றயீரம்—அதுபோல- வசமாமகங்காரமறைந்தால் - வசமானவகங்காரமறைபட்டு—நிசமதுபடிந்தால்- நிசமானதுகூடினால்—முக்கியவகையாகும்- முக்கியமாம்—திசையார்திரிசயமறியாது- திக்குகளிலிறைந்திருக்கின்ற விடயத்தையறியாமலும்—துயில்செறியாது- நித்திரையையடையாமலும்—உடறறிபோல்- தேகமானது ஸ்தம்பத்தைப்போல—அசையாது- அசையாமலும்—மதி- அறிவானது—சமமாகியபின்- சமமாகநிற்றல்—அதுதான்- அதுவே—முக்கியவானந்தம்- முக்கியானந்தமாம்—எ-று.

[இ-ம்] சமாதியிலறிவயியாமையின்றி யுயிவேமுதலாகச் சுகித்திருத்தலின சுகமுக்கியானந்தமாயிற்றென்பதாம் இஃதை நிசானந்தமெனக்கூறுவாருமுள ரங்ஙனங்கூறுதிங்ஙனங் கூறியதென்னெனின் நடுநிலையினிற்கின் முக்கியமானஸ்வரூபம வெளிப்படுதலி னென்னக்கொள்க-சமாதியிற்றன்னிடத்திற்றனே சுகித்தலி னச்சுகமாத்மானந்தமாயிற்றெனவும் சமாதியிலானந்தமானந்தியென்னு மிரண்டற்ற சுகமாகவிளங்குதலி னச்சுகமத்துவிதானந்தமாயிற்றெனவும் சமாதியினது நீயென்பதின்றி யானந்தபோதமாய்ச் சுகித்தலி னச்சுகம் வித்யானந்தமாயிற்றெனவுங்கொள்க - நிரதிசயானந்தவம்சமான விஷ்டவிதவானந்தங்களுமதிசயமாகச்சமாதியின்கண்ணவகவமாய்விளங்குதலி னிவையதிசயானந்த மெனக்கூறப்படுவனவாம்

(அ-கை) ஆனந்தமகான்மியங்கூறல்.

மனுடன்மனுடகந்தருவன்றேவகந்தருவன்பிதிர்பிறவித்தேவன் ...*
றனுடன்கருமசுரன்சுரனிந்திரனசான்பிரசாபதியானேன் ...*
கனவிராட்டனிரணியகருப்பன்கருதுமிப்பதினொருபேரின் *
பினவானந்தங்களுனையாம்பிரளயவெள்ளக்கடல்பிரமானந்தம் *

(இ-ள்) மனுடன்- சார்வபூமனும்—மனுடகந்தருவன் - புண்ணியபரிபாகத்தாற் கற்பாந்தத்தின்மனுடன் கந்தருவனனமனுட கந்தருவனும்—தேவகந்தருவன்- பூர்வகற்பபுண்ணியத்தால் அவன்மனுடகந்தருவபதத்தினின்று தேவகந்தருவனன தேவகந்தருவனும்—பிதிர் - சிருட்டிகாலத்திலுண்டான அக்கினிஸ்வத்தாமுதலியபிதிரரும்—பிறவித்தேவன்றனுடன்-கற்பாதியிற்றேவனாய்ப் பிறந்தவாசானசதேவனும்—கருமசுரன்- அசுவமேதாதிகன்மபலத்தாற் றேவனனகன்மதேவனும்—சுரன்-யமன்முதலியதேவரும்—இந்திரன்- இந்திரனும்—ஆசான்- பிரகஸ்பதியும்—பிரசாபதியானேன்- பிரமனும்—கனவிராட்டன்- வியாபகமானவிராட்டும்—இரணியகருப்பன்- இரணியகருப்பனுமென—கருதுமிப்பதினொருபேரின்-முன்றையாகவெண்ணுகின்ற விப்பதினொருபேர்களினது—பினவானந்தங்கள் - ஒன்றுகொன்று நூறுபங்குயர்வுள்ள பேதானந்தங்களானவை—பிரமானந்தம்- பிரமானந்தமான—பிரளயவெள்ளக்கடல் - கற்பாந்தசாகரத்தின்—நுரையாம்- பேனங்களாம்—(எ-று.) ஆனந்தம்பனிரண்டெனக்கூறப்பட்

டிருக்கப் பதினென்றாகக்கூறியதென்னெனின் தைத்திரியவுபநிடதத்தில் விராட்டிரணியகற்பமிரண்டையு மொன்றாகக்கூறினமையாலெனக்கொள்க. (இ-ம்) மனுடானந்தமுதலிரணிய கருப்பானந்தவரையிலுள்ள வானந்தங்கள் ஞானவானந்தத்தின் லேசங்களாமெனக்கூறினதாம். (௱௩௧)

(அ-கை) முற்கூறியவானந்தமேயதீதமாமெனல்.

எவனாகிலுமிந்தத்துரியாதீதத்திலேழாம்பூமியிலிருந்தானே *
லவனாரதன்சுகன்சிவன்மாலயன்முதலறிவோரனுபவசுகபோதம் *
விவகாரநிர்ச்சயமிதுவேயனுபவமென்முன்சொல்லியவிவகாரி *
யுவமானமுமறிமகனேயவனடியுதிரும்பொடிகளென்முடிமேலே *

(இ-ள்) எவனாகிலும்- யாவனாலும்—இந்த - இந்த—துரியாதீதத்திலேழாம்பூமியில்- துரியாதீதமென்னு மேழாம்பூமியில்—இருந்தானேல் - இருந்தானாகில்—அவன்- அப்புருடன்—சிவன்மாலயன் - அரனரியயனென்னு மும்மூர்த்திகளுக்கும்—நாரதன்சுகன்முதல்-நாரதர்சுக முதலிய—அறிவோர்- அறிஞருக்குமுள்ள—அனுபவசுகபோதம் - சுவானுபவமாகிய வானந்தபிரஞையாவன்—விவகாரநிர்சயம்- விவகாரங்களிற்றிரிசியதிஷ்டியில்லாத—இதுவேயனுபவமென-இதுவேசுவானுபவமென்று—முன்சொல்லிய- முன்னேசொல்லியிருக்கின்ற—விவகாரி - விவகாரியின்—உவமானமுமறி- திஷ்டாந்தமுந்தெரிவாய்—மகனே- மைந்தா—அவனடி - அவ்வனுபவியினுடையபாதத்தில்—உதிரும்பொடிகள்-உதிராநின்றதூள்களானவை—என்முடிமேல்- எனதுசிரசின்மேலிருக்கின்றன—எ-று.

[இ-ம்] துரியாதீதத்தையடைந்தவனது மகிமையைக்கூறினதாம். (௱௩௨)

(அ-கை) சச்சிதானந்தவிலக்கணங்கூறி யின்னுஞ்சந்தேகமுளதேற் கேட்பாயெனல்,

இந்தவாறைந்துசுகஞ்சொல்லினோம்வித்தைசுக மினிமேற் சொல்வோ
முந்தைமாயையுஞ்சச்சிதானந்தப்பொருளுமேமொழியும்போதி, லந்தமா
மத்துவிதசுகமான்மசுகமிரண்டுமங்கே சொன்னோந், தொந்தமாற்றியமக
னேயின்னமுனக்கையமுண்டேற்சொல்லுவாயே... ... ... *

(இ-ள்) இந்தவாறு- இவ்விதம்—ஐந்துசுகஞ்சொல்லினோம் - ஐந்துவிதவானந்தத்தையுரைத்தோம்—வித்தைசுகம்- ஞானானந்தத்தை—இனிமேற்சொல்வோம்- இனிமேலுரைப்போம்—முந்தை- முன்—மாயையும்-மாயாரூபத்தையும்—சச்சிதானந்தப்பொருளும் - சச்சிதானந்தார்த்தத்தையும்—மொழியும்போதில்- சொல்லுமிடத்தில்—அந்தமாம்- வேதமுடிவான—அத்துவிதசுகம்- அத்துவிதானந்தமும்—ஆன்மசுகம்- ஆத்மானந்தமுமாகிய—இரண்டும்- இரண்டானந்தத்தையும்—அங்கேசொன்னோம் - அவ்விடத்திலுரைத்தோம்—தொந்தமாற்றிய- துவந்துவங்களைக்கெடுத்த—மகனே- மைந்தா—இன்னம்- இன்னமும்—உனக்கையமுண்டேல்-உனக்குச்சந்தேகமுண்டானால்—சொல்லுவாய்- கேட்பாய்—எ-று.

[இ-ம்] வெளிப்படை, (௱௩௩)

(அ-கை) ஆத்மாசச்சிதானந்தஸ்வரூபமெனத் தெரிந்து மதனுண்மையா னஸ்வானுபூதி வெளிப்படும்நிமித்தஞ் சுருதியுத்தியனுபவங்களுக் கொத்தி ருக்குமவற்றி னொருமையைத்தெரியவினவுதல்.

குகன்றனையுமெனையுமுலகினையுமீன்றளித்தருளுங்குருவேகேளீர் *
புகன்றசச்சிதானந்தப்பதங்கடனித்தனியாயேபொருள்வேறுனு *
லுகண்டமனமுறைப்ப தெங்ஙன்பரியாய பதங்களைப்போ லுறவுங்
காணே, னகண்டமாயொருசுவையாய்த்தேனீக்கூட்டிய மதுவாவறி
விப்பீரோ... ... ... ... ... ... ...*

(இ-ள்) குகன்றனையும்- குமரனையும்—எனையும் - என்னையும்—உலகினை யும்- சகங்களையும்—ஈன்று-சிருட்டித்து—அளித்தருளும்-ரட்சித்தருளு கின்ற—குருவே- இறைவனே—கேளீர்- கேட்பீராக—புகன்ற-முன்சொ லலிய—சச்சிதானந்தப்பதங்கள் - சச்சிதானந்தமென்னும் பதங்களான வை—தனித்தனியாய்- வெவ்வேறாய்—பொருள்வேறானால் - அருத்தமு ம்வேறுபடுமானால்—உகண்டமனம்-விடயங்களிற்பாய்கின்றமனமான்து —உறைப்பதெங்ஙன்-திரமாய்நிற்பதெப்படி—பரியாயபதங்களைப்போல் பரியாயநாமங்களைப்போல—உறவுங்காணேன்- சம்பந்தமுந்தெரிகிலனாத லால்—அகண்டமாய்- கண்டிதமில்லாததாய்—ஒருசுவையாய்- ஏகரசமா ய்—தேனீக்கூட்டியமதுவா- தேனீக்களாற்கூட்டப்பெற்றதேனாக—அறி விப்பீர்- தெரிவிப்பீர்—எ-று,

[இ-ம்] வெளிப்படை. (௩௩௪)

(அ-கை) சச்சிதானந்தவொருமையைச் சுருதிப்பிரமாணத்தாற் கூறுவா ன்றொடங்கி யவற்றின்காரணமு மொருமையுங்கூறுகின்றார்.

குளிரிளகல்வெண்மையென்றபதங்களினானீர்மூன்றுகூறாயிற்றோ *
வொளிதவனஞ்செம்மையென்றபவங்களாலக்கினியு மொருமூன்றா
மோ,வெளிமுதலாஞ்சகமசத்துமூடமிடரெனப்பிரித்துவிலக்கிவேத
மெளிதறியமுரண்மொழிந்தசத்தாதியெனும்பிரமமேகந்தானே ...*

(இ-ள்) குளிர்- குளிர்ச்சியும்—இளகல் - நெகிழ்ச்சியும்— வெண்மையெ ன்ற- வெள்ளையுமெனச்சொல்லிய—பதங்களினால்- சொற்களினால்—நீர் சலமானது—மூன்றுகூறாயிற்றோ- மூன்றுபிரிவானதோ—ஒளி - பிரகாச மும்—தவனம்- சூடும்—செம்மையென்ற- சிவப்புமெனச்சொல்லிய—ப தங்களால்- சொற்களினால்—அக்கினியும் - நெருப்பும்—ஒருமூன்றாமோ- மூன்றுபிரிவாகுமோ—அவைபோல- வெளிமுதலாஞ்சகம்ஆகாயமுதலா மவுலகத்தை—அசத்து- அனுர்தமெனவும்—மூடம்- சடமெனவும்—இ டரென- துக்கமெனவும்—பிரித்துவிலக்கி - வேறுபடுத்திநீக்கி—வேதம்- சுருதியானது—எளிதறிய- பக்குவிகளெளிதிலுணர—முரண்மொழிந்த- அவற்றிற்கெதிராகச்சொன்ன—சத்தாதியெனும்-சச்சிதானந்தமென்னும் பிரமம்- பிரமமானது—ஏகந்தான்- ஒன்றேயாம்—எ-று.

(இ-ம்) சகத்தையனுர்த சட்துக்கமெனக்கண்டதனை நீக்குதற்காக கு கித்தாரமுஞ் சச்சிதானந்தமெனவு மதனருத்தமொன்ருன பிரமமெனவு ங்கூறினதாம் (௩௩௫)

(அ-கை) சச்சிதானந்தமொருமையென்ப துறுதிப்படுநிமித்தம்வேதமொ ருமையாகச்சொல்லிய பரியாயநாமங்களில் விதிநாமங்கூறல்.

நித்தியமபூரணமேகமபரமார்த்தம்பரப்பிரமநிதானஞ்சாந்தஞ் ...*
சத்தியங்கேவலந்துரியஞ்சமந்திருக்குக்கூடஸ்தன்சாட்சிபோதஞ் *
சுத்தமிலக்கியஞ்சநாதனஞ்சீவன்றத்துவம்விண்சோதியான்மா, மூ
த்தம்விபுசூக்கும்மென்றிவ்வண்ணம்விதிகுணங்கண்மொழியும்வேதம்

(இ-ள்) நித்தியம்- நித்தியமெனவும்—பூரணம்- பூரணமெனவும்—ஏகம்- ஏகமெனவும்—பரமார்த்தம்- பரமார்த்தமெனவும்—பரப்பிரமம்- பரப்பி ரமமெனவும்—நிதானம்- நிதானமெனவும்—சாந்தம்- சாந்தமெனவும்— சத்தியம்- சத்தியமெனவும்—கேவலம்- கேவலமெனவும்—துரியம் துரி யமெனவும்—சமம்- சமமெனவும்—திருக்கு-திருக்குவெனவும்—கூடஸ் தன்- கூடஸ்தனெனவும்—சாட்சி - சாட்சியெனவும்—போதம் - போத மெனவும்—சுத்தம் - சுத்தமெனவும்—இலக்கியம் - லட்சியமெனவும்— சநாதனம்- சநாதனமெனவும்—சீவன்- சீவனெனவும்—தத்துவம்-தத்து வமெனவும்—விண் - விண்ணெனவும்—சோதி - சோதியெனவும்—ஆன் மா- ஆத்மாவெனவும்—மூத்தம்-மூத்தமெனவும்—விபு- விபுவெனவும்— சூக்குமமென்று- சூக்குமமெனவும்—இவ்வண்ணம் இந்தப்பிரகாரம்—வி தி- விதியால்—குணங்கள்- குணப்பரியாயநாமங்களை—வேதம்-சுருதிகள் மொழியும்- சொல்லும்—எ-று.

நிதானம்-ஆதிகாரணம்-சநாதனம்-அநாதி (௩௩௬)

(அ-கை) விலக்குநாமங்கூறல்.

அசலநிரஞ்சனமமிர்தமப்பிரமமேயம்விமலம்வசனுதீத ... *
மசடமநாமயமசங்கமதுலநிரந்தரமகணுநிருபாகண்ட.... ...*
மசமனந்தமவிநாசிநிர்க்குணநிஷ்களநிரவயமநாதி... ... *
யசரீரமவிகாரமத்துவிதமெனவிலக்குமநேகமுண்டே.... ...*

(இ-ள்) அசலம்- சலனமின்மையும்—நிரஞ்சனம்- அஞ்சனமின்மையு ம்—அமிர்தம்-அமிர்தமின்மையும்—அப்பிரமேயம்-பிரமேயமின்மையும —விமலம்- மயிமின்மையும்—வசனுதீதம்- வாக்குக் கெட்டாமையும்— அசடம்- சடமின்மையும்— அநாமயம்- ஆமயமின்மையும்— அசங்கம் சங்கமின்மையும்— அதுலம்- துலமின்மையும்—நிரந்தரம் - அந்தரமின் மையும்—அகணு- அணுவின்மையும்— நிருபம்- ரூபமின்மையும்—அக ண்டம்- கண்டமின்மையும்—அசம்- சமமின்மையும்—அனந்தம் - அந்த மின்மையும்—அவிநாசி- நாசமின்மையும்—நிர்க்குணம் - குணமின்மையு ம்—நிஷ்களம்- சகளமின்மையும்— நிரவயம் - அவயவமின்மையும்—அ நாதி- ஆதியின்மையும்—அசரீரம்- சரீரமின்மையும்— அவிகாரம - விகா

ராதின்மையும் — அத்துவிதம்- துவிதமின்மையும் — என் - என்றுசொல்ல ப்பட்ட — விலக்கும்- விலக்குநாமங்களும் — அநேகமுண்டு - அநேகமுள்ள வாகும் — எ-று.

அப்பிரமேயம்- அறியப்படாதது- அநாமயம்- நோயில்லாதது அதுலம்-களமில்லாதது- நிரந்தரம்- இடையில்லாதது- நிரவயம் - அவயவமில்லாதது-அசம்- பிறப்பில்லாதது. (௩௩௭

(அ-கை) இவ்விதிவிலக்கு நாமங்களினொருமைகூறல்.

இன்னவகைவிதிவிலக்குக்குணங்களாங்கணன்றுச் சேர்ந்தொருமித்தெல்லாங்கூடிச், சொன்னபொருளொன்றன்றியிரண்டில்லை யொருபொருளைச்சொல்லுஞ்சொற்கள், பின்னபதமாமதனாற்சத்தாதிகுணப்பொருளாம்பிரமமேக, மன்னபொருளொருமையறிந்தகண்டபரிபூரணமா யாவாய் நீயே... ... ... ... ... ... ...

(இ-ள்) இன்னவகை- இத்தன்மையவாக — விதி- விதியும் — விலக்கு-விலக்குமாகிய- குணம்- குணங்கள் — நன்றாகசேர்ந்தொருமித்து- நன்றாகசேர்ந்தொன்றுபட்டு -எல்லாங்கூடி- அனைத்துங்கூடி — சொன்னபொருள்-சொல்லியவஸ்த்தம்-- ஒன்றன்றி-ஏகமேயன்றி — இரண்டில்லை-துவிதமில்லை — ஒருபொருளை- ஏகவஸ்துவை — சொல்லுஞ்சொற்கள் - உரைக்கும்வசனங்கள் — பின்னபதமாம்- வெவ்வேறுசொற்களாம் — அதனால்- ஆகலினாலே — சத்தாதிகுணம்- சச்சிதானந்தமென்னுங் குணப்பதங்கட்கு — பிரமமேகம்- பிரமமொன்றேபொருளாம் — அன்ன-அத்தன்மையதான — பொருளொருமையறிந்து-அருத்தத்தினொருமையைத் தெரிந்து — அகண்டபரிபூரணமாய்-அகண்டமானபூரணஸ்வரூபமாக — ஆராய்நீ-நீயாருவாய் — எ-று.

[இ-கூ-கம்] இவ்விதிவிலக்கு நாமங்கள் பலவாயினு மதனை யுணர்த்தப்படும்பொருளொன்றுதல் போலசச்சிதானந்தானந்தமென்னும்பதங்கள் மூன்றாயினு மஃதுணர்த்தப்படும் பொருளொன்றான வத்துவிதவஸ்துவேயாம். (௩௩௮)

(அ-கை) குணாதீதமான வஸ்துவிற்குக்குணங்கூறலாமோ வென்பதற்குத்தரங்கூறல்.

நிர்க்குணவஸ்துவின்குணங்களுரைப்பதுதாய்மலடியெனனிகரொன்னதே,
சற்குணனேவஸ்துநிலையுணாயாமலறியவல்லசதுரருண்டோ ... ... ... ✻
நற்குணவேதங்களிந்தச்சீவன்முத்திபெறப்பிரமஞானந்தோன்றச் ... ... ... ✻
சொற்குணங்கள்பிரமத்தின்குணங்களல்லபிரமமாஞ்சொரூபந்தானே. ✻

(இ-ள்) நிர்க்குணவஸ்துவின்- குணரகிதமான பிரமவஸ்துவிற்கு — குணங்களுரைப்பது- இத்தன்மையானநாமங்களைச்சொல்வது — தாய்மலடியெனல்-மாதாவந்தியென்பதற்கு — நிகரொன்னதே- சமானமென்று சொல்லாதே — சற்குணனே- சற்குணமுள்ளவனே — வஸ்துநிலையுணாயாமல்

வஸ்துநிச்சயத்தையாசிரியர் சொல்லாமல்—அறியவல்ல - தானேதெரிந்துகொள்ளும்வல்லமையுள்ள—சதுரருண்டோ- சதுரானசீடருமுளரோ—ஆதலால்- நற்குணவேதங்கள்- நல்லசுபாவத்தையுடைய சுருதிகளானவை—இந்தச்சீவன்முத்திபெற- இசசீவன்முத்தியையடையும்பொருட்டு—பிரமஞானந்தோன்ற- பிரமஞானந்தோற்றும்படி— சொற்குணங்கள்- உரைத்தசாத்தாதிகுணங்கள்—பிரமத்தின்குணங்களல்ல - பிரமத்தின்குணங்களல்லவாம்—பிரமமாஞ்சொரூபம்- அதனருத்தம்பிரமஸ்வரூபமேயாம்—எ-று.

[இ-ம்] அறிதலிறந்தவிடத்தனுபவமாயுள்ள நிர்க்குணவஸ்து- அறிவிற்கவதானமாகும் பொருட்டுரைக்கும் பரியாயநாமங்களி னருத்தப்படி சிந்திக்கினிக்குணரூப மிறந்தக்குணாதீதஸவரூபம் வெளிப்படுமன்றி மற்றொன்றால் வெளிப்படாதாதலா லங்ஙனங்கூறுஞ் சுருதிப்பிரமாணத்தையுணர்த்தியதாம். (௩௫௯)

(அ-கை) சச்சிதானந்தப் பொருளொன்றென்பதைச் சுருதியிற்காட்டினதுபோல யுத்தியிலுங்காட்டல் வேண்டுமெனவினுதல்.

மோகவிருள்கெடக்கோடியருணனெனவருகுரு[illegible]மொழியக்கேளீ ... *
ரேகபரிபூரணமாமென்சொருபமென்னுளத்திலிருக்கும்வண்ண ... .. *
மாகமங்கள்சொன்னபடியென்னையகண்டார்த்தமாவறிந்தேனையா ... ...*
வூகமுமொத்திடவுரைத்தாற்பசுமரத்திலாணிபோலுறைக்குநெஞ்சே ...*

(இ-ள்) மோகவிருள்கெட- மோகாந்தகாரநீங்க— கோடியருணனே -கோடிசூரியருதயமானதுபோல—வருகுருவே- எழுந்தருளியவாசாரியரே—மொழியக்கேளீர்- அடியேன்சொல்வதைக்கேட்பீர்— ஏகபரிபூரணமாம்- ஒன்றானபூரணஸ்வரூபமாகிய— என்சொருபம் - எனதுபிரமஸ்வரூபம்—என்னுளத்தில்- எனதிதயத்தில்—இருக்குமவண்ணம-அழுந்துமாறு—ஆகமங்கள்சொன்னபடி- சுருதிகள்சொல்லியபடி—என்னை- எனதுவஸ்துவரூபத்தை—அகண்டார்த்தமா-அகண்டப்பொருளாக—அறிந்தேன்- தெரிசித்தேன்—ஐயா- எனதாசிரியரே—ஊகமும்- உத்தியும்— ஒத்திடவுரைத்தால்- பொருந்தும்படியருளினல்—நெஞ்சு - மனதானது—பசுமரத்திலாணிபோல்-பசசைமரத்திலறையு மாணியைப்போல— உறைக்கும்-ஸ்திரப்படும்—எ-று,

[இ-ம்] வெளிப்படை. (௩௬௰)

(அ-கை) அவ்வினவிற்குத்தரங்கூறல்.

சத்தேசித்தாகுமயலெனிலசத்தாமசத்தாலுற்சாக்ஷியெங்கே... *
சித்தேசத்தாகுமயலெனிறசடமாஞ்சடங்களுக்குத்திதியுமில்லை; *
யொத்தேதோன்றியசத்துஞ்சித்துநல்லசுகமாகுமுகத்துக்கோர் ...*
வித்தேயன்னியமாகிற்சடமசத்தாஞ்சுகானுபவம்விளைந்திடாதே...*

(இ-ள்) சத்தேசித்தாகும் - சத்தாகவிளங்குதலேசித்தாகும்—அயலெனில்- சத்துக்குவேறென்றால்—அசத்தாம்- இல்லாததாம்— அசத்தானல்-

இல்லாததாயின்—சாக்ஷியெங்கே-மத்தியமாயிருந்தறியுஞ் சாக்ஷியெங்ஙனமாம்—சித்தேசத்தாகும்- சித்தாயிருந்தலேசத்தாகும்—அயனெனில்-சித்துக்குவேறென்றால்—சடமாம் - அறியாமையாம்—சடங்களுக்கு - அதீந்திரியங்களுக்கு—திதியுமில்லை- விளங்குந்தன்மையுமில்லையாம்— ஆதலால்- ஒத்தேதோன்றிய-பொருந்தத்தோன்றிய—சத்தும்- திரிகாலங்களிலு நசியாதிருக்கின்றசத்தும்—சித்தும்- மூக்காலங்களிலுந் தெரிவாகவிளங்கியசித்துமே—நல்லசுகமாகும்- நிரதியாசனந்தமாகும்—ஊகத்துக்கோர்வித்தே - உத்திக்கோர்விதையாகும்—அன்னியமாகில் - வேறானால்—சடமசத்தாம் சித்துஞ்சத்துஞ் சடமுமசத்துமாம்—சுகானுபவம் விளங்கிடாது- அங்ஙனமாயிலானந்த முதியாமற்றுக்கமுண்டாம்—எ-று.

[ப-ம்] சத்தேசித்தாகாவிடிற் றன்னையறியுந்தன்மை யில்லை யென்பார் சாக்ஷியெங்கேயெனவும் சித்தேசத்தாகாவிடிற் சர்வம்பிரமமயமாகவிளங்குதலின்றென்பார் சடங்களுக்குத் திதியுமில்லையெனவும் இவ்விருமையினொருமையினுதிப்பதே நிரதிசயானந்தமென்பார் நல்லசுகமாகுமெனவும் அவ்வுத்தியனுபவத்துக்கு மூலமென்பார் யூகத்துக்கோர்வித்தெனவும் வேறுபடி னிச்சச்சிதானந்த மனூர்த சடதுக்கமாமென்பார் அன்னிய மாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் விளங்கிடாதெனவுங்கூறினார். (௱௪௧)

(அ-கை) (இ-து)

வீயாதசத்துமுன்னம்விளங்குவதுதன்னாலோவேறொன்றாலோ ... ... *
வாயால்வேறெனிலதுவுமசத்தோசத்தோவசத்தேன்மலடிமைந்தன் ...*
பேயாகாரியஞ்செயுமோவசத்தெனவிப்படியதையும் பிரித்துச் சொன்
னா, லோயாதவவத்தையாங்குதர்க்கவிகற்பங்களைவிட்டொழிந்திடாயே *

(இ-ள்) வீயாதசத்து- திரிகாலங்களினுநசியாதசத்தானது— முன்னம் விளங்குவது- முன்பிரகாசிப்பது—தன்னாலோ- தன்னாலேயா— வேறொன்றாலோ-மற்றொன்றாலோ—வாயால்வேறெனில்-வாக்கினால்வேறென்றால்—அதுவும்- அச்சத்தமும்—அசத்தோ- இல்லாததா—சத்தோ- இருப்பதா—அசத்தேல்- இல்லாததென்றால்—மலடிமைந்தன்- வந்தியாபுத்திரன்—பேயா- பேயனே—காரியஞ்செயுமோ- தொழிலைச்செய்வானா—அதையும்- அக்கிரியைகளையும்—இப்படி- இங்ஙனம்— அசத்தெனப்பிரித்துச்சொன்னால்- அசத்தென்றுபகுத்துச்சொல்லின் — ஓயாதவவத்தையாம்- நீங்காதவவத்தையாம்—குதர்க்க- குதர்க்கமாகிய— விகற்பங்களை- வேறுபாடுகளை—விட்டொழிந்திடாய்-விட்டுநீங்குவாய்—எ-று.

[ப-ம்] தன்னையறிவதுதானேயன்றி வேறுமோவென்பார் வீயாதசத்து முன்னம் விளங்குவது தன்னாலோவேறொன்று லோவெனவும் அங்ஙனமுணர்க்குஞ் சத்தமுமிருந்ததுணர்க்குமாவில்லாத துணர்க்குமாவென்பார் வாயால்வேறெனிலதுவு மசத்தோசத்தோவெனவும் இல்லாதது நிகழுமாவென்பார் அசத்தேன்மலடிமைந்தன் காரியஞ்செய்யுமோவெனவும் இல்லாதது நிகழுமென்னி னீங்காத சோர்வவத்தையுண்டாகுமென்பார் அசத்தெனவிப்படி யதையும் பிரித்துச்சொன்னாலோயாதவவத்தையாமென

வும் இருந்ததேயறிவென்னு மனுபவங்கொண்டில்லாததை நீக்குவா யெ ன்பார் குதர்க்க விகற்பங்களை விட்டொழிந்திடாயெனவுங்கூறினார்

[இ-உ-க-ம்] இருந்ததுவிளங்குதலிற்சத்தேசித்தெனவும்விளங்குவதே யிருத்தலிற் சித்தேசத்தெனவும் இவ்வொருமையிற்சுகம் விளைதலி னிதே யானந்தமெனவு மிவ்வனுபவத்தாலுத்திப்பிரமாணமுணர்த்தியதாம்.

(அ-கை) சச்சிதானந்தப்பதங்களின் பொருளொன்றென்பதற் கனுபவங்கூறல்.

சுருதியுத்தியொத்ததுபோலனுபவமுங்கேள்சுழுத்திச்சுகவானந்த *
மிருதிவடிவாதலிலவ்வானந்தமேயறிவாம்வேறங்கில்லைக் ... ... *
கருதுபிரளயஞ்சுழுத்தியிரண்டிலுநீயிருந்திருளைக்காண்கின்றாயே *
யிருதயத்திப்படிநோக்கியேகபரிபூரணமாயிருந்திடாயே ... ... *

(இ-ள்) சுருதியுத்தி- சுருதியுமுத்தியும்—ஒத்ததுபோல் - பொருந்தினது போல—அனுபவமுங்கேள்- அனுபவத்தையுங்கேளாய் —சுழுத்தி - சுழுத்தியவத்தையிலுள்ள—சுகவானந்தம்- ஆனந்தமானது— மிருதிவடிவாதலின்-ஸ்புரணரூபமாதலினால்—அவ்வானந்தமேயறிவாம்-அந்தவானந்தமே ஞானமாம்—அங்கு- அவ்விடத்து—வேறில்லை-மற்றொன்றில்லை—கருது பிரளயம்- நினைக்கின்றகல்ப்பாந்தமும்—சுழுத்தி- சுழுத்தியவத்தையுமா கிய—இரண்டிலும்-இரண்டுகாலத்தும்—நீயிருந்து- நீசத்தாகநின்று— இருளை- அந்தகாரத்தை—காண்கின்றாயே-பார்க்கின்றாயல்லவா— இருதயத்து- உனதிதயத்தில்—இப்படிநோக்கி- இவ்விதமாகப்பார்த்து— ஏகபரிபூரணமாயிருந்திடாய்- ஒன்றானபூரணஸ்வரூபமாகவே யிருப்பாய-எ-று.

[ப-ம்] அறிதலிறந்தசுழுத்தியிலானந்தம் விளங்குதலதற்கேதெரிதலின வ்வானந்தமே யறிவென்பார் சுழுத்திசுகவானந்தமிருதிவடிவாதலினவ்வா னந்தமேயறிவாம் வேறங்கில்லையெனவும்- இருளையறியுமிடத்தவ்வறிவே காணுயிருத்தலினறிவேசத் தென்பார்- பிரளயஞ்சுழுத்தியிரண்டிலு நீயிரு ந் திருளைக்காண்கின்றா யெனவுங்கூறினார்.

[இ-ம்] சச்சிதானந்தத்தின் பொருளொருமை யென்பதற்கனுபவங் கூறி யதாம் சுருதியுத்தி யனுபவங்களோடு முணர்த்திய சச்சிதா னந்தத்தின் பொருளொருமையின் ஸ்வரூபத்தைத்தேசிக ருபதேசமுகத்தாற் றெரிந் துகொள்க (௱௪௬)

(அ-கை) சுருதியுத்தியனுபவப்படிச் சீடன்சகசநிட்டையிற் பெற்றவனு பவங்கூறல்.

பலகலையுமுணர்ந்தகுருமொழிந்தபடியிவனு மனுபவம்விடாமற் ... *
பலமலரின்மதுப்போலச்சச்சிதானந்தமொன்றும் பரமார்த்தத்தைப
பலபொழுதுங்கண்மூடிச்சமாதியிருந்தான்விழித்துப் பார்த்தபோது
பலவடிவாஞ்சராசரசித்திரங்களெல்லாந்தோன்று மொருபடமாமென

(இ-ள்) பலகலையும்-சகலசாஸ்திரங்களையும்—உணர்ந்த குரு-அறிந்ததேசிகர்—வர்— மொழிந்தபடி- அனுக்கிரகித்தவண்ணம்—இவனும்- இசசிட்டனும்—அனுபவம்விடாமல்- அனுபவத்தைவிட்டுநீங்காமல்— பலமலரின்மதுப்போல- நாநாபுட்பங்களினிருக்குந் தேனொருமித்ததுபோலே—சச்சிதானந்தமொன்றும்- சத்துச்சித்தானந்தங்க ளேகமாகிய—பரமார்த்தத்தை- பிரமப்பொருளை— பலபொழுதும் - எப்போதும்—கண்மூடிச்சமாதியிருந்தான்- ஊனக்கண்ணை மூடிஸ்வரூபசமாதியி லிருந்தனன்— விழித்துப்பார்த்தபோது - ஞானவிழியாற்பார்க்கும்போது— பலவடிவாம்- நாநாவிதவுருவங்களான—சராசரசித்திரங்களெல்லாம் - தாவரசங்கமமாகிய சித்திரங்களனைத்தும்—தோன்றும்-தோன்றுகின்ற—ஒருபடமானன் ஓர்சித்திரபடமானன்—எ-று.

[இ-ம்] சச்சிதானந்தப்பதங்களின் பொருளொருமையான வத்து விதஸ்வரூபமேதானகித் தானேயாவுமாக விளங்குகின்ற சாக்ஷாத்காரானுபவத்தைப்பெற் றருடனையினனென்பதாம். ௱௪௪)

(அ-கை) துரியாதீதமே துரியமாகவிளங்கு மனுபவத்தின்வகவமாரமிக்கும்பொருட் டஃதுதயமாதற்கிடமான ஞானபூமியைகருதித்து நான்குவகையாகவினுதல்.

இதயமொத்தசற்குரு நமக்கிதுவேவிநோதமன்றியினிவேறுண்டோ *
வதையுரைத்துமனைத்துமிருப்பதன்றேஞானிகளுக்கானநீதி......*
முதலுரைத்தது ரியாதீதமுமேழாம்பூமியுமுகக்கியமாமென்ற... ... ...*
பதமுமதின்வகையுமெனககெளிதாகத்தெளியும்வண்ணம் பணித்திடோ*

(இ-ள்) இதயமொத்தசற்குருவே- மனமொத்தவென்னுடைய வாசிரியரோ—நமக்கு-நமக்கு—இதுவே- இவ்விசாரமே—விநோதமன்றி-லீலையலலாமல்—இனிவேறுண்டோ- இனிவேறுமொன்றுளதோ—அதை-அப்பிரமத்தை—உரைத்தும்- வாக்கினுறைபேசியும்—நினைத்தும்-மனதினுற்றியானித்தும்—இருப்பதன்றே- இருப்பதல்லவா—ஞானிகளுக்கானநீதி-ஞானவான்களுக்கானநியாயம்—முதலுரைத்த- முன்சொன்ன— துரியாதீதமும்- துரியாதீதத்தையும்—எழாம்பூமியும்- ஏழாவதுபூமியும்— முக்கியமாமென்றபதமும்-முக்கியமாமென்றுசொல்லியபதமும்— அதின்வகையும் - அதன்பகுப்பையும்—எனக்கு-அடியேனுக்கு—எளிதாகத்தெளியும்வண்ணம் சுலுவாகத்தெரியும்படி—பணித்திடீர்-அருள்செய்வீர்—எ-று

[இ-ம்] வெளிப்படை. (௱௪௫)

(அ-கை) சுவானுபவத்திற்செல்லு நிலையமார்க்கமானஞானபூமியைகூறுவர்ன் றெடங்கியுற்பத்திக கிரமமானவஞ்ஞானபூமியின் வகையாகிய நாமங்களேழையுமுறக்கூறுகின்றார்,

வினவுமிடத்தஞ்ஞானபூமிகளேழ்ஞானபூமிகழேளென்பர் ... ... *
நினியவற்றுளஞ்ஞான்பூமிகளேழையுமுந்தியம்பக்கேளாய்... .....*

# சந்தேகந்தெளிதற்படலம்.

தனிவித்துசாக்கிரஞ்சாக்கிரமகாசாக்கிரஞ்சாக்கிரத்தைச்சார்ந்த... ...*
வினவுகனுக்கனவுசாக்கிரஞ்சுழுத்தியென்றெழுபேர் கணித்தார்மேலோர்*

(இ-ள்) வினவுமிடத்து- விசாரிக்குமிடத்தில்—அஞ்ஞானபூமிகளேழ்- அஞ்ஞானபூமிகளேழ்—ஞானபூமிகளேழ்- ஞானபூமிகளேழ்—என்பார்- என்றுசத்துக்கள்சொல்லுவார்கள்—இனியவற்றுள்-இனியவைகளுக்குள்—அஞ்ஞானபூமிகளேழையும்- அஞ்ஞானபூமிகளேழினையும் —முந்திரி யம்பக்கேளாய்-முன்புசொல்லுதுங்கேட்பாய—தனி- தனிமையான—வித்துச்சாக்கிரம்-வித்துநனவெனவும்—சாக்கிரம்-நனவெனவும்—மகாசாக்கிரம்-மகாநனவெனவும்—சாக்கிரதைச் சார்ந்தகனவு- நனைகனவெனவும்—கனுச்சொர்ப்பனமெனவும்—கனவுசாக்கிரம்- கனாநனவெனவும்—சுழுத்தியென்று- சுழுத்தியெனவும்—எழுபேர்-ஏழுநாமங்கள்—மேலோர்-மகான்கள்—கணித்தார்- கூறினர்—எ-று,

[இ-ம்] வெளிப்படை. (ரு சுகூ)

(அ-உக) அவூற்றுஞன்குபூமிகளினிலக்கணங்கூறல்.

முந்தவகண்டத்தெழுமோரறிவுமாத்திரமதுதான்முதல்வித்தாகு ... ...*
மிந்தவறிவிற்பண்டில்லாவகந்தைமுளைபோலாமிதுநனவாம் ... ... ...*
வந்துவந்துபிறவிதொறுமகமமதைவ்ளருமதுமகா வா... ... ... *
நந்துமகங்கொடுநனவின்மனோராச்சியஞ்செயலேநனு றவே ... *

(இ-ள்) முந்த- முன்னரேயுள்ள—அகண்டத்தெழும்- அகண்டமானசத்திலுதித்த—ஓரறிவுமாத்திரம்- ஒருணர்வாகிய—அதுதான்-அதுவே-முதல்வித்தாகும்- முன்னுண்டானவித்துநனவாம்— இந்தவறிவில் - இவ்வினையாகியவுணர்வில்—பண்டில்லா · முன்னமில்லாத— அகந்தை - அகந்தையானது—முளைபோலாம்- அங்குரம்போலவுண்டாம்—இதுகனவாம் இதுசாக்கிரமாகும்—வந்துவந்து- உண்டாகியுண்டாகி— பிறவிதொறும்- சநநங்கடோறும்—அகமமதைவளரும்- யானெனதென்கின்றவிருக்ஷம்வளரும் —அதுமகாநனவாம்- அதுமகாசாக்கிரமாம்—நந்தும்-நசிக்கின்ற—அகங்கொடு- அகத்தைக்கொண்டு—நனவில்- சாக்கிரத்தில்— மனோராச்சியஞ்செயல்-மனோராசசியஞ்செய்வது—நனுக்கனு - சாக்கிர சொர்ப்பனமாம்—எ-று.

[ப-ம்] அறிவறியாமையின்றி யறிவாகவிளங்குகின்ற தன்னிடத்திலெதிரிட்டறிய வுதித்தபோதமே சகசீவபரத்துக்கு மூலமானபிரகிருதி யென்பார் முதல்வித்தாகுமெனவும்- இவ்வறிவிற் பிரதிபலனமாக வெளிப்படுஞ்சாயையை யானென்னுமறிவே சகசீவபரவுற்பத்திக் கடையாஞமான மகதத்துவமென்பார்- நனுவெனவும்- அச்சகசீவபரங்களையானெனதெனமம தாகங்காரமாகவெளிப்படுமறிவேயகங்காரதத்துவமென்பார்-மகாநனுவெனவும்- அச்சகசீவபரங்களி னுருவமேநானென வியாபித்ததுவாகநிற்கு. மறிவுதெறிதல்போலத்தோற்றுமென்பார்-கனுக்கனுவெனவுங் கூறினர்

(அ-உஉ) ஏனையமூன்றுபூமிகளினிலக

உண்டுறங்கிமனோராச்சியஞ்செயல்சொர்பனமெனும்பேருடையதாகும்*
பண்டுகனுக்கண்டுமறந்ததைமீண்டுநினைப்பதுசொர்ப்பனநனவாம் ......*
மண்டுமிருண்மூடுவதுசுழுத்தியாமஞ்ஞானவகைகள்சொன்னோம்.....*
விண்டுநிறைமுத்திதருஞானபூமிகளேழும்விளம்பக்கேளாய் ... ... *

(இ-ள்) உண்டுறங்கி- புசித்துநித்திரைசெய்து— மனோராச்சியஞ்செயல்-மனோராச்சியஞ்செய்வது—சொர்ப்பனமெனும்பேருடையதாகும்-கனவென்னுநாமமுள்ளதாம்—பண்டுகனுக்கண்டு- முன்சாக்கிரத்திற்பார்த்து—மறந்ததை- மறந்துவிட்டதை—மீண்டுநினைப்பது - திரும்பஞாபகப்படுத்துவது—சொர்ப்பனநனவாம்- சொர்ப்பனசாக்கிரமாம் — மண்டுமிருண்மூடுவது- மிகுந்தவிருட்டி மூடிக்கொள்வது—சுழுத்தியாம்- சுழுத்தியாகும்—அஞ்ஞானவகைகள்சொன்னோம்- அஞ்ஞானபூமிகளின் விதத்தைச்சொன்னோம்—விண்டு-சடமுதலியவைகள்வேறுபட்டு— நிறைமுத்திதரும்- பரிபூரணமானகைவல்யத்தைக்கொடுக்கும்— ஞானபூமிகளேழும்- ஞானபூமிகளேழையும்—விளம்பக்கேளாய்- சொல்லக்கேட்பாய்—எ-று.

[ப-ம்] அச்சசீவபரங்களின் யதார்த்தமிஃதெனத்தோன்றாததனில்வியாபரிக்கு மறிவே மனோராச்சியமென்பார்- சொற்பனமெனவும அவ்வறிவு சகசீவபரங்களைமறந்து நினைக்குமென்பார் சொர்ப்பன நனவெனவும் அசசகசீவபரங்களே தானாகிநின்று தன்னைமுழுதுமறந்தவறியாமையேமீளாதமகாசுழுத்தியென்பார் இருண்மூடுவதுசுழுத்தியாமெனவுங் கூறினார்

[இ-உ-க-ம்] வித்துநனவு-நனவு- மகாநனவாகியவிம்மூன்றும்- அறிவுபரிணமித்தாகாரமாயெதிரிடுதலாற சாக்கிரமெனவும்- சாக்கிர சொர்ப்பனமு-சொர்ப்பனம-சொர்பபனசாககிரமாகிய விம்மூன்று மெதிரிடுநின்றவாகாரங்களினறியாமை யோடு விபகாரங்கள்செய்தலின் சொர்பசன மெனவும்-சுழுத்தியொன்றுஞ் சிருட்டிமுதலிதுகாறுந்தன்யதார்த்தந்தெரியாமல விடயாந்தகாரமாகவுறங்குதலிற சுழுத்தியெனவுங்கூறினு ரென்பதாம்.

(அ-கை) ஞானபூமிகளினுமங்களேழையுங்கூறுகின்றார்.

புலவர்புகழ்முதறபூமிசுபேச்சைவிசாரணையிரண்டாம்பூமியாகு ...*
நலதனுமானசிமூன்றாம்பூமிசத்துவாபத்திநாலாம்பூமி... ...*
சொலுமசம்சத்திப்பேரும்பதார்த்தாபாவனைப்பேருந்துரியப்பேரு*
மலினமறுமகனேயைந்தாறேழுபூமிகளாவகுத்தார்மேலோர் *

(இ-ள்) புலவர்புகழ்- அறிஞர்கதியாநின்ற—முதற்பூமி - முந்தினபூமியினுமம்—சுபேசசை- சுபம்விரும்பலெனவும்—இரண்டாம்பூமி-இரண்டாம்பூமியினுமம—விசாரணையாகும் - விசாரமெய்தலெனவும்—மூன்றாம்பூமி- மூன்றாம்பூமியினுமம்—நலதனுமானசி- நல்லமனஞ்சிறுகலெனவும்—நாலாம்பூமி- நான்காம்பூமியினுமம்—சத்துவ்ாபத்தி - உண்மையிலேமன்னிற்றலென்னும்—ஐந்து- ஐந்தாம்பூமியின்—பேரும் - நாமம்—சொலுமசம்சத்தி- சொல்லாநின்றசங்கற்பமறலெனவும்—ஏழு - ஏழாவதுபூமியின்—பேரும்- நாமம்—துரியம்- துரியமெனவும்—மலினமறுமகனே - கள

## சந்தேகந்தெளிதற்படலம்.

ஙகமறுமைமைந்தா!—மேலோர்- மகான்கள்—பூமிகளாவகுத்தார் - சத்தபூமிகளாகப்பிரித்தார்கள்—எ-று,

[இம்] வெளிப்படை. (௱௬௪)

(அ-கை) அவற்றுணன்குபூமிகளினிலக்கணங்கூறல்,

துர்ச்சங்கநிவிர்த்திவந்துசிவஞானம்விரும்புவதுசுபேச்சையாகு *
நற்சங்கமொழிவினவிஞானநூல்பழகல்விசாரணையாநம்பி .. *
முற்சங்கவிஷணைகள்விடறனுமானசியிந்தமூன்றிறுலுஞ்... *
சற்சங்கமனதிலுண்மையறிவுதித்தல்சத்துவாபத்திதானே ... *

(இ-ள்) துர்ச்சங்கநிவிர்த்திவந்து- துர்ச்சங்கநீங்கி—சிவஞானம்விரும்புவது- சிவஞானத்தையாசிப்பது—சுபேச்சையாகும்- சுபமவிரும்பலாம்—நற்சங்கம்- சாதுசங்கத்தைச்சேர்ந்து—மொழிவினவி - அவருரைக்கும்வாக்கியததைவிசாரித்து—ஞானநூலபழகல் - ஞானசாஸ்திரத்தையப்பியாசிப்பது—விசாரணையாம்- விசாரணையாகும்—நம்பி - விசாரத்தின்வெளிப்படும்பொருளைநம்பி—முற்சங்கவிஷணைகள்-முன்னுள்ள விசுசைகளைவிடல்- நீங்குதல்—தனுமானசி - மனஞுசிறுகலாம்—இநதமூன்றிறுலும்இம்மூப்பூமிகளின்பழக்கத்திறுலும்—சற்சங்கமனதில் - சறசங்கம்பழகியமனதில்—உண்மையறிவுதித்தல்- மெய்யுணர்வுபிறத்தல—சத்துவாபத்திஉண்மையிலேமன்னிநிற்றலாம்—எ-று.

(அ-கை) ஏனையமூன்றுபூமிகளி னிலககணங்கூறல்.

தத்துவத்தின்மனமுறைத்துமித்தையெலாமறததலசம்சத்தியாகு *
மத்துவிதானந்தம்வருந்திரிபுடிபோம்பதார்த்தாபாவனையதாகும *
வஸ்துநிலையிருந்தபடியிருந்தமவுனசுபாவந்துரியமாகு... ...*
மித்துரியபூமியைமூன்றுரியாதீதப்பதமென்றதுவுங்கேளாய் *

(இ-ள்) தத்துவத்தில்- உண்மையில—மனமுறைத்து- மனந்திரப்பட்டு—மித்தையெலாம்- பொய்மைகளனைத்தையும்—மறத்தல்- மறந்துவிடுவதுஅசம்சத்தியாகும்- சங்கற்பமறலாம்—அத்துவிதானந்தம்வரும் - அத்துவிதானந்தமுண்டாதலும்—திரிபுடிபோம் - திரிபுடிநீங்குதலும்—பதார்த்தாபாவனையதாகும்- பதார்த்தவெண்ணமறுத்திடலெனவும்—வஸ்துநிலைபிரமவஸ்துவினிசசயம்- இருந்தபடியிருந்த- இருந்தவண்ணமிருக்கின்ற—மவுனசுபாவம்- மோனத்தன்மையே—துரியமாகும்- துரியமாம்—இத்துரியபூமியை- இந்தத்துரியபூமியை—மூன் - முன்பு—துரியாதீதப்பதமென்றதுவும்- துரியாதீதப்பதமென்றுசொன்னதும்—கேளாய்-கேள், எ-று.

[இ-உ-க-ம்]சாதனசதுட்டயமுகித்து விடயதோஷதிருட்டியுண்டாயத் தன்னைத்தரிசிக்கவிரும்புவதே சுபேசசையெனவும அவ்விருபபத்தாற உண்கிய சித்துருவமுந்தானல்லாத சடவுருவமுமிஃதென விசாரித்தல விசாரணையெனவும் அவ்விசாரத்திலுள்ள சித்தில்வாசனையுண்டாய்சசடவிசசனைவிட்டு மனமடங்குதலே தனுமானசியெனவும் அச்சித்துவாசனைமிருந்தஃதனுபவமாகவெளிப்படுதல் சத்துவாபத்தியெனவும அசசித்தறுயபு

தினுஞ் சடப்பாவகீங்குதல் அசம்சத்தியெனவும் அச்சித்தானந்தோதய மாயிரண்டறயாவுந் தானேதானுயிருத்தல் பதார்த்தாபாவனையெனவுமிவ்வனுபவமெப்போதுமுள்ளதாகவிளங்குதல்துரியமெனவுங்கூறினதாம்.

(அ-கை) இத்துரியபூமிய துரியாதீதமாகுமியல்புதோன்ற சத்தபூமியையும் பஞ்சாவத்தையாகப் பகுத்ததன்வகையு மதனிலக்கணமுங்கூறுகின்றார்.

முற்புவிமூன்றினுமுலகந்தோன்றுதலாற்சாக்கிரமாம்மூன்றற்கப்பாற் ...*
சொர்ப்பனமாமதுவுமெள்ளநழுவுமஞ்சாம்பூமியேசுழுத்தியாகு ......*
மற்புதமாஞ்சுவானுபவமிகுமாறும்புவிதுரியமதற்கப்பாலோர் .........*
கற்பனையிலாதவிடமதீதமென்றும வுனமாக்காட்டும்வேதம்... ...*

(இ-ள்) முற்புவிமூன்றினும்- முதற்கட்கூறிய பூமிகண்மூன்றிலும்—உலகந்தோன்றுதலால்-சகந்தோற்றுகின்றபடியால்— சாக்கிரமாம்- அம்மூன்று பூமியுநனவாகும்—மூன்றற்கப்பால்- நான்காவதுபூமி—சொர்ப்பனமாம் கனவாகும்—அதுவுமெள்ளநழுவும் - அக்கனவுமெள்ளநீங்குகின்ற— அஞ்சாம்பூமியே- ஐந்தாம்பூமியே—சுழுத்தியாகும்- சுழுத்தியாம்—அற்புதமாம்- அதிசயமாகிய—சுவானுபவமிகும் - சுவானுபவமிகுந்த— ஆறும்புவி- ஆறும்பூமி—துரியமாம்- துரியமாகும்—அதற்கப்பால்- ஏழாம்பூமி ஓர்கற்பனை- ஒருகற்பனையும்—இல்லாதவிடம் - அற்றவிடம்—அதீதமென்று- துரியாதீதமென—மவுனமாய்- மௌனமாக—வேதம்- சுருதியானது காட்டும்- தரிசிப்பிக்கும்—எ-று.

[இ-ம்] சுபேச்சைவிசாரணை தனுமானசியாகிய விம்மூன்றிற்சகம்விடயரூபமாகத் தோற்றுதலி னவைசாக்கிரமெனவும் சத்துவாபத்தியிற் சகநினைவுருவாகத் தோற்றுதலி னதுசொர்ப்பனமெனவும் அசம்சத்தியிற்சகந்தோற்றாமையின் சுழுத்தியெனவும் பதார்த்தபாவனையிற் சகஞ் சின்மாத்திரமாகத்தோற்றுதலின் அதுதுரியமெனவும் துரியத்திற்காண்பானுங்- காணப்படுஞ்சகத்துமற சத்தாமாத்திரமாக விளங்குதலின் அதுதுரியாதீதமெனவுங்கூறினதாம் அனுபவிக்கிப் பூமிகளைந்தவத்தையான தெனக் கொள்க. (௱௫௨)

(அ-கை) இவ்வேழாம்பூமியைத்துரியமென்பதற்கனுபவங்கூறல்.

துரியநிலந்தனிற்றுரியாதீதமெனின்மயக்கமென்றுசுருதிமேலோ ......*
ரரியதொருவிதேகமுத்தியதீத ... பாரதுகணக்கிலாறும்பூமி .........*
மருவுசுழுத்தியிற்காட்சிசுழுத்தியெ... ...ரொன்பதுநீ மனத்திற்கொள்வாய் 
பெருந்மைதருஞானபூமியின்விகற்ப...னமுண்டுபேசக்கேளாய் ......*

(இ-ள்) துரியநிலந்தனில்- துரியபூமியை—துரியாதீதமெனில்- துரியாதீதமென்றால்—மயக்கமென்று- மயக்கம்வருமென்று—சுருதிமேலோர்-வேதாந்தமுணர்ந்தமகான்கள்—அரியதொருவிதேகமுத்தி - எட்டுதற்கரியதாப்பறறவிதேககைவல்லியத்தை—அதீதமென்பார்-துரியாதீதமென்றுசொல்லுவார்கள்—அதுகணக்கில்- அந்தக்கணக்கிற்கு—ஆறும்பூமி- ஆறுவது

பூமியானபதார்த்தாவனே—மருவுசுழுத்தியில்- பொருந்தாநின்றதுசுழுத்தியை—காட்சிசுழுத்தியென்பார்- காணுமவிவாகிய சுழுத்தியென்றுசொல்லுவார்கள்—என்பது - என்றதை—நீமனத்திற்கொள்வாய் - நீமனதிற்வைப்பாய் —பெருமைதரும்- மாட்சிமையைக்கொடுக்கின்ற—ஞானபூமியின்- ஞானபூமிகளின்—விகற்பம்- பேதங்கள்—இன்னமுண்டு - இன்னமிருக்கின்றது—பேசக்கேளாய்- அதைச்சொல்லக்கேட்பாய்—எ-று,

[இ-ம்] இவ்வேழாம்பூமியைத் துரியமெனவுந் துரியாதீதமெனவுங்கூறினையமுண்டாமெனக்கருதி யதனைச்சீவன்முத்திபின் றிறமானதுரியமெனவும் இதுநீங்கியவிதேகமுத்தியைத் துரியாதீதமெனவுங்கூறுவர் அங்ஙனங்கூறுமிடத் தைந்தாம்பூமியாகிய சுழுத்தியிற்சகந்தோன்றுமற் றுன்றேன்றிநிற்றல் துரியமாதலின் றுரியமென்னும் ஆறாம்பூமியைக் காட்சிசுழுத்தியெனக்கொண்டு அதனோடுசேர்த்து இவ்விரண்டையுஞ் சுழுத்தியென்று கூறினானென்பதாம். (௱௫௩)

(அ-கை) ஞானபூமிகளையடைந்தசீவன் முத்தர்களினவ சரநாமங்கூறல்.

முன்னிலங்களேறியமூவருமப்பியாசிகளாமுத்தரல்லர்... ... *
பின்னிலங்கள்வரன்வரியான்வரிட்டனெனுஞ்சீவன்முத்தர்பேதமாகுஞ்*
சொன்னநடுப்பூமிவந்தஞானிகளேபிரமவித்தாந்தூயமுத்த... ...*
ரின்னமுமப்பூமிகளின்பெருமைதனைநீயறியயான்சொல்வேனே ... ...*

(இ-ள்) முன்னிலங்களேறிய- முதற்கணுள்ளமூன்று பூமிகளிலேறிவந்த—மூவரும்- மூன்றுபேர்களும்—அப்பியாசிகளாம்- சாதகர்களாம்—முத்தரல்லர்- சீவன்முத்தர்களல்லர்—பின்னிலங்கள் - இறுதியிலுள்ளமூன்றுபூமிகளி லைந்தாம்பூமி யிலேறியவன்—வரன்-பிரமவரனெனவும்—ஆறும்பூமியிலேறியவன்- வரியான்- பிரமவரியானெனவும்—எழாம்பூமியிலேறியவன் - வரிட்டனெனும் - பிரமவரிட்டனெனவும்— சீவன்முத்தர்பேதமாகும்- சீவன்முத்தர்களின்பேதங்களாம்—சொன்ன- இப்போதுசொல்லியபூமிகளின்—நடுப்பூமிவந்த - மத்தியாகியநாலாம்பூமியிலேறிய--ஞானிகள் ஞானவான்கள்—பிரமவித்தாம் - பிரமவித்தென்னும்—தூயமுத்தர்- மேலானசீவன்முத்தர்களாம்—இன்னமும் - மேலும்—அப்பூமிகளின்பெருமைதனை- அந்தஞானபூமிகளின்பெருமையை—நீயறிய - உனககுத்தெரியும்பொருட்டு—யானசொல்வேன்- நானுரைப்பேன்—எ-று.

[இ-ம்] முன்மூன்றுபூமியையடைந்த வப்பியாசிகளெனவு மற்றநான்குபூமியையடைந்தவர் சீவன்முத்தர்களெனவுங்கூறினதாம். (௱௫௪)

(அ-கை) ஞானபூமிகளின் முன்மூன்றி னப்பியாசத்தால் வரும்பயனுமதின்முதற் பூமியினருமையுங்கூறல்.

நாலாம்பூமியில்வருமுன்மூன்றுபூமியைமடைந்துநடந்துமாண்டோர்...*
மேலானபதமடைந்துபிறந்துமெள்ளமெள்ளவந்துவீடுசேர்வார் ... ...*
மாலானபவத்தில்விழார்முதற்பூமிகிடைப்பதுவேவருத்தமைந்தா... ...*
காலானமுதற்பூமிகைவந்தான்முத்தியுங்கைவந்ததாமே ... . ... ... *

(இ-ள்) நாலாமபூமியில் - நான்காம்பூமியில்—வருமுன் ; வருதற்குமு ன்னம் —மூன்றுபூமியுமடைந்து- மூன்றுபூமியையுஞ்சேர்ந்து—நடந்து- அவற் றையனுஷ்டித்துவரும்போது—மாண்டோர்- மரித்தவர்கள்— மே லான்றதம்படைந்து-உயர்ந்தபதவியைப்பெற்று—பிறந்து-பூமியிற்சனித்து —மெள்ளமெள்ளவந்து- கொஞ்சங்கொஞ்சமாகவேறி— வீடுசேர்வார்- முத்தியையடைவார்கள்—மாலான்பவத்தில்விழார்- இச்சாரூபமான்சங்க த்தில்விழார்— முதற்பூமிகிடைப்பதுவே - முதற்பூமியானசுபேச்சையு ண்டாவதே—வருத்தம்- பிரயாசமாம்—மைந்தா-மகனே— காலான்முத ற்பூமி-ஆகியான்முதற்பூமி —கைவந்தால் - கைவசமானல்— முத்தியும்- மோட்சமும் — கைவந்ததாம்- கைவசமானதாம்—எ-று.

[இ-ம்] வெளிப்படை. (ாருரு)

(அ-கை) அப்பியாசபூமியையடைந்தவனெவ்விதத்திலுமனுபவியாவனெ ன்பதுகருதி யவனனுபவியேயெனக்கூறுதல்.

இப்புவியிலிஞ்ஞானபூமியொன்றிலிரண்டிலடைந்திருந்தாரானு...... ...*
லப்புருடர்மிலேச்சராகிலுமுறநர்குருபாதத்தாணைமெய்யே...... ......*
தப்புரையென்றவர்கெடுவார்நடுவானமறைக சங்கியாதே... ........*
செப்புமொழிவழிதிடமாயகம்பிரமமென்றிருந்துதெளிந்திடாயே... ...*

(இ-ள்) இப்புவியில்- இவ்வுலகத்தின்கண்—இஞ்ஞானபூமி-இந்தஞான பூமிகளேழில்—ஒன்றில்- சுபேச்சையிலாவது—இரண்டில்- விசாரணையி லாவது—அடைந்திருந்தாரானல்-சேர்ந்திருப்பாராயின்—அப்புருடர்-அ ந்தப்புருடர்கள்—மிலேச்சராகிலும்- மிலேச்சர்களானாலும்—குருபாதத் தாணை - தேசிகர்திருவடியாணை—முத்தர் - சீவன்முத்தராவரென்பது— மெய்யே- சத்தியமே—தப்புரையென்றவர்- இதைப்பொய்வசனமென்ற வர்கள்—கெடுவார்- பவத்திலழிவார்கள்—நடுவானமறைகளை - நடுவுநிலை மையானவேதவாக்கியங்களை—நீசங்கியாதே- குதர்க்கமாகநீ சங்கைபண் ணுதே—செப்புமொழிவழி- போதிக்கின்றவுபதேசமார்க்கத்தில்—திடமா ய்- ஸ்திரமாகச்சென்று—அகம்பிரமமென்று-கூடஸ்தனேபிரமமென்று- இருந்துதெளிந்திடாய்- சகசமாதியிலிருந்துதெளிவாய்—எ-று.

[இ-ம்] இவ்வப்பியாசபூமியை யவசியமடையும்பொருட் டவைகளின் பெருமையையு மவைகளாற்பெறும்பயனையுங்கூறினதாம்

(அ-கை] முத்தியையடைதற்கு வன்னச்சிரமபேதம் வேண்டுவதின் றெ ன்பதுதோன்ற விப்பூமிகளின்முடிவான துரியாதிதந் துறவறத்தார்க்கன் றி யில்லறத்தார்க்குவாராவென்னு மையத்தைநீக்கவேண்டுமெனவினுதல்

பொலலாதமிலேச்சருக்கும்விதேகமுத்திதருஞானபூமியென்று *
நெலலாகிழளிக்குமெனைத்தண்டுலமர்க்கியகுருவேநீர்சொன்னீரோ
இல்லாளுங்குடும்பம்விட்டுச்சந்நியாசம்புகுந்தேதாங்கியர்னே... *
ரல்லாமன்முத்திபெறுரொன்றுசிலர்சொன்மயக்கமகற்றுவீரே......*

(இ-ள்) பொல்லாதமிலேச்சருக்கும்-கொடியரான மிலேச்சர்களுக்கும்

விதேகமுத்திதரும் - விதேககைவல்லியத்தைககொடுப்பது—ஞானபூமி யென்று- ஞானபூமியாமென்று—நீரசொன்னீர் - தேவரீரருளவீர்—நெ ல்லாகி- நெல்விததைபபோல—மூளைககுமெனை- சனித்துகமொல்டிருந குமடியேனை—தண்டுலம- அரிசியைப்போல—ஆககியகுருவே- சனியா மற்செய்தவாசிரியரோ—இல்லாளுங்குடும்பம்விட்டு- மனைவிமுதலியகுடு ம்பத்தைத்துறந்து—சந்நியாசம்புகுநது- துறவைப்பெறறு—ஏதாங்கியா ரேல்லாமல்- தனித்தவர்களேயன்றி—முத்திபெறுவொன்று - மற்றவில லறத்தார்மோட்சமடைய மாட்டார்களென்று—சிலாசொன்மயககம்- சி லர்சொல்லுகின்றபிரமையை—அகற்றுவீர்- நீககுவீர—எ-று.

[இ-ம்] வெளிப்படை (௱௫௭)

(அ-கை) நாலவகைத்துறவினுமமுமவறறின்காரணமுங்கூறல்.

சிட்டர்புகழுமகனேநீசஙகித்தசங்கைநன்றுதெரியககேளாய் ......*
கட்டழியுந்துறவுநால்வகையாகுமவைகளுககங்காகும்பேர்கள் ...*
பட்டதுயர்கெடுங்குடீசகமபகூதக்ம்சமபரமாமசம்.. .. ......*
விட்டகலுந்துறவுக்குவிராகங்காரணமனறிவேடமன்றே..........*

(இ-ன்) சிட்டர்புகழு மகனே- சாசசனர்துதிககின்றமைந்தா—நீசஙகித்தச ங்கை- நீவினவினவினவானது—நன்று- நன்றும்— தெரியககேளாய்- தெ ரியககூறுதுஙகேள்—கட்டழியுநதுறவு- பந்தமழிகின்ற சன்னியாசமான து—நால்வகையாகும- நான்குவிதமாம—அவைகளுக்கு- அந்நான்குக்கு ம்—அங்காகும்போகள் அவ்விதத்தாருநாமங்கள—பட்டதுயர்கெடும்-உ ண்டானதுனபங்கெகின்ற—குடீசகம - குடீசகசந்நியாசமெனவும—பகூத கம் பகூதசநநியாசமெனறும— அமசம- அம்சசநநியாசமெனவும—பர மாமசம்- பரமாம்சசந்நியாசமெனவும்—விடடகலும - பந்தத்தைவிட்டுநீ ங்கும்—துறவுககு- இசசநநியாசஙகளுககு—விராகஙகாரணமன்றி - நிரா சைக்காரணமேயலலாமல்—வேடமனறு- வேடங்காரணமன்றும—எ-று

[இ-ம்] வெளிப்படை. (௱௫௮)

(அ-கை) துறவின்காரணமான விராகமூன்றிமிமமு மவைகளி னிலகக ணமுஙகூறல்.

மநதமுந்தீவிரமுந்தீவிரதரமுமென்மூன்றுவகைவிராகம ... ...*
வெந்துயரம்வரும்பொழுதுக்குடும்பததைவெறுத்துவரும்விராகமந்த
மிந்தவுடலள்வுமனைதனம்வேண்டாமெனவிடறீவிரமென்பார்க...*
ளந்தணர்நூன்மித்தையெனவிடலதுதீவிரதரமாமறிந்திடாயே... *

(இ-ன்) விராகம்-விராகமானது—மந்தமும்- மந்தவிராகமும்— தீவிரமும் தீவிரவிகாரமும்—தீவிரதரமும்- தீவிரதரவிராகமும— என மூன்றுவகை என்றுமூன்றுவிதமாம்—அவைகளின்-வெந்துயரம்வருமபொழுது—வெ வ்வியதுன்பம்வரும்போது—குடும்பத்தை- சங்சாரத்தை— விறுத்துவ ரும்விராகம் - வெறுககாநின்றவிராகமானதுமந்தம் - மந்தவிராகமாம்— இந்தவுடலளவும்- இந்தேககாரநதாரியந்தம்—மனை-மனைவியும்—தனம- செ

ரவியமுழுதலியவைகளை —வேண்டாமெனவிடல்- வேண்டாமென்றுதுறத்தல்—தீவிரமென்பார்கள்- தீவிரவிராகமென்றுசொல்லுவார்கள்— அந்நவைமவதியார்க்குரியதால் - கன்மகாண்டங்களை— மித்தையெனவிடலது- கற்பிதமென்றுதுறத்தலானது—தீவிரதரமாம்- தீவிரதரவிராகமாகும்—அறிந்திடாய்- இவற்றைத்தெரிந்துக்கொள்வாய்—எ-று.

[இ-ம்] வெளிப்படை. (௱௫௯)

அ-கை) மந்தவிராகம்பயனின்றென்றுந் தீவிரவிராகசந்நியாசமிரண்டின்றன்மைமிதென்றுங்கூறல்.

பாவிமந்தவிராகத்திற்சந்நியாசங்களொன்றும்பலித்திடாதே ......*
தீவிரத்திற்குடீசகமும்பகூதகமுமென்றிரண்டுதிறங்களுண்டாம்...*
தாவிநடந்திடத்திடமிலாதவர்க்குக்குடீசகமுஞ்சகங்களெங்கு ...*
மேவிநடந்திடத்திடமுள்ளவர்க்குபகூதகமுமெனவிதித்தார்மேலோர்

இ-ள்) பாவி-நீதான—மந்தவிராகத்தில்- மந்தவிராகத்தில்— சந்நியாசங்கள்- துறவானவைகள்—ஒன்றும்பலித்திடாது- ஒன்றுஞ்சித்தியாது.—தீவிரத்தில்- தீவிரவிராகத்தில்—குடீசகமும்- குடீசகசந்நியாசமும்— பகூதகமுமென்று- பகூதச்சந்நியாசமுமென—இரண்டுதிறங்களுண்டாம்- இரண்டுவிதங்களுளவாம்— தாவிநடந்திடத்திடமிலாதவர்க்கு- எட்டிநடக்கபலமில்லாதவர்களுக்கு—குடீசகமும்- குடீசசந்நியாசமும்— சகங்களெங்குமேவி- உலகிலெவ்விடத்துமடைந்து—நடந்திடத்திட முள்ளவர்க்கு- நடக்கப்பலமுள்ளவர்களுக்கு—பகூதகமுமென- பகூதசந்நியாசமுமுரியதென்று—மேலோர்- சான்றோர்கள்—விதித்தார்- நியமித்தார்கள—எ-று.

[இ-ம்] குடீசகபகூதகசந்நியாசிகளி னிலக்கணங்கூறியதாம். (௱௬௰)

(அ-கை) தீவிரதரவிராக சந்நியாசங்களிரண்டின்பயன்கூறல்.

இருவகைதீவிரதரத்துமம்சனென்றும்பரமாம்சனென்றுஞ்சொல்வர் *
வருமம்சனுக்குமுத்திசத்தியலோகத்தன்றிவாராதென்பார் ... ... ..*
பரமாம்சனுக்குமுத்தியிவ்வுலகின்ஞானத்தாற்பலிக்குமென்பார் ... ...*
திரமருவும்பரமாம்சன்றானுமிருவகையாகுஞ்செப்பக்கேளாய்...... ...*

(இ-ள்) தீவிரதரத்தும்- தீவிரதரசந்நியாசக்கும்— அம்சனென்றும் அம்சசந்நியாசியெனவும்— பரமாம்சனென்றும்- பரமாம்சசந்நியாசியெனவும்—இருவகை- இரண்டுவிதமாக—சொல்வார் - சாதுக்களுரைப்பார்கள்—வருமம்சனுக்கு- வராநின்றவம்சசந்நியாசிக்கு—முத்தி - மோட்சமானது—சத்தியலோகத்தன்றி- அயனுலகத்திற்கிடைப்பதன்றி—வாராதென்பார்- இம்மையிற்கிடையாதென்றுசொல்லுவார்கள்— பரமாம்சனுக்கு- பரமாம்சசந்நியாசிக்கு—முத்தி- மோட்சமானது—இவ்வுலகின்-இவ்வுலகத்தின்கண்—ஞானத்தாற்பலிக்குமென்பார்- ஞானத்தினாற்கிடைக்குமென்றுசொல்லுவார்கள்—திரமருவும்- ஸ்திரம்பொருந்திய—பரமாம்

ச்ன்மூனும்- பரமாம்சசந்நியாசியும்—இருவகையாகும் - இரண்டுவிதமாம்—செப்பக்கேளாய்- இதைச்சொல்லுதுங்கேளாய்—எ-று.

[இ-ம்] அம்சப்பரமாம்ச சந்நியாசிகளின் பயன்கூறின்தாம். (௱௬௧)

(அ-கை) பரமாம்சசந்நியாசிக ளப்பியாசியுமனுபவியுமென விருவகையாவரொனல்.

சிஞ்ஞாசுஞானவானென்றிரண்டுபேர்களவரிற்சிஞ்ஞாசு ... ...*
மெஞ்ஞானபூமியின்மூன்மூன்றுபூமியுணடக்கும்விவேகியானேஞ்,
சுஞ்ஞானவானென்போன்சீவன்முத்தியடைந்திருக்குந்தூயமேலோ
னஞ்ஞானமகலுமந்தச்சிஞ்ஞாசுமிருவகையாமதுவுங்கேளாய் ... *

(இ-ள்) சிஞ்ஞாசு- சிஞ்ஞாசெனவும்— சுஞானவானென்று - சுஞ்ஞானவானெனவும்—இரண்டுபேர்கள்- இருவர்களாம்—அவரில்- அவ்விருவர்களில்—சிஞ்ஞாசு- சிஞ்ஞாசென்பவர்—மெய்ஞ்ஞானபூமியின்- ஞானபூமியேழில்—மூன்மூன்றுபூமியுள்- முந்தினமூன்றுபூமிகளில்—நடக்கும்- செல்லுகின்ற—விவேகியானேன்- விவேகமுள்ளவனுவன்— சுஞ்ஞானவானென்போன் - சுஞ்ஞானவானென்பவன்—சீவன்முத்தியடைந்திருக்கும்- சீவன்முத்தியைப்பெற்றிருக்கின்ற— தூயமேலோன்-பரிசுத்தமானமகானும்—அஞ்ஞானமகலும்- அறிவின்மைநீங்கும்—அந்தச்சிஞ்ஞாசுவகையாம்- அச்சிஞ்ஞாசுமிரண்டுவிதமாம்—அதுவுங்கேளாய் - அதையுங்கேளாய்—எ-று,

[இ-ம்] பரமாம்சத்தின்கூறுனசிஞ்சாசுகஞ்ஞா சென்னுமிரண்டு சந்நியாசிகளி னிலக்கணங்கூறியதாம். (௱௬௨)

(அ-கை) சிஞ்ஞாசென்பவனில்லறத்திலேனுந் துறவறத்திலேனு மிருந்துமுத்தியை யடைவனெனல,

பந்தமனைதுறந்துசிலரதிதிகளாயிருந்தடைவர்பரமஞான ... ...*
மந்தணர்மன்னவர்வணிகர்சூத்திரராயிருந்துசிலரடைவர்ஞான ...*
மிந்தவகைசாத்திரத்துமுலகத்துநடப்பதுங்கண்டிருந்துமைந்தா *
சிந்தனையின்மயக்கமென்னசுருதியுத்தியனுபவத்தாற்றெளிந்திடாயே

(இ-ள்) சிலர்-சிலர்கள்—பந்தமனைதுறந்து - பந்தமானவில்வாழ்க்கையும்விட்டு—அதிதிகளாயிருந்து- துறவிகளாகவிருந்து—பரமஞானம் - பிரமஞானத்தை—அடைவர்-பெறுவார்கள்—சிலர்- சிளர்கள்—அந்தணர்- பிராமணராகவும்—மன்னவர்- க்ஷத்திரியராகவும்—வணிகர்- வசியராகவும் சூத்திரராயிருந்து- சூத்திரராகவுமிருந்து—ஞானம்- பிரமஞானத்தை—அடைவர்- அடைவார்கள்—இந்தவகை- இவ்வகையை—சாத்திரத்தும்- ஆகமப்பிரமாணத்திலும்—உலகத்துநடப்பதும்- உலகத்தினடப்பதாகியபிரத்தியட்சப்பிரமாணத்திலும்—கண்டிருந்தும்- பார்த்திருந்தும்—மைந்தா-மகனே—சிந்தனையின்மயக்கமென்ன- மனதிற்சந்தேகமேன்— சுருதியுத்தியனுபவத்தால்- சுருதியுத்தியனுபவமென்னு மூன்றிலும்—தெளிந்திடாய்- தெளிவாய்

[வி-ம்] முத்தியையடைதற்கு விராசத்தால்வருஞ் சாந்தியேகாரணம ன்றி யில்லறந் துறவறமென்னு மிரண்டுமல்ல வெனக்கூறியதாம்.

(அ-கை) மேற்கூறுவோமென்றவாறே முற்கூறிய சர்வார்த்தங்களுமடங்கி யவேதங்களின் முடிவானவித்தியானந்தமாகக் கூறுவான்றொடங்கி யிச் செய்யுளிற்பிரமமே கூடஸ்தனெனக்கூறுகின்றார்.

பிறந்ததுண்டானலன்றேபிறகுசாவதுதானுண்டாம்
பிறந்ததேயில்லையென்னும்பிரமமாவதுவுநானே
பிறந்ததுநானன்றாகிற்பிரமமென்றந்தநானே
பிறந்ததுமிறந்ததற்றபிரமமானானேநானே.

(இ-ள்) பிறந்ததுண்டானலன்றே-சநித்ததுளதாயினன்றே—பிறகுசாவதுதானுண்டாம்- பின்மரித்தலுமுளதாம்—பிறந்ததேயில்லையென்னும்- சநித்ததேயின்றென்னும்—பிரமமாவதுவும்-பிரமமென்பதுவும—நானே-நானேயாம்—பிறந்தது நானன்றாகில்-சநித்தது நானல்லனாயின்—பிரமமென்றந்தநானே- பிரமமென்றுசொல்லப்பட்டவந்நானே—பிறந்ததுமிறந்ததற்ற- உற்பத்தியும்லயமுமில்லாத—பிரமமானானேநானே- பிரமமாகிய நானேநான்—எ-று.

[ப-ம்] சாமவேதமகாவாக்கியப்படி யந்நியானுமியனான பிரமமானானே யென்றார் பிரமமென்பதது வென்னுமானந்தமு நானென்பது நீயென்னு மவித்தையும் ஆமென்பதானு யென்னுமைக்கியமுமுமெனக்கொள்க

(அ-கை) கூடஸ்தனேபிரமமெனக்கூறுகின்றார்.

நானென்றபிரமமானநானேநானறியேனென்று ... *
னானென்பதேதுபின்னைநம்முடபுத்தியென்னிற் ...*
றானதுமயக்கந்தன்னிற்சாகுமேசாவாதாகி ... ...*
ஞனெனநிறைந்திருந்தஞானமாநானேநானே ... *

(இ-ள்) நானென்றபிரமமான-யானென்றுசொல்லும்பிரமமாகிய—நானே யானே—நானறியேனென்றால்-யான்காண்கிலேனென்னின்—நானென்ப தேது- யானென்பதியாது—பின்னை- பின்பு—நம்முடபுத்தியென்னில்- நமதுபுத்தியென்றுசொல்லில்—அது- அப்புத்தியும்—மயக்கந்தன்னிற்சாகுமே- சுழுத்திமயக்கத்திலிறக்குமே—சாவாதாகில் - அங்ஙனமரியாதிருக்குமாயின்—நானேநானே- யானே—நானெனனிறைந்திருந்த-நானென் றுபூரணமாகவிளங்கிய—ஞானமாம்-மெய்ஞ்ஞானமாம்—எ-று.

[வி-ம்] இருக்குவேதமகாவாக்கியப்படி ஞானமேபிரமமென்பார்நானெ ன்றபிரமமென்றார் நானென்பது ஞானமாகிய வித்தையெனவும்பிரமமெ ன்ப தானந்தமெனவுங்கொள்க. (௱௬)

(அ-கை) வித்தியானந்தத்தினொருமைகூறல்.

நிறைந்தவாறெந்தவாறுநில்லெதெரிந்திலனென்றாயே
லயிந்ததாஞ்சுழுத்திதன்னிலானந்தமதுவேயாகும்...

குறைந்ததுக்கானந்தந்தான்குவலயந்தனனிலிலை
நிறைந்ததேயிந்தவான்மாநிதானமிவ்வயிவுதானே

(இ-ள்) நிறைந்தவாறு- யான்பரிபூரணமானவிதம்- -எந்தவாறு- எவ்வண்ணம்—நிலைதெரிந்திலன்- நிச்சயந்தெரிகிலன்—என்றயே- என்பாயானால்- —அறிந்ததானசுழுத்திதன்னில- நனவிறசுழுத்தியின்கணுள்ள —ஆனந்தம்- நிரதிசயானந்தமானது —அதுவேயாகும் அப்பூரணமேயாம் —குறைந்ததுக்கானந்தந்தான - ஏகதேசமானதுக்கதுக்கங்கள் —குவலயந்தன்னிலிலை உலகத்தினகணிலலையாம் —இந்தவான்மா இவ்வான்மாவே நிறைந்தது பூரணமானது— இவ்வயிவுதான்- இச்சைதன்னியமே—நிதானம்- நிதானமாம்- —என்.

[ப-ம்] யசுர்வேதமகாவாக்கியப்படி அகம்பிரமாஸ்மியென்பார் நிறைந்ததேயிந்தவான்மா நிதானம் இவ்வயிவுதானே யெனக்கூறினார்.

நிறைந்ததென்பது பிரமமென்னுமானந்தமும் ஆத்மாவென்பதகமென்றும் விருத்தியிருகாலம்பவரியென்பதஸ்மியென்றும் ஐக்கியமுமாமெனக்கொள்க. (௩௩௭)

(அ-கை) விந்தியானந்தவொருமையானசுவானுபூதியேதானென்றல்.

மனத்தின்றுமெல்லணணிப்பதானேனப்பச் சிவ்வுலசமாகு *
நினைப்பற்றவென்னச்சோகநிப்பதமம் பிவிலனன்றே *
வனத்தனைத்துமட்டுத்தாரூமந்தமமறிவிதாமென *
றெனைத்தகழிவதரிசுமிட்டாலோமாயநிறைந்தோரானே *

(இ-ள்) மனத்தின்றுமெல்லணணி மனத்தானவாதபதிலுலை பந்தகேவலாமாகும இவ்வுலகமுந்த நாம நினைக்கூல சுருநாட்டதது— அநேகமெல நிப நந்த அனைத்துலகமறப்பது அவ்வயிவினன்றே அப்ஐ னருதில்லன்றே அனைத்தையுமாட்டூந்து யானையுமுதாமழி அப்பூரப மே ம—அ நதமறது புமுவிரார —அறிவிநாமென அறிவைப்பவாமெனவ எனை எனனை தன்விசாரிநமிட்டால தனிலைபயாவசாரிவாசெயதால நா னே யானே —ஏகமாயநிறைந்தோன்- பூரணமாகநிறைந்தவனும் என்று.

[ப-ம்] அதாவணவேதமகாவாக்கியப்படி அயமாத்மா பிரமமென்பார ஏகமாய்நிறைந்தோனேயென்றார் அறமவென்பது அறமென்படிரிந்துநின்றது ஏகமென்பது பிரமமென்று நித்தியானந்தமுநிறைந்ததென்பதா தமாவென்னும விதத்தையும நானெனப் நிவவிருத்தியானந்தமு னைசுகியத் திலுதித்தசுவானுபூதியாகியவுமென்னுந் தானுமாமெனக்கொள்க

[இ ச க-ம்] நான்குவேதங்களின் முடிவாயுள்ள மகாவாக்கியார்த்தமெ ன்னியமான விருத்தியானந்தவைக்கியஸ்வரூபமான நிரதிசயானந்த சாட்சா த்காரமே தானெனக்கூறியதாம். (௩௩௮)

(அ-கை) முறைகூறியகற்பிதங்களனைத்தையும் விருத்தியுட்டகீ யவவி ருத்தியையநீக்கிற சுவானுபவமுத்தயமாமெனக்கூறல்,

அந்தவாறிருந்துகொண்டேயானந்தமனுபவிக்க... *
வந்தவாறிருந்துகொண்டாலென்கிறதுதெரியுமென்னி *
லிந்தமூன்றவத்தைதமறவெழுந்திடுமியிருத்திகேல் ... *
லந்தவாறிருந்துநீயுமானந்தமடையலாமே ... *

(இ-ள்) அந்தவாறிருந்துகொண்டு அவ்வாறுபூரணமாக விருந்துகொண்டே—ஆனந்தமனுபவிக்க பூரணானந்தத்தையனுபவிக்க—வந்தவாறிருந்துகொண்டால் எவ்வண்ணமிருந்தால்—என்கிறதுதெரியுமென்னில்—என்கிறவனுபவங்காசனமாமென்பாயாகில்—இந்தமூன்றவத்தைகளையும்மறந்து—இம்மூன்றவத்தைகளும்—எழுந்திடுமியிருக்கிறீரேல் உதிக்கின்ற விருத்திகளைத்தள்ளில் அந்தவாறிருந்து அவ்வாறுபரிபூரணஞானமாயிருந்து நீயுமானந்தமடையலாம் நிரதிசயானந்தத்தையடையலாம்—எ-று.

[இ-ம்] வெளிப்படை.

(அ-கை) விருத்திகளொழிக்கு மூவகையுபாயங்கூறுவான்றொடங்கி யிச்செய்யுளி லநுபவவுபாயங்கூறுகின்றார்.

வாதனைவசத்தினாலேவருகின்றவிருத்தியெல்லா... *
மேதினுமடக்கலாகுமென்றுநான்விசாரஞ்செய்யின் .. *
போதமாமிராசனுக்குப்பந்தியைப்புலன்களெல்லாந் *
தாதராயிருக்கப்பெற்றாற்சகலமுமடங்குந்தானே ... *

(இ-ள்) வாதனைவசத்தினாலே வாசனைவசத்தினால—வருகின்றவிருத்தியெல்லாம்—வருகின்றவிருத்திகளனைத்தையும—எதிலேயடக்கலாமென்று—யாதிலேயொடுக்கலாமென்று விசாரஞ்செய்யின் விசாரித்தால்—போதமாமிராசனுக்கு—ஞானமானவரசனுக்கு—பந்தியைப்புலன்களெல்லாம் பஞ்சேந்திரியவிடயங்களனைத்துமே—தாதராயிருக்கப்பெற்றால் தாசராயிருக்கப்பெறின்—சகலமுமடங்கும் அனைத்துமொடுங்கும—எ-று.

[இ-ம்] தானேயிக்கினவானந்தபோதமே ஸ்புரணமாகியெப்பாலிலும் விளங்குவயிருக்கின்றதுமென்பதாம். (௩௪௯)

(அ-கை) ஏனையவப்பியாசவுபாயங்களிரண்டையுங்கூறல்.

விருத்திகடாமின்னுமேவிநோதமாமயோகத்தாலே... ,... *
துருத்திபோலூதுமூச்சைச்சுகமுட்டைகத்தின்றடும ... ... *
கருத்தத்தபிலையென்னிற்காரணசரீரமாகிய... ... ... *
பெருத்ததேகாவித்தைதன்னைப்பிடிங்கிடிலடங்குந்தானே.. *

(இ-ள்) விருத்திகடாமும்—விருத்திகளானவை—இன்னும்—மேலும்—விநோதமாம விநோதமான—யோகத்தால்—யோகத்தினாலே—துருத்திபோலூதுமூச்சை—துருத்தியைப்போலவூதாகின்றசுவாசத்தை—சுகமுட்டைத்தின் இன்பத்தோடுமொடுக்கின்—நிறைக்கும்— அடங்கும்—கருத்ததற்கிலையென்னில அதற்குமனமின்றாயின்—காரணசரீரமாகிப்பெருத்த—காரணதேகமாகத்தடித்த—ஆவித்தைதன்னை—ஒப்பற்றவவித்தையை—பிடுங்கில்—பெயர்க்கின்—அடங்கும் ஒடுங்கும்—எ-று.

[இ-ம்] பிராணபந்தனவுபாயத்தைக் - கெவுணமாகக்கூறியவித்தை நீக்கவுபாயத்தை முக்கியமாகக்கூறினரென்பதாம், (௱எ௰)

(அ-கை) அவித்தையைக்களையுமுபாயமியாதென்வினாதலுக் குத்தரங் கூறல்.

காரணசரீரந்தன்னைக்களைவதெவ்வாறென்றேறி... ...*
லாரணம்பொய்சொல்லாதேயதன்பொருளகத்திலுன்னிப்...*
பூரணமாகுமென்மேற்புவனங்கடோற்றுமென்று... ...*
தாரணைவந்ததாகிற்றரித்திடும்வித்தையெங்கே... ...*

(இ-ள்) காரணசரீரந்தன்னை- காரணதேகத்தை—களைவது-கெடுப்பது எவ்வாறென்றேகில- எவ்விதமென்றுகேட்கில —ஆரணம- வேதமானது பொய்சொலலாதே- நிசசயத்தைசசொல்லுமாதலால—அதன்பொருள்-அதனர்த்தமாவாகிய அர்த்தத்தை—அகத்திலுன்னி- உளத்திற்சிந்தித்து—பூரணமாகுமென்மேல் - பரிபூரணமாகியவென்னிடத்தில்—புவனங்கடோற்றுமென்று- ஆரோபமாகசசகங்கடோற்றுமெனறு—தாரணைவந்ததாகில் உறுதிவந்ததானால்—அவித்தை அவித்தையானது—எங்கேதரித்திடும்-எவ்விடத்திலிருக்கும—எ-று.

[இ-ம்] வேதநிசசயப்படி குருவாக்கியத்தாற் சர்வம்பிரமமயமென்னு மனுபவமுண்டாயின வித்தைநசிக்குமெனபதாம். (௱எக)

(அ-கை) சர்வமபிரமமயமென்னு ஞானமுதித்தற் கனுபவங்கூறல்.

அப்படியிருக்கசித்தமலைதலால்விவகாரத்தி ... *
லெப்படிகூடுமென்னிலென்னைவிட்டொன்றுமில்லை .. *
இப்படிகண்டவெல்லாமென்மயமென்கருப்போற்... *
கற்பிதமென்றுதானேகாண்கின்றசித்துநானே ... *

(இ-ள்) விவகாரத்தில- விவகாரங்களில்—சித்தம் - மனமானது—அலைதலால்- சுழல்வதனால்—அப்படியிருக்க- அங்ஙனநிற்க—எப்படிகூடுமென்னில- எங்ஙனங்கூடுமெனறால்—என்னைவிட்டொன்றுமில்லை - என்னைத்தவிரவேறொருவஸ்துவுமில்லை—இப்படிகண்டவெல்லாம- இவ்விதமாகக்கண்டதிரிசியங்களனைத்தும—என்கருப்போல் - எனதுசொப்பனத்தைப்போல—கற்பிதமென்று- பொய்யென்று—காண்கின்ற-பார்க்கின்ற—என்மயம்- எனதுருவமான—சித்துநானே- சைதன்னியமேநான்—எ-று.

[இ-ம்] கற்பிதமாகககாணப்பட்ட திரிசியங்களனைத்துந்தனது சிற்பிரகாசமாக விளங்குகின்ற தென்னுமனுபவ திஷ்டியால் யாவுந்தன்மயமாகவிளங்குமென்பதாம். (௱எ௨

(அ-கை) இசசித்தே யானந்தவடிவமாமெனல்.

சித்துநானிறைந்தோனென்றிட்டமறவாதிருந்தா .. ... *
லெத்தனையெண்ணினாலுமேதுசெய்தாலுமென்ன ... ...*

நித்திரையுணர்ந்துபின்புநிற்கின்றகனுவைப்போல் ... ... *
அத்தனையும்பொய்தானேயானந்தவடிவுநானே... ... ...*

(இ-ள்) நான்- யான்—சித்து- சைதன்னியமாக—நிறைந்தோனென்று- பூரணமானவனென்னும்—இடமறவாதிருந்தால்- இடப்பிரஞ்ஞையோடுகூடியிருந்தால்—எத்தனையெண்ணினாலும்-எவ்வளவுசங்கற்பித்தாலும்—ஏதுசெய்தாலும்- எக்கிரியைசெய்தாலும்—என்ன- அதனாற்குற்றமென்ன நித்திரையுணர்ந்தபின்பு-நித்திரைதெளிந்தபின்பு—நிற்கின்றகனுவைப்போல்- நிற்குஞ்சொர்ப்பனம்போல்—அத்தனையும்பொய்தான்- அவ்வளவுமித்தையாம்—நானே- யானே—ஆனந்தவடிவு-ஆனந்தஸ்வரூபமாம்-எ-று,

[இ-ம்] தானேசித்தென்னு மனுபவமுதிக்கில்யாவுமித்தையாய்த்தானானந்தவடிவனுவனென்பதாம், (௩௭௩)

(அ-கை) இவ்வனுபவ முதிப்பதற்கேதுவானவுறுதிகூறல்,

நானெனவுடலைத்தானேநம்பினேனநேகசென்ம... ... ...*
மீனராய்ப்பெரியோராகியிருந்தவையெலாமிப்போது... .. *
கானலில்வெள்ளம்போலக்கண்டுசற்குருவினாலே... ... *
நானெனவென்னைத்தானேநம்பியீடேறினேனே ... ... *

(இ-ள்) அநேகசென்மம்- அநந்தசநநங்களில்—உடலைத்தான்- தேகத்தையே—நானெனநம்பினேன்- யானென்றுநம்பினேன்—ஈனராய் - இழிந்தவராகவும்—பெரியோராகி- உயர்ந்தவராகவும்—இருந்தவையெலாம்- இருந்தவைகளனைத்தையும்—இப்போது- இச்சமயத்தில்—கானலில்வெள்ளம்போல்- கானற்சலத்தைப்போல—சற்குருவினால்- ஆசிரியருபதேசத்தினால்—கண்டு- பார்த்து—என்னைத்தானே - என்துபிரமவடிவத்தையே நானெனநம்பி- யானென்றுநம்பி—ஈடேறினேன்- ஈடேறினேன்—எ-று.

[இ-ம்] குருகிருபையினாற் றேகநானென்னு நம்பிக்கையைவிடுத்துச் சித்தேநானென்னு நம்பிக்கையுண்டானாற்சின்மாத்திரமானமுத்தியைப்பெறுவனென்பதாம், (௩௭௪)

(அ-கை) குருகிருபையை வியந்துமகிழ்தல்.

என்னபுண்ணியமோசெய்தேனேதுபாக்கியமோகாணேன் ... *
னன்னிலந்தனிலெழுந்தநாரணன்கிருபையாலே... ... ...*
தன்னியனானேனுத்தரீயத்தைவீசுகின்ற ... ... ... *
றன்னியனின்னுநானேதாண்டவமாடுகின்றேன்... ... ...*

(இ-ள்) என்னபுண்ணியமோ செய்தேன்-என்னதருமஞ் செய்தேனோ—ஏதுபாக்கியமோ- யாதுபாக்கியம்பெற்றேனோ—காணேன்- தெரிகிலேன்—நன்னிலந்தனில்- நன்னிலமென்னுநகரத்தில்—எழுந்த- மானிடராகவவதரித்த—நாரணன்-நாராயணனென்னுமெனதாசிரியரது--கிருபையால்- கருணையினால்—தன்னியனானேன்- கிருதார்த்தனானேன்—நான் - யான்—உத்தரீயத்தைவீசுகின்றேன்- அங்கவஸ்திரத்தையாகாயத்தி லெறிந்துவி

ளையாடுகின்றேன்—தன்னியனேனே- கிருதார்த்தனானேனே இன்னும மேலும—தாண்டவமாடுகின்றேன- நடனஞ்செய்கின்றேன—என-. ()

(அ-கை) தன்னனுபூதிவிளக்கத்துக்குத்தக்க நாமந்தனக்குத்தரித்துக் மீ தா பித்ரவைப்புகழ்தல்.

தத்துவஞானம்வந்தசந்தோஷ வதிசயத்தா ..
னித்தமாடுவன்காணென்றதிலே முன்னமேயறிந்த
சத்தியமதனாலன்றே தாண்டவாவெனறுரைத்தா
ரத்தனைமகிமையுள்ளோரன்னையுமபிதாவுந்தாமே

(இ-ள்) தத்துவஞானமவந்த - அந்த பிரமஞானமுதித்த —சந்தோஷவதிசயத்தால- பேருவகையானவற்புதத்தினால —நித்தமாடுவனகாணென்ற என பபோதுமானந்தநடனஞ்செயவனென்னும- நிலைமையை முன்னமேயறிந்தசத்திய - ததால- முனபேதெரிந்தவுண்மையினலை — அன்றோ அலவா— தாணடவாவெனறுரைததார- தாணடவராயனென்று நாமந்தரித்தருளப்பட்டார—அன்னையுமபிதாவு மாதாபிதாக்கள— அத்தனைமகிமையுள்ளோர அவவளவுமகிமையையுள்ளவாகள —என்று.

(அ-கை) நிரதிசயானந்தவனுபூதியினுறைாமைகூறல
வந்தவோரிவவானந்தமதிபூரணத்தாரோடேசொலவேன ... *
சிந்தையிலெழுந்துபொங்கிச்சகமெலாநிறைந்து பொங்கி .. *
யந்தமிலலாத நாயிறறபாடிருருவேதாந்த ... *
மந்திரமந்தேசிகமலரடி வணங்கினேனே . .. *

(இ-ள்) வந்த அம்விதம்ததவோர ஒப்பறற—இவவானந்தம- இந்நிரதிசயானந்தத்திலும—மதிபூரணத்தை யடைந்ததனை அரோடேசொலவேன- அருடனுறைபபேன- சிந்தையிலெழுந்து-உளத்திலுதித்து —பொங்கி- மேலிட்டு—சகமெலாநிறைந்துதேங்கி உலகங்களனைத்தும் பூரணமாய்—அந்தமில்லாத தாயிறறு முடிவிலலாதது யினது அப்படி அவவணணம-வேதாந்தமந்திரம வேதமுடிவானமாவாக்கியார்த்தரகசியத்தை அருளுமீசன அருளாநின்றவிறைவனுகிய—குரு தேசிகரது—மலரடி வணங்கினேன- கமலமலாபோனறதிருவடிகளைத்தொழுதேன—என-று

[இ-கூ-கம] சிந்தனைதந்துயிதத்வானந்தமதனைக் கணக்கச்சகசிவபரமானவனைத்துந் தானாகிய சிதானந்தவடிவமாகவே விளங்குகின்றதெனவித தியானந்தத்தைமுடித்ததாம். (௱௭௭)

(அ-கை) இந்நூலவிளையும்பயனைக்கூறல.
வித்தியானந்தமிந்தவிதமெனவிளம்பினேமே ..
பத்தியாயிந்தநூலைபபாாததனுபவித்தபோக
னித்தியதருமங்கிடடையிலேதனையடைந்துசிவன .. .. *
முத்தியையடைந்திருந்தமுனீஸ்வரராவாரே .. *

(இ-ள்) வித்தியானந்தம்- ஞானானந்தமானது — இந்தவிதமென இ

வகையாமென்று—விளம்பினேம்- சொல்லினேம்—பத்தியாய்-அன்பாக இந்தநூலைப்பார்த்து-இந்ஞானசாஸ்திரார்த்தத்தையுணர்ந்து—அனுபவித்தபேர்கள்-அப்பொருளையறிந்தபடி யனுபவமானபேர்கள்—நித்தியநிஷ்டை- நித்தியமானஞானநிஷ்டையின்—நிலைதனையறிந்து - நிலைமையைத்தெரிந்து—சீவன்முத்தியையடைந்திருந்த - சீவன்முத்திப்பதத்தைப்பெற்றிருந்த—முனீஸ்வரராகுவார்- முனிசிரேஷ்டராவார்கள்—எ-று.

[இ-ம்] வெளிப்படை (௱எ௮)

(அ-கை) குருவாக்கியப்படி இந்நூற் சம்பூரணமாயிற்றெனல்

ஆரணப்பொருளாம்வித்தையானந்தம்விளங்கவேதும் ... *
காரணங்குறைவில்லாமற்கைவல்யநவநீதத்தைப்... ... ...*
பூரணமாக்கவேண்டிப்பூர்வமாநன்னிலத்தி ... ... *
நாரணகுருநமக்குநவின்றனர்கனவில்வந்தே... *

(இ-ள்) ஆரணப்பொருளாம்- வேதமுடிவினுள்ளமரா வாக்கியார்த்தமான வித்தையானந்தம்விளங்க-ஞானானந்தம்விளங்கும்பொருட்டு—கைவல்ய நவநீதத்தை- கைவல்யநவநீதமென்னுஞானசாஸ்திரத்தை—ஏதும்- எவ்வளவும்—காரணம்- எடுத்துக்காட்டுங்காரணங்களில்—குறைவில்லாமல் குறைவுபடாமல்—பூரணமாக்கவேண்டி- நிறைவாகச்செய்யவிரும்பி—பூர்வமாநன்னிலத்தில்- பழமையாகிறநன்னிலமென்னுந்தலத்தின் மானிடவடிவமாகவெழுந்தருளிய—நாரணகுரு - நாராயணதேசிகரானவர்—நமக்கு- எமக்கு—கனவில்வந்து- சொற்பனத்திற்றோன்றி— நவின்றனர்- அருளிச்செய்தார்—எ-று.

[இ-ம்] வெளிப்படை, (௱எ௯)

(அ-கை) இந்நூலாசிரியர் சிறப்புக்கூறல்,

அண்ணறன்னருளினாலேயகம்புறமின்றியொன்றாய் ... ...*
யெண்ணமிலிலக்கியார்த்தத்தின்பொருளதுநானென்ன... *
நண்ணினசரீரமாதிநாதத்தினுபாதியென்றே ... ... *
கண்ணதாயனைத்துங்காணக்காட்டினன்றாண்டவேசன்... ...*

(இ-ள்) அண்ணறன்னருளினால்- தேசிகரதுகிருபையினால்— அகம்புறமின்றி- உள்வெளியென்பதின்றி—ஒன்றாய்-ஏகமாய்—எண்ணமில்- எண்ணுதற்கரிய—இலக்கியார்த்தத்தின்பொருள்-இலக்கியார்த்தத்தின்ரூபொருளாகிய—அதுநானென்ன-பிரமமாகியவதுவே கூடஸ்தனாகியநானென்னும்படி—நண்ணினசரீரமாதி- பொருந்தியதேகமுதலியவற்றை—நாதத்தினுபாதியென்று- மாயாவுபாதியென்றுகளைந்து—அனைத்தும் - சகலத்தையும்—கண்ணதாய்-ஞானாகாரமாய்—காண- தரிசிக்கும்படி— தாண்டவேசன்- தாண்டவேசனென்னுமிந்நூலாசிரியர்—காட்டினன்- தரிசிப்பித்தான் எ-று.

[இ-ம்] வெளிப்படை. (௱அ௰)

(அ-கை) இம்மரபினலனுபவமுதிக்குமவர்களேசுவானுபவிக ளென்னல்.

ஆன்றபதமாமூன்றறகுமதுநீயானுயெனும்பொருளிற ... ...*
சான்றதுரியாதீதமெனிந்தடையறறிலங்கொணசைதன்னிய ... ...*
மூன்றியுணர்ந்தோர்விகறபமயககொழிதநுத்தடையுமூட றுத்துத் *
தோன்றித்தானேதாஞுவாதுலங்குமவாகயேசுவானுபவம ... ...*

(இ-ள்) ஆன்ற-மாட்சிமையான—பதமாமூன்றறகும- மகாவாக்கியத்தின் றதமெனாமசியென்னு மூன்றுபதததிற தும—அது- அதுவெனனுமபிரமமும்—நீ-நீயென்னுங்கூடஸ்தனும—ஆனுய்- இவவிரண்டினைகதியபுமம—எனுமபொருளின்- என்கின்றவாக்கததில— சான்ற- நிறைந்த—துரியாதீதமெனும்- துரியாதீதமெனநின்ற—தடையறறிலங்கு - மறைப்பின்றிய பரோக்ஷமாகவிளங்குகின்ற—ஒணசைதன்னியம்- சுயம்பிரகாசமுள்ள மெய்யுணர்வை—உணர்ந்தியுணர்ந்தோர்- ஸ்திரமாகத்தெரிந்தவர்கள்—விகறபமயககொழித்து- பேதமெனுமபிரமையைநீக்கி—தடையுமூடறுத்து- அறிவின்மையையுமகெடுத்து—தோன்றி- சதோதயமாய—தானேதானுவர்- தன்மயமாவர்—அவர்கே-அவ்வயினர்க்கே—சுவானுபவம - சுவானுபவமானது—துலங்கும-பிரகாசிக்கும—எ-று.

[இ ம] வெளிப்படை. (௱அக)

(அ-கை) இந்நூலாசிரியர் தன்னுசிரியனைப்புகழ்தல்

என்னுமாவாக்கியநான்குமிசைசருமவித பானந்தமிது ... ...*
சொன்னநாராயணன்பாதந்தொழுதுதுதித்தோர்துகளறறே *
ரின்னமாறுகக்குருவாசஞ்சந்தேகந்நீங்கிடபதத்தே... ...*
துன்னிநிறைந்துநின்றோர்களேயமுத்தராகுவரோ ... ... ...*

(இ-ள்) என்னும-சுராவமென்கின்ற—மாவாக்கியநான்கும்-நான்குவேதத்தின்முடிவான நான்குமகாவாக்கியங்களும—இசைக்கும -சொல்லும—விதயானந்தமிது- ஞானனந்தமிதுவாம- -சொன்ன-இதனையருளிய—நாராயணன்பாதம்- நாராயணனெனனும ஆசிரியருபயபாதங்களை — தொழுந்-வணங்கி—துதித்தோர்-துதிசெயதவர்கள—துகளறறோர்- களங்கமறறவராவர்—இன்ன-இத்தன்மையான—மாறுகனை - சிட்டுருவன்—குருவால்- ஆசிரியரால—சந்தேகந்நீங்கிட- ஐயநீங்கிய- - பதத்தேதுன்னி-இப்பதத்தையடைந்து—நிறைந்துநின்றோர்கள- பூரணமாயிருந்தவர்கள்—தூயமுத்தராகுவர்- பரிசுத்தமானசீவன்முத்தராவாாகள—எ-று.

[இ-ம்] நான்குவேதங்களின் முடிவிலுள்ளநான்குமகாவாக்கியார்த்தமுமொன்றான விதயானந்தமே யனுபவமெனவுமஃதை யடைந்தவர்களே சீவன்முத்தரெனவுங்கூறினதாம், (௱அ௨

(அ-கை) இந்நூற்செய்தவிதங்கூறல்.

தத்துவவிளக்கத்தாலுஞ்சந்தேகந்தெளிதலாலு ... .. *
மொத்திருள்விடாதமாயா வுள்ளிருளிரியவோங்குஞ் ... .. *
சித்தாமொளிவிளங்கச்செய்துபின்விருத்திபேதப ... ... *
புத்தியால்வருமையத்தைப் புரையறத்தெளிவித்தாண்டா ... *

-ள்) தத்துவவிளக்கத்தாலும்- தத்துவவிளக்கமென்னும்படலத்தினு லும்—சந்தேகந்தெளிதலாலும - சந்தேகந்தெளிதலென்னும்படலத்தினு லும—ஒத்து- பொருந்தச்செய்து—இருள்விடாத - அந்தகாரநீங்காத— மாயா-மாயையென்னும்—உள்ளிருளிரிய-அகத்திருட்கெட— ஓங்குஞ்சி த்தாமொளி- உயராநின்றஞானப்பிரகாசத்தை—விளங்கச்செய்து-, நிக ழ்ச்சிசெய்து—பின்-பின்பு—விருத்திபேதப்புத்தியால்— விருத்திவிகற்ப ஞானவறிவினால்—வருமையத்தை- வாராநின்றசந்தேகத்தை— புரையற தெளிவித்து-குற்றமறத்தெளிவித்து—ஆண்டான்-இரட்சித்தாரிந்நூலா சிரியர்—எ-று.

(அ-கை) இந்நூலாசிரியரைத்துதித்தல்.

ஆண்டதேசிகனுமையாரணனனந்தன்பாதம் ... *
பூண்டுமூவாசோபத்தாற்பொய்ம்மயக்காய்வந்ததனை ... ... *
மாண்டநல்லபாவாதத்தாலென்மாய்த்தருளேகத்தென்றுங் ... *
காண்டிடவைத்தளித்தகாரணாபோற்றிபோற்றி ... ... ... *

(இ-ள்) ஆண்ட- தடுத்தாண்ட—தேசிகனுமையன்-குருசாமியாகிய— நான்- நாராயணனென்றும்—அனந்தன்- முடிவற்றவனது— பாதம் பூண்டு- திருவடியைச்சிரசிற்றரித்து—மூவாசோபத்தால் - ஈஷேஷ்வர சந்தெனனுமூன்றுவிதசாப்பனையால்—பொய்ம்மயக்காய்வந்ததனை- இல் பயக்கமாயுண்டானதை—மாண்ட-மாட்சிமையான— நல்லபாவாதத் நன்மையானவபாவாதயுத்தியினால்—மாய்த்து-கெடுத்து—அருளே கத்து- திருபாசோகத்தினால்—என்றுங்காண்டிட- எப்போது மபரோ ஞானமாகத்தரிசிக்க—வைத்து- திருவடிசூட்டி—அளித்த- இரக்ஷித்த காரணாபோற்றிபோற்றி- காரணனேசரணஞ்சரணம்—எ-று. (௱௪௬)

(அ-கை) இந்நூலைப்பட்கற்றல்.

குலவுசற்குருவின்பாதக்குளிர்புனற்றலைமேற்கொண்டா ... *
லுலகினிற்றிர்த்தமெல்லாமுற்றபேராடினர்போல ... ... *
நலமெய்யாகியவைகவல்யநவநீதநூலைக்கற்றோற ... ... ... *
பலகலைகளநூலைகள்படித்தஞானிகளாய்வாழ்வார் ... *

குலவு- விளங்காநின்ற—சற்குருவின் - தேசிகரின்—பாதக்குளிர் ல் - அகத்தைப்புறத்தைப்புங்குளிரச்செய்கின்றபாததீர்த்தத்தை— மற்கொண்டால் - சிரத்தின்மேற்றரிக்கின்—உலகினில் - சகத்தினு -தீர்த்தமெல்லாம் - புண்ணியதீர்த்தங்களனைத்தும்— உற்றபேரு-

ஸ்நானஞ்செய்தபயனை— அடைவர்போல- பெறுவார்களைப்போல்—ந
மெய்யாகிய - நன்மையுமுண்மையுமாகிய— கைவல்யநவநீதநூலை - கை
வல்யநவநீதமென்னு ஞானசாஸ்திரத்தை—கற்றால- அப்பியாசித்தால்
பலகலை - அனந்தங்கல்விநூல்களின் சாரமான—ஞானநூலகள் - ஆ
ஞானசாஸ்திரங்களை—படித்தஞானிகளாய் - அப்பியாசித்தஞானவா
ளாக—வாழ்வார் - வாழ்வார்கள்—..று.

[இ - கூ - க - ம்.] சுருதி குரு சுவாநுபவங்களை நவ நவமாகத் த
ந்ததாம் ........................................................(௱௮௫

சந்தேகந்தெளிதற்படலம் - முற்றிற்று.

ஆக படலம்-உ-இ- செய்யுள்- ௨௱௯௩.

கைவல்யநவநீதமூலமுரையும்

முற்றிற்று.

FINIS

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.